முற்றத்துள் - ப்ரஸவ்ராங்கணத்திலே, கிற்றியென்று - கில்லாகிற்கிறுயென்று, 'யாபமக்ருவேபாக்ஷ ஸாதுதோகாமரேமரவ்'என்னும்படி யிருக்கக்கடவ நீயெல்லாருங்காணும்படிமுற்றத்திலேபுறப்பட்டு கில்லாகின்றுயென்று கொவித்தென்றபடி. நெரித்த - நெரிக்கப்பட்ட, கையினிராய் - கையை யுடையவர்களாய், கையை யுடையவர்கள் கையினர். ஸஹிரவரைச் சொல்லும்போது கையினிரென்றுரூவம் கோபித்துவையும்போது கையைநெரித்து வைகிறார்களென்றுகருத்து. நீர் - என்னுடைய ஹேமையையறிந்த நீங்கள், எம்மை - அவனுடைய ஸௌந்தர்ய ஸாவண்யங்களாலே வசீகரிக்கப்படாகிற்கிறவென்னை, சுற்றியுஞ்சூழ்ந்தும் - போயும்வந்தும், சுற்றுகை - வெளியிலே திரிகை. சூழ்கை - வந்து கிட்டுகை, வைதிர் - வையாநிற்கிறிகோள், சுடர்ச்சோதி - தேஜஸ்ஸினுடைய ஜ்யோதிஸ்ஸைப்போலே தக்க ஜ்யோதிஸ்ஸை யுடையவையான, ஸதிப்ரஷ்டி தேஜஸ்ஸுக்களுடையரூபமேபோலே தக்கரூபத்தை யுடைத்தானவென்றபடி. மணிநிறமாய் - ரத்நங்களினுடைய ரூபத்தை யுடைத்தாய், இம் மூவுலகும் - இந்த மூன்று லோகங்களையும், முற்ற - காலத்ஸ்ந்த, விரிகின்ற - வ்யாபியாநிற்கிற, சுடர் - காந்தியையுடைத்தான, முடிக்கே - முடியிலே, திவ்யகிரீடத்திலே யென்றபடி. அக்கரைக்கே இக்கரைக்கே யென்னுமாப்போலே முடிக்கேயென்று ஸப்தமி. உள்ளம் - என்னுடையமனஸ்ஸானது, ஒற்றுமை - ஐகாக்ர்யத்தை, கொண்டது- அடைந்துவிட்டது. அன்னைமீர் - தாய்மார்காள்? நுங்கள்க்கு - உங்களுக்கு, நசையென் - ஆசையென்ன, ப்ராப்யபரவதேநகளாய் நாயகஸம்ஶ்லேஷரஸமறிந்த பெண்கள்பக்கலிலே தாய்மார்களுக்காசையுண்டோ வென்று கருத்து ॥ய॥

கட்கு - கண்ணுக்கு, அரிய - அஸக்யமான, நேத்ரவிஷயாஸ்ஸக்கு க்ராஹ்யரல்லாதவரானவென்றபடி. பிரமன் - ப்ரஹ்மா, சிவன் - ருத்ரன், இந்திரன் - இந்த்ரன், என்றுஅவர்க்கும் - என்றுப்ரஸித்தரான வந்த தேவர்களுக்கும், கட்கரிய - கண்ணுக்கஸக்யனான, அவர்கள் கண்ணுக்கும் ஸாக்ஷாத்கரிக்கவொண்ணாதபடி நெஞ்சிலே கிற்கின்றுனென்றபடி. கண்ணனை - க்ருஷ்ணனை, குருகூர்ச்சடகோபன் சொன்ன - ஸ்ருஷ்டம், உட்குடை - உட்கை யுடைத்தான, உட்கு-ஶக்தி. ஸர்வஜ்ஞ ஶக்திவாதக ஶக்தியுக்தமான வென்றபடி. ஆயிரத்துள் - ஸஹஸ்ரத்தில், இவையும் - இப்படியுமொரு

மூ—டையாயிரத்துளிவையுமொருபத்தும்வல்லார்* ருட்குடைவானவரோடுடனாயென்றுமாயாரே* ॥கக॥

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆ—(கட்கரிய) ஸர்வேச்வரனுடைய விஸ்மயஜநகங்களான விஷயங்களாயிருக்கிற ப்ரஹ்மாதிகளுக்கும் ஜ்ஞாநாதிகனான க்ருஷ்ணனைக் குருகூர்ச்சடகோபன் சொன்ன (உட்குடையாயிரம்) வாக்யத்தைத் தவிக்க வல்ல ஶக்திப்ராபல்யத்தையுடைய வாயிரத்திலித் திருவாய்மொழி வல்லார் ஸமஸ்தகல்யாணகுணவிஶிஷ்டனாக அநுஸந்திக்கவல்லவர் அமரர்களோடே நித்யஸம்ஶ்லேஷம் பண்ணப்பெறுவரென்கிறார். ॥கக॥

திருக்குருகைப்பிரான்பிள்ளான் திருவடிகளே சரணம்.

✳ நிகமனம். ✳

இ— கட்கரியவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வேச்வரனுடைய விஸ்மயாதியால்) இரண்டாங்கட்கரியவென்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (கண்ணனைச் சொன்னாதியால்) உட்குடையாயிரமென்று ப்ரதீகம் ஸமர்ப்பணிப்பதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (வாக்யத்தை தவிக்காதியால்) இரண்டாமுட்குடையென்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸமஸ்தகல்யாணாதியால்) வானவரோடிகாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அமரருமிதாதியால்) ॥கக॥

மூ—விலக்ஷணங்களான, ஒரு - அத்விதீயங்களான, பத்தும் - பத்துப்பாட்டுகளையும், வல்லார் - அப்யஸிக்கவல்லார்கள், உட்குடை - ஶக்தியையுடையவரான, ஸமஸ்தகல்யாணகுணவிஶிஷ்டனாக அநுஸந்திக்கும் ஶக்தியையுடையவர்களான வென்றபடி. வானவரோடு - நித்யஸூரிகளோடு, உடனாய் - ஸஹவாஸராய், என்றும் - ஸர்வகாலமும், மாயாரே - நஶியார்கள், அவர்களைவிட்டுப் பிரியார்களென்றபடி, ॥கக॥

ஜ்ஞாநவைராக்யாநுஷ்டாநஶேவதிஸ்ரீமதாண்டாள்ஸ்ரீராமாநுஜமஹாதேஶிகாய நம:.

ஸ்ரீ:

ஸ்ருதிப்ரகாஶிகாதாத்பர்யதீபிகா.

(ஏழையராவி)

த்ருஶ்யந்தேந்தீவராபா தரளதநதிகாதீர்கயோணா

ஸாநுவாதேந விம்பாதரமதுரம் தந்தபங்க்திமுக்தா வியஸ்ஹ: ।

ஸம்பந்நாஸ்ஸ்ருங்காரா ஶருதிவலஸத்மயோராமிகாஜா

ஸ்ரீஶாரதாங்கிரீடா ஸ்வாஸ்யதிமிஷ்டநாஸ்தி நைதவ்யாப ॥அஎ॥

(த்ருஶ்யந்தேந்தீவராபா) ஆழியங்கண்ணபிரான்றிருக்கண்கள்கொலோவித்யாதி - ஸரஸிஜஸத்ருஶங்களான திருக்கண்மலர்களோடும், (தரளதநதிகாதீ:) மாட்டியர்கற்பகத்தின் வல்லியோகொழுந்தோவித்யாதி - கல்பவ்ருக்ஷத்தினுடைய லதைபோலேயிருக்கிற திவ்யநாஸிகையோடும், (தீர்கயோணா) கோலந்திரள்பவளக்கொழுந்துண்டங்கொலோவித்யாதி - அழகிய பவளமுறிபோலேயும், பக்வமானகோவைப்பழம்போலேயுமிருக்கிற திருவதரத்தோடும், (ஸாநுவாதேந) மண்ணியசாமதனனித்யாதி - ஸூர்யனுடைய விம்பம்போலேயிருக்கிற திருப்பவளங்களோடும், (விம்பேந) வெண்மின்னுக்கொவித்யாதி - வெளுத்தமின்போலேயும் முத்துநிரைபோலேயுமிருக்கிற ஸ்மிதத்தோடும், (மகரமஹஸ்ஸாங்காங்கி) மகரந்தழைக்குந்தளிர்கொலோவித்யாதி - தளிர்போலேயிருக்கிற திருச்செவியிலே மகரஸந்நிவேசமாய் விளங்காநிற்கிற திருக்குண்டலங்களோடும், (ஸம்பந்நாஸ்ஸ்ருங்காரா) நாணமன்னுவெண்டிங்கள்கொலோவித்யாதி - அஷ்டமீசந்த்ரன்போன்ற வடிவாய் ப்ரகாஶிக்கிற திருநெற்றியோடும், (ஶருதிவலஸத்மயோராமிகாஜா) கோளிழைத்தாமரையுமித்யாதி - திருக்கண்மலர் - திவ்யநாஸாவம்ஶம், திருவதரம், திருப்புருவம், ஸ்மிதம், திவ்யகர்ணபாஶம்; திருநெற்றி, இவைகளாலே ஶோபமாநமாய், நிரவதிகவைலக்ஷண்யஸாம்யமான திருமுகமண்டலத்தோடும் விஶிஷ்டனாய்க்கொண்டு, (ஸ்ரீஶாரதாங்கிரீடா) முற்றவிம்மூவுலகும்விரிகின்றசுடர்முடிக்கே - நிரதிஶயதீப்தியுக்தமான திருவபிஷேகத்தையுடையனாய் அத்தாலே ஸர்வாதிகனாய் விளங்காநிற்கிற "கிரீடீ" என்கிறவித்தாலேதானே முன்னில்பாட்டிலே "கொள்கின்றகோளிருளை" இத்யாதியாலே சொல்லப்படுகிற திருவபிஷேகத்தோடே ஸஹபாவியாயிருக்கிற திருக்குழல்கற்றையையுடையனாகையும் ஸூசிதமாயிற்று

ஈ—சா—வென்றுகருத்து. ஸர்வேஶ்வரனான எம்பெருமான் ஸ்ரீதர்க்கவிஷயமாக ஸ்வேஷ்டம் கிறதே ன்று 'வனசூடராமியுண்ணும்' என்றதிலே யாழ்வாராலே யருளிச்செய்யப்பட்டதென்கிறார். ||அஎ||

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஏழாம்பத்தில் ஏழாந்திருவாய்மொழிமுற்றிற்று.

எட்டாந்திருவாய்மொழி.

மூ—மாயாவாமனனே மதுசூதாநீயருளாய்* தீயாய்நீராய்நிலனாய் விசும்பாய்க்காலாய்த்* தாயாய்த்தந்தையாய்

ஆ—(மாயாவாமனனே) கீழ் உருவு வெளிப்பாட்டுடன் றறிந்து நோவுபடச் செய்தே தன்னைக்காட்டி யாகி—திரா தொழிகிற படியையும், அங்ஙனேயிருக்க முடியாதபடி தம்மை நடத்துகிற படியையுங்கண்டு, 'இவ்வாஶ்சர்யமிருந்தபடியென்' என்றெம்பெருமானுக் கறிவிக்க, அவனும் இவ்வளவோ வென்படி என்று தன்னுடைய விசித்ர விபூதியைக் காட்டியருளக் கண்டு, இதிருந்தபடியென்? என்று விஸ்மிதராகிறார் ஆஶ்சர்யஶக்தியுக்தனே யாஶ்ரிதவிரோதிநிரஸநஶீலனை நீயென்னைத் தெளிவிக்க வேண்டும், லோகத்தில்,

எட்டாந்திருவாய்மொழி.

இ—கீழ்த்திருவாய்மொழியிலெம்பெருமானோடு பாஹ்யஸம்ஶ்லேஷத்தை யாசைப்பட்டுப்பெறாமையாலும் ஸாக்ஷாத்காரதுல்யமான ஸங்கல்பங்களாலே வ்யாகுலராகையாலும், க்லேஶப்பட்டவாழ்வார் அநந்தரமித்திருவாய்மொழியிலே யவனுடைய விசித்ரவிபூதியை விஸ்மிதராய்ப்பேசுகை யஸம்கதமன்றோவென்னவ அநுபபிக்கிறார் (கீழிசூத்ரதியால்) உருவுவெளிப்பாட்டென்றது - மாநஸஸாக்ஷாத்காரமென்றபடி. அதாவது:— விரஹிணிக்குவருவதோரவஸ்தாவிஶேஷம். நாயகனைப்பிரிந்துதரிக்கமாட்டாத நாயகியானவள் பிரிந்தக்ஷணந்தொடங்கி யவனுடைய ஸௌந்தர்யாதிகுணங்களை நிரந்தரமாக நினைத்துக்கொண்டேயிருக்க; அந்தபாவநாப்ரகர்ஷத்தாலே 'அக்ரத: ப்ருஷ்டதஶ்சைவ பார்ஶ்வதஶ்சாபி த்ருஶ்யதே' என்கிறகணக்கிலே பார்த்தபார்த்தவிடமெல்லாம் அவன்ரூபம் ப்ரத்யக்ஷமாய்த்தோற்றுகை. (உருவுவெளிப்பாடென்றறிந்தி சூத்ரதி) எம்பெருமானுடையரூபம் ப்ரத்யக்ஷஸமானமாய்த்தோற்றினவாறே யவன்வந்ததாகவேயெண்ணி ஸஸம்ப்ரமாகவெழுந்திருந்து திருவடிகளைப்பிடிக்க, அதுகையிலேயகப்படாதொழிந்தவாறே இதுஉருவுவெளிப்பாடென்றறிந்து நோவுபட்டாரென்றுகருத்து. முடியாதபடியென்றது - ஶரீரவிஶ்லேஷம் வாராதபடியென்றபடி. 'வ்யவஸிதேஷு தேஹ ப்ராணஸம்ஶயமவகீர்ணவிதம்' என்னும்படியிருக்கிறவன் ஆழ்வார்நோவுபடாநிற்க ஆத்மாவைத்தீராதொழிகிறவிதுவும். இத்தனைவிஸ்தாரம்நடக்கச்செய்தேயு மிவரைமுடியாதபடி நடத்துகை யுமத்யாஶ்சர்யமன்றே! (விசித்ர சூத்ரதி) இத்தால்விசித்ரவிபூதிகமென்கிற ஸங்கதியைதிருவாய்மொழிக்கு ப்ரதிபாத்யமென்றதாயிற்று. *

முதற்பாட்டு

மாயாவாமனனேயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆஶ்சர்யயோக்யசூத்ரதியால்) மதுசூதாவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆஶ்ரிதசூத்ரதியால்) நீயருளாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்

ஈடு— மாயா - ஆஶ்சர்யஶக்தனே, இத்திருவாய்மொழியில் சொல்லப்புகுகிற ஆஶ்சர்யப்ரகாரங்களையெல்லாம் ஸாமாந்யாக நிர்தேஶித்தபடி. அதிலேயொன்றை யுதாஹரிக்கிறார், வாமனனே - மஹாமேருவை மாட்டும்மணியாகச் சுருக்கினாப்போலே ஆஶ்சர்யமான வாமநரூபத்தையுடையவனே, மதுசூதா - மதுஸூதனனே, ஆஶ்ரிதவிரோதி நிரஸநஸ்வபாவனேயென்றபடி. நீயருளாய் - நீயேயருள செய்யவேணும், மேல் நான் கேட்கப்புகுகிற ஸந்தேஹங்களை நீயேயருள் செய்யவேணு மென்றபடி. தீயாய் - அக்நியாய், நீராய் - ஜலமாய், நிலனாய் - ப்ருதிவியாய், விசும்பாய் - ஆகாஶமாய், காலாய் - வாயுவாய், தத்தத்ருக்காரகனென்றபடி. தாயாய் - லோகத்திலே மாதாக்களாயிருக்கிற ஜநங்களாய், தந்தையாய் - பிதாக்க

மு—மக்களாய்மற்றுமாய்முற்றுமாய்* நீயாய்நீநின்றவாறிவையென்னநியாயங்களே* ॥௧॥

அங்கண்மலர்த்தண்டுழாய்முடி யச்சுதனேயருளாய்* திங்களுநாயிறுமாய்ச் செழும்பல்சுடராயிருளாய்ப்* பொங்குபொழிமழையாய்ப் புகழாய்ப்பழியாய்ப்பின்னுநீ* வெங்கண்வெங்கூற்றமுமா யிவையென்னவிசித்திரமே* ॥௨॥

ஆ— ஸஹஜஸம்பந்திகளாய் ஸஹாயர்க்களையும் தாயையும் தந்தையையும் மக்களையும் மற்றெல்லாரையும் வ்யாப்தியாகவுடையையாய், இவற்றோடுபிரியவஸாமாநாதிகரண்யத்தையுமுடையையாய்க்கொண்டுநீநின்றபடிஎன்னென்று விஸ்மிதராய் எம்பெருமானைக் கேட்கிறார். ॥௧॥

(அங்கண்மலர்) அழகிய ஸௌந்தர்யத்தோடேகூடின பூவையுடைய திருத்துழாயை திருமுடியிலே யுடையையாய், இவ்வழகுக்கொருநாளுமொருவ்யாவ்ருத்தியில்லாதவனே, திங்களும்ஞாயிறுமாயழகிய தாய்பலவகைப்பட்ட நக்ஷ

இ—செய்கிறார் (நீயித்யாதியால்) த்ருதீயவாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (லோகத்திலேயித்யாதியால்) நீயாய்நின்றவாறென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவற்றோடித்யாதியால்) இவற்றோடுபிரியவென்றது - இவற்றிற்காட்டில்வ்யாவ்ருத்தமாகவென்றபடி. இவையித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (விஸ்மிதரித்யாதியால்) ॥௧॥

இரண்டாம்பாட்டு.

அங்கண்மலரென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அழகியவித்யாதியால்) அச்சுதனேயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவ்வழகுக்கித்யாதியால) செழும்பல்சுடரென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அழகியதாயித்யாதியால்) வெங்கண்வெங்கூற்றமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார்

ஈ—ளாய், மக்களாய்- புத்ரர்களாய், மற்றுமாய்- இன்னுமுள்ளபந்துக்களாய்;முற்றுமாய் - ஸமஸ்தசேதநாசேதநங்களுமாய், காரணஸூக்ஷ்மசேதநாசேதநங்களுமாய் கார்யஸ்தூலசேதநாசேதநாதிகளுமாய் என்றபடி. நீயாய் - உன்னுடைய ஸாமாநாதிகரண்ய விசிஷ்டனுமென்றபடி. இத்தனையுமா யிருக்கச் செய்தேயும் ஸ்வதோஷாஸம்ஸ்ப்ருஷ்டனுமாய்க்கொண்டு "ஸத்யஜ்ஞாநாநந்தஸத்யகாம" என்கிறபடியே கல்யாணகுணாகரனுமென்கை. இவைநீ நின்றவாறு - நீநின்றவிந்த ப்ரகாரங்கள், ஆறு - ப்ரகாரம், என்ன நியாயங்கள், என்ன ந்யாயங்கள், என்னஉபபத்திகளென்றபடி. காரணமும்கார்யமும் நீயேயாயிருக்கச்செய்தேயும், நீ ஸ்வதோஷாஸம்ஸ்ப்ருஷ்டனுமாயிருக்கிறவிப் ப்ரகாரங்களுக்கு ஸாதகங்களான வேதாந்தவாக்யங்களென்ன வாக்யார்த்தங்களாயிருக்கிறன, இவற்றை நீயேசொல்லவேணுமென்றுகருத்து. இந்த ஜ்ஞாநகாரணாதிகளைக்கீழே அநேகஸூக்தங்களிலே யநுஸந்தித்தாரேயாகிலும் "அப்பொழுதைக் கப்பொழுதென்னாராவமுத" மென்கிறகணக்கிலே யபூர்வம்போலே ரஸிக்கையாலே இப்படிவிஸ்மிதராய்ச் சொல்லுகிறார்.॥

அங்கள் - அழகியதான கள்ளை யுடையவையான, கள் - மாதுர்யம். ஸௌரப்யாதிகளான வென்றபடி. கள் மலர்என்கிறவிடத்திலே ளகாரஸ்ய மகாரேபரே ணகாராதேசம். மலர் - புஷ்பங்களை யுடையவையான, தண்டுழாய்முடி - ஸ்ரீதுளஸீமாலிகைகளை கிரீடத்திலே யுடையவனான, அச்சுதனே - அச்யுதனே? இந்த திவ்யஸௌந்தர்யத்துக்கொருக்காலும்வ்யாவ்ருத்தியில்லாதவனேயென்றபடி. அருளாய் - நீயருள்செய்யவேணும், மேல்சொல்லபுகுகிறவைசித்ரியையென்றபடி. திங்களும் ஞாயிறுமாய் - விஸ்வாஹ்லாதகரனான சந்த்ரனும் தாபகரனான ஸூர்யனுமாய். செழும் - அழகியதுகளான, செழுமென்றழகியதுகருப்பேர், பல் - பஹுவிதங்களான, சுடராய் - தேஜஸ்ஸுக்களாய், நக்ஷத்ரங்களாயென்றபடி. இருளாய் - பதார்த்த தர்சநம் பண்ணவொட்டாத தமஸ்ஸாய், பொங்கு பொழி - பொங்கிப்பொழியாநிற்கிற, ஸத்ருசம் வர்ஷிக்கிற வென்றபடி. மழையாய் - வர்ஷமாய், புகழாய் - கீர்த்தியாய், பழியாய் - அபகீர்த்தியாய்; பின்னும்- அதின்மேலேயும், ஸர்வாதிகமான அபகீர்த்தியாயிருக்கிற விதுக்கு மேலேயு மென்றபடி. இதுக்குக் கூற்றமுமா யென்கிறதோடே யந்வயம். நீ - கல்யாணகுணஸம்பந்நனான நீ, வெங்கண் - வெவ்விய கண்ணை யுடைத்தான, க்ரூரமானத்ருஷ்டிபாதத்தை யுடைத்தான வென்றபடி. வெங்கூற்றமும் - க்ரூரமான ம்ருத்யு வும், க்ரூரஸ்வபாவமானம்ருத்யுவுமென்றபடி. கூற்றம் - ம்ருத்யு, ஆமிவை - ஆகிறவிவை, நீயே யித்தனையு மாகிற விந்த ப்ரகாரங்க ளென்றபடி. என்ன விசித்திரம் - என்னவிசித்ரம், என்னவாஸ்சர்யமென்றபடி. ॥௨

மூ—சித்திரத்தேர்வலவா திருச்சக்கரத்தாயருளா*யெத்தனையோருகமுமவையாயவற்றுள்ளியலு*மொத்தவொ
ண்பல்பொருள்களுலப்பிலனவாய்வியவாய்* வித்தகத்தானிற்றிநீ யிவையென்னவிடமங்களே* ॥௩॥

ஆ—தாங்களுமாய் தேஸகாலமாய் பொங்குபொழி மழையாய் புகழாய்ப்பழியாய், பின்னும்நீ வெவ்விய கண்ணையுடையவெவ்விய ரூபத்வமான படிகளென்ன வைசித்ர்யமென்கிறார். ॥௨॥

(சித்திரத்தேர்வலவா) ஸாரத்யம்பண்ணும்போது ஆஶ்சர்யமாம்படி தேரைநடத்தவல்லவனே? ஐஶ்வர்யத்தினன்று பகலை யிரவாக்கின ஆஶ்சர்யபூதமான திருவாழியை யுடையவனே? க்ருதாதிகளான அநேகயுகங்களையும், அவ்வவகாலங்களிலுண்டான ஓரோர்வகையாலேயொத்தும், ஓரோர்வகையாலே வேறுபட்டும், தேவமநுஷ்யாதிரூபேண பலவாய், ப்ரதிவ்யக்த்யஸங்க்யேயமான பதார்த்தங்களையும் விபூதியாக வுடையையாய், இப்படி விஸ்மயநீயனாய் நில்லாநின்றாய்? இவையென்ன சேராச்சேர்த்திக ளென்கிறார்.॥

(கள்ளவிழ்) ஸௌரப்யஶாலியான தாமரைபோன்ற திருக்கண்களையுடையகண்ணனே? எனக்கொன்றருளிச

இ—(வெவ்வியவித்யாதியால்) வெவ்வியது - உக்ரமானது. ॥௨॥

மூன்றாம்பாட்டு

சித்திரத்தேர்வலவாவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸாரத்யமித்யாதியால்) திருச்சக்கரத்தாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஐஶ்வர்யேத்யாதியால்) எத்தனையோருகமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (க்ருதாதீத்யாதியால்) அவற்றுள்ளியலுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவ்வவகாலங்களிலுண்டானவென்று) அந்தந்தகாலங்களிலுண்டாயென்றபடி. ஒத்தவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஓரோர்வகையித்யாதியால்) வியவாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஓரோர்வகையாலேவேறுபட்டுமென்று) பலவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தேவேத்யாதியால்) உலப்பிலவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ப்ரதிவ்யக்தீத்யாதியால்) பொருள்களாயென்றநுவதித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பதார்த்தங்களையித்யாதியால்) துரீயவாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இப்படிவிஸ்மயநீயனித்யாதியால்) ॥௩॥

நாலாம்பாட்டு.

கள்ளவிழென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸௌரப்யஶாலியானவென்று) உள்ளதுமென்கிறதற்

ப— சித்திரத்தேர் வலவா - விசித்ரமாகத் தேரிலே வலவனே, வலவன் - ஸமர்த்தன், ஸாரத்ய பண்ணும்போது விசித்ரமாகத் தேரைநடத்தவல்லவனானவனே, பீஷ்மத்ரோணாதிகள் விடுகிற பாணங்கள் தப்பிப்போம்படியாகவும் அர்ஜுநன் விடுகிறபாணங்கள் தப்பாதே இலக்கிலேவிழும்படியாகவும் அர்ஜுநன்விட்ட பாணங்கள் தன்தேருக்குப் பிந்தும்படி பாணவேகாதிகவேகமாகும்படியும் மற்றுமிப்படி விசித்ரமாகத் தேரை நடத்தவல்லவனே யென்றபடி. திருச்சக்கரத்தாய் – ஸ்ரீஸுதர்ஶநத்தை யுடையவனே, சக்கரமுடையவன் சக்கரத்தான், ஸம்போதியிலே சக்கரத்தா யென்று ரூபம். பகலை யிரவாக்கின வாஶ்சர்யபூதனே யென்றபடி. அருளாய் – நீயருள் செய்யவேணும், எத்தனை - அநேகங்களான, க்ருதத்ரேதாதி ரூபேண பஹுவிதங்களான வென்றபடி. ஓர் - அத்விதீயங்களான, ஒன்றுக்கொன்று ஸத்ருஶங்களாகமாட்டாமையாலே யத்விதீயங்களான வென்றபடி. அவை - ப்ரஸித்தங்களான, உகமுமாய் – யுகங்களுமாய், அவற்றுள். அந்த யுகங்களுக்குள்ளே, இயலும் – ப்ரவ்ருத்தியாநிற்கிற, அந்தந்தகாலவஸ்துக்களாய் நடவாநிற்கிற வென்றபடி. ஒத்த - ஸத்ருஶங்களான, ஓரோரா காரங்களாலே பரஸ்பர ஸத்ருஶங்களான வென்றபடி. வியவாய் – விலக்ஷணங்களாயிருப்பதுகளான, மற்றோராகாரத்தாலே பரஸ்பர விலக்ஷணங்களான வென்றபடி. ஒண் - ஒள்ளியதுகளான, ஶோபாவஹங்களான வென்றபடி. பல் - தேவமநுஷ்யாதி ரூபேண பஹுவிதங்களான, உலப்பிலன - அவதியில்லாதவைகளான, உலப்பு - அவதி, தேவாத்யேகைகஜாதிகளிலு மஸங்க்யாதங்களான வென்றபடி. பொருள்களாய் – பதார்த்தங்களாய். தத்ப்ரகாரகனென்றபடி. வித்தகத்தால் – விஸ்மயநீயதையால், இப்படி விசித்ரபதார்த்தப்ரகாரகனுமாகிற விஸ்மயநீயதையாலே யென்றபடி. நிற்றி - நீ நில்லாநிற்கிறாய், இவை யென்னவிடமங்கள் - இவையென்ன விஷமங்கள், இந்த வைபரீத்யங்கள் அத்யாஶ்சர்யங்களென்றபடி.
॥௩॥

மூ— கள்ளவிழ்தாமரைக்கட்கண்ணனேயெனக்கொன்றருளாய்* யுள்ளதுமில்லதுமாயுலப்பிலனவாய்வியவாய்* வெள்ளத்தடங்கடலுள்விடநாகணைமேல்மருவி* யுள்ளப்பல்யோகுசெய்தியிவையென்னவுபாயங்களே* ॥௪॥ பாசங்கணீக்கியென்னையுனக்கேயறக்கொண்டிட்டுநீ* வாசமலர்த்தண்டுழாய்முடிமாயவனேயருளாய்* காய

ஆ— செய்யவேணும் நித்யமாயிருக்கையாலேயுண்டென்றுசொல்லலாம் சேதநனும் பரிணாமஸ்வபாவமாய்க்கொண்டு ப்ரதிக்ஷணாவஸ்தாந்தராபந்நமாகையாலே யில்லையென்னலாம் ப்ரக்ருதியுமாய் வெள்ளத்தடங்கடலுள் விடநாகணைமேல்மருவி திருவுள்ளத்தாலே பலப்ரகார விசேஷங்களைப்பண்ணாநிற்றி? இவையென்ன விரகுகளென்கிறார். ॥௪॥

(பாசங்கணீக்கி) ஸுஜாதபரிமளதாமதுளஸீதாமபூஷிதமான திருமுடியையுடையையாய் ஆஶ்சர்யஸ்வபாவனான நீ ப்ராக்ருதவிஷயப்ராவண்யத்தைத்தவிர்த்து அநந்யப்ரயோஜனனாம்படி என்னைப்பண்ணிவைத்து பின்னையுமிப்ப்ரக்ருதியிலேயிட்டுவைக்கிற ஆஶ்சர்யத்தை யருளிச்செய்யவேணும், ஶரீரஜீவஸம்பந்தகாரணாதிநிமித்தங்களும் அவித்யாதிகளாகிற ஸாதநங்களைப்பண்ணிவையாநின்றாய் இவையென்ன ஆஶ்சர்யப்ரவ்ருத்திகளென்கிறார். ॥௫॥

இ— குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நித்யமாயென்று) இல்லதுமாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பரிணாமேத்யாதியால்) த்ருதீயபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருவுள்ளத்தாலேயித்யாதியால்)॥

✳ ஐந்தாம்பாட்டு. ✳

த்விதீயபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸுஜாதேத்யாதியால்) பாசங்கணீக்கியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ப்ராக்ருதேத்யாதியால்) என்னையுனக்கேயறக்கொண்டிட்டென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அநந்யேத்யாதியால்) அருளாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பின்னையுமித்யாதியால்) த்ருதீயபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஶரீரேத்யாதியால்) மாயங்கள் செய்துவைத்தியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவித்யாதிகளித்யாதியால்) ஸாதநங்கள் - காரணங்கள். ॥௫॥

ஶ— கள்ளவிழ் - கள்ளாக அவிழாநிற்கிற, கள் - மதுஸ்ராவம், அவிழ்கை - ஸ்தநம், ஸ்தநகரமான வென்றபடி. தத்க்ஷணவிகஸிதமான வென்கை. தாமரைக்கண் - தாமரைபோலே யிருக்கிற திருக்கண்களையுடையவனை, கண் கண்ணனே என்கிறவிடத்தில் ணகாரஸ்ய ககாரேண ஸவர்ணாதேஶ:. கண்ணனே - க்ருஷ்ணனே? எனக்கொன்றருளாய் - எனக்கொன்றருளிச்செய்யவேணும், உள்ளதும் - ஸதேகரூபமாகையாலே அஸ்திஶப்தவாச்யமான சேதநவஸ்துவும், இல்லதுமாய் - ஸததவிகாரஶீலமாகையாலே நாஸ்திஶப்தவாச்யமான அசேதநமுமாய், த்ரிகுணப்ரக்ருதியுமா யென்றபடி. உலப்பிலனவாய் - அவதியில்லாதவையாய், வியவாய் - விலக்ஷணங்களானவஸ்துக்களாய், தத்ப்ரகாரகனுயென்றபடி. வெள்ளம் - வர்ணஜலமான, தடம் - விஸ்தீர்ணமான, கடலுள் - க்ஷீரார்ணவத்திலே, விடநாகணைமேல் - விஷத்தையுடைத்தான நாகஶயநத்தின்மேல், விடம் - விஷம், ஸாகவாத்ர்வவகஸ்ஸ்வரஸ:. ப்ரதிகூலர்க்குக் கிட்டவொண்ணாதபடி விஷஶாலியான ஶேஷஶயநத்தின்மேலே யென்றபடி, மருவி - ஆஶ்ரித்து, ஸாதரமாகக்கண்வளர்ந்தருளியென்றபடி. உள்ளப்பல்யோகு - உள்ளத்தாலே பஹுவிதயோகங்களை, செய்தி - செய்யாநிற்கிறாய், யோகம் - விசேஷ, திருவுள்ளத்தாலேபஹுவிதப்ரகாரவிசேஷங்களைப்பண்ணிக்கொண்டிருக்கிற யென்றபடி. இவை யென்னவுபாயங்கள் - ஸ்வதந்த்ரவுபாயமோ? ஸம்ஹிதநிவ்ருத்த்யுபாயமோ? ஸம்ஶ்லேஷப்ரவ்ருத்த்யுபாயமோ? ஆஶ்ரிதஸம்ஶ்லேஷோபாயமோ? அறிகிறிலேன். ஒன்றை நிஷ்கர்ஷித்து அருளிச்செய்யவேணும், ௪॥

வாசமலர் - வாஸனையையும் மலரையு முடைத்தான, பரிமளப்ரசுரமாய் விகஸிதமுமான வென்றபடி. தண்டுழாய்முடி - ஶீதளதுளஸியை முடியிலே யுடையவனை, மாயவனே - ஆஶ்சர்யசேஷ்டிதனே, அருளாய் - ஸ்பஷ்டம், பாசங்கள் - ப்ராக்ருதவிஷயாஸக்திகளை, நீக்கி - நிவர்த்திப்பித்து, பாசங்கள் நீக்கி என்கிறவிடத்தில் ளகாரஸ்ய நகாரேண ணகார ணகாராதேஶ:, என்னை - அநந்யப்ரயோஜனனான வென்னை, உனக்கேயற - உனக்கேயறும்படி, மற்றொருவர்க்கு மன்றிக்கே யுனக்கே ஶேஷமாகத் தீரும்படி என்னைக் கொண்டிட்டு - ஸ்வீகரித்து, பின்னும் - இப்படி ஸ்வீகரித்தும், இதுக்கு மாயங்கள் செய்து வைத்தி

௪—மூஞ்சீவனுமாய்க்கழிவாய்ப்பிறப்பாய்ப்பின்னுநீ*மாயங்கள்செய்துவைத்தியிவையென்னமயக்குகளே। ௫
மயக்காவாமனனேமதியாம்வண்ணமொன்றருளா* யயர்ப்பாய்த்தேற்றமுமாயழலாய்க்குளிராய்வியவாய்*
வியப்பாய்வென்றிகளாய்வினையாய்ப்பயனாய்ப்பின்னுநீ* துயக்காநீநின்றவாறிவையென்னதுயரங்களே* ॥

ஆ—(மயக்காவாமனனே) ஸ்ரீவாமநனான வழகாலேபிச்சேற்றி நினைத்ததுமுடித்துக்கொள்ள வல்லவிரகனானே தெளிவுடையேனும்படி யொன்றுபண்ணியருளாய், ஜ்ஞாநாஜ்ஞாநசோஷ்ணஶீதவிஸ்மய விஸ்மயவாவ்யவர்ணந்த துஃகஸுகங்களைப் அதுக்குமேலே அந்யதாஜ்ஞாநாதிஜநகனைப் நீநின்றப்ரகாரமென்ன துஃகாவஹங்களென்கிறார். ॥௫॥

• (தூரங்கள்செய்யுங்கண்ணாசுடர்நீண்முடியாயருளாய்) உன்னுடைய திருவபிஷேகத்திலழகாலே நலியும் க்ருஷ்ணனே? அப்படியேபவிஷ்யத்தியினுடைய வாஸ்யத்தாலேயும் நலிவுபடாமே தெளிவிக்கவேணும், துஃகா

ஆறாம்பாட்டு.

இ— மயக்காவாமனனேயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்ரீவாமநனித்யாதியால்) மதியாமவண்ணமொன்றருளாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தெளிவித்யாதியால்) அயர்ப்பாய்த்தேற்றமுமாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஜ்ஞாநாஜ்ஞாநவென்று) அழலாய்க்குளிராயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உஷ்ணஶீதவென்று) வியப்பாய்வியவாயென்றநுபித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (விஸ்மயேத்யாதியால்) வினையாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (வாவவர்ணவென்று) பயனாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (துஃகஸுகேத்யாதியால்) துயக்காவாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அந்யேத்யாதியால்) ॥௫॥

ஏழாம்பாட்டு.

ஸுப்ரவாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்னுடையவித்யாதியால்) துயரஞ்செய்மானங்களா

ஶ—என்கிறதோடேயன்வயம். காயமும் - ஶரீரமும், சீவனுமாய் - ஜீவாத்மாவுமாய், கழிவாய் - நிவ்ருத்தியாய், ஶரீர நிவ்ருத்திரூப மரணமா யென்றபடி. பிறப்பாய் - ஜந்மமாய், நீமாயங்கள் செய்து வைத்தி - நீ மாயங்களைச் செய்து வையாநின்றாய். அவித்யாகர்மவாஸநாதிகளாகிற ப்ரதிபந்தகங்களைப் பண்ணிவையா நின்றாயென்றபடி. இவையென்ன மயக்குகள் - இவையென்ன மோஹக வ்யாபாரங்கள். இந்தஸம்ஸாரத்திலே ருசியில்லாதவனைப் ஸம்ஶ்லேஷகாமனாம்படி என்னைப்பண்ணி பின்னையுமிந்த ஸம்ஸாரத்திலே நிறுத்தி யபித்திருக்கும்படி பண்ணுகையாகிற விவைகளென்ன மோஹகவ்யாபாரங்களென்றபடி. இத்திருவாய்மொழிக்கு நிதாநமிப்பாட்டினர்த்தம். இவ்வர்த்தத்தைக்கேட்கவந்து தத்த்வஸம்ஶயத்தாலேயிறே மற்றுள்ளவிற்றுக்களையெல்லாம் ப்ரஸங்கித்தது. ॥௪॥

மயக்கா - மயக்குமவனான, வடிவழகாலும் நடையழகாலுமுக்தியாலு மெல்லாரையும் மோஹிப்பிக்குமவனானவென்றபடி. வாமனனே - ஸ்ரீவாமநரூபத்தையுடையவனே, மதியாம் வண்ணம் - வைஶத்யமுண்டாம்படி, எனக்குக் கலக்கந்தீர்ந்து தெளிவுண்டாம்படி யென்கை. ஒன்றருளாய் - ஒன்றுபண்ணியருளவேணும், அயர்ப்பாய் - அஜ்ஞாநமாய், லோகத்திலுள்ள அஜ்ஞாநத்தை யெல்லாம்தனக்கு ஶரீரவத்யாகவுடையவனான வென்றபடி. அயர்ப்பு - அஜ்ஞாநம், தேற்றமுமாய் - தெளிவுமாய், விஶதஜ்ஞாநமுமா யென்றபடி. லோகத்தில் விஶதஜ்ஞாநங்களை ப்ரகாரமாக வுடையவனான யென்கை. அழலாய் - உஷ்ணப்ரகாரனாய், அழலென்று உஷ்ணத்துக்குப்பேர். குளிராய் - ஶீதமாய், வியப்பா யென்கிறத்தை முற்பட வநுபிப்பது. வியப்பாய் - விஸ்மயமாய், தத்ப்ரகாரகனா யென்றபடி. வியப்பு - விஸ்மயம். வியவாய் - விலக்ஷணமாய், விஸ்மய விலக்ஷணமான வஸ்துபத்தையும் ப்ரகாரமாக வுடையவனாயென்றபடி. வியந்தது - விலக்ஷணமானது. வென்றிகளாய் - ஜயங்களாய், வினையாய் - கர்மங்களாய், வர்ணாவாவங்களா யென்றபடி. பயனாய் - ஸுகங்களாய், பயன் - ஸுகம். பின்னும் - அதின்மேலேயும், நீ துயக்கா - நீயந்யதா ஜ்ஞாநத்தை ஶரீரமாகவுடையனாய், துயக்கு - அந்யதாஜ்ஞாநம். நீநின்றவாறு - நீநின்றப்ரகாரங்கள், இவையென்னதுயரங்கள் - இவையென்ன துஃகாவஹங்கள், இப்படிஶீதோஷ்ணாதி வஸ்துஶரீரகனாயிருக்கிற விந்தவிசித்ரப்ரகாரங்களுனக்குமீமெயாயிருக்கின்றன, எங்களுக்கிவைதுஃகாவஹங்களாயிருக்கிறனவென்றபடி. ॥௫॥

மூ—துயரங்கள்செய்யுங்கண்ணா சுடர்நீள் முடியாயருளாய்* துயரஞ்செய்மானங்களாய்மதனாகியுகவைகளாய்த்* துயரஞ்செய்காமங்களாய்த்துலையாய்நிலையாய்நடையாய்த்* துயரங்கள்செய்துவைத்தி யிவையென்னசுண்டாயங்களே* ||எ||

என்னசுண்டாயங்களானின்றிட்டாயென்னையாளுங்கண்ணா* இன்னதோர்தன்மையையென்றுன்னையாவர்க்குந்தேற்றரியை* முன்னியமூவுலகுமவையாயவற்றைப்படைத்துப்* பின்னுமுள்ளாய்புறத்தாயிவையென்

ஆ—ஸௌந்தர்யாபிமாநம், அர்த்தாபேக்ஷம், உகப்பு - து:க்ககரமானகாமம், வஸீகரணம், ஸ்திதிகமநங்கள், ஸர்வரூபமாய் து:க்கோதர்க்கமான வ்யாபாரங்களைப்பண்ணிவைத்தாய், இவையென்னவிளையாட்டுகளென்கிறார். ||எ||

(என்னசுண்டாயங்கள்) என்னவிலாஸங்களைப்பண்ணுகின்றாய் என்னையடிமைகொள்ளுகிற க்ருஷ்ணனே? இன்னதொரு

இ—யென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (து:க்கோதர்க்கமானவித்யாதியால்) துலையாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (வஸீகரணமென்று) நிலையாய்நடையாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்திதிகமநங்களென்று) துயரங்கள்செய்துவைத்தியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வமித்யாதியால்) ||எ||

* எட்டாம்பாட்டு. *

என்னசுண்டாயங்களானின்றிட்டாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னலீலைகளித்யாதியால்) த்விதீயபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இன்னதொருவித்யாதியால்) முன்னியமூவுலகுமவை

ஶ— சுடர் - தேஜோரூபமான, நீள் - உத்துங்கமான, முடியாய் - கிரீடத்தையுடையவனே, முடியையுடையவன் முடியான். முடியாயென்று ஸம்போதி. துயரங்கள் செய்யும் - து:க்கங்களைப் பண்ணாநிற்கிற, துயரம் - து:க்கம், உன்னுடைய திருவடிவிஷயத்தில் ஆசைக்காட்டி என்னை க்லேசப்படுத்தாநிற்கிற வனானவென்றபடி. கண்ணா - க்ருஷ்ணனே, அருளாய் - நீ க்ருபை பண்ணவேணும், இந்தவிஶ்லேஷித்வத்தைக்கண்டு என்னவிவுபடாதபடி யென்னைத்தெளிவித்து க்ருபைபண்ணவேணும், துயரஞ்செய் - து:க்கங்களைப் பண்ணக்கடவதான, மானங்களாய் - அபிமாநங்களாய், மலங்களா யென்றபடி. மதனாகி - கர்வமாய், அபிஜநாதிபி: ஸ்வஸ்யோத்கர்ஷ பாவ்ய: மத:. க்ருத்யாக்ருத்ய ப்ரஸங்கவிமோஹகோ மத:. மதமென்கிற ஶப்தத்துக்கு மதனென்று னகாராந்த ப்ரயோகமுமுண்டு. உகவைகளாய் - ப்ரீதிகளாய், துயரஞ்செய்- "ஶோகராகமயே ப்ரஜாயதே" "பவேஸிநாஶக ப்ரஸக்தி" என்கிறபடியே து:க்கங்களை யுண்டாக்கக்கடவதான, காமங்களாய் - ஸங்கம், துலையாய் - தூக்கமாய், ப்ரமாணப்ரமேயங்களா யென்றபடி. துலை - தூக்கம். நிலையாய் - ஸ்திதியாய், நடையாய் - கமநமாய், துயரங்கள் செய்து வைத்தி - து:க்கங்களைப் பண்ணிவையாநிற்கிறாய். இவை யென்ன சுண்டாயங்கள் - இவையென்ன லீலாசேஷ்டிதங்கள், உனக்கிவை லீலாரூபலீலாசேஷ்டிதங்களாயிருக்கிறன, எங்களுக்கு து:க்கங்களாயிருக்கிறன வென்றபடி. ||எ||

என்ன சுண்டாயங்களால் - என்ன லீலாசேஷ்டிதங்களாலே, நின்றிட்டாய் - நின்றருளினாய், எத்தனை பாரதந்த்ர்யமான லீலைகளை யுடையவனாய் நின்றருளினாயென்று பாவம். என்னை யாளுங்கண்ணா - உன் குணங்களைக்காட்டி என்னையடிமைகொள்ளுகிற க்ருஷ்ணனே, இன்னதோர் தன்மையையென்று - இன்னபடியானதொரு ப்ரகாரத்தை யுடையவனென்று, தன்மை - ப்ரகாரம், உன்னை - அபரிச்சேத்யஸ்வபாவனான வுன்னை, யாவர்க்கும் - எத்தனை ஜ்ஞாநாதிகர்க்கும், தேற்றரியை - நீ தேருகைக்கரியனானவன், அறிகைக்கஸக்யனென்றபடி. அரியன் - அஸக்யன், அபிதாநத்தைச்சொல்லும்போது அரியையென்று ரூபமாயிருக்கும், முன்னிய - ஸநாதியான, ப்ரவாஹாநாதியானவென்றபடி. மூவுலகுமவையாய் - அந்தமூன்று லோகங்களுமாய் க்ருதகம் அக்ருதகம் க்ருதகாக்ருதகமென்று ப்ரஸித்தங்களான த்ரிவிதலோகங்களுக்கும் ஶரீரியாயென்றபடி. அவற்றைப்படைத்து - அந்த லோகங்களை ஸ்ருஷ்டித்து, பின்னும் - அதின்மேலேயும், உள்ளாய் - அந்த: ப்ரவிஷ்டனாயிராநின்றாய், உள்ளே யிருக்குமவன் உள்ளான். அபிதாநத்தைச் சொல்லும்போது உள்ளாயென்று ரூபமாயிருக்கும். புறத்தாய் - பஹிஷ்டனாயிராநின்றாய்? புறத்திலே யிருக்குமவன் புறத்தான். அபிதாநத்தைச்சொல்லும்போது புறத்தாயென்று ரூபம். இவை யென்ன வியற்கைகள். வியற்கை - ஸ்வபாவம்,

மூ— னவியற்கைகளே* ॥௮॥

என்னவியற்கைகளாலெங்ஙனேநின்றிட்டாயென்கண்ணா* துன்னுகரசரணமுதலாகவெல்லாவுறுப்பு* உன்னுசுவையொளியூறொலிநாற்றமுற்றுநீயே* யுன்னையுணரவுறிலுலப்பில்லைநுணுக்கங்களே* ॥௯॥

இல்லைநுணுக்கங்களே யிதனிற்பிறிதென்னும்வண்ணம்* தொல்லைநன்னூலிற்சொன்னவுருவுமருவுநீயே*

ஆ—ஸ்வபாவமென்று ஜ்ஞாநாதிகருக்கு மறியவொண்ணாதநீ பழையதான மூவுலகுக்குங்கடைவயாய் அவற்றை ஸ்ருஷ்டித்து பின்னையுமவற்றை ஸம்ஹரித்துநின்றாய், இவையென்னஸ்வரூபஸ்வபாவமென்கிறார். ॥௮॥

(என்னவியற்கைகள்) என்னஸ்வபாவங்களையுடையனாய் எந்தப்ரகாரத்திலே நிற்கிறாய் எனக்கு ஸுலபனான க்ருஷ்ணனே? நெருங்கினகரசரணம் முதலானவெல்லா (உறுப்பும்) அவயவங்களுக்கும், ரஸம், ரூபம், ஸ்பர்சம், ஶப்தம், கந்தம், இவையெல்லாவற்றுக்கும் கடவையானவுன்னை யநுஸந்திக்கப்புக்கா லுன்னுடைய வைலக்ஷண்யத்துக்கு முடிவில்லையென்கிறார். ॥௯॥

(இல்லை) இதிற்காட்டில் (பிறிது) வேறுஸூக்ஷ்மமில்லையென்னும்படி பழையதான வேதாந்தத்திலேசொன்ன

இ—பமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பழையதானவித்யாதியால்) உள்ளாய்ப்புறத்தாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அந்தர்பஹிரித்யாதியால்) ॥௮॥

✳ ஒன்பதாம்பாட்டு. ✳

எங்ஙனேநின்றிட்டாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எந்தப்ரகாரத்திலேநிற்கிறாயென்று) என்கண்ணாவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எனக்கித்யாதியால்) துன்னு என்கிறதையுரைக்கிறார் (நெருங்கினவென்று) திவ்யங்களானவென்றபடி. உறுப்புமென்று ப்ரதீகக்ரஹணம். அவயவங்களுக்குமென்றது - அதினர்த்தத்தைச்சொன்னபடி. த்ருதீயவாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ரஸமித்யாதியால்) உன்னையுணரவுறிலென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்னையித்யாதியால்) உலப்பில்லைநுணுக்கங்களென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்னுடையவித்யாதியால்) ॥௯॥

✳ பத்தாம்பாட்டு. ✳

தொல்லைநன்னூலென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பழையதானவித்யாதியால்) உருவுமருவுநீயேயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அசித்துக்குமித்யாதியால்) அச்சுதனேயென்கிறதற்குத் தாத்பர்ய-

---

ப— இதென்ன ஸ்வரூபஸ்வபாவங்களென்றபடி. ॥௮॥

என்கண்ணா- என்னுடையக்ருஷ்ணனே, எனக்குஸுலபனான க்ருஷ்ணனேயென்றபடி. என்னவியற்கைகளால்- என்னஸ்வரூபஸ்வபாவங்களாலே, என்ன ஸ்வரூபஸ்வபாவங்களோடென்று தாத்பர்யம். எங்ஙனே நின்றிட்டாய்- என்ன ப்ரகாரத்திலே நின்றருளினாய், எத்தனை விசித்ரவிபூதிகனாய் நின்றருளினாயென்றபடி. துன்னு- திவ்யங்களான, ஶரீரத்திலே திவ்யங்களாயிருக்கிறவென்றபடி. கரசரணமுதலாக- கரசரணப்ரப்ருதிகளான, எல்லாவுறுப்பும்- எல்லாவவயவங்களும், உறுப்பு- அவயவம், இதுக்கு நீயேயென்கிறத்தோடே அந்வயம். உன்னு- உன்னப்படுமதான, போக்யமாகையாலே யாசைப்படும்படி யிருக்குமவையானவென்றபடி. உன்னுகை- ஆசைப்படுகை, சுவை- ரஸம், ஒளி- ரூபம், ஒளியென்று ரூபத்துக்குப்பேர், ஊறு- ஸ்பர்சம், ஊறுகை- ஸ்பர்சிக்கைபிறே. ஒலி- ஶப்தம், நாற்றம்- கந்தம், நாற்றமென்கிறவிடத்தில் மகாரம் லோபியிலே சாந்தஸம். முற்றும்- க்ருத்ஸ்நமும், நீயே- இவையித்தனையையும் ப்ரகாரமாகவுடையவன் நீயேயென்றபடி. உன்னையுணர- உன்னையறிகைக்கு, உறில்- அபேக்ஷிக்கில், நுணுக்கங்கள்- ஸூக்ஷ்மங்கள். நுணுக்கம்- ஸூக்ஷ்மம், வைலக்ஷண்யங்களென்றபடி. உலப்பில்லை- அவதியில்லை, அநந்தங்களாயிருக்கிறனவென்றபடி. ॥௯॥

இதனில்- இதிற்காட்டில், பிறிது- வேறு, நுணுக்கங்கள்- ஸூக்ஷ்மங்களானவை, இல்லையென்னும் வண்ணம். இல்லையென்னும்படி இதுக்குச்சொன்ன வென்கிறத்தோடே அந்வயம். தொல்லை- அநாதியான, நன்னூலில்- நல்ல ஶாஸ்த்ரத்திலே, நூல்- ஶாஸ்த்ரம், அபௌருஷேயமான வேதாந்தத்திலேயென்றபடி. சொன்ன- சொல்லப்பட்டதான, "அவ்யக்தமக்ஷரே லீயதே அக்ஷரம் தமஸி லீயதே" இத்யாதி வேதாந்தவாக்யங்களிலே அவ்யக்தாக்ஷராபேக்ஷயா ஸூக்ஷ்மமாகச் சொல்லப்பட்டதானவென்றபடி. உருவும்- ரூபவித்ரவ்யமும், ஸ்தூலமாயிலே ரூபாஶ்ரயமாகத்தக்க ஸ்தூலப்ரக்ருதியுமென்றபடி. அருவும்- அரூபியு-

மூ— யல்லித்துழாயலங்கலணிமார்பவென்னச்சுதனே* வல்லதோர்வண்ணஞ்சொன்னாலதுவேயுனக்காம் வண்ணமே* ॥௰॥

ஆம்வண்ணமின்னதோன்றென்றறிவதரியவரியை* யாம்வண்ணத்தாற்குருகூர்ச்சடகோபனறிந்துரைத்த* வாம்வண்ணவொண்டமிழ்களிவைபாயிரத்துளிப்பத்து* மாம்வண்ணத்தா

ஆ—வலித்துக்கும் ஹிதத்துக்கும் நிவர்த்தகனானவனே அல்லியையுடைய திருத்துழாய்மாலையாலே யலங்க்ருதமான அழகியமார்பையுடையையாய் இவ்வழகுக்கொருநாளுமொழிவில்லாதவனே? வேதங்களும் ஸநகாதிமஹர்ஷிகளும் உன்னுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளைப் பேசப்புக்கால் பேசினஸம்ஶம் பேசிற்றுமத்தனைபோக்கி பேசாததுக்கவதியில்லை, ஆஸ்ரிதர் உனக்கு நல்லராய் உன்குணங்களிலேயீடுபட்டிருப்பார் உன்னைபேதேனுமொருபடிபேசினால் அதுவேயுனக்காம்ப்ரகாரமென்கிறார். ॥௰॥

(ஆம்வண்ணம்) ஒருவராலுமொருவகையுமறியவொண்ணாத ஸர்வேஶ்வரனை யுள்ளபடியேயறிந்தருளிச்செய்த வாயிரத்திலுமித்திருவாய்மொழியை யர்த்தஸஹிதம் சொல்லுமவர்களே என்றைக்கும் க்ருதக்ருத்யரென்கிறார். ॥௧௪॥

திருக்குருகைப்பிரான்பிள்ளான்திருவடிகளேசரணம்.

இ—மருளிச்செய்கிறார் (இவ்வழகுக்கித்யாதியால்) தாஶ்ரீபவாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (வேதங்களுமித்யாதியால்) இந்தயோஜனைபிலே உனக்காம்வண்ணமென்கிறவிடத்திலே காகாக்ஷ்யுநிகவிக்கவேண்டுகையாலே இந்தயோஜனைநக்லிஷ்டமாகையாலே யோஜநாந்தரமருளிச்செய்கிறார் (ஆஸ்ரிதேத்யாதியால்) ॥௰॥

✳ நிகமனம். ✳

ப்ரதமபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஒருவராலுமித்யாதியால்) ஆம்வண்ணத்தாலறிந்தென்றநுபித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உள்ளபடியேயறிந்தென்று) த்ருதீயபாதத்தில் ஆம்வண்ணஶப்தத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அர்த்தத்தைக்குஸஹிதமாகவென்று) ஆம்வண்ணத்தாலுரைப்பாரென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (யதாஶக்தித்யாதியால்) அமைந்தார்தமக்கென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (க்ருதக்ருத்யரென்று) ॥௧௧॥

ஸ—காரணாவஸ்தாவஸ்தனான ஜீவாத்தாவும். நீயே-இவையித்தனையையும் ப்ரகாரமாகவுடையவன் நீயென்றபடி. அல்லித்துழாய்- வர்ஷங்களையுடையவையான தாஸலிகளுடைய, அலங்கல்- மாலையை, அணி- அலங்காரமாக வுடைத்தான, மார்பன்- வக்ஷஸ்ஸையுடையவனான, அலங்கல்- மாலை, அணி- அலங்காரம், என்னச்சுதனே- என்னுடைய வச்யுதனே, இவ்வழகுகொருநாளும் ச்யுதியில்லாதபடியை யெனக்குக் காட்டினவனே யென்றபடி. வசுவர்ஜத்தாலே ஸ்ரீவிபூதியோமமும், த்ருதீயபாதத்தாலே யப்ராக்ருதவிக்ரஹாதி நித்யவிபூதியோமமும் சொல்லிற்றுபிற்று. வல்லதோர்வண்ணம்- தாங்களறிந்ததொரு ப்ரகாரத்தை, சொன்னால்- சொன்னார்களாகில், வேதங்களும் ஸநகாதிகளுமிதிஶேஷ:. அதுவே- தந்தாத்மே, உனக்காம்வண்ணமே- உனக்கஸாதாரணமான ப்ரகாரமோ வென்றபடி. அவ்வளவேயுனக்குப் ப்ரகாரமன்று. இன்னுமுன்னுடைய ப்ரகாரங்களவரிச்சேத்யங்களென்றபடி. இது ஆறுயிரப்படியில் ப்ரதமயோஜனைக்கநுகுணமான ஸ்வாரஸ்யம். த்விதீயயோஜனைக்கு ஸ்வாரஸ்யமென்னவெனில்; வல்லதோர்வண்ணம் சொன்னால்- உன்பக்கல் ப்ரேமயுக்தர்களாயிருப்பார் தாங்கள் வல்லதேதேனுமொரு ப்ரகாரத்தைச் சொன்னால், ஏதேனுமொருபடி யுன்னைப்பேசினாலென்றபடி. அதுவே யுனக்காம்வண்ணம்- அதுவே யுனக்கு நல்ல ப்ரகாரமாம்படி ஆஸ்ரிதஸௌலப்யமிருப்புதி யென்றபடி. ॥௰॥

ஆம் வண்ணம்- ஆகாநிற்கிற ப்ரகாரம், அவனுக்குண்டாயிருக்கிற ப்ரகார மென்றபடி, இன்னதொன்றென்று இப்படிப்பட்டதாயிருப்பதொன்றென்று, அறிவதரிய- அறிவதிலே யரியவனான, அறிகைக்கஶக்யனானவென்றபடி. அரியை- ஹரியை, ஆம் வண்ணத்தால்- உண்டாயிருக்கிற ப்ரகாரத்தாலே, உள்ளபடியேயென்றபடி. அறிந்து குருகூர்ச்சடகோபனுரைத்த- ஸ்பஷ்டம், ஆம்வண்ணம்- ஆகத்தக்கபடியான, அவனுக்கநுரூபமாம்படியான வென்றபடி. ஒண்- அழகியதான, தமிழ்களிவை- இந்த த்ராவிடமாலைகளுடைய, ஆயிரத்துள்- ஸஹஸ்ரத்திலே, இப்பத்தும்- இந்த பத்துபாட்டுக்களையும், ஆம் வண்ணத்தால்- ஆன ப்ரகாரத்

மூ—அரைப்பாரமைந்தார்தமக்கென்றைக்குமே.* ||கக||

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஈடு—தாலே, உக்தமான அர்த்தத்தாலே யென்றபடி. ஸஜ்ஞாநத்தோடே யாதல், அதன்றிக்கே யாதல், ஸாதநமாக வாதல், ப்ரயோஜநமாக வாதலென்றபடி. உரைப்பார் - சொல்லுமவர்கள், என்றைக்கும் - ஸர்வகாலத்திலும், தமக்கமைந்தார் - தமக்கு பர்யாப்தரா யிருப்பார்கள், அமைவு - பர்யாப்தி. அவர்களுக்கு ஸம்ஸாரத்தை யநுபவிக்க வேண்டா, இத்திருவாய்மொழியின் ஸம்பந்தத்தாலே க்ருதக்ருத்யராய் விடுவார்களென்றபடி. ||கக||

ஜ்ஞாநவைராக்யநிஷ்டாநமஸ்மை ஶ்ரீமதே வேதாந்தராமாநுஜமஹாதேஶிகாய நம:.

ஶ்ரீ:.

த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி:.

(மாயாவாமனனே.)

ஸங்கைஸ்தாராப்ஜராத்யைஸ்ஸகலயுகமஹத்திவஸம்பத்பிரேஷ்ய சேதநாத்யை:
÷ லோகஸ்யபந்தமோக்ஷநிபந்த்ரா ஸ்மரணகதிகரோதாநகை * ஜ்ஞாநாஜ்ஞாநவேத்யை: |
ஏதைர்ஜ்ஞாபகைஸ்ஸ்வாஶ்ரிதஸத்யஸம்ஹகரணாத் வேதவேத்யஸ்வபாவாத்
ஶ்ரீஶாநாம்ஸம்பந்தநாநாவிதமுதிதத: ஶ்ரீபராங்குஶ்ர்வாதி ||அஅ||

(ஸங்கதை:) நீயாய்நின்றாய்நீ - ஸஹஸங்கதங்களாலும், (சந்த்ரார்காத்யை:) திங்களும்நாயிறுமாய் நீ - சந்த்ராதித்யநக்ஷத்ராதிகளாலும், (ஸகலயுகமஹத்திவஸம்பத்பி:) எத்தனையோருகமுமவையாய் நீ - க்ருதத்ரேதாதிஸகலகாலவிபாகங்களாலும், (சேதநாத்யை:) உள்ளதுமில்லதுமாய் நீ - நித்யாநித்யங்களான சேதநாசேதநவஸ்துக்களாலும், (லோகநாந்திபத்ரா) காயமுஞ்சீவனுமாய் நீ - பந்தமோக்ஷஜநிநாஶாதிகளை யுண்டாக்கிறதாகத்தான் கட்டிவைத்த லோகபந்தத்தாலும், (ஸ்மரணகதிகரோதாநகை:) மறப்புந்தேற்றமுமாய் - ஸ்மரணவிஸ்மரணங்களை யுண்டாக்குகையாலும், (தாநதாமிதை:) துயரஞ்செய்மானங்களாய் நீ - தாநபேதாதிகளாலும், (ஏதைர்ஜ்ஞாபகைஸ்) இன்னதோர் தன்மையையென்றுன்னை யாவர்க்கும் தேற்றரியை - இப்படிப்பட்ட ஸ்வபாவத்தையுடையவனென்று எத்தனை பேரும் அதிஶயிதஜ்ஞாநராலும் அறியவொண்ணாதபடி நிற்கையாலும், (ஸ்வாஶ்ரிதஸத்யஸம்ஹகரணாத்) நின்றிட்டாயென்னையாளுங்கண்ணா - தன்னையாஶ்ரயித்தபேர்களுக்கு நன்மைகளைப் பண்ணுகையாலும, (வேதவேத்யஸ்வபாவாத்) தொல்லைநன்னூலிற்சொன்ன வுருவும் அருவும் நீயே - ஸர்வஶ்ருதிபிரபிஹிததயா "ஸவேதவோ த்ருதேஹு குவீஸ:" இத்யாதியாலே ப்ரதிபாதிக்கப்படுகையாலும், எம்பெருமான் ஸ்வாபாவிகஸம்பந்தியென்று "மாயாவாமனனே" என்கிற தஶகத்திலே மாறனாலே ப்ரதிபாதிக்கப்பட்டதென்கிறார். ||அஅ||

+ காயஶிக்ஷாத்ரஜ்ஞாநவேத்யை:, * ஜ்ஞாநாஜ்ஞாநவேத்யை:" என்று பதினெண்ணாயிரத்தில் பாடம்.

ஶ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்தில் எட்டாந்திருவாய்மொழி முற்றிற்று.

ஒன்பதாந்திருவாய்மொழி.

மூ—என்றைக்குமென்னையுய்யக்கொண்டுபோகிய* அன்றைக்கன்றென்னைத்தன்னாக்கியென்னாற்றன்னை*

ஆ—(என்றைக்குமென்னை) இப்படிஉபாஸ்யமான ஜகதாகாரத்வத்தையும், ஸர்வேஶ்வரத்வ ஸாஸ்த்ரப்ரமாணத்வத்தையும், இவையவன்பக்கலிலே ஸம்பந்தமாயிருக்கிறபடியையு மநுஸந்தித்து த்ருப்தஸவிஶிஷ்டராய் நிரதிஶயப்ரீதியுக்தராய் நிரஸ்தஸமஸ்தாஸ்தவ்யஸநராயிருந்து நிரவதிகாஸ்வாத்யரூப வ்யாபாரத்தை யுள்ளபடியேசொன்னார், இதுதானும்நிரூபித்தவாறே யவன்செயலாயிருந்தது, இத்தையநுஸந்தித்து க்ருதஜ்ஞனாயிருந்த வென்னைக்கொண்டு திருவாய்மொழிசொல்லுவித்தருளுவதே என்றுதம்மைக்கொண்டு திருவாய்மொழிபாடுவித்தருளின அவனுடைய ஸர்வஶக்தித்வ ஸௌஶீல்யவாத்ஸல்யாதி கல்யாணகுணாநுஸந்தாநஜநித நிரவதிகப்ரீதியாலேசொல்லுகிறார். ஸூத்ராதிகிங்கரஸேவநஸ்வீகரித்து ப்ரீதிஜநமுமென்னைத்தன்னைப்

இ— ஸம்ஸாரதாபத்தைப்பொறுக்கமாட்டாதே வ்யஸநிக்கிறதம்மை இஸ்ஸம்ஸாரத்திலேவைத்து யரிப்பிக்கிற வாஸ்யத்தைய நுஸந்தித்து தத்ஸம்பந்தத்தாலே கீழ்த்திருவாய்மொழியிலே யவனுடையவிபூதிவிஷயிகஸத்தை யநுஸந்தித்தவாழ்வார் ப்ராஸங்கிகமான வவ்வநுஸந்தம் தலைக்கட்டினபின்பு பழையபடியே யவிளம்பிதஸம்ஸாரநிவ்ருத்திபை ப்ரார்த்திக்க ப்ராப்தராயிருக்க ஸம்ஸாரத்திலேபொருந்துவார்சொல்லுமாப்போலே தம்மையிச்ஶரீரத்தோடேவைத்து கவிபாடுவிக்கிறவித்தை யித்திருவாய்மொழியிலே கொண்டாடிக்கொண்டுபேசுகை யஸாம்ப்ரதமன்றோவென்ன? வித்தையவதரிப்பிக்கைக்காக வ்ருத்தாநுபத்தையநுவதிக்கிறார் (இப்படியித்யாதியால்) நிரஸ்தேத்யாதி, இங்குவ்யஸநமாவது- வரிவருணாநுஸந்தவ ப்ரீதிஸம்பந்தத்தை யவன்நிவர்த்திப்பியாமையாலே வந்ததுக்கம். அவனுடைய வைசித்ரியைக்கண்டவப்ரீதியாலே யித்துக்கம் நிவ்ருத்தமாயிற்றென்றுகருத்து. இந்தவ்ருத்தாநுவாதத்தாலே யஸாம்ப்ரதத்வஶங்கைக்குப் பரிஹாரமென்னாயிற்றென்ன? வருளிச்செய்கிறார் (இதுதானுமித்யாதி) இதுதானுமென்றது - இப்படிதான் சொன்னதுதானுமென்றபடி. இதுதானுமென்கிறவிடத்தில் உகாரரஸத்தாலே கீழ்ச்சொன்னவாஸ்யங்கள்போலே இதுவுமொருவாஸ்யமென்று வ்யஞ்ஜிதமாயிற்று. நிரூபித்தவாறேயித்யாதி - ப்ரக்ருதிஸம்பந்தம் பொறுக்கமாட்டாதே வ்யஸநியாநின்றதாய் அந்தக்லேஶங்களைமறந்து அவனுடைய விசித்ரவிஷயிகியோகத்தைப்பேசி விஸ்மிதராய் ப்ரக்ருதியோடுபொருந்தாத நாமப்ரக்ருதியோடேயிருந்துகொண்டு இதென்ன செய்கிறோமென்றுவிசித்து ஸகலப்ராப்திவிரோதியாயுள்ள ப்ரக்ருதிஸம்பந்தத்தை யறுத்தருளவேணுமென்று பலகாலுமபேக்ஷிக்கச்செய்தேயு மவன்செய்தருளாமைக்குக் காரணமென்னென்றுநிரூபித்தவாறே ஶரீரத்திலே ஸ்த்திரமைவைத்து லோகத்தாருக்கு யுபதேசிச்சொல்லிவைத்தாப்போலே தன்னையாஶ்ரயித்தார்க்கும் தனக்கும் போகமாத்ரமாகத்தம்மைக்கொண்டு கவிபாடுவித்துக்கொள்ள நினைக்கிறவவனுடைய வ்யாபாரமென்னுமிடத்தைக் கண்டாரென்றபடி. க்ருதஜ்ஞனித்யாதி - வேதங்களும் ஶ்ரீவால்மீகிபகவான்துடக்கமாகவுண்டான ரிஷிகள்சொன்னகவிகளும் எனக்குமுந்தினவர்களான முதலாழ்வார்கள்அருளிச்செய்த கவிகளும்கிடக்க க்ருதஜ்ஞனானவென்னைக்கொண்டு கவிபாடுவித்துக்கொள்ளுகிற விதென்னவாஸ்யமென்றபடி. சொல்லுவித்தருளுவதேயென்றென்கிறத்துக்கு சொல்லுகிறானென்கிறத்தோடேயந்வயம். *

என்றைக்குமென்னையுய்யக்கொண்டென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸூத்ராதீத்யாதியால்) என்னைத்தன்னாக்கியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னையித்யாதியால்) என்னாற்றன்னையின்றமிழ்

ப— என்றைக்கும்- எல்லாக் காலத்துக்கும், மேலுள்ள ஸர்வகாலத்துக்குமென்றபடி. யாவதாத்மபாவியாக மேலெல்லா மநுபவிக்கும்படி யென்கை. என்னை- ஸகலஞனவென்னை, உய்யக்கொண்டு- உஜ்ஜீவிப்பித்து, கிங்கரஸேவந ஸ்வீகரித்தென்றபடி. போகிய- போனவையான, அன்றைக்கன்று- திநம்திநந்தோறும், என்னைத்தன்னாக்கி- என்னைத் தன்னாகவாக்கி, ஸாயுஜ்யனவென்னைத் தன்னைப்போலே வஶ்யனாக்கி யென்றபடி, என்னால்- ஜ்ஞாநஶக்த்யாதிகளொன்றுமில்லாத வென்னைக்கொண்டு, தன்னை- வேதங்களுக்கு

மூ— யின்றமிழ்பாடியவீசனையாதியாய்* நின்றவென்சோதியையென்சொல்லிநிற்பனோ* ॥௧॥
என்சொல்லிநிற்பனென்னின்னுயிரின்றொன்றாய்* யென்சொல்லால்யான்சொன்னவின்கவியென்பித்துத்* தன்
சொல்லாற்றான்றன்னைக்கீர்த்தித்தமாயனென்* முன்சொல்லுமூவுருவாமுதல்வனே* ॥௨॥

ஆ— போலேவாஸிஸங்களுக்கு என்னையுபகரணமாகக்கொண்டு திருவாய்மொழிபாடுந்தன்னுடைய ஸௌசீல்யத்தையும் ஸகலப்ரபஞ்சநிர்வாஹகத்வக்ருத நிரவதிகதேஜஸ்ஸையும் எத்தைச்சொல்லி வ்யவஸிப்பன், காருணிகத்வமுள்ளதெல்லாம் சொன்னாற்றுணர்விலேனென்கிறார். ॥௧॥
(என்சொல்லி) என்னையுமொருவஸ்துவாகக்கொண்டு என்சொல்லால்யான்சொன்ன வின்கவியென்பித்து வ்யாஸாதிகளுக்காதாரமாய்நின்று ஸாஹித்யாதிகளைப்பண்ணினாப்போலே என்னை யுபகரணமாகக்கொண்டு

இ— பாடியவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னையுபகரணமித்யாதியால்) ஈசனையென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸௌசீல்யத்தையுமென்று) ஆதியாய்நின்றவென்சோதியையென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸகலப்ரபஞ்சேத்யாதியால்) என்சொல்லிநிற்பனோவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எத்தைச்சொல்லியித்யாதியால்) ॥௧॥

✳ இரண்டாம்பாட்டு. ✳

என்னின்னுயிரின்றொன்றாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னையித்யாதியால்) மூவுருவாமுதல்வனேயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ப்ரஹ்மேத்யாதியால்) த்ருதீயபாதத்துக்குத் தாத்பர்ய

ஈ—மித்திஹாஸ புராணாதிகளுக்கும் வாசிஹுஷிக்க முடியாத தன்னை, இன்- ஸௌந்தர்யங்களான, ஸௌலப்ய ஸௌசீல்யத்தானே அதிமநோஹரமாயிருக்குமவையான வென்றபடி. தமிழ- ஸர்வாதிகாரமாம்படி த்ராவிடங்களான மாலைகளை, பாடிய- பாடின, ஈசனை- ஸர்வநியந்தாவான, ஸர்வகாரணபூதனை வென்றபடி. ஸர்வேச்வரனைகையாலே த்ருணத்தை ப்ரஹ்மாஸ்த்ரமாக்கினாப்போலே யென்னைக்கொண்டு தன்னைக்கவிபாடவும் வல்லவனென்று கருத்து. நாமொரு வுபகரண மிருந்தோமாகிலும் கவிபாடினவனவனென்று திருவுள்ளம். தன்னையின் தமிழ்பாடியவென்று விசேஷிக்கவும். ஆதியாய் நின்ற- இதுக்கு உபாதாநகாரணமாய் நின்றவனை, எனக்காதாரமாய் நின்று கவிபாடுகையாலே யிக்கவிக்கு ப்ரதாநகாரணமாய் நின்றவனையென்றபடி. என்சோதியை- என்னுடைய ஜ்யோதிஸ்ஸை. தானிப்ரபந்தத்தைச் செய்தருளி யத்தாலே ஸதா உஜ்ஜ்வலனாயிருக்குமிருப்பை யெனக்குக் காட்டினவனை வென்றபடி. என் சொல்லிநிற்பனோ- என்னவாசகஞ்சொல்லி நிறக்கடவேன். அவனுடைய ஸௌசீல்ய ஸௌலப்ய ஸௌந்தர்யாதிகளிலே எத்தைச்சொல்லி நிற்கக்கடவேனென்றபடி. ஒரோருகுணங்களைக் காருணிகத்வமுள்ளதனையும் பேசினாலும் முடியுமோவென்று கருத்து. ॥௧॥

என்- என்னுடைய, இன்- இனியதான, நல்லதான வென்றபடி. விபரீத லக்ஷணயா ஹேயமான வென்றபடி. உயிர்- ஆத்மாவானது, இன்று- இன்றைக்கு, ஒன்றாய்- ஒரு பதார்த்தமாய், இத்தனைநாள் அஸத்கல்பமான விதுஇன்றைக்கொரு வஸ்துவாயென்றபடி. என்சொல்லால்- என்னுடைய சொல்லாலே, யான்சொன்ன- நான்சொன்னதான, இன்கவி- ஸௌந்தர்யமானகவி, என்பித்து- என்னும்படிபண்ணிவித்து, உக்தியுமென்னதன்றிக்கே கவிபாடினவனும் நானன்றிக்கேயிருக்க; உக்திகளுமென்னதாய கவிபாடினவனும் நானேயென்று லோகத்திலே ப்ரஸித்தமாம்படி பண்ணிவித்தென்று பதார்த்தம். த்ராவிடத்திலே கவியென்று பாட்டுக்குப்பேர். தன்சொல்லால்- தன்னுடைய சொல்லாலே, தான்றன்னைக் கீர்த்தித்த- தான் தானேதன்னை ஸ்துதித்தவனை, மாயன்- ஆச்சர்யசேஷ்டிதனை, என்முன் சொல்லும்- நான் கவிசொல்லும் போதெனக்காதாரமாயிருந்துகொண்டெனக்கு முன்னுருசொல்லுமவனை, அவன்தான்முன்னே சொல்லிக்கொண்டுபோக நான்பின்னேசொன்னேனத்தனையென்று கருத்து. மூவுருவாம்- மூன்றுரூபமாக நின்ற, த்ரிமூர்த்திரூபவனாகநிற்கிறவென்றபடி. மூவுருவமென்கிற விடத்தில் மகாரத்துக்கு லோபமில்லையாவம். விஷ்ணுவதாரரூபவனைப்பக்கொண்டு ரக்ஷணம்பண்ணுகிறாப்போலே ப்ரஹ்மருத்ராந்தர்யாமியாய்க்கொண்டு ஸ்ருஷ்டிஸம்ஹாரங்களையுந்தான் பண்ணச்செய்தே ப்ரஹ்மருத்ரர்கள் செய்தார்களென்று லோகத்திலே ப்ரஸித்தம்பண்ணிவித்தாப்போலே தான்பண்ணச்செய்தேயுமிப் ப்ரபந்தத்தைநான் பண்ணினதாக ப்ரஸித்தம்பண்ணிவைக்கிறானென்று ஸூசிப்பிக்கைக்காக விவ்விசேஷணம். முதல்வனே—

மூ—ஆமுதல்வனிவனென்றுதற்றேற்றியென்* நாமுதல்வந்துபுகுந்துநல்லின்கவி* தூமுதற்பத்தர்க்குத்தான் றன்னைச்சொன்னவென்* வாய்முதலப்பனையென்றுமறப்பனோ* ||௩||

அப்பனையென்றுமறப்பனென்னாகியே* தப்புதலின்றி தனைக்கவிதான்சொல்லி*

ஆ—திருவாய்மொழிபாடியருளினதன்னுடையவிந்தமாணத்தை யெத்தைச்சொல்லி வயாக்யவிப்பதென்கிறார். ||

(ஆமுதல்வன்) ஆமிவனேஸர்வேஶ்வரனென்று தன்னையுள்ளபடியேயறிவித்து என்னாவைநியமித்துக் கொண்டுவந்து புகுந்து அயர்வறுமமரர்களுக்குபோக்யமாக நல்லவாயினியவான கவிகளைத்தான்றன்னைசொல்லுகையாகிற விம்ஸோபகாரத்தை யென்றுமறப்பனென்கிறார். ||௩||

(அப்பனையென்று) என்னையுபகரணமாகக்கொண்டு கவிசொல்லாநிற்கச்செய்தே தப்பாதபடிசொல்லி

இ—மருளிச்செய்கிறார் (திருவாய்மொழியித்யாதியால்) என்சொல்லிநிற்பனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எத்தையித்யாதியால்) ||௨||

✳ மூன்றாம்பாட்டு. ✳

ஆமுதல்வனிவனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆமிவனேயித்யாதியால்) தற்றேற்றியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தன்னையித்யாதியால்) என்னாமுதல்வந்தென்றநுபவித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னாவையித்யாதியால்) தூமுதற்பத்தர்க்குநல்லின்கவியென்றநுபவித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அயர்வறுமித்யாதியால்) அப்பனையென்றுமறப்பனோவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இம்மஹோபகாரத்தையித்யாதியால்). ||௩||

✳ நாலாம்பாட்டு. ✳

என்னாக்கியென்கிறதற்குத்தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னையித்யாதியால்)உய்யக்கொண்டேனென்கிறதற்குத்

ரா— காரணபூதனானவனை, என்சொல்லி நிற்பன் - எத்தைச்சொல்லிநிற்கக்கடவேன். இந்த வாக்யம். மென்னாலே சொல்லிமுடியாதென்று கருத்து. ||௨||

முதல்வன் - ஜகத்காரணபூதன், இவனு மென்று - இந்த நாராயணனே யென்று - நான்கவிபாடி யேத்தும்படி ஜகத்காரணதயா ஸர்வேஶ்வரனு யிருப்பானிவனேயென்றபடி. தற்றேற்றி - தன்னை நான் தேறும்படிபண்ணி, தன்னை நானத்யவஸிக்கும்படி பண்ணியென்றபடி. தற்றேற்றியென்றது ஸ்வயம்வடிமாய் தன்னைத் தேற்றியென்கிற வசனத்தைக்கொடுக்கும், என்னாமுதல் — என்னுடையநாக்குமுதலாக, என்னுடைய வாகிந்த்ரியத்துக்குக் காரணபூதனு யென்றபடி. வந்துபுகுந்து - என்னுக்கிலே வந்து ப்ரவேஶித்து "ஹ்ருதஸ்தைவ தேவீஸா ப்ரவ்ருத்தேயம் ஸரஸ்வதீ" என்கிறபடியே ஸ்ரீவால்மீகி பகவானுக்கு சதுர்முகன் ஸாமர்த்யமாக ஸரஸ்வதிவந்து நாக்கிலேபுகுந்தாப்போலேயன்றிக்கே தன் ப்ரஸாதத்தினாலே தான் தானே வந்து புகுந்தென்றபடி. தூ — பரிஶுத்தரான, முதல் - அநாதிகளான, அநாதியாக ஸ்வஸ்வரூபம் ஸம்ஸாரரானவென்று கருத்தாத்பர்யம். பத்தர்க்கு - பக்தர்களுக்கு, நிரதிஶயபோகஶாலிகளான நித்யஸூரிகளுக்கென்றபடி. நல்லின் - நல்லவினியவையான, நிரதிஶய போக்யங்களான வென்றபடி. "கேட்டாரார் வானவர்கள்" என்றதிறே. இன் என்கிறதற்கு ஈன்என்று தீர்க்கமாக பாடமுண்டு. கவி — கவிகளை, தான்றன்னைச்சொன்ன — தான்தானே தன்னை யுபதேஶித்துச் சொன்னவனான, என் வாய்முதல் - என்னுடைய வாக்ப்ரவ்ருத்திகளுக்குக் காரணபூதனான, அப்பனை - உபகாரகனை, என்று மறப்பனோ.— என்றாகிலும் மறப்பேனோ, ஒருநாளும் மறவேனென்றபடி, ||௩||

என்னாகியே - தானென்பக்கலிலேயாயே - என்னையுபகரணமாகக் கொண்டே யென்றபடி. உபயாரண த்தாலேயவதாரத்தை வென்னைக்கொண்டே யிப்படிதப்பாமல்சொல்லுகை யாஶ்சர்யமன்றோவென்று அநுஸந்திக்கிறது. இங்கே எம்பெருமானு ரருளிச்செய்யும்படி. தான் பாடினுனாகில் நிர்வஹ்யமாய் தலைக்கட்டும்; நான் பாடினேனாகில் ப்ரயாஸப்பட்டு தப்புந்தாருமாக வொருபடி தலைக்கட்டும், என்னையுபகரணமாகக்கொண்டு கவிபாடாநிற்கச்செய்தேயும் என்னோட்டை ஸம்பந்தத்தால் வரும்தோஷந்தட்டாதபடி தலைக்கட்டினு னிதென்ன ஆஶ்சர்யமென்று, தப்புதலின்றி- தப்புகையில்லாமல், ஶப்ததோஷ அர்த்ததோஷமொன்றுமில்லாம லென்றபடி

ரூ—பொப்பிலாததீவினையேனையுய்யக்கொண்டு* செப்பமேசெய்துதிரிகின்றசீர்கண்டே* ॥ச॥
சீர்கண்டுகொண்டுதிருந்துநல்லின்கவி* நேர்படயான்சொல்லுநீர்மையிலாமையில்* ஏர்விலாவென்னைத்
தன்னாக்கியென்னாற்றன்னைப்* பார்பரவின்கவிபாடும்பரமரே* ॥ரு॥

ஆ—திரிகின்றசீர்கண்டு அப்பனையென்றுமறப்பனென்கிறார். ॥ச॥
(சீர்கண்டு) தன்னுடையகல்யாணகுணங்களை யுள்ளபடிகண்டுகொண்டு திருந்துநல்லின்கவிநான்சொல்லும் நீர்மையிலாமையில் எனக்குஸாத்ருஶ்யமில்லை, இப்படிகுணலேஶமின்றியே யிருந்தவென்னைத் தன்னைப்போலே ஜ்ஞானசக்த்யாதிகுணவிஶிஷ்டனாக்கி என்னாற்றன்னை ஸர்வேஶ்வரனாக்கொண்டு கவிபை ஸ்தோத்ரம்பண்ணுவிக்கும்படி யின்கவிபாடும்பரமனையென்று மறப்பனென்கிறார். ॥ரு॥
(இன்கவி) இன்கவிபாடும்பரமகவிகள் தனக்குளராயிருக்கச்செய்தே அவர்களைக்கொண்டு தன்னைக்கவி பொப்பில்லாததீவினையேனையிருக்கச்செய்தே யென்னைபாத்ரமாக வடிமைகொண்டு மேன்மேலனநன்மைசெய்து

இ— தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆத்மஜ்ஞாநாதிபால்) செப்பமேசெய்தென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (மேன்மேலித்யாதியால்) ॥ச॥

✳ஐந்தாம்பாட்டு.✳

சீரென்கிறதைபுரைக்கிறார் (தன்னுடையவித்யாதியால) ஏர்விலாவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எனக்கித்யாதியால்) என்னைத்தன்னாக்கியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறா (இப்படியித்யாதியால்) பார்பரவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வேஶ்வரேத்யாதியால்) ॥ரு॥

✳ஆறும்பாட்டு.✳

வசுவதாயத்திலஸ்வாரஸ்யத்தைபருளிச்செய்கிறார் (தனக்குளராயிருக்கச்செய்தேயென்று) இத் தால்ஸர்வஜ்ஞரான கவிகளில்லாமையாலே யும்மைகொண்டு கவிபாடுவித்துக்கொண்டா னித்தனையாகையாலி

அ— தன்னைக்கவிதான் சொல்லி - தன்னைக்குறித்துக்கவிகளை த்தான்தானே சொல்லி, ஒப்பிலா - ஸத்ருஶ ரஹிதனான், ஸர்வேஶ்வரன் ஜ்ஞாநஶக்த்யாதிகளிலே பொப்பிலாதவனாயிருக்கு மாப்போலே அஜ்ஞாநஶக்திகளி லே யொப்பிலாதவனென்றுகருத்து. தீவினையேனை - க்ரூரகர்மாவானவென்னை, தீ - க்ரூரம், வினை - கர்மம். வினையுடையவன்வினையான். தன்னைச்சொல்லும்போது வினையேனென்று ரூடமாயிருக்கும். உய் யக்கொண்டு - உஜ்ஜீவிப்பித்து, ஆத்மஜ்ஞாநாதி ரஹிதனாக்கியென்றபடி. செப்பமே செய்து - மேலும் நன் மைகளேயேசெய்து, செப்பம் - செவ்வை, இங்கே நன்மையைக்காட்டுகிறது. திரிகின்ற சீர்கண்டு - இதுவே காலக்ஷேபமாய்த்திரிகிற சீலத்தைக் கண்டிருந்து, அப்பனை - இப்படி உபகாரகனானவனை, என்றுமறப்பன்-என்றாகிலும் மறப்பனோ, இனியவ னுபகாரம் பண்ணிலனாகி னென்றால் மறக்கஶக்யமோவென்றபடி. ॥ச॥
சீர் - அவனுடைய கல்யாணகுணங்களை, கண்டுகொண்டு — ஸாக்ஷாத்கரித்துக்கொண்டு, திருந்து - திருந்தி நிற்கிற, ஸாமர்த்யங்களை நன்றாகப் ப்ரதிபாதியா நிற்கிற வென்றபடி. நல் - நல்லதான, ஸர்வார்த்த ப்ரகாஶமான, இன் - இனியதான, ஸம்ஶ்ரவ உபமானமான வென்றபடி. கவி - கவிபை, நேர்பட -வர க்கும்படியாக, அவனுக்கு மவன்பக்கல் ப்ரேமவான்களுக்கும் போஜநகமாய்க்கொண்டு ஸேவிக்கும்ப டி பென்கை. யான்சொல்லு நீர்மையி லாமையில் - நான் சொல்லும்படியான நீர்மை யில்லாமை யிலே, நீர் மை - ஸ்வபாவம், சொல்லுமென்கிற மகாரத்துக்கு ஸம்பந்தவம். நான்சொல்லுகைக்கிடான ஜ்ஞாந ஶக்த்யாதி ஸ்வபாவங்களில்லாமையிலே யென்படி. ஏர்விலா — ஸத்ருஶரஹிதனான, ஏர் - ஸத்ருஶம், என்னை-இப்படி குணலேஶஶூந்யனான வென்னை. தன்னாக்கி - தன்னைப்போலே ஸத்ருஶரஹிதனாப் ஸர்வஜ்ஞத்வாதி விஶிஷ்டனாக்கி, என்னால் - என்னை புவகரண மாக்கிக்கொண்டு, தன்னை ஸ்வவிஷய ஸ்தோத்ரத்தை, இதுக்குப்பாடுமென்கிறத்தோடே யன்வயம். பார் - ஸம்ருத்தியானது, பாரென்று ஸம்ருத்திக்குப்பேர், ஸர்வலோகமுமென்றபடி. பரவு - கொண்டாடும்படி, பரவுதல் - கொண்டாடுதல், இன்கவி - உபாதானமானகவி கள், பாடும் - பாடாநிற்கிறவனான, பரமர் - ஸர்வோத்க்ருஷ்டனை, இத்தனைஶேஷனான வென்னைக்கொண்டி ப்படி [illegible]த்தாலே யவனுடைய ஸர்வேஶ்வரத்வம் ஸாக்ஷாத்கொண்டறியவேண்டாதபடி ப்ரத்யக்ஷ [illegible]கருத்து. [illegible]. என்றுமறப்பனென்று மேலோடேயன்வயம். ॥ரு॥

மூ— இன்கவிபாடும்பரமகவிகளாற்* றன்கவிதான்றன்னைப்பாடுவியாதின்று* நன்குவந்தென்னுடனாக்கியென்
னூற்றன்னை* வன்கவிபாடுமென்வைகுந்தநாதனே* ‖ கூ ‖
வைகுந்தநாதனென்வல்வினைமாய்ந்தறச்* செய்குந்தன்றன்னையென்னாக்கியென்னாற்றன்னை* வைகுந்தனைக்

ஆ— பாடுவியாதே, இன்றுநான்வந்து என்னுள்ளேபுகுந்து வேதங்களினுள்ளுமடங்காத தனக்குங்கூடவடங்
காதகவிகளைப்பாடின வென்வைகுந்தநாதனை யென்றுமறப்பனோவென்கிறார். ‖ கூ ‖
(வைகுந்தநாதன்) ஸ்ரீவைகுண்டநாயகனாயிருந்துவைத்து என்னுடைய வல்வினைகளையெல்லாம்போக்கி
ஆதலால் குந்தனென்னும்திருநாமத்தையுடையனாய் என்னைத்தன்னைப்போலே தூயனாக்கி என்னாற்றன்னைவை
குந்தனைப் புகழவண்டின்கவிசெய்குந்தன்றன்னைக்கால தசமெல்லா மநுபவித்தாற்றுனர்வனோவென்கிறார். ‖ எ ‖

இ— தொருமரணமோவென்ன விதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் இப்பாட்டாலேயென்று ஸங்கதிஸூசி
தே. என்னுடனாக்கியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னுள்ளேபுகுந்தென்று) வன்ஸூத்துக்
குத்தாத்பர்யமருளிச்செய்கிறார் (வேதங்களிதர்த்யால்) அடங்காதவென்றது - ஸ்வரூபவிஷயமானவென்றபடி.
தயாவியகலூணமானவென்கை. ‖ கூ ‖

✳ ஏழாம்பாட்டு. ✳

என்வல்வினைமாய்ந்தறச்செய்யென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னுடையவித்யாதியால்)
குந்தனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆதலாலித்யாதியால்) ,,குந்தகுதிகுந்தமுதிகுந்தம்” என்
றதிறே. தன்னையென்னாக்கியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னைத்தன்னைப்போலேயித்யாதியா
ல்) தூயனாக்கி - பரிசுத்தனாக்கி. ‖ எ ‖

ஸ— இன் - “வால்மீகேஸவ்யாஸ” மென்கிறபடியே சதுஷ்டயசம்பந்தங்களான, கவி - வசனங்களை, பா
டும் - பாடத்தக்கவர்களான, பரமகவிகளால் - பரமகவிகளாலே, ஸ்ரீவால்மீகிபராசரவ்யாஸாதிகளாலும் முத
லாழ்வார்களாலுமென்றபடி. தன்கவி - தனக்குஸத்ருசங்களான கவிகளை, தான்றன்னைப்பாடுவியாது -
ஸம்போஜகனானதான் நிரவதிகஸௌஹார்த்தனான தன்னைமுன்புபோலே யிப்போதும் பாடுவித்துக்கொள்ளாதே.
இன்று - இப்போது, நன்கு - நன்றாக, உவந்து - உகந்து, இக்கவிபாடுகைதானே ஸம்போஜனமாகவுகந்தென்ற
படி. என்னுடனாக்கி - என்னையவிநாபூதனாக்கி, உடன் - அவிநாபூதன். என்னையவிநாபூதமான வு
பகரணமாக்கியென்றபடி. என்னால் - அவலம்பனனானவென்னாலே, தன்னை - ஸ்வரூபிணஸௌஹார்த்தனா
னதன்னை, வன்கவி - ப்ரபந்தங்களானகவிகளை, ஸர்வேச்வரனுக்கும் பரிச்சேதிக்கமுடியாதபடி நிரதிசய
கல்யாணமான கவிகளையென்றபடி. பாடும் - பாடாநிற்கிற, என்வைகுந்தநாதனே - என்னுடையவைகுண்ட
நாயனை, தான் வைகுண்டநாயகனாயெழுந்தருளியிருக்கிற பெருமையைப்போலே திருவாய்மொழிபாடுவிக்கிற
வித்தைத்தனக்கு மிகவும் பெருமையாகவுடையனாயிருக்கிற விருப்பை யெனக்குப்ப்ரகாசிப்பித்தவனையென்ற
படி. என்றுமறப்பனென்று கீழோடேயன்வயம். ‖ கூ ‖

வைகுந்தநாதன் — வைகுண்டநாயனானதான், ‘,லோகநாயகவாராஹலஸ ஸுஶீலனாயதிஷ்டதி”
என்கிறகணக்கிலே ஸ்ரீவைகுண்டநாயனாயிருந்துவைத்து ஒருஸம்ஸாரிபக்கலிலே இத்தனைமேல்விழுந்தா
லென்னா லாறியிருக்கப்போமோவென்று கருத்து. என் - பாவம்போகவேணுமென்றிசைவுமில்லாதவெ
ன்னுடைய, வல் - ப்ரபலங்களான, வினை - பாவங்களை, மாய்ந்து - நசித்து, அற - அறும்படி, நிச்சேஷ
நிவ்ருத்தங்களாம்படியென்கை. செய் - செய்தவனான, குந்தன் - குந்தபுஷ்பம்போலே பரிசுத்தனான, தன்
னையென்னாக்கி — என்னைத்தன்னாக்கியென்று ப்ரத்யயங்களை மாறியன்வயிப்பது. ஸ்வயனானவென்னைத் தன்னை
ப்போலே யஜ்ஞாநாதிதோஷரஹிதனாக்கியென்றபடி. என்னால் - இப்படிதான் விஷயீகரித்தவென்னால், தன்
னை - ஸ்வரூபிவேஷ்யவனானதன்னை, வைகுந்தனைப்புகழ - வைகுண்டனாம்படி ஸ்துதிக்க, அவனுக்கு
வைகுண்டத்வமுண்டாம்படி நான்ஸ்துதிக்கவென்றபடி. வைகுண்டத்வமாவது— நித்யஸூரிநாயகத்வம்.
ஜ்ஞாநசக்தியாதிகுணங்களுக்கொருக்காலும் குண்டமில்லாதார்- விகுண்டர். விகுண்டாநாமயம்பதிவைகுண்டம்,
அவனுக்கு வைகுண்டத்வமுண்டாம்படி யிவன்ஸ்துதிக்கையாவது- லோகத்திலேயின்னான்வாக்காலே கவிபா
டினபின்பு யிவனுக்கைச்வர்யமுண்டாயிற்றென்னுமாப்போலே இவர்புகழ்ந்தவித்தால் தனக்கு விபூதியுண்

மூ—புகழுவன்உடன்கவி* செய்குந்தன்றன்னையெந்நாள்சிந்தித்தார்வனோ* ‖ எ ‖

ஆர்வனோவாழியங்கையெம்பிரான்புகழ்* பார்விண்ணீர்முற்றுங்கலந்துபருகிலு* மேர்விலாவென்னைத்தன்

னாக்கியென்னாற்றன்னைச்* சீர்பெறவின்கவிசொன்னதிறத்துக்கே* ‖ அ ‖

திறத்துக்கேதுப்புரவாந்திருமாலின்சீர்* இறப்பெதிர்காலம்பருகிலுமார்வனோ* மறப்பிலாவென்னைத்தன்னாக்

ஆ—(ஆர்வனோ) என்னைக்கொண்டு தானுளனும்படி கவிபாடினவிந்தகுணத்தை இவ்வண்டாண்டங்களான லோகவ்யவஸ்தாக்களுடைய வாமாத்யவகரணங்களையும அயர்வறுமமரர்களுடைய வாமாத்யவகரணங்களையுங்கொண்டு அநுபவித்தாற்றுனார்வனோவென்கிறார். ‖ அ ‖

(திறத்துக்கே) ஜ்ஞாநத்துக்குங்கூட வாச்யமல்லாமையாலே பசிக்கஷ்டனுயிருந்த வென்னைத்தன்னைப்போலேயாக்கி யென்னைக்கொண்டு பிராட்டியுந்தானுமாக திருவாய்மொழியாடின விம்ஸ்லேஷாவகாரத்தை

எட்டாம்பாட்டு.

இ— சீர்பெறவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தானுளனும்படியென்று) இன்கவிசொன்னவென்கிறதுக்கையாலே யெம்பிரான்புகழென்கிறது கவிபாடினவிந்தகுணத்தைச் சொல்லுகிறதென்கிறார் (கவியி த்யாதியால்) பிதீபவாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவ்வண்டாண்டத்தீத்யாதிஅநுபவித்தாற்று னென்றமைவாலே) ‖ அ ‖

ஒன்பதாம்பாட்டு.

மறப்பிலாவென்னையென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஜ்ஞாநத்துக்குமித்யாதியால்) திருமா லென்கிறவாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பிராட்டியுந்தானுமாகவென்று) சீரென்கிறவிடம் ஸ்ரீ யவாக்ஷமாநுபாவத்தாலே தம்மைக்கொண்டு கவிபாடினகுணத்தைச் சொல்லுகிறதென்றுகாட்டுகிறார் (தி ருவாய்மொழியித்யாதியால்) என்னுள்சிந்தித்தார்வனோவென்று கீழ்ச்சொன்னவர்த்தத்தையே இறப்பெதிர் காலம்பருகிலுமென்று சொல்லுகிறதாகையாலே யிப்பாட்டுவாநராக்தியன்றோவென்ன? விங்கவிவேதாவ

டானதாக வவன்நினைத்திருக்குமென்றுகருத்து. வண்—உதாரங்களான, தீன்—ஸ்திவாதாவான, தீன்என்று வாதவுக்குப்பேர். கவி - கவிகளை, செய் - செய்யாநிற்கிறவனை, குந்தன்றன்னை — கூந்தவாஷம்போலேயி ருக்கிறவனை, என்னைக்கவிபாடுவிக்கை தன்பேறாயிருக்கையாகிற ஸௌஸீல்யத்தையுடையவனை யென்றபடி. சிந்தித்து — அவனுடையவிந்தகுணங்களை யநுபவித்தென்றபடி. எந்நாளார்வன் - எந்தகாலத்திலே த்ருப்த னாவேன், காலமெல்லாமநுபவித்தாலும் த்ருப்தனாவேனாதென்றபடி. ‖ எ ‖

ஏர்விலாவென்னை — ஏர்விலாதவனானவென்னை, ஏர்வு - யோக்யதை, கவிபாடுகைக்கு யோக்யதையான ஜ்ஞாநஸக்த்யாதிகளில்லாதவனான வென்னையென்றபடி. தன்னாக்கி - தன்னைப்போலே ஜ்ஞாநாதியுக்தனாக்கி, என்னாற்றன்னை - ஸ்வஸ்மிம், சீர்பெற - கல்யாணகுணங்களுண்டாம்படி, ஸ்வஸ்வஸ்வகல்யாணகுணநிதியானவன் நான்கவிபாடினவித்தால் தனக்கு கல்யாணகுணங்களுண்டாயிற்றாக நினைத்திருக்கிறானென்றுகருத்து. இன்க விசொன்னதிறத்துக்கு - மதுரங்களானகவிகளைத் தான்சொன்னப்ரகாரத்துக்கு, திறம் — ப்ரகாரம், இது க்குப்பருகிலுமென்கிறத்தோடே யந்வயம். ஆழியங்கை - திருவாழியாலே யழகியதானகையையுடையவனை, எம்பிரான் - இவ்வழகைகாட்டி யென்னையடிமைகொண்டஸ்வாமியினுடைய, புகழ் - கல்யாணகுணத்தை, என னால்தன்னைக்கவிபாடுவித்த விக்ரமகுணத்தையென்றபடி. இதுக்குப்பருகிலுமென்கிறத்தோடே யந்வயம். பார் - ஸ்ருஷ்டியும், தத்ரத்யப்ராணிகளுமென்றபடி. "ஸௌ:கெள ராஸஙீ" திவசூஷணா. விண் - பரமவ்யோமமும். தத்ரஸ்ஜநங்களுமென்றபடி. நீர் - ஜலங்களும், தத்ரஸ்த்ப்ராணிகளும், முற்றுங்கலந்து — இவையித்தனையையு ங்கூட்டிக்கொண்டு, இவைற்றினுடைய வாமாத்யவகரணங்களெல்லாத்தையுங் கொண்டென்றபடி. பருகிலு ம் — பாநம்பண்ணினாலும், அநுபவிக்கிலுமென்றபடி. ஆர்வனோ - த்ருப்தனாவனோ. ‖ அ ‖

மறப்பு - விஸ்மரணம், இலா வென்னை — இல்லாதவனான வென்னை, ஸ்மரணமுண்டானவனுக்கிறே தத்வி பரீதமான விஸ்மரணமுண்டாவது. ஒருக்காலும் ஜ்ஞாநப்ரஸங்கமில்லாமையாலே அஜ்ஞாநப்ரஸங்கமு மில்லா தபடி பசிக்கஷ்டனானவென்னை யென்றபடி. தன்னாக்கி - தன்னைப்போலே பஹுமுகஜ்ஞாநவானாக்கி, என்னால் "மறந்தேனுன்னைமுன்னம்" மென்கிற வநாதரமுங் கூடவில்லாத வென்னால், தன்னையுற—தன்னை மதுரமாக

மூ—என்னாற்றன்னை* யுறப்பலவின்கவிசொன்னவுதவிக்கே* ||கூ||
உதவிக்கைம்மாறென்னுயிரென்னவுற்றெண்ணில்* அதுவுமற்றாங்கவன்றன்னதென்னாற்றன்னைப்* பதவிய
இன்கவிபாடியவப்பனுக்கு* எதுவுமொன்றுமில்லைசெய்வதிங்குமங்கே* ||ய||

ஆ—முன்புசொன்ன ஸர்வோபகாரகத்வத்தைக்கொண்டு பூதபவிஷ்யத்வர்த்தமாநகாலமெல்லா மநுஸந்தித்தாற்றுனார்வனோவென்கிறார். ||கூ||

(உதவி) இப்படியென்னைக்கொண்டு திருவாய்மொழிபாடுவித்தருளின மஹோபகாரத்துக்குக் கைம்மாறாக வென்னாத்மாவை யவனுக்கடிமையாகக்கொடுக்கவேண்டில் அதுவும் பண்டேயவனுக்கடிமையாதலால் இங்குமங்கு மிதுக்கொரு கைம்மாறுசெய்யலாவதில்லையென்று அவனுடைய மஹோபகாரத்தை யநுஸந்திக்கிறார். ||ய||

இ—மருளிச்செய்கிறார் (முன்புசொன்னவித்யாதியால்) இறப்பெதிர்காலமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பூதமித்யாதியால்) ||கூ||

பத்தாம்பாட்டு.

என்னாற்றன்னையென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இப்படியித்யாதியால்) ப்ரபந்தத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (மஹோபகாரேத்யாதியால்) அதுவுமற்றாங்கவன்றன்னதென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அதுவும்பண்டேயித்யாதியால்) ||ய||

ஈ— ஸம்ச்லேஷிக்கும்படி, உறுகை - ஸாக்ஷாத்ஸம்ச்லேஷிக்கை. "விரசித்வேதஸ்ய ப்ரத்யக்ஷமிவதர்சித" மென்னுமாப்போலே தன்னுடைய ஸ்வரூபகுணாதிகளை யெல்லாம் ப்ரத்யக்ஷமாக ப்ரகாசிக்கும்படி யென்றபடி. பல் - பஹுக்களான, இன் - அத்யந்தபோக்யங்களான, "வசாம்ஸி ஸஹஸ்ராணி ஸ்தோத்ராணி ஆசுஷவாந்ருஷி:" என்னுமாப்போலே யிந்த ஸம்ஸாரத்திலே யிப்படி விலக்ஷணங்களான வாயிரம் பாட்டுக்களைப் பாடினானென்று விஸ்மயிக்கிறபடி. கவி - பாட்டுக்களை, சொன்ன வுதவிக்கு - சொன்ன உபகாரத்துக்கு, உதவி- உபகாரம், இதுக்குப்பருகிலு மென்கிறத்தோடே யந்வயம். திறத்துக்கு- ஸகலகார்யப்ரகாரங்களுக்கு, திறம் - ப்ரகாரம், ஏய்- அநுரூபமான, ஏய்கை- அநுரூபமாகை, துப்பரவாம்- ஸாமர்த்த்யமுண்டாயிருக்குமவனான, துப்பரவு - ஸாமர்த்த்யம், ஸர்வகார்யங்களையுமுண்டாக்குகைக் கநுரூபமான ஸாமர்த்த்யத்தை யுடையவனானவென்றபடி. திருமாலின் - ஸ்ரிய:பதியினுடைய, சீர் - கல்யாணகுணங்களை, இறப்பு - அதீதகாலத்திலே, இறப்பென்றதீதகாலங்களுக்குப்பேர், எதிர்காலம் - பவிஷ்யத்காலத்திலும், இதுஉபலக்ஷணம், வர்த்தமாநகாலத்திலுமென்றபடி. பருகிலும் - பாநம்பண்ணினாலும், அநுபவித்தாலுமென்றபடி. ஆர்வனோ - த்ருப்தனாவனோ. ||கூ||

உதவி - உபகாரத்துக்கு, என்னைக்கொண்டுகவிபாடுவித்த வுபகாரத்துக்கென்றபடி. கைம்மாறு - ப்ரத்யுபகாரம், என்னுயிரென்ன - ஆத்மாவென்ன, உற்று - ஸாக்ஷாத்ஸம்ச்லேஷித்து, ஸாக்ஷாத்கரிப்பித்தென்றபடி. எண்ணில் - நினைத்துப்பார்க்கில், ஆங்கு - அவ்வவஸ்தையிலே, ப்ரத்யுபகாரம்பண்ணி யமைக்கவேண்டுமவஸ்தையிலே யென்றபடி. அதுவும்- அந்த ஆத்மவஸ்துவும், மற்று- தத்ஸம்பந்திகளான ஆத்மீயங்களும், அவன்றன்னதே- அந்த ஸர்வேச்வரனுடையதே, ப்ரத்யுபகாரம்பண்ணி யமைக்கவேண்டுமவஸ்தையிலே என்னதாயிருப்பதொன்றுமில்லாமல் போய்விட்டதென்று வக்த்ருதாத்பர்யம். என்னால்- ப்ரத்யுபகாரசிந்தைக்குங்கூட யோக்யதையில்லாதவென்னாலே, தன்னை - மஹோபகாரகனானதன்னை, பதவிய - ம்ருதுக்களான, பதவியது - ம்ருதுவானது, இன்- ஸ்வாதுக்களான, கவி - பாட்டுக்களை, பாடிய - பாடினவனான, அப்பனுக்கு - உபகாரகனுக்கு, இங்கும் - இந்தலோகத்திலும், அங்கும் - திருநாட்டிலும், இங்கு - ஸம்ஸாரிஜ்ஞானனாயிருந்த பத்ததசையிலே ப்ரத்யுபகாரமில்லையாகிலும் முக்ததசையிலேயுண்டாகலாமேயென்ன வங்குமில்லையென்கிறார். இங்கே அவிவேகஸம்ஸாரிதசையாகையாலே யேதேனுமொன்றை யென்னதாக ப்ரமித்து ப்ரத்யுபகாரமாகக்கொடுக்கநினைத்தாலும் நினைக்கலாம். முக்ததசையிலே இப்படிநினைக்கவுங்கூட வவகாசமில்லையென்றுகருத்து. செய்வது - ப்ரத்யுபகாரஞ்செய்யத்தக்கது, எதுவுமொன்றுமில்லை - ஏதேனுமொருவஸ்துவில்லை. ||ய||

மூ— திருமாலன்றியின்மைகண்டு* அவனை வண்குருகூர்ச்சடகோபன்* இங்ஙனே சொன்ன ஓராயிரத்து இப்பத்தும்* எங்ஙனே சொல்லினும் இன்பம் பயக்குமே* ||கக||

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆ— (இங்குமங்கும்) ஸ்ரீபதியானவனல்லது உபகாரகரில்லையென்னுமிடத்தை யநுஸந்தித்து அநந்யோபகாரரானவாழ்வார் தம்மைத்திருவாய்மொழிபாடுவித்தருளின விம்மஹோபகாரத்தைச்சொன்ன வித்திருவாய்மொழி யங்ஙனே சொல்லினு மின்பம்பயக்குமென்கிறார். ||கக||

திருக்குருகைப்பிரான்பிள்ளான்திருவடிகளே சரணம்.

✳ நிகமனம். ✳

இ— திருமாலன்றியிங்குமங்குமின்மைகண்டென்றநுபவித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்ரீபதீத்யாதியால்) அங்ஙனேயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அநந்யோபகாரரானவென்று) இங்ஙனே சொன்னவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தம்மையித்யாதியால்) ||கக||

ஈ— திருமாலன்றி - ஸ்ரீபதியல்லது, இங்குமங்கும் - உபயவிபூதியிலும் ஸம்ஸாரத்திலும், இன்மை- இல்லாமை, வேறுபகாரகரில்லாமையை, கண்டு - அநுஸந்தித்து, ‘பண்டைநாளாலே நின்திருவருளும் பங்கயத்தாள்திருவருளுங்கொண்டு நின்கோயில்சீய்த்து” என்றதிறே. அங்ஙனே - அப்படியிருக்குமவனை. ஸுவயம்புவதேசிக்கிறஸம்பத்திலே செவ்வையாயிருந்து புறம்போனால் க்ருதஜ்ஞராய்ப்போருகிற நம்மைப்போலன்றிக்கே ஸ்ரீஸுவனே ஸம்ரக்ஷகனென்கிற ஸாவமொருக்காலும் மாறுதவருனவென்றபடி. வண் - உதாரரான, குருகூர்ச்சடகோபன் - ஸ்வாமீ, இங்ஙனே சொன்ன - இப்படிசொன்னதான, என்னைக்கொண்டு திருவாய்மொழிபாடுவித்தான் இதுக்கொருப்ரத்யுபகாரமில்லையென்றிப்படி யருளிச்செய்ததானவென்றபடி. இது பத்துக்குவிசேஷணம். ஓர் - அத்விதீயமான, ஆயிரத்து - ஸஹஸ்ரத்திலே, இப்பத்தும் - இந்தபத்துபாட்டுக்களும், எங்ஙனே சொல்லினும் - ஏதேனுமொருபடிசொல்லினும், ஸாவபாவத்தோடேயாதல் ஸாவபாவமன்றிக்கேயாதல் ஏதேனுமொருப்ரகாரஞ்சொல்லினுமென்றபடி. சடகோபனுடையபாசுரங்களைக் கற்றவர்களன்றிறே ஸம்ஸாரிகளை கடாக்ஷிப்பது. ஆதலாலிவர்களுடைய ஸாவபாவஸம்ஸாரங்களிரண்டுமப்ரயோஜகங்களென்றுகருத்து. இன்பம் - ஆநந்தத்தை, மோக்ஷாநந்தத்தையென்றபடி. பயக்கும் - ஸம்பிக்கும், உண்டாக்குமென்றபடி. பயக்கை - ஸம்பிக்கை. ||கக||

ஜகதேகவிராஜநாதஜாதஸுவயம்ப்ரீவேதாந்தாசார்யராமாநுஜமஹாதேசிகாயநம:.

ஸ்ரீ:.

த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி:.

(என்றைக்குமென்னை)

ஸாத்மீபாவப்ரதாநாத்ஸ்வபரவஸதயா தத்த்வபக்ஷ்யம் ஸௌம்ய

உஜ்ஜீவாநாதஸகல்பாக்யஸ்வபுத்யவநாசகேவாஜ்ஞயோர்வாஸா |

ஸந்ஸ்தவகப்ரயோஜநயதாமோஹஸ்விதமத்யாஸ

ஸர்வம்ஸ்தவிஷ்ணோமப்ரத்யகஸூதிவிஷயஸந்தோஷஸம்ஸ்ஸம்பூர்ணாயஸ் ||அகூ||

(ஸாத்மீய) இன்றமிழ்பாடியவீசனை - ஸஹஸ்ரதியாகையாலும், (ஸூஸ்யபதாவாக) தன்சொல்லாற்றன்றன்னைக்கீர்த்தித்தமாயன் - ஸத்யஸ்வயம்ஸக்ஷிப்யஜனாகையாலும், (காருண்யாதத்வாஜ்ஞஸம்ஹஸ்வாக) என்வாய்முதலப்பனை - ப்ரணவனுக்குப்போலே தன்க்ருபையாலே தானேபாஸ்ரிதர்க்கு வாக்கையுண்டாக்குமவனாகையாலும், (உஜ்ஜீவாவாநகஸ்வாக) ஒப்பில்லாத்தீவினையேனையுய்யக்கொண்டு - ஸத்ருஜநிக்ருஷ்டர்களையுமுஜ்ஜீவிப்பிக்குமவனாகையாலும், (ஸ்வபுத்யவநாசதி) ஏர்விலாவென்னைத்தன்னாக்கியித்யாதி - தன்னைக்கவிபாடுகைக்கு ஸம்ப்ரகாரத்தாலுமயோக்யரானவர்களையுங்கொண்டு பாடுவித்துக்கொள்ளவல்ல ஸ்வபுத்யவநாஸாமர்த்யத்தையுடைத்தாகையாலும், (வைகுண்டயோகாஸ) வன்கவிபாடுமென்வைகுந்தநாதனே - ஸ்ரீவைகுண்டத்திலெழுந்தருளியிருக்கையாலும், (ஸந்ஸ்தவகஸ) வல்வினைமாய்ந்தறச்செய்குந்தன்றன்னை - ஆஸ்ரித

த்ரு—தா— ருடையபாபங்களை நிவ்ருத்தமாம்படி பண்ணவல்ல ஶக்திஸம்பந்நனாகையாலும், (ஸகலஶ ரண்ய) ஆர்வனோவாழியங்கை யெம்பிரான்புகழ் - திருவாழியை திவ்யாயுதமாகவுடையவனாகையாலும், (ஐஶ்வர்யஸ்தானஸூசகமாக) திருமாலின்சீர் - ஸ்ரீய:பதியாகையாலும், (விசேஷமாக) பதவியவின்கவிபாடியவப்பனுக்கு- உபகாரகனாகையாலும், எம்பெருமானுக்கு ஸந்நிதியோஜந விஷயஸ்தோத்ரத்திலே மூட்டுதிறத்தினரென்று "என்றைக்குமென்னை" யென்கிறவிஷயத்திலே யாழ்வாரருளிச்செய்தாரென்கிறார். (அக)

ஸ்ரீமதேரங்கராமாநுஜமஹாதேஶிகாய நம:.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஏழாம்பத்தில் ஒன்பதாந்திருவாய்மொழிமுற்றிற்று.

பத்தாந்திருவாய்மொழி.

மூ— இன்பம்பயக்கவெழின்மலர்மாதருந்தானுமிவ்வேழுலகை* யின்பம்பயக்கவினிதுடன்வீற்றிருந்தாள்கின்ற

ஆ— (இன்பம்பயக்க) இப்படி என்னைத்திருவாய்மொழிபாடுவித்தருளுகைக்காகத் திருநாட்டினின்றும் அங்கேயெழுந்தருளியிருந்தபடியை ஸவிஸ்தரமாகத் திருவாறன்விளையிலேவந்துபுகுந்து என்னைத்திருவாய்மொழிபாடுவித்துப் பாட்டுக்கேட்டருளி திருவடி பெருமாள்குணங்களைச்சொல்லக்கேட்டருளி ஸௌபாக்யஸம்பந்நையாயிருந்தாப்போலே நிவ்ருத்தனாயிருந்த திருவாறன்விளையை யென்றோசென்றுநாமநுபவிக்கப்பெறுவதென்று உபநாஸிக்கிறார். ஸாஹாஸாமர்த்யத்தாலே தங்களுக்கின்ப

பத்தாந்திருவாய்மொழி.

இ— என்னுடையப்ராக்ருதஸம்பந்தத்தை யிப்போதேபோக்கி யென்னையுன்திருவடிகளிலேசேர்த்தருளவேணுமென்று "பரமருஞ்ஜ்யுலகிலே" யலத்தினவாழ்வார் ப்ரஸக்தாநுப்ரஸக்தமாகவந்த விவிதவிஷயாதிகஸாநுஸந்தாநமும் தம்மைக்கொண்டுகவிபாடுவித்த ஸாஹாய்யத்தைபநுஸந்தித்தவிதுவும் தலைக்கட்டினபின்பு பழையபடியே ஸம்ஸாரநிவ்ருத்தித் தலையெடுத்தென்னை யிப்போதேதிருநாட்டிலே சேர்த்தருளவேணுமென்று ப்ரார்த்திக்கவேண்டியிருக்க வின்னமிச்சரீரத்தோடேயிருந்து திருவாறன்விளையிலே போயடிமைசெய்யவேணுமென் றித்திருவாய்மொழியிலேபேசுகை யஸங்கதமன்றோவென்ன ஸங்கதிப்பிக்கிறார் (இப்படியித்யாதியால்) *

முதற்பாட்டு

இன்பம்பயக்கவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸாஹாய்யேத்யாதியால்) இனிதென்கிறதற்குத்

ஸ— இன்பம்- ஆநந்தமானது, பயக்க- ஜநிக்கும்படி, ஸந்நிதாநஸாமர்த்யத்தாலே தங்களிருவருக்குமாநந்தவ்ருத்தி யுண்டாம்படி யென்றபடி. இனிது- இனிதாக, நித்யஸூரிகளுக்கு போக்யமாகவென்றபடி. இதுக்கு வீற்றிருந்தென்கிறதோடே யந்வயம். எழில்- உஜ்ஜ்வலையான, "ராவணோ ரதமாஸ்தாய" மென்று வக்ஷஸ்தலத்திருமகனே யிவளுக்கநுரூப னென்னும்படி நிரதிஶய ஸௌந்தர்ய லாவண்யாதிகளான வென்றபடி. மலர்மாதரும்- ஸரஸிஜவாஸிநியான பெரியபிராட்டியாரும், தானும்- அவளும் மேல்விழும்படி ஸந்நிதாநனான தானும், உடன்- இருவருங்கூட, வீற்றிருந்து- வீறுதோற்றவிருந்து, வீறு- உத்கர்ஷம். ஸர்வஶேஷித்வரூபமான வுத்கர்ஷந்தோற்றும்படி திருமாமணி மண்டபத்திலே யிருந்தருளி யென்றபடி. இவ்வேழுலகை- இந்த ஸப்தலோகங்களை, லோக்யந்த இதி லோகா:- ஸஞ்சாரிணஸ் ஸ்தாவராதயஸ் ஸர்வேஜ்ஞாநரூப ஸதாவிஷயா வேதநமும் ஸஞ்சாரஸ்திதிரூப த்விவிதவேதநருமென் றிப்படி ப்ரதாந ஸிஜங்களான ஸப்த ஸஞ்சாரங்களையுமென்றபடி. இதுக்காள்கின்ற வென்கிறத்தோடே யந்வயம். இன்பம்பயக்க- ஆநந்தம் பிறக்கும்படி, "ராஜஸ்ரீதாநோ ப்ராப்ய ராஜ்யம் ஸாம்ராஜ்யவாங்" ப்ரஹ்ருஷ்டமுதிதா லோகா:" என்கிறபடியே மாதாபிதாக்களான தாங்களிருவருங்கூட விருந்து ரக்ஷிக்கத் துடங்கினவாறே லோகங்களுக்கு நிரதிஶயாநந்தமுண்டாம்படி. யென்கை,

மூ— வெங்கள்பிரா* னன்புற்றமர்ந்துறைகின்றவணிபொழில்சூழ்திருவாறன்விளை* யன்புற்றமர்ந்துவலஞ்
செய்து கைதொழுநாள்களுமாகுங்கொலோ* ॥௧॥
ஆகுங்கொலையமொன்றின்றியகலிடமுற்றவுமீரடியே* யாகும்பரிசுநிமிர்ந்த திருக்குறளப்பனமர்ந்துறையு*

ஆ— ணுண்டாம்படியாகவும், அபர்வறுமமரர்களுக்கினிதாம்படியாகவும் பிராட்டியோடேகூடத்திருமாமணிமண்டபத்திலே வீற்றிருந்தருளி யிவ்வேழுலகையின்பம்பயக்கவாள்கின்ற வெங்கள்பிரான் அன்புற்றமர்ந்துறைகின்றவணிபொழில்சூழ் திருவாறன்விளையன்புற்றமர்ந்து வலஞ்செய்து கைதொழுநாள்களுமாக வற்றேயோவென்கிறார். ॥

(ஆகுங்கொல்) ஒருஸந்தேஹமின்றிக்கே யகலிடமுற்றவு மீரடியேயாகும்படி யளந்தருளின ஸ்ரீவாமநனெழுந்தருளியிருக்கிற திருவாய்மொழிபாடுவிக்கையாகிற உபகாரத்துக்காகக் கொடிகட்டி பஸம்ருத்தமானதிருவாறன்விளையை உத்யாநவாபீஸராதி ஸம்ருத்த்யாவாஸிதமாய் ஸுஶீதளமான நீர்கொண்டு தூவி வலஞ்செய்து கைதொழக்கூடுமோவென்கிறார். ॥௨॥

இ— தாத்பர்யமருளிச்செய்கிறார் (அபர்வறுமித்யாதியால்) ஆகவற்றேயோவென்றது - ஆகமாட்டுமோவென்றபடி. ஶேஷம் ஸ்பஷ்டம். ॥௧॥

✳ இரண்டாம்பாட்டு. ✳

ஆகுங்கொலையமொன்றின்றியென்கிறதையுரைக்கிறார் (ஒருஸந்தேஹமின்றிக்கேயென்று) எழுந்தருளியிருக்கிறவென்கிறது திருவாறன்விளைக்கு விஶேஷணம். மாகந்திகழித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருவாய்மொழியித்யாதியால்) மாகந்தநீரென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உத்யாநேத்யாதியால்) ॥௨॥

ஶ— ஆள்கின்ற- பரிபாலியாநிற்கிற, எங்கள்பிரான்- எங்களுடைய உபகாரகன், தன்னுடைய ஸம்பத்தையெங்களுக்குக் காட்டி யென்னைக்கொண்டு திருவாய்மொழி பாடுவித்தெனக்கு மென்னநுபந்திகளுக்கும் உபகாரகனானவென்றபடி. அன்பு- ஸ்நேஹத்தை, உற்று- ப்ரசுரமாகஸ்வீகரித்து, திருவாய்மொழிகேட்கைக் கநுகூலமாயிருப்பதொரு தேஶத்தைப்பெற்றோமென்றந்ததேஶத்திலே ப்ரஸ்நேஹயானனு வென்றபடி. அமர்ந்து- ப்ரதிஷ்டிதனாய், அத்தேஶத்திலிருந்துதிருவாய்மொழி கேட்கையிற்காட்டில் வேறொருப்ரயோஜநத்தைய பேக்ஷியாதவனாயென்றபடி. உறையும்- அவதாரங்கள்போலே தீர்த்தம்ப்ரஸாதித்துப்போகாதே நித்யவாஸம் பண்ணுகிற, ஸ்ரீவால்மீகிபகவானு பாடின ஸ்ரீராமாயணம் கேட்கைக்குத் திருவயோத்யையிலே திருத்தம்பிமாருந்தாமுங்கூடப்பெருமாள் பேரோலக்கமாக விருந்தாப்போலே நான்பாடின திருவாய்மொழி கேட்கைக்காகத் திருவனந்தாழ்வான்மேலே நாய்ச்சிமாரோடேகூட நித்யஸூரிஜநங்களோடேகூட வவன்வஸிக்கிற தேஶமானவென்றபடி. அணிபொழில்- ஊருக்கலங்காரமான வ்ருக்ஷங்களாலே, சூழ்- பரிவ்ருதமான, திருவாறன்விளை- திருவாறன்விளையென்கிற திவ்யதேஶத்தை, இதுக்குக் கைதொழுமென்கிறதோடே யந்வயம். அன்புற்று- திருவாய்மொழி கேட்கைக் கநுகூலமான தேஶமிதுவென்று அத்தேஶத்திலே ப்ரஸ்நேஹத்தைப்பண்ணி, அமர்ந்து- அத்தேஶவாஸத்திற்காட்டில் வேறொருப்ரயோஜநத்தை யபேக்ஷியாமல், வலஞ்செய்து- ப்ரதக்ஷிணங்களைப் பண்ணி, கைதொழுநாள்களும்- கைகளாலே தொழும்படியான தினங்களும், “ஸப்ராஞ்ஜலி ப்ரஹ்ருஷ்டா:” என்கிறபடியே அஞ்ஜலிபண்ணிக்கொண்டநுபவிக்கும் தினங்களுமென்றபடி. நாள்களுமென்கிற பஹுவசநத்தாலே யவற்றினுடைய தைர்க்யமும் ப்ரதீக்கிறது. ஆகுங்கொலோ- உண்டாகுமோ. “ஸுவீடாநீம் ஸகாஶஸ்யாநுதேஶோக க்ஷயஶ்ரிவ: । ஸஹாயாம் பத்ஸஹஸ்ராத்ர வஶ்யுபதிஹாராவஸ:” என்னுமாப்போலே யிக்காலமே யக்காலமாகாதோ வென்றபடி. ॥௩॥

ஆகுங்கொல்ஐயம்- ஆகமாட்டுமோ வென்கிற ஸந்தேஹம், இது ஶக்யமாமே,வென்கிற ஸந்தேஹமென்றபடி. ஐயம்- ஸந்தேஹம், ஒன்றின்றி- லேஶமுமில்லாமல், இத்தனை உபூஞன விஶ்வாஸநவ்யூஹவானிக்கு லோகங்களளக்க ஶக்யமோவென்று கலங்கின தேவர்களுடைய ஸந்தேஹமெல்லாம்போம்படி யென்கை. இதுக்கு நிமிர்ந்தவென்கிறதோடே யந்வயம். அகலிடம்- விஸ்தீர்ணமான ஸ்ருஷ்டியானது, இடம்- ஸ்ருஷ்டி, முற்றவும்- க்ருத்ஸ்நமும், ஈரடியேயாகும்பரிசு- இரண்டடியே யாகும்படியாக, நிமிர்ந்த- த்ரிவிக்ரமனையளந்தவனை, திருக்குறளப்பன்- ஸ்ரீவாமநனான உபகாரகன், குறள்- வாமநன், அமர்ந்துறையும்- வாஸத்திற்காட்டிலும் பொருந்திவஸிக்கிற ஸ்தலமான, மாகம்- ஆகாஶத்திலே, மா- மஹத்து, கம்-

மூ—மாகந்திகழ்கொடிமாடங்கணீடுமதிட்டிருவாறன்விளை* மாகந்தநீர்கொண்டுதூவிவலஞ்செய்துகைதொழக் கூடுங்கொலோ* ।௨।

கூடுங்கொல்வைகலுங்கோவிந்தனைமதுசூதனைக்கோளரியை* ஆடும்பறவைமிசைக்கண்டுகைதொழுதன்றி யவனுறையும்* பாடும்பெரும்புகழ்நான்மறைவேள்வியைந்தாறங்கப்பன்னினர்வாழ்* நீடுபொழிற்றிருவாறன்விளைதொழவாய்க்குங்கொனிச்சலுமே* ॥௩॥

ஆ—(கூடுங்கொல்) ஸௌஶீல்யவாத்ஸல்யாதி கல்யாணகுணவிஶிஷ்டனான வெம்பெருமான் பெரியதிருவடிமேலேயெழுந்தருளி யிருக்கும்படியைக்கண்டு கைதொழுகையன்றியே அவனுக்குங்கூட ப்ராப்யமாய், ஸாங்க ஸகலவேதவித்ப்ரவரராய், த்ரயீவிஹிதவர்ணாஶ்ரமாசாரபராயண ஸதாநுஷ்டிதபஞ்சமஹாயஜ்ஞாதிநித்யாநுஷ்டானபரராயிருந்த திவ்யஜனங்கள்வாழ்கிற திருவாறன்விளையை நிச்சலுந்தொழக்கூடுமேயோவென்கிறார். ॥௩॥

மூன்றாம்பாட்டு.

இ— கோவிந்தனையித்யாதிவசனங்களுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸௌஶீல்யேத்யாதியால்) ஹரிஶப்தத்தாலே விரோதிநிரஸநக்ஷமத்வமும் ஶத்ருஸம்ஹாரநிஸ்ஸங்கத்வமும் விவக்ஷிதம். ஆடுபறவைமிசைக்கண்டு கைதொழுதன்றியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பெரியதிருவடியால்) அவனுறையுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவனுக்குமித்யாதியால்) த்ருதீயபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸாங்கேத்யாதியால்) அதில்ஸாங்கஶப்தத்தாலே ஆறங்கமென்றது வ்யாக்யாதம். பஞ்சமஹாயஜ்ஞஶப்தத்தாலே வேள்வியைந்தென்கிறது வ்யாக்யாதம். ॥௩॥

ஶ—ஸுகரமென்றபடி. திகழ்- விளங்காநிற்கிற, கொடி- த்வஜங்களையுடையவையான, மாடங்கள்- ப்ராஸாதங்களையும், நீடு- உந்நதங்களான, மதிள்- ப்ராகாரத்தையு முடைத்தான, மதிள் திருவாறன் என்கிறவிடத்திலே ளகாரரகாரயோ தகாரறகாரயோஸ்ஸ்தாநே டகாரஶிலாதேஶ:. திருவாறன்விளை- திருவாறன்விளை யென்கிற திவ்யதேஶத்தை, மாகந்த- உத்தமமயமான, வந்தநகல்பத்ராதி திவ்யமயவாஸிதமான வென்றபடி. நீர்கொண்டு- ஸலிலங்களைக்கொண்டு, தூவி- "ஸிஞ்சந்து ஸர்வாம்ஸ்து ஸகல்யாண மிஶ்ரீகேந வாரிணா" என்கிற கணக்கிலே யெங்கும் திருநீர்பரிமாறி. வலஞ்செய்து- ப்ரதக்ஷிணங்களைப்பண்ணி, கைதொழக் கூடுங்கொலோ- அஞ்ஜலிபண்ணிக்கொண்டநுபவிக்கக்கூடுமோ. ॥௨॥

வைகலும்- ஸர்வதா, கூடுங்கொல்- இது ஶ்லோகாதிஶயத்தாலே கீழ்ச்சொன்னதுக்கநுஷங்கம். கோவிந்தனை- கோவிந்தனை, கோக்களை ரக்ஷிக்கையாலே ஸௌஶீல்யவாத்ஸல்யகுண விஶிஷ்டனையென்றபடி. மதுசூதனை- மதுஸூதனனை, ரக்ஷ்யவிரோதிநிரஸநனையென்றபடி. கோள்- பலிஷ்டமான, அரியை- ஹரியை, ஸிம்ஹத்தை, ஸிம்ஹம்போலே ஶத்ருக்களுக்கநபிபவநீயனான வெம்பெருமானை யென்றபடி. ஆடு- ஆடாநிற்கிற, ஆடுகை- நர்த்தனம்பண்ணுகை. எம்பெருமானுக்கு வாஹநமாயிருக்கிற ஹர்ஷாதிஶயத்தாலே நர்த்தனம்பண்ணுமாப்போலே தர்ஶநீயகதிஶாலியான வென்றபடி. பறவைமிசை- பக்ஷியின்மேலே, தார்க்ஷ்யன்மேலே யென்றபடி. கண்டு- திருவாறன் விளையினின்றும் என்னைக் கடாக்ஷிக்கைக்காக விங்கே யெழுந்தருளக்கண்டு, கைதொழுதன்றி- கைகளாலே தொழுகையன்றிக்கே, இதுக்குத்தொழவாய்க்குங்கொலென்கிறத்தோடே யந்வயம். எழுந்தருளினவிடத்திலே யவனைக்காண்கை போராது. அவ்வூரிலேபோயவனைக் காணவேணும் என்றுகருத்து. அவனுறையும்- அவன் நித்யவாஸம் பண்ணாநிற்கிற விடமான, இது திருவாறன்விளைக்கு விஶேஷணம். பாடும்- பாடாநிற்கிற, உச்சைஸ்ஸ்வரமாகச் சொல்லப்படாநிற்கிறவையான வென்றபடி. பெரும்புகழ்- விஶ்வஸமஸ்த ப்ரதிபாதகங்களான, நான்மறை- நாலுவேதங்களையும். வேள்வியைந்து- யஜ்ஞங்களைந்தையும், பஞ்சமஹாயஜ்ஞங்களையுமென்றபடி. ஆறங்கம்- ஷடங்கங்களையும், பன்னினர்- நன்றாக நிரூபித்தவர்கள், வாழ்- ஸம்பத்ஸமத்தாலே வாஸியாநிற்கிற ஸ்தலமான, நீடுபொழில்- விஸ்தீர்ணோத்யானஶாலியான, திருவாறன்விளை- திருவாறன்விளையென்கிற திவ்யதேஶத்தை, நிச்சலும்- நித்யமும், தொழ- ஸேவிக்க, வாய்க்குங்கொல்?- கிடைக்குமோ, நித்யமும் ஸேவிக்கும்படி என்றைக்குக் கிடைக்கப்புகுகிறதென்று ஶங்கிக்கிறபடி. ॥௩॥

ரூ—வாய்க்குங்கொனிச்சலுமெப்பொழுதுமனத்தீங்குநினைக்கப்பெற* வாய்க்குங்கரும்பும்பெருஞ்செந்நெலும் வயல்சூழ்திருவாறன்விளை* வாய்க்கும்பெரும்புகழ்மூவுலகீசன்வடமதுரைப்பிறந்த* வாய்க்குமணிநிறக்கண்ணபிரான்றன்மலரடிப்போதுகளே* [௪]

மலரடிப்போதுகளென்னெஞ்சத்தெப்பொழுதுமிருத்திவணங்கப்* பலரடியார்முன்பருளியபாம்பணையப்பனமர்ந்துறையும்* மலரின்மணிநெடுமாடங்கணீடுமதிள்

ஆ—(வாய்க்குங்கொல்) ஸ்ரீமதுரையிலேவந்து திருவவதாரம்பண்ணியருளுகையாலே யதோசிதமான வாத்ஸல்யகுணங்களையும் ஸௌலப்யகுணங்களையுமுடையனாயிருந்த வவனெழுந்தருளியிருந்த திருவாறன்விளையிலே அவன்திருவடிமலர்களை நெஞ்சாலென்றநுபவிக்கக்கூடுமோவென்கிறார். [௪]

(மலரடிப்போதுகள்) தன்திருவடிமலர்களை யென்னெஞ்சத்தெப்பொழுது மிருத்திவணங்கித் திருவாய்மொழிபாடியநுபவிக்கும்படி திருவனந்தாழ்வான்முதலாகவுள்ள பலரடியார்முன்பருளிய ஸர்வகாரணிக

நாலாம்பாட்டு.

இ— வடமதுரைப்பிறந்தவாய்க்கும்பெரும்புகழென்றநுபித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்ரீமதுரையிலேயித்யாதியால்) வாய்க்குமணிநிறமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வேத்யாதியால்) ப்ரயோஜநத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நெஞ்சாலேயித்யாதியால்) [௪]

ஐந்தாம்பாட்டு.

வணங்கவென்கிறதற்குப் ப்ரகாரநாமமாகத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (வணங்கியித்யாதியா

ஈ— வடமதுரை - உத்தரதேசஸ்தமான ஸ்ரீமதுரையிலே, பிறந்த - அவதரித்தவனை, வாய்க்கும் - அத்தாலேவாய்த்திருக்கிற, ஸ்ரீமதுரையிலே யவதரிக்கையாலே ஸத்யஸங்கல்ப ப்ரகாசியாநிற்கிறவையானவென்றபடி. பெரும்புகழ் - அவதாரதினங்களான கல்யாணகுணங்களையுடையவனை, மூவுலகீசன் - த்ரிவிதசேதநாசேதநநியந்தாவான, வாய்க்கும் - ஸம்பாதிக்கிற, அவதரிக்கையாலே மிகவும்ப்ரகாசியாநிற்கிறவென்றபடி. அணி - அலங்காரமான, அதிமநோஹரமானவென்றபடி. நிறம் - காந்தியையுடையவனை, கண்ணபிரான்றன் - ஸ்ரீக்ருஷ்ணனை உபகாரகனுடைய, தன்னையென்றுஸர்வஸ்வமாய் ப்ரியமாம். மலர் - விகஸிதங்களான, அடிப்போதுகளை - சரணகமலங்களை, போது - புஷ்பம், இங்குகமலம்விவக்ஷிதம். இதுக்கு நினைக்கவென்கிறதோடே யந்வயம். ஈங்கு - இந்ததேசத்திலே, வாய்க்கும் - ஸஹஜமாகஸம்பாதிக்கிற, கரும்பும் - இக்ஷுக்களும், பெரும் - பெரியதுகளான, கரும்புகளுக்கும்நிழலாம்படி யுந்நதங்களானவென்றபடி. செந்நெலும் - சிவந்தகதிர்களையுடையவையான நெல்லுப்பயிர்களுமான, வயல் - கழனிகளாலே, சூழ் - வ்யாப்தமான, திருவாறன்விளை, திருவாறன்விளையென்கிற திவ்யதேசத்திலே, நிச்சலும் - நித்யமும், எப்பொழுதும் - ப்ரதிக்ஷணந்தோறும், மனத்து - மநஸ்ஸிலே, நினைக்கப்பெற - ஸ்மரிக்கப்பெறுகைக்கு, பெறவென்கிறத்தாலே ஸ்மரிக்கையே பேறென்றுதோற்றுகிறது. "ஸம்வத்ஸரேஸ்ம ஸம்ஸ்ம்ருதிஃ" என்றதிறே! வாய்க்குங்கொல் - கிடைக்குமோ. [௫]

மலர் - விகஸிதமான, அடிப்போதுகள் - தன்திருவடித்தாமரைகளை, என்னெஞ்சத்து - என்னுடையநெஞ்சிலே, எப்பொழுதும் - ஸர்வக்ஷணங்களிலும், இருத்தி - ப்ரதிஷ்டிதங்களாக்கி, வணங்க - நான்ஸேவிக்கும்படி, திருவாய்மொழிபாடி யநுபவிக்கும்படியென்கை. இதுக்கருளியவென்கிறதோடே யந்வயம். பலரடியார்முன்பு - ஸ்ரீவால்மீகிபகவான் ஸ்ரீவேதவ்யாஸபகவான் ஸ்ரீபராசரபகவான் முதலாழ்வார்களென்கிற விலக்ஷணர்களான அடியார்முன்னே, அடியார் - தாஸ்யரஸிகர்கள், அருளிய - என்பக்கல் விசேஷித்துக்ருபைபண்ணினவனை, "மஹாத்மநேத்யாதி" என்றுமுதலிகளெல்லாருமிருக்கச்செய்தே திருவடிபக்கலிலே விசேஷகடாக்ஷம்பண்ணினாப்போலே யென்றுகருத்து. பாம்பணை - நாகசயநனை, அப்பன் - ஸர்வகாரணிகன், அமர்ந்து - ப்ரதிஷ்டிதனாய், அத்தேசவாஸத்திற்காட்டில் வேறொன்றையபேக்ஷியாமலென்றபடி. உறையும் - நித்யவாஸம்பண்ணுகிற ஸ்தலமான, மலரில் - புஷ்பங்களையுடையவையான, இல்லென்றதுகேயம், புஷ்பாலங்க்ருதங்களானவென்றபடி. மணி - ரத்நங்களான, நெடு - உந்நதங்களான, மாடங்கள் - க்ருஹங்களையும், நீடு - உந்நதங்களான, மதிள் - ப்ராகா

ரு—திருவாறன்விளை* யுலகுமலிபுகழ்பாடநம்மேல்வினையொன்றுநில்லாகெடுமே* ॥ரு॥
ஒன்றுநில்லாகெடுமுற்றவுந்தீவினையுள்ளித்தொழுமின்றொண்டீர்* அன்றங்கமர்வென்றுருப்பிணிநங்கைய
ணிநெடுந்தோள்புணர்ந்தா* னென்றுமெப்போதுமென்னெஞ்சந்துதிப்பவுள்ளேயிருக்கின்றபிரா* னின்ற
வணிதிருவாறன்விளையென்னுநீணகரமதுவே* ॥கூ॥
நீணகரமதுவேமலர்ச்சோலைகள்சூழ்திருவாறன்விளை* நீணகரத்துறைகின்றபிரானெடுமால்கண்ணன்விண்

திருவாறன்விளையினுடைய வுலகமலிபுகழ்பாட நம்முடையக்லேசமெல்லாந்தீரும், திருவாற
னமர்ந்துறையும் திருவாறன்விளையைப்பாடுங்கோளென்று ஸ்ரீவைஷ்ணவர்களைக்குறித்தருளிச்செய்கிறார். ॥ரு॥
(ஒன்றுநில்லாகெடும்) அன்றங்கமர்வென்றுருப்பிணிநங்கை யணிநெடுந்தோள்புணர்ந்தருளி அத்திரும
ணம்புணர்ந்தருளின திருவழகையென்று மென்னெஞ்சந்துதிப்ப வென்னெஞ்சுள்ளேபுகுந்திருக்கிற பிரான்
னின்றவணிதிருவாறன்விளையென்னும் நீணகரமதுவே உள்ளித்தொழுமின்தொண்டீர்? உங்கள்ஸகலதுக்கங்
களும்போமென்கிறார். ॥கூ॥

ல்) பாம்பணையென்கிறவிசேஷணத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருவனந்தாழ்வானிருக்கையால்)
பாட்டுக்குவழிதாத்பர்யமருளிச்செய்கிறார் (திருவாறன்விளையைப்பாடுங்கோளிருக்கையால்) ॥ரு॥

✻ ஆறும்பாட்டு. ✻

என்னெஞ்சந்துதிப்பவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அத்திருமணமிருக்கையால்) ॥கூ॥

நங்களைபுமுடைத்தான, திருவாறன்விளை - திருவாறன்விளையென்கிற திவ்யதேசத்தினுடைய, இதுக்குப்புக
ழோடேயநயம். உலகமலி - லோகத்திலேமலிந்ததான, ஸர்வாதிகமானதென்றபடி. புகழ - கீர்த்தியை, பா
ட-பாடினால், நம்மேல்வினை - நம்முடையமேலேயிருக்கிறதுக்கங்கள், ஒன்றுநில்லா - லேசமும்நில்லாமல், ॥ரு॥
கெடும் - நஷ்டங்களாம்.

அன்று- சிசுபாலன் விவாஹம்பண்ணப்புகுந்ததாக ஸன்னத்தனாய் வந்திருந்த காலத்திலே, அங்கு- அந்த யுத்த
பூமியிலே, அமர்- யுத்தத்திலே, வென்று- ஜயித்து, சிசுபாலாதிகளை யிதிசேஷ:. நங்கை யுருப்பிணி
யென்று மாறியநயிப்பது. நங்கை- ஸர்வகுணபூர்ணையான, நங்கை- ஸ்த்ரீ. உருப்பிணி-
ருக்மிணிப் பிராட்டியினுடைய, அணி- அலங்காரபூதங்களான, அணி- அலங்காரம். சாகவாத்திவ வசுவா
லங:. நெடும்- பெரியதுகளான, அதிசயிதஸௌந்தர்யங்களான வென்றபடி. தோள்- புஜங்களை, புணர்ந்
தான்- ஸம்ச்லேஷித்தவனை, என்றும்- ஸர்வதிநங்களிலும், எப்போதும்- ஸர்வக்ஷணங்களிலும்,
என்னெஞ்சம்- என்னுடைய மநஸ்ஸானது, துதிப்ப- ஸ்தோத்ரிக்கும்படி, அவ்வவதாநத்தையு மவ்வழகையுங்கொ
ண்டாடும்படி யென்றபடி. உள்ளே- என்னெஞ்சுக்குள்ளே, இருக்கின்ற- ருக்மிணிப்பிராட்டியை கல்யா
ணம் பண்ணினபோதுள்ளவடிவத்திருக்கோலத்தோடே வந்திருக்கிறவனை, பிரான்- உபகாரகன், நின்ற-
எல்லாருங்கண்ணாலே காணும்படி நின்றருளுகிற ஸ்தலமான, அணி- ஜகதலங்காரமான, திருவாறன் விளை
யென்னும்- திருவாறன்விளையென்கிற, நீணகரமது- அந்தப்ரஸித்தமான உத்தாநநகரத்தை, நீள்நகரமென்கிற
விடத்திலே ளகாரக்ஷகார நகாரோ உச்சாரணகார னகாதேச:. தொண்டீர்- பகவத்விஷயத்திலே வா
ஸமுடையவர்காள்? தொண்டு- தாஸ்யம், தொண்டுடையவர் தொண்டர், தொண்டீரென்று ஸம்போத
னம். உள்ளி- மநஸ்ஸாலே யநுஸந்தித்து, தொழுமின்- ஸேவியுங்கோள், தீவினை- க்ரூரபாபங்கள்,
ஒன்றுநில்லா- லேசமும் நிற்கமாட்டா, முற்றவும்- ஸமஸ்தபாபமும், கெடும்- நஷ்டமாய்விடும், கெடு
மென்கிற மகாரத்துக்கு ஸம்ஹிதாயாம் லோப:. ॥கூ॥

அதுவே - அந்ததிருவாறன்விளையே, நீணகரம்- தீர்க்காலமிருந்து ஸகலவியபதேசங்களும் ப
ண்ணும்படியான ப்ராசுர்யமும், மலர்ச்சோலைகள் - ஸம்பந்நகுஸுமங்களாலே, சூழ-
வரிவ்ருதமான, திருவாறன்விளைநீணகரத்து - திருவாறன்விளையாகிற உத்தாநநகரத்திலே, உறைகின்ற - நி
த்யவாஸம்பண்ணுகிற்கிறவனை, பிரான் - என்னைக்கொண்டு திருவாய்மொழிபாடுவித்த உபகாரகனை,
நெடுமால் - ஆச்ரிதர்பக்கலிலே தீர்க்கவ்யாமோஹத்தை
யுடையவனை, விண்ணவர்கோன் - நித்யஸூரிநாயகனை, கண்ணன்- அதவா க்ருஷ்ணனாய்வந்தவதரித்தவனை, வாணபுரம்புக்கு- பாணாஸுரனுடைய

மூ— ணவர்கோன்* வாணபுரம்புக்குமுக்கட்பிரானைத்தொலையவெம்போர்கள்செய்து* வாணனையாயிரந்தோடுணி

த்தான்சரணன்றிமற்றொன்றிலமே*
௭௨

அன்றிமற்றொன்றிலநின்சரணேயென்றகலிரும்பொய்கையின்வாய்* நின்றுதன்னீள்கழலேத்தியவானையி

ன்னெஞ்சிடர்தீர்த்தபிரான்* சென்றங்கினிதுறைகின்றசெழும்பொழில்சூழ்திருவாறன்விளை* யொன்றிவ

ஆ— (நீணகரமதுவே) திருவாறன்விளையென்னும் நீணகரமதுவேஸாத்யஸாதநமும், அதுபெறுகைக்குபாயம் ஆதிமூலமென்றருளின அவன், அவனுகிறான் அயர்வறுமமரர்களதிபதியோடிருந்துவைத்து ஆஸ்ரிதவாத்ஸல்யமஹோ ததியாகையாலே ஸ்ரீஜயந்த்யமாயிலே யாஸ்ரிதவிரோதிநிராஸார்த்தமாக வந்து திருவவதாரம்பண்ணியருளின ஆஸ்ரிதவிரோதிநிரஸநைகஸ்வபாவனான க்ருஷ்ணன், அவனல்லதுபாயமில்லை, அவனை ஶரணம்புகுங்கோ ளென்கிறார்.
௭௩

(அன்றிமற்றொன்றிலம்) ஶரணம்புக்கால் நம்மவேக்ஷிதஞ்செய்தருளுமோவென்னில், ஸாதவாதவ

✳ஏழாம்பாட்டு.✳

இ— நீணகரமதுவேயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருவாறனித்யாதியால்) நீணகரத்துறைகி ன்றபிரான்சரணென்கிறவடிகளுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அதுபெறுகைக்கித்யாதியால்) நெடுமாலி த்யாதிதோள்துணித்தானித்யந்தத்துக்கு வ்யாக்யானமருளிச்செய்கிறார் (அவனுகிறானித்யாதியால்) அதில்நெடு மாலென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆஸ்ரிதவாத்ஸல்யேத்யாதியால்) கண்ணனென்கிறதற்குத் தா த்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்ரீஜயந்த்யமாயிலேயித்யாதியால்) பண்ணியருளினவென்கிறதற்கு க்ருஷ்ணனுடைய ஶ பம். வாணபுரமித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆஸ்ரிதவிரோதீத்யாதியால்) அன்றிமற்றொன்றில மென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவனல்லதித்யாதியால்) இதுக்குப்ஸாதாதாத்பர்யமருளிச்செய் கிறார் (அவனையித்யாதியால்)
௭௪

✳எட்டாம்பாட்டு.✳

அகலிரும்பொய்கையின்வாய் நின்றென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸாமேத்யாதியால்)

ஸா— ஸாரத்யத்தையேவெஸித்து, முக்கட்பிரான்- த்ரிபுரஸம்ஹாரத்வேநப்ரஸித்தமான நேத்ரத்ரயத்தையுடைய பா ணாஸுரனுக்குபகாரகனான ருத்ரனை, இதுக்குப் போர்கள்செய்தென்கிறத்தோடே யந்வயம். கண்பிரான் என்கிறவிடத்திலே ணகாரஸ்ய பகாரேவரே டகாராதேஶ:. தொலைய - ஸர்வஜ்ஞனும்படி, பாணாஸுர ரக்ஷணம்பண்ணினது போருமென்று உபாதனும்படியென்கை. வெம்போர்கள்செய்து - உத்க்ருஷ்டங்களான யுத்தங்களைப்பண்ணி, வெம்மென்று - உஷ்ணம், போர் - யுத்தம், ருத்ரனை யுத்தங்களைப்பண்ணியென்று அந்வ யேகவும் த்ருதியஸமாஸாவ்யாக்யாநவமும். வாணனை - பாணாஸுரனை. ஆயிரந்தோள் — ஸஹஸ்ரஸங்க்யா காரணபூஜங்களை, அநேகமெனவும். துணித்தான் - வாலித்தவன், சரண் - ஶரணம், திருவாறன்விளையை ப்ராபிக்கைக்குபாயம் என்றபடி. அன்றி - அவனன்றிக்கே, மற்றொன்றிலம் — வேறொரு வுபாயமுடை யோமல்லோம்.
௭௫

அகல்- விஸ்தீர்ணமான, இரும்- பெரியதான, கம்பீரமானவென்றபடி. பொய்கையின்வாய்- ஸரஸ்ஸினி டத்திலே, வாய்- இடம். நின்று- ப்ராணரக்ஷணத்துக்கொண்டு வழிக்கமாட்டாதேநின்று. இதுக்கேத்திய வென்கிறதோடே யந்வயம். நின்சரணேயன்றி- உன்திருவடிகளேயொழிய, மற்றொன்றிலமென்று- வேறொரு கதியுடையோமல்லோமென்று, தன்- தன்னுடைய, நீள்- நீளுமவையான, ஆவனிருந்தவிடத்தளவும் வரத் தக்கவையான வென்றபடி. கழல்- திருவடிகளை, ஏத்திய- ஸ்தோத்ரம்பண்ணின, ஆனையின்- ஸ்ரீகஜேந்த்ராழ் வானுடைய, நெஞ்சிடர்-ஹ்ருதயில் து:க்கத்தை, தாமரைபுஷ்பத்தை திருவடிகளிலே சாத்தப்பெற்றிலேனென் கிற அந்தர்து:க்கத்தை யென்றபடி. தீர்த்த- நிவாரணம்பண்ணினவனான, பிரான்- உபகாரகன், ஆனை யிடரைப் போக்கினதுவும் தமக்குபகரித்ததாக நினைத்திருக்கிறார். சென்று- ஆஸ்ரிதஸமீபத்தாலே வந்து, அங்கு - அவ்விடத்திலே, இனிது - இனிதாக, ஸௌக்யமாக உறைகின்ற - வஸியாநிற்கிறஸ்யமான, இதுஊரு க்குவிஶேஷணம், செழும் - அழகியதான, பொழில் — உத்யானங்களாலே, சூழ் — பரிவ்ருதமான, திருவா றன்விளை - திருவாறன்விளையென்கிற திவ்யநகரத்தை, ஒன்றி- கிட்டி, வலஞ்செய்ய - ப்ரதக்ஷிணம்பண்ணினல்,

௬— லஞ்செய்யவொன்றுமே, தீவினையுள்ளத்தின்சார்வல்லவே* ॥ அ ॥

தீவினையுள்ளத்தின்சார்வல்லவாகித்தெளிவிசும்பேறலுற்றால்* நாவினுள்ளுமுள்ளத்துள்ளுமமைந்ததொழிலினுள்ளுநவின்று* யாவரும்வந்துவணங்கும்பொழிற்றிருவாறன்விளையதனை* மேவிவலஞ்செய்துகைதொழக்கூடுங்கொலென்னுமென்சிந்தனையே* ॥ ௯ ॥

ஆ— றனைப் ஶரணாகதனை ஸ்ரீவிபீஷணாழ்வானுடைய பாபத்தையெல்லாம்போக்கி யவனை ரக்ஷித்தருளின ஶரணாகதவத்ஸலனல்லனோ திருவாறன்விளையிலே யிருக்கிறான், அவன்நம்முடைய ப்ரவேஶம் ரக்ஷிதஞ்செய்தருளும் ஆதலாலுங்களுடைய ஸம்ஶ்லேஷங்களும்போம்படி திருவாறன்விளையிலே போய நுபவியுங்கோ ளென்கிறார். ॥ அ ॥

(தீவினை) திருவாறன்விளையோ ப்ராப்யம், திருநாடன்றோவென்னில்? நிரவஶேஷ ஸ்வரூபாதிப்ரதிபந்தகராய்த்தெளிவிசும்பேறலுற்றால், திருவாறன்விளையைக்கண்டால் திருநாட்டைவிட்டு இத்தையே ப்ராப்யமாகக்கொண்டு ஸர்வகரணங்களாலுமநுபவிப்பார் திருநாட்டிலுள்ளார்க்கு மிதுவே ப்ராப்யம், என்னெஞ்சும் திருவாறன்விளையைமேவிவலஞ்செய்து கைதொழக்கூடுமேயோவென்று மநோரதிப்பாநிற்கும், அதுவே ப்ராப்யமென்கிறார். ॥ ௯ ॥

இ— அன்றியித்யாதிக்கும் தன்னீள்கழலேத்தியவென்கிறதற்கும் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஶரணாகதனை யென்று) ஆனையின்நெஞ்சித்யாதி விளையித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்ரீவிபீஷணேத்யாதிஇருக்கிறானென்னுமளவாலே) இவ்வளவுக்கும் பரமதாத்பர்யமருளிச்செய்கிறார் (அவனித்யாதியால) த்ருதீயபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆதலாலித்யாதியால்) ॥ அ ॥

✻ ஒன்பதாம்பாட்டு. ✻

திருவாறன்விளை ஸர்வோத்க்ருஷ்டமாயிருக்கைக்காக வீஶ்வரனாலே பரிக்ரஹமாயிருக்க வித்தை நிவ்ருத்தப்ரதிபந்தகராய்த் திருநாட்டிலேபோமவர்கள் வந்தநுபவிப்பரென்றிப்பாட்டிலேசொல்லுகை யபிமதமன்றோ வென்னவவதரிப்பிக்கிறார் (திருவாறனித்யாதிபால்) தீவினையுள்ளத்தின்சார்வல்லவாகியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிரவஶேஷேத்யாதியால்) த்விதீயபாதத்தி லபிப்ரேதமாகவிவக்ஷிக்கிற அர்த்தத்தையருளிச்செய்கிறார் (திருவாறன்விளையைக்கண்டாலித்யாதியால்) த்விதீயபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வகரணேத்யாதியால்) யாவருமென்கிறபதத்திலே யபிப்ரேதமானவர்த்தத்தை யருளிச்செய்கிறார் (திருநாட்டிலேயித்யாதியால்) பாட்டுக்குப் பரமதாத்பர்யமருளிச்செய்கிறார் (அதுவேப்ராப்யமென்று) ॥ ௯ ॥

ஶு— தீவினையொன்றும் — க்ரூரபாபங்களொன்றும், ஓவென்று ஸம்போதநம். பாரீரஜநங்காளென்றபடி. உள்ளதின்சார்வு - உளளத்திலேசார்வையுடையவை, அல்ல - மநஸ்ஸிலேஸ்திதியுடையவையல்ல, மநஸ்ஸிலேநில்லமாட்டாதே நஶித்துப்போமென்கை. ஆதலாலங்கேபோய் அநுபவியுங்கோளென்று தாத்பர்யம். ॥ அ ॥

என்சிந்தனை— என்னுடைய சிந்தையானது, என்னுடைய மநோரதமானதென்றபடி. இதுக்குக் கூடுங்கொலென்று மென்கிறதோடே யந்வயம். தீவினை- க்ரூரபாபங்கள், உள்ளத்தின்சார்வு- மநஸ்ஸிலே சார்வையுடையவை, மநஸ்ஸிலே ஸ்திதியை யுடையவை. அல்லவாகி- அல்லாதவைகளாய், ஸகலமும் நிவ்ருத்தங்களாயென்றபடி. தெளிவிசும்பு- தெளிவைக் கொடுக்கு மாகாஶத்திலுடைய, பரிபூர்ணாநுபவஸ்தானமான ஸ்ரீவைகுண்டத்திலுடைய வென்றபடி. ஏறல்- ஆரோஹணமானது, உற்றால்- கிட்டினால், உறுகை- கிட்டுகை, ப்ரதிபந்தகங்களும் நிவ்ருத்தங்களாய் ஸ்ரீவைகுண்டாரோஹணமும் வந்து கிட்டினாலென்று பரார்த்தம் இதுக்கு வணங்குமென்கிறதோடே யந்வயம். நாவினுள்ளும்- வாக்கிலும், உள்ளத்துள்ளும்- மநஸ்ஸிலும், அமைந்த- அந்த வாக்மநஸங்களுக் கநுரூபமாம்படி பூர்ணமான, அமைவு- பூர்த்தி. தொழிலினுள்ளும்- காயிகவ்யாபாரங்களிலும், த்ருதீயார்த்தே ஸப்தமீ. மநோவாக்காயங்களாலே யென்றபடி. நவின்று- அப்யஸித்து, நவிலுகை- அப்யஸிக்கை. ஆதராதிஶயத்தாலே பஹுப்ரகாரமநுபவித்தென்றபடி. யாவரும்- எல்லாரும், முக்தராய்ப்போவாரெல்லாருமென்றபடி. இது நித்யஸூரிகளுக்கு முபலக்ஷணம். வந்துவணங்கும்- இவர்களெல்லாரும் வந்து ஸேவிக்கிற ஸ்தலமான, பொழிற்றிருவாறன்விளையதனை- பொழில்களையுடைத்தான திருவாறன்விளையாகிற வந்ததிவ்யதேஶத்தை, மேவி- ஆஶ்ரித்து, வலஞ்செய்து- ப்ரதக்ஷிணம்பண்ணி, கைதொழ- கைகளாலேயஞ்ஜலிபண்ணிக்கொண் டநுபவிக்க, கூடுங்கொலென்னுமை—

மூ—சிந்தைமற்றொன்றின் திறத்ததல்லாத்தன்மைதேவபிரானறியுஞ்சிந்தையினாற்செய்வதானறியாதனமா யங்
களொன்றுமில்லை* சிந்தையினாற்சொல்லினாற்செய்கையானிலத்தேவர்குழுவணங்குஞ்* சிந்தைமகிழ்தி
ருவாறன்விளையுறைதீர்த்தனுக்கற்றபின்னே* ௰

தீர்த்தனுக்கற்றபின்மற்றோர்சரணில்லையென்றெண்ணித் தீர்த்தனுக்கே* தீர்த்தமனத்தனனாகிச்செழுங்

ஆ—(சிந்தை) திருநாட்டுக்காஸ்வும், என்னுமஸ்திபாலே யும்மைத்திருநாட்டேறக்கொண்டெழுந்தருளிச்செ
ய்வதென்னென்னில், திருவாறன்விளையே ப்ராப்யமென்றிருக்கைக்கு விரோதியான வாஸனைத்தைபோக்கி
யென்னைத்திருவாறன்விளையே ப்ராப்யமென்றிருக்கப்பண்ணினபின்பு திருவாறன்விளையென்றால் என்னெஞ்சு
தாழ்ந்துகிடக்கும்படியறியானோ, ஸர்வஜ்ஞனல்லனோவென்கிறார். ௰॥

(தீர்த்தனுக்கற்றபின்) திருவாறன்விளையே ப்ராப்யமென்றிருக்கைக்கு விரோதியானவென்னுடைய
வாஸனைத்தைப்போக்குகையாலே ஸவிதரும். அதில்நின்றருளினவெம்பெருமான் அதிலும்ஸவிதரும். அவனை

✻ பத்தாம்பாட்டு. ✻

இ—திருவாறன்விளையொழிய வேறொன்றை யென்னெஞ்சறியாதென்று கீழ்ப்பாட்டிற்சொன்னவர்த்தைச்
சொல்லுகிறதாகையாலே இப்பாட்டு வாக்யார்த்தியன்றோவென்ன விதுக்குத் தாத்பர்யஞ்சொல்லுகைக்காக
வவதரிப்பிக்கிறார் (திருநாட்டிவித்யாதியால்) தீர்த்தனுக்கென்கிறவதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார்
(திருவாறன்விளையேப்ராப்யமித்யாதியால்) தாஸீபவாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னையி
த்யாதியால்) ப்ரஸ்வபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருவாறன்விளையென்றாலித்யாதியால்) சிந்தை
யவாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வஜ்ஞனல்லனோவென்று) ௰

✻ நிகமனம். ✻

மனத்தனாகியித்யாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருவாறனித்யாதியெம்பெருமானென்னுமள

ரூ—கிடைக்குமோ வென்று நினையாநின்றது. ௯॥

நிலத்தேவர்குழு - ஸம்ஸாரான ஸாமவதருடையஸமூஹமானது, குழு - ஸமூஹம், சிந்தையி
னால் - மநஸ்ஸாலே, சொல்லினால் - வாக்காலே, செய்கையினால் - காயிகவ்யாபாரத்தாலே, வணங்கும் -
ஸேவியாநிற்கிற, இவ்வூருக்குவிசேஷணம். சிந்தைமகிழ் - அநுபவிக்கிறவர்களுடைய சித்தத்தை யாநந்
திப்பிக்கிறதான, திருவாறன்விளை - திருவாறன்விளையென்கிற திவ்யதேசத்திலே, உறை - வஸியாநிற்கிற, தீர்
த்தனுக்கு - தீர்த்தனுக்கு, பரமபாவநசரித்ரனுக்கென்றபடி. அற்றபின்னே - அறுதியாகத்தீர்ந்தபின்பு,
அவ்வூரிலெம்பெருமானுக்கே யநந்யார்ஹசேஷமாக வத்யவஸித்துத்தீர்ந்தபின்பென்றபடி. சிந்தை - என்
னுடையமிசேஷபானது, மற்றொன்றின் திறத்ததல்லாத்தன்மை - திருவாறன்விளையொழிய வேறொன்றின்விஷய
த்திலேயிராத ஸ்வபாவத்தை, இங்குவேறென்றது திருநாட்டை. அதின்பேர்சொல்லுகையுங்கூட ஸஹ்ய
மாகையாலே வேறொன்றென்று ஸாமாந்யமாகநிர்தேசிக்கிறார். திறம் - விஷயம், திறத்திலேயிருக்குமது
திறத்தது, தன்மை - ஸ்வபாவம், வேறொன்றையுத்தேச்யமாக வுடைத்தாயிராத ஸ்வபாவத்தையென்றபடி. தேவ
பிரான் - நித்யஸூரிநாயகன், அறியும் - அறிவன், சிந்தையினால் - என்னுடையமநஸ்ஸாலே, செய்வ - செ
ய்யப்பட்டவையான, மாயங்கள் - ஒருவர்க்குந்தெரியாதே மறைக்கப்பட்டவர்த்தங்கள், தானறியாதன - ஸர்
வஜ்ஞனானதானறியாதவைகள், ஒன்றுமில்லை - என்னுடையமநஸ்ஸிலேயிருக்கிற வர்த்தங்களிலே அவனறி
யாததொன்றுமில்லையென்றபடி. ஆதலாலென்னைத் திருவாறன்விளையிலேதானே கொண்டுபோய்ச்சேர்ப்பனென்
றுகருத்து. ௰॥

தீர்த்தனுக்கு - பாவநசரித்ரனானவனுக்கு, அற்றபின் - அநந்யார்ஹசேஷமாகத் தீர்ந்தபின்பு, மற்
றோர்சரணில்லையென்றெண்ணி - வேறொருஉபாயமில்லையென்று நிஶ்சயித்து, தீர்த்தனுக்கே - திருவாறன்வி
ளையிலேயிருக்கிற பரமபாவநனுக்கே, தீர்த்த - அத்யவஸிதமான, ஸ்ரீவைகுண்டநாதனையும்விட்டு இவனு
க்கேயடிமையாக வத்யவஸிதமானவென்றபடி. மனத்தனாகி - மநஸ்ஸையுடையவனாய், செழும் - செழித்
ததான, குணங்களைச் செழிப்பிக்குமதானவென்றபடி. குருகூர்ச்சடகோபன்சொன்ன - திருநகரியிலே

மூ—குருகூர்ச்சடகோபன்சொன்ன* தீர்த்தங்களாயிரத்துள்ளிவைபத்தும்வல்லார்களைத்தேவர்வைக* தீர்த்தங்களேயென்றுபூசித்துநல்கியுரைப்பர்தந்தேவியர்க்கே* ॥கக॥

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ— ப்ரதிபாதித்த திருவாய்மொழிகள் இவைவல்லாரவைற்றிலும்பவித்ரதமரென்று ப்ரஹ்மாதிதேவர்கள்ஸத்கரித்துக்கொண்டு தங்கள் ப்ரணயிநிகளுக்குச் சொல்லுவரென்கிறார். ॥கக॥

திருக்குருகைப்பிரான்பிள்ளான்திருவடிகளேசரணம்.

இ—வாலே) அதில்நின்றருளினவெம்பெருமான் பாவநத்வத்தைப்பேசுகையாலே பவித்ரமென்றபடி. பவித்ரஶப்தத்தாலே தீர்த்தஶப்தம்வ்யாக்யாதம். த்ருதீயபாதத்தில் தீர்த்தஶப்தத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அதிலுமித்யாதியால்) திருவாய்மொழிகளதிலும்பவித்ரமென்றபடி. தீர்த்தங்களேயென்றுபூசித்தென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவைவல்லாரித்யாதியால்) ப்ரதிபாதித்ததிருவாய்மொழிகளென்னுமளவு மாழ்வார்தாமாக வருளிச்செய்ததைச்சொன்னபடி. இவைவல்லாரதிலும் பவித்ரதமரென்றது - ப்ரஹ்மாதிகள்சொன்னதாக வாழ்வாரநுவதித்ததைச்சொன்னபடி. ॥கக॥

ஶ—இருக்கிற வாழ்வாரருளிச்செய்ததான, தீர்த்தங்கள் - தீர்த்தங்களான, பாவநங்களான. ஆயிரத்துள் - ஸஹஸ்ரத்தில், ஆயிரம்பாட்டுமாயிரந்தீர்த்தமென்றுகருத்து. இவைபத்தும்வல்லார்களை - இந்தபத்துபாட்டுக்களையு மப்யஸிக்குமவர்களை, தேவர் - ப்ரஹ்மாதிதேவதைகள், வைகல் - ஸர்வதா, க்ஷணிகடலைத்தீண்டலாகாதென்றாப்போலே யொருகாலநியதியன்றிக்கேயென்றபடி. தீர்த்தங்களேயென்று - பாவநபவித்ரதமரேயென்று, ஏகாரத்தாலே அதில் ஸம்ஶயலேஶமில்லையென்றபடி. இதுக்கு உரைப்பரென்கிறத்தோடேயன்வயம். பூசித்து - பூஜித்து, நல்கி - ஸ்நேஹித்து, தம்தேவியர்க்கு - தங்களுடைய தேவிகளுக்கு. உரைப்பர் - ப்ரீதிப்ரவாஹத்தாலே சொல்லாநிற்பர்கள். ॥கக॥

ஸஹஸ்ரஶாக்யஶம்காரே பவித்ரதமதாம் ப்ருகட்யது
ஸ்வோக்தஸ்ய ஸம்ஸ்தவிதுஷாம் ப்ரணயிகாம் ।
ஶ்ரீதாத்ருவேதஸாரணவிதிஷ்டவிதவ:
ஸ்வாநளயாநுவர்ணநமசிதகீர்த்திமுவாசிஹ ॥

ஜ்ஞாநவைராக்யாநுஷ்டாநஶேவதயே ஶ்ரீவேதாந்தராமாநுஜமஹாதேஶிகாய நம:.

ஸ்ரீ:.

த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி:.

(இன்பம்பயக்க.)

வைகுண்டே நித்யயோகாத் ஸ்ரிதவிவஶதயா ஜநகீர்த்யூர்ஜிதத்வாத்
ஶேஷே ஶாயித்வாத் ருக்மிண்யபிமதவஸநாத் பாணதோஸ்ஸ்தம்பநாத்யை:।
க்ராஹக்ரஸ்தேபரக்ஷாவிரசிதவிஷயே வஸதியாநாத்ஸ்வஹாநாத்
ஸ்வாதந்த்ர்யாத்யைர்வ்யஞ்ஜிதம்விபவயதி ஹரிஸ்ஸ்வைர்ஸ்வஸம்ஶ்லேஷயாத்யை: ॥௯௦॥
ஸாம்ராஜ்யாங்காவஹிஷ்ணும் ஸ்ரீதஜநதமஹிம்ஸ்வாந்தரக்ஷம்
வ்யக்தவைலக்ஷண்யம் ஸ்வரக்ஷாக்ருதவிஜநவைஷ்ணவிதாந்தயம் ।
ஸ்வீயாக்ரூத்யோத்ஸாஹம் ஸ்வரக்ஷணஸாவிஶேஷம்விஸ்மயாஸக்திஸம்புதம்
ஸ்வாதந்த்ர்யாஞ்ஜநவரஸ ஸ்வதிக்ருதவஸாரஸ்வத்வோத்ஸந்நிஷ்டமோஹம் ॥௯௧॥

(வைகுண்டே நித்யயோகாத்) இன்பம்பயக்கவித்யாதி - பெரியபிராட்டியாருந்தானுமாக நலமந்தமில்ல தோர்நாட்டுக்குள்ளே நித்யவாஸம்பண்ணுகையாலும், (ஸ்ரிதவிவஶதயா) அகலிடமுற்றவுமித்யாதி - கூடுங் கொல்வைகலுங் கோவிந்தனையித்யாதி - வாத்ஸல்யாதிரேகத்தாலே வவஶரித்தாஸ்ரிதர்க்குச் சொல்லிற்றுச் செய்யுமவனுகையாலும், (ஜநகீர்த்யூர்ஜிதத்வாத்) வாய்க்கும்பெரும்புகழ் மூவுலகீசன் - நிரவதிககீர்த்தியாலே பூர்ஜிதனுகையாலும், (ஶேஷேஶாயித்வ) பாம்பணையப்பனமர்ந்துறையும் - திருவனந்தாழ்வானைத் திருப்படுக்கையாகவுடையவனுகையாலும், (ருக்மிண்யபிமத) உருப்பிணிநங்கையணிநெடுந்தோள் புணர்ந்தான் - ருக்மிணிப்பிராட்டிக்கபிமதஸ்பர்சத்திலே யுதவுகையாலும், (பாணதோஸ்ஸ்தம்பநாத்யை:) வாணபுரம்புக்கு முக்கட்பிரானைத்தொலைய வெம்போர்கள்செய்து வாணனையாயிரந்தோள்துணித்தான் - நெற்றியிலே கண்படைத்தருத்ரனை ரக்ஷகனாகப்பற்றினேம் என்றிறுமாந்து தேவர்களோடேவிரோதித்த பாணாஸுரனிருந்தவிடத்தேசென்று ஸௌலப்யாதிஶயத்தாலே அவனுக்கு ரக்ஷகனான ருத்ரனை முன்னே பராஜிதனாக்கப்பண்ணி பின்னையவனுடைய வாயிரம்கரங்களைக்கழிக்கையாலும், (க்ராஹக்ரஸ்தேபரக்ஷ) அகலிரும்பொய்கையின்வாயித்யாதி - ப்ரபலமானமுதலைகையிலே யகப்பட்டநத்யந்தமக்யாய்நின்ற கஜேந்த்ராழ்வானைக்ருபைபண்ணி அதில்நின்றும் விடுவித்து ரக்ஷிக்கையாலும், (உசிதவிஷயே வஸதியாநாத்) யாவரும்வந்துவணங்கும் பொழில்திருவாறன்விளையதனை - அயர்வறுமமரர்களும் வந்தாஸ்ரயிக்கும்படி அதிஸ்ரவ்யமான திருவாறன்விளையிலே யெழுந்தருளுகையாலும், (ஸ்வஹாநாத்) திருவாறன்விளையுறைதீர்த்தனுக்கற்றபின்னே - தன்னிடத்திலே அநந்யராயுள்ளாரை ஐதரவிஷயநிஸ்ஸ்ப்ருஹராம்படி பண்ணவல்லவாசிஷ்ணுகையாலும், திருவாறன்விளை யெம்பெருமான்தன்னை ஸ்தோத்ரம்பண்ணுகிறபேர்களுடைய தீர்வ த்தையெல்லாம் ஶமிப்பியாநிற்கிறானென்று "இன்பம்பயக்க" என்கிறதஶகத்திலே யாழ்வாராலேயருளிச்செய்யப்பட்டதென்கிறார். ॥௯௦॥

இப்படி ஸப்தமஶதகத்தில் பத்துதஶகங்களாலும் ப்ரதிபாதிதங் களானகுணங்களை ஸங்க்ரஹிக்கிறார்.

ஸாம்ராஜ்யங்களை வஹிக்குமவனாய், ஆஸ்ரிதருடையதமோமலத்தை ஶமிப்பிக்குமவனாய், தன்னுடை வைலக்ஷண்யத்தை வெளியிடுமவனாய், அதினுடையப்ரகாரங்களை ப்ரகாஶிப்பிக்குமவனாய், தன்னுடையவ விஜநஸம்ஸாதத்தை தர்ஶிப்பிக்குமவனாய், ஸ்வாஸ்ரிதருடையகூப்பீட்டைப் பரிஹரிக்குமவனாய், அவர்களுக்குவிஸ்மயமாக ஸ்வரக்ஷிவிஷயனுமாய், ஆஶ்சர்யவிஶேஷசக்திகனுமாய், ஆஸ்ரிதரை ஸ்வவிஷயஸ்தோத்ரத்திலே யோஜிக்குமவனாய், ஸ்தோதாக்களுடையதுர்வத்தை ஹரிக்குமவனான வெம்பெருமானை ஸப்தமஶதகத்திலே ஆஸ்ரிதாநிஷ்டநிவர்த்தகனாக ஆழ்வாரருளிச்செய்தாரென்கிறார். ॥௯௧॥

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம:.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஏழாம்பத்தில் பத்தாந்திருவாய்மொழிமுற்றிற்று.

ஸ்ரீ:

தத்வம்ஷஷ்டாநாம் விஹிதவிவிதேஷு ப்ரபதநஸ்ஸோபாயோபாயஸாங்கவிக்ஷஸ்யாதிகத்ருஷ்டிபஸ்யஸ்வதே ।
ஸதிஷ்டாவதாரஸ்யத்ருதிஹிரநிஷ்டப்ரயாஸெநஸ்ஸ்ய தஸ்ஸிஸ்யஸ்ஸ்ம்ப்ரஸாதிதம்ஸம்ஸ்பஸதி ॥௬௫॥
ஸமநுஸாராப்ராஸம்காத்வாயதிதமஸ:ப்ரகடயந்நஸ்வோபாயக்ஷம்மாவ்ருத்திர்திவிஜஜநப்ரணயிதாம் ।

இஸ்லோகத்தில் கீழ்ப்பத்துக்களோடே ஏழாம்பத்துக்குள்ளஸங்கதியை அருளிச்செய்கிறார் (தத்வதி த்ருஷ்டி) ப்ராப்யப்ராபகங்களாக ஸாத்யஸாதநவிமுக்த ஸகலாதிவிஸிஷ்டனான ஸ்ரீபதிதிருவடிகளிலே ஸம்ஸ்வ ஞ்ஞஸம்ஸமாய் ஸ்வாபராதக்ஷணத்தோடே ஸாஸ்ஸ்ரமணம்பண்ணச்செய்தேயும் தமமபெருமைதம்தலைக்கட்டக்காணாமையாலே விஷண்ணராய் ஆற்றாமையின்மிகுதியாலே “ஸம்ஸாரியங்களைவிட்டென்னை ஸம்ஸித்துன்திருவடிகளைச் சேராதபடிபண்ணப்பார்த்தாயாகாதே” என்று ‘ப்ரணயாத் ஸமீபநாத் ஸதிஷேவாஸ்” என்கிறகணக்கிலே உபாலம்பியாநின்றுகொண்டு ஸ்ரீதஜநாநிஷ்டநிவர்த்தந தக்ஷனான எம்பெருமானை ஸமீக்ஷிகரித்தருளுகிறாரென்கிறார். ॥௬௫॥

இஸ்லோகத்தில் ஸ்ரீதாநிஷ்டநிவர்த்தகத்வப்ரதிபாதகமான ஏழாம்பத்தில் பத்துதிருவாய்மொழிகளிலும் ப்ரதிபாதிதங்களான பத்துகுணங்களையும் அடைவேஸங்க்ரஹித்தருளுகிறார் (ஸமநுஜதி) கீழுலகமுண்டபெருவாயாவில் திருவேங்கடமுடையான் திருவடிகளிலே ப்ரபதநம்பண்ணச்செய்தேயும் ஸம்ஸாரைபுருஷமையாலே விஷண்ணராய் நீஎன்னை உன்திருவடிகளிலே சேரவொட்டாதபடி பண்ணுகிறாயாகாதே இப்படிபண்ணுகிறஸாமர்த்தாலே உனக்கென்னப்ரயோஜநமுண்டென்று முதற்திருவாய்மொழியிலே எம்பெருமானைவைத்துக்கொண்டுநிற்கையாலே எம்பெருமான் தன்திறத்தில் ஸ்ரீதர்பண்ணும் ஸாமர்த்யஸம்பெகையை ஸஹித்தருளுமவன் என்றருளிச்செய்தார். இரண்டாந்திருவாய்மொழியில் பெரியபெருமாளோடே கலந்துபிரிந்தாளொருபிராட்டியினுடைய திருத்தாயார் எம்பெருமானைநோக்கி இவள்திறத்தென்செய்கின்றாயே என்று ஸமீக்ஷகுமபாசுரத்தாலே ஸ்வஜநமஹாயாஸம் எம்பெருமானுக்குள்ள ஸீதியையும ஸீதிஸமயித்ருத்வத்தையும் ப்ரதிபாதிக்கையாலே ஸ்வாஸ்ரிதமஹாஸாதகனென்றருளிச்செய்தார். மூன்றாந்திருவாய்மொழியில் ஸமவஸரணப்ரஸங்கத்தாலே மோஹித்தபிராட்டி பாசுரத்தாலே திருப்பேரைக்குப்போகாமல் நிற்கவல்லேனல்லேன் ஐயோதேயென்றுகொண்டு எம்பெருமான் ஸ்ரீதாகக்ஷகப்ரகாஸகனென்றருளிச்செய்தார். நாலாந்திருவாய்மொழியில எம்பெருமானுடைய அவதாராவதாநங்களை அநுஸந்தித்து அவன்பண்ணும்ரக்ஷாப்ரகாரங்களை அநுஸந்திக்கையாலே ரக்ஷாக்ஷணப்ரகாஸகனென்றருளிச்செய்தார். ஐந்தாந்திருவாய்மொழியில் “அன்றாசாரங்களைவைகுந்தத்தேற்றி” என்கிறபடியே கோஸலஜநவஜநி ஐஸ்வர்யதிசாஜநஜாத திவ்யமதிஷாநப்ரவர்த்தநத திவ்யாவதாரங்களை அநுஸந்தித்து அவன் நிகிலஜநஜாதஸரண்யனென்றுகொண்டு ஸகலஜநஸுலபஹேதுப்ரகாஸகனென்றருளிச்செய்தார். ஆறாந்திருவாய்மொழியில் “உன்னையொன்று

ச்ரிதாக்ரந்தச்ரவணவிவசஸ் ஸ்த்ரீத்வஸம்ஸ்தோத்பாதம் ஜந்மஸ்தோத்ரவ்யஸநஜிதுசி ...

கொல்சேர்வதுவே" என்றுகேட்டாருடைய நீராம்படிகூப்பிடுகையாலே எம்பெருமான் ஸ்வாச்ரிதர்பண்ணும் ஆக்ரந்தங்களை ஸஹிப்பியாநிற்பனென்றருளிச்செய்தார். ஏழாந்திருவாய்மொழியில் ஸாவநாவ்ருக்ஷத்தாலே வ்ருத்யுக்ஷஸந்நாகாரமாகத் தோற்றுநிற்கச்செய்தேயும் பாஹ்யஸம்ச்லேஷமின்றியாமையாலே கரைந்து நோவுபடும் பிராட்டி பாசுரத்தாலே எம்பெருமான் ஆச்ரிதர்நினைக்குந்தோறும் மனதிலேவ்ருத்காசியாநிற்பனென்றுகொண்டு ஸ்ம்ருதிவிஷயத்வத்தை உபபாதித்தருளினார். எட்டாந்திருவாய்மொழியில் எம்பெருமான் தனது ஆச்சர்யபூதநாநாவிபூதிகளைக் காட்டிக்கொடுக்கக்கண்டு அவனது விசித்ரவிபூதிகத்வத்தையருளிச்செய்தார். ஒன்பதாந்திருவாய்மொழியில் "நீயென்னை இவ்வ்ருத்தியிலேயேன்வைத்தா" யென்று எம்பெருமானைக்கேட்க லோகோபகாரார்த்தமாக நம்ஸ்வரூபரூபகுணவிபூதிகளை உள்ளீடாக வைத்த திருவாய்மொழியைப் பாடுவிக்கைக்காகவென்று அவன் அருளிச்செய்ய, 'ஸ்ரீவால்மீகிபகவான் உள்ளிட்டாரிற்க என்னைக்கொண்டு பாடுவிப்பதே' என்றுகொண்டு எம்பெருமானுடைய ஸ்தோத்ரப்ரியக்ரஹணத்தை அருளிச்செய்தார். பத்தாந்திருவாய்மொழியில் எம்பெருமானைக்கவிபாட வினைகளொன்றுநில்லாகெடுமென்றுகொண்டு எம்பெருமானுடைய ஸ்தோத்ருஜநாவஹாரகத்வத்தை அருளிச்செய்தார்.

இப்படி ஸாரூப்யஸம்ஸாரஸஹகத்வாதிகளாலே எம்பெருமான் ஆச்ரிதாநிஷ்டநிவர்த்தகனென்றருளிச்செய்தாராயிற்றென்கிறார். ॥௭௰॥

ஸ்ரீமதே ஸ்ரீசைல ஸ்ரீநிவாஸார்ய மஹாதேசிகாய நம:.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:.

ஆழ்வாரெம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்து முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீமத்க்ருஷ்ணபாதஸூநுவரவரமுநயே நம:

ஆழ்வாரெம்பெருமானார் தேசிகன் திருவடிகளேசரணம்.

திருவாய்மொழி-எட்டாம்பத்து.

மூ— தேவிமாராவார்திருமகள்பூமியேவமற்றமராட்செய்வார்* மேவியவுலகமூன்றவையாட்சிவேண்டுவேண்

* திருக்குருகைப்பிரான்பிள்ளான்திருவடிகளேசரணம். *

ஆ— (தேவிமாராவார்) கீழில்திருவாய்மொழியிலே மநோரதித்தபடி பெறாமையாலே க்ருத்யாக்ருத்யவஸ்தை சாய் எம்பெருமானுடைய ஆஸ்ரிதவாத்ஸல்யாதிகுணங்களை சங்கிக்கும்படி கலங்கி 'காணுமா

* ஜ்ஞாநவைராக்யநிஷ்டாநமேவ ஸ்ரீமதேவராஜராமாநுஜமஹாதேசிகாய நம:. *

க்ருஷ்ணஜந்மாயோகஸம்பத்திதீநா ப்ரபந்நோமஹாவஸ்தாபயோகாஸ்ரயமேதோஷகு: ।

ஸ்ரீவாஸீஜநமாஜாஸாவரியஞ்ஜநாநா மநோவர்த்திவாசியத்வா மஹாஸம்ப்ராவசித்வா: ॥

* எட்டாம்பத்து. *

இ— தாம்மநோரதித்தபடியே ஸம்ஸ்லேஷிக்கலாம்படி திருவாறன்விளையிலே அவன் எழுந்தருளியிருக்கக் காணுமாறருளாயென்றிவர் இத்திருவாய்மொழியிலே அலற்றுகை யஸம்கதமன்றோவென்ன வதரிக்கிறார்- (கீழில்த்யாதி) மநோரதித்தபடியே பெறாமையாலேயென்றது - நினைத்தக்ஷணத்திலே திருவாறன்விளையைக் காணப்பெறாமையாலே யென்றபடி. சங்கிக்கும்படி என்கிறவிடத்தில் 'வ்யாதக்ருஜ்ஞ க்ருத ஜ்ஞாஸாநா க்ருபஸ்ஸ்ராவக: । ஸத்யத்மநிப்ரநோ க்ருபா ஸம்கேஹிதாஸ்யஸம்க்ஷயாக" என்கிறஸ்லோகம் ஸ்மர்த்தவ்யம். காணுமாறருளாயென்கிறவித்தாலே ஸ்வஷ்க்ஷாயாம்ஶ்ருஷ்யமென்கிற ஸமஸ்தாணமித்திருவாய்மொழிக்கு ப்ரதிபாத்யமென்று ஸூசிதமாயிற்று. அதாவது:— ஆஸ்ரிதர்காணவேணுமென்று இழித் தால அவனுக்குத்தான்ஶுஸ்ருஷைகை. இப்பத்தினுடைய ப்ரதிலே இப்படிசொல்லுகையாலே ஸகத்ஹ்ராநாவ தித்வம் இப்பத்துக்கெல்லாம் ப்ரதிபாத்யமென்றதாயிற்று. இத்தால்கீழ்ப்பத்திலே கதிஷ்ட்யஸம்நமியக்ஷ த்தைசொல்லி இப்படிகதிஷ்ட்யஸகஸ்வம் தனக்குஸ்வஹாவமானாலும் உத்தேஸ்யாநிஷ்டநிவ்ருத்திகளெல்லாம்

ஸ— தேவிமாராவார்- உனக்கநுரூபமஹிஷிகளாயிருப்பார், திருமகள்பூமி- ஸ்ரீதேவியும் ஸ்ரீபூமிப்பிராட்டியும், தம்ஸ்தித ஸராயீநனைக்கொண்டு நீ கார்யம் செய்யும்படி உனக்கு ஸஹாயைகளாயிருப்பார் ஸ்ரீஸூக்திகள், இபபடி "நகஸ்ரீணாவாஜ்ஞ்கீ" என்பாரும அருகேயிருக்க எனக்கு க்லேஸப்படவேண்டின ஹேதுவென்னென்று கருத்து. ஏவ- நீ ஆஜ்ஞாபிக்க, கைங்கர்யம் ப்ரியமானப்போலே "க்ரியதாமிதிமாம்வத" என்கிறபடியே ஏவி அடிமை கொள்ளுகையும் மிகவும் ப்ரியமாயிருக்குமிறே; "க்ஷாமம்ஸீயாவாஷா" என் கிற ஸ்லோகத்தை இங்கே அநுஸந்திப்பது ஆட்செய்வார்- கைங்கர்யமபண்ணுவார், மற்றமரர்- ஸ்ரீஸூக்திக ளுக்கு வேறான அமரர், அவர்களுக்கு ப்ரதிநிதிகளான அமரரென்றபடி. ஷநதட ஸரிஷம்ஹத்தாலே பிராட்டிமாருக்குப் பிறக்கும் ரஸாதிஸயம் அவர்களோடவனுக்கு கைங்கர்யம் பண்ணப் பெறுகையாலே தங்க ளுக்குமுண்டாகையாலே அவர்களோடு ஸாம்யமாக விகல்பிக்கலாம்படி இருக்கிற நித்யஸூரிகளென்கை. "வேதம வல்லார்களைக்கொண்டு" என்கிறபடியே இவர்களெல்லோரும் ஸாக்ஷிகாரமாயிருக்க நான் க்லேஸ படுவதே என்றுகருத்து. ஆனாலும் ஸௌஸ்யத்தில் குறையுண்டாகில கார்யம் செய்யமுடியுமோ வென் னில்; மேவிய- ஸரிவிதங்களான, ஆத்ருதமானவென்றபடி. 'ஐஹாலோகி மஹாவிஹம்" என்கிறபடியே உன்பக்கல் பொருந்தினவையான என்கை. உலக மூன்றவை- அந்த ப்ரஸித்தங்களான மூன்று லோகங்கள். லோகத்ரய ஜிதலோக:, வதாகாதை:. த்ரிவிதசேதநாசேதநங்களென்றபடி. ஆட்சி- ஆளப்படுமவை, நியாம்யங் களென்றபடி., வேண்டுவேண்டு- இந்த ஐஸ்வர்யத்துக்கு தத்காலங்களிலே வேண்டின வேண்டினவையான

மூ—டுருவநின்னுருவம்* பாவியேன்றன்னையடுகின்றகமலக்கண்ணதோர்பவளவாய்மணியே* யாவியேயமுதே
அலைகடல்கடைந்தவப்பனேகாணுமாறருளாய்* ||க||
காணுமாறருளாயென்றென்றேகலங்கிக்கண்ணநீர்களலமரவினையேன்* பேணுமாறெல்லாம்பேணிநின்பேரே

ஆ— றருளாய்” என்றுகூப்பிடுகிறார். ஸகலஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹாரநாயகனாய் ஶேஷஶேஷாஶந ஶரீரவருத்வ நாநாவிதாநந்த வஸ்திஜநவஸ்திவாஸிகா வஸ்திவஸ்திதவாரணயாமஹனாய், நிவிஷாஸந நிருபாணத்ராண ஸம்ஹார ராதிஶீலனாய், சூத்திதவஸ்திதாரணாஸமோசக ஐஶ்வர்யநாதக்ஷணவிக்ரஹனாய், ஸௌஶீல்யவாத்ஸல்யதாஶேஷ ஜேநாநயநஸௌந்தர்யாதிதிஶோபநனாய், கதவாஜ்ஞவித்யாஸகோமலநனாய், நீலரத்நஸத்ருஶதிவ்யரூபனாய், எனக்குதாரகனாய், போக்யனாய், ப்ராணதஜநஸம்ரக்ஷிதநிவர்தநதசந்தேஹனாய் இருந்த- உன்னைக்காணுமாறருளாயென்கிறார். ||க||

இ—ஸர்வஸ்வதாநமாகவே செய்தருளுமென்னுமிடத்தை இப்பத்திலேயருளிச்செய்கிறாரென்று கீழ்ப்பத்தோடே இப்பத்துக்கு ஸங்கதியும்ஸங்கதியாகிறது. இவ்வர்த்தத்தை “அயாநிர்வேதம்வைஸம்பும தே” என்றுவாயநாயர் அருளிச்செய்தார். *

முதற்பாட்டு

பூர்வார்த்தத்திற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸகலேத்யாதியால்) ஏவமற்றமாராட்செய்வார்என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஶேஷேத்யாதியால்) உலகமூன்றுடையயாட்சிஎன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிவிஶேத்யாதியால்) பாவியேன்றன்னையடுகின்ற கமலக்கண்ணதென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸௌஶீல்யேத்யாதியால்) ஆவியேயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எனக்குதாரகனென்று) அமுதேயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (போக்யனென்று) அலைகடல்கடைந்தவப்பனேயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ப்ரணதேத்யாதியால்) ||க||

ஈ— உருவம்- ரூபங்கள், நின்னுருவம்- உனக்கு திவ்யவிக்ரஹங்கள், பாவியேன்றன்னை- உன்னழகுகளை அநுபவிக்கப் பெறாதபடி பாவத்தையுடையவனான வென்னை, பாவத்தை யுடையவன் பாவியான். இஸ்வபத்தாலே தன்னைச்சொல்லிக்கொள்ளும்போது பாவியேன் என்று ரூபமாயிருக்கும். தன்னை யென்று ஸார்வநாமபூர்வகம். அடுகின்ற- வ்யாபாதிக்கின்ற, ஸ்மிருதிவிஷயமாகக் கொண்டு வ்யாபாதிக்கின்ற என்றபடி. கமலக்கண்ணது- கமலஸத்ருஶநயநங்களை யுடைத்தான, கண்ணை உடைத்தானது கண்ணது, இதுமணிக்கு விஶேஷணம். ஓர்பவளவாய் விலக்ஷணப்ரவாளாதரமான. வாய்- அதரம், கதவாஜ்ஞப்ரவாளஸத்ருஶாதராதரமான வென்றபடி. மணியே- நீலரத்நமே, ஒரு நீலரத்நமானது கமலவிஶேஷமாய் ப்ரவாளஸத்ருஶாதராதரஶோபியாயிருந்தாப்போலே இருக்கிறவனே என்றபடி. ஆவியே- ப்ராணனே, விஶ்லேஷித்தால் எனக்கு ஜீவிக்கப்போகாதபடி இருக்கிறவனே என்றபடி. ஒரு வாயுவிஶேஷமன்று இவருக்கு ப்ராணன், நாய்ச்சிமாரோடும் விபூதியோடும்கூடி அழகிய கண்ணும் வாயும் வடிவுமாயாயிற்றிவருடைய ப்ராணனிருப்பது. அமுதே- நிரதிஶயபோக்யனே, தாரகமான ப்ராணமாத்ரமாய் போக்யவஸ்து புறம்பேதேடவேண்டியிராதே போக்யமும் நீயேயாயிருக்கிறவனே என்றபடி. அலை- தேவாஸுரர்களாலே கடைந்து தலைக்கட்டவொண்ணாதபடி அலைபாநிற்கிற, கடல்- ஸமுத்ரத்தை, கடைந்த- மதநம்பண்ணிக்கொடுத்தவனை, அப்பனே- உபகாரகனே, ப்ரயோஜநாந்தரபரருக்கும் அபேக்ஷிதங்களைச்செய்தாகிலும் உபகரிக்குமவனே என்றபடி. காணுமாறு- உன்னை நான் கண்ணாலே கண்டநுபவிக்குமபடி, அருளாய்- நீ க்ருபை பண்ணவேணும். அவர்களுக்குப்போலெனக்குக் கடல் கடையவேண்டா, அவ்வடிவைக்காட்ட அமையும், ப்ராப்யமும் ப்ராபகமும் நீயே என்றிருப்பாருக்கிவ்வளவும் செய்யலாகாதோ என்று கருத்து. ||க||

காணுமாறருளாய் என்றென்றே- உன்னைநான்காணும்படி க்ருபைபண்ணியருளவேணுமென்றலற்றியலற்றியே, கலங்கி- மோஹித்து, கண்ணநீர்கள்- நேத்ரஜலங்கள், அலமர- வ்யாகுலங்களாய் ப்ரவஹிக்க, வினையேன்- உன்னைக்காணப்பெறாதபடி பாவங்களையுடையவனான நான், பேணுமாறெல்லாம்பேணி- ஆசைப்படும்படியெல்லாமாசைப்பட்டு, பேணுகை- ஆசைப்படுகை. சூதனும் தூதுவிட்டும் மடலெடுக்கப்புகுந்தும் மோகித்துக்கிடந்தும் இப்படி ஸர்வப்ரகாரமாக வாசைப்பட்டேனென்றபடி, நின்பெயரேபிதற்றுமாறு •

மூ— பிதற்றுமாறருளெனக்கந்தோ* காணுமாறருளாய்காகுத்தாகண்ணா தொண்டனேன்கற்பகக்கனியே* பேணுவாரமுதேபெரியதண்புனல்சூழ்பெருநிலமெடுத்தபேராளா* ||௨||

எடுத்தபேராள னந்தகோபன்ற னின்னுயிர்ச்சிறுவனே யசோதைக்* கடுத்த

ஆ—(காணுமாறருளாய்) இப்படிகாணுமாறருளாயென்றென்றேகலங்கிக் கண்ணநீர்களலமறவினையேன் இதற்குமேல் இல்லையென்னும்படி யாசைப்பட்டாலும் உன்திருநாமங்களையே சொல்லிக்கூப்பிடப்பெறுமிதுவோ எனக்கருளுமருள். இங்ஙனன்றிக்கே காணுமாறருளாய் காணவேணுமோஎன்னில், காணவேணுமென்ற பேக்ஷித்தாருக்கு ஸ்வஸந்நிதியைத்திருமகனும் ஸ்ரீவஸுதேவர்திருமகனும் வந்து திருவவதாரம்பண்ணியன்றோ உன்னைக்காட்டிக்கொடுத்தருளிற்று. நெஞ்சாலே அநுபவிக்கலாம்படி உன்னையெனக்கு போக்யமாகத் தந்தருளின ஔதார்யமல்லையோ? மற்றுமாசைப்பட்டாரெல்லாருக்கும் உன்னைபோக்யமாகக்கொடுக்கும வனல்லையோ? மஹாப்ரளயஸமுத்ரமான ஜலத்தையெடுத்து ரக்ஷித்தருளின பரமகாருணிகனல்லையோ? காணுமாறருளாயென்கிறார். ||௨||

(எடுத்த) அயத்நமாக எடுத்தாப்போலே எடுத்தநுபவிக்கலாம்படி ஸ்ரீநந்தகோபர்க்கும் யசோதைக்கும்

✳ இரண்டாம்பாட்டு. ✳

இ— பேணுமாறெல்லாம்பேணியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இதற்குமேல்இத்யாதியால்) நின்பெயர்பிதற்றுமாறருளெனக்கென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்திருநாமங்களையேயித்யாதியால்) உதாஹரணத்தில் விசேஷணங்களுக்கு ப்ரயோஜநமெதென்ன அவற்றிற்குப்ரயோஜநம்சொல்லுகைக்காக அவதாரிப்பிக்கிறார் (காணவேணுமோஎன்று) காகுத்தாகண்ணாவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (காணவேணுமென்றபேக்ஷித்தவர்க்கித்யாதியால்) தொண்டனேன்கற்பகக்கனியே என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நெஞ்சாலேயித்யாதியால்) பேணுவாரமுதேஎன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (மற்றுமித்யாதியால்) பெரியவித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (மஹாப்ரளயேத்யாதியால்) ||௨||

✳ மூன்றாம்பாட்டு. ✳

எடுத்தவித்யாதி களிறேயித்யந்தத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அயத்நேத்யாதியால்) அடுத்ததோருரு

ஈ—பின்னையும் காணப்பெறாமையாலே யுன்திருநாமங்களையே அலற்றும்படியே. பெயர் – நாமம், பிதற்றுகை– அலற்றுகை, பிதற்றுமாறுஎன்றது க்ரியாபதம். எனக்குஅருள்என்று மாறியவிப்பது. எனக்கு - அநந்யசரணனானஎனக்கு, அருள் - நீபண்ணும்க்ருபை, உன்னைக்காணப்பெறாதே நான் க்லேசப்பட்டலற்றுகையேயோ நீயெனக்குப்பண்ணும்க்ருபையென்று பாவம். அந்தோ - அய்யோ! இது விஷாதோக்தி. காகுத்தா - காகுத்ஸ்த, அயோத்யையுடையஸகலசேதநங்களும் கிடைக்கும் காகுத்ஸ்தவம்சத்திலே பிறந்தவனேயென்றபடி. கண்ணா - க்ருஷ்ண, பெண்பிறந்தாரும் கலந்தநுபவிக்கும்படி அத்யந்தஸுலபனான க்ருஷ்ணனாய்ப்பிறந்தவனேயென்றபடி. தொண்டனேன்கற்பக- தாஸனானஎன்னுடைய கல்பகமே, தொண்டன்- தாஸன், இந்தஸ்வரூபத்தாலே தன்னைச்சொல்லிக்கொள்ளும்போது தொண்டனேன்என்று ரூபமாயிருக்கும், ஸர்வாதிவிஷயங்களிலே தாஸனாய்த்திரிகிற எனக்குங்கூட மநஸ்ஸாலே அநுபவிக்கும்படி உன்னைத்தந்தவனேயென்றபடி. கனியே - பழமே, எனக்குபோக்யனானவனேயென்றபடி. பேணுவாரமுதே – உன்னைஆசைப்பட்டாருக்குநிரதிசயபோக்யனானவனே, பெரிய - அதிவிஸ்தாரமான, சேதநாசேதநவ்யாப்தமானவென்றபடி. தண் – சீதளமான, ப்ரளயமாகையாலே ஸூர்யகிரணஸம்பந்தமில்லாமையாலே அத்யந்தசீதளமானவென்றபடி. புனல் - ப்ரளயார்ணவஜலத்தாலே, சூழ் - வ்யாப்தமான, பெருநிலம் - மஹாப்ருதிவியை, எடுத்த- உத்தரித்தவனான, பேராளா - மஹாபுருஷனே, காணுமாறு - உன்னைநான்காணும்படி, அருளாய் – க்ருபைபண்ணவேணும். ||௨||

எடுத்த – அயத்நமாக நீயெடுத்தாப்போலே உன்னைக்கண்டெடுத்தவரான, பேராளன் – மஹாபுருஷரான, ஸாம்ராஜ்யகரானவென்றபடி. நந்தகோபன்தன் - ஸ்ரீநந்தகோபருடைய, இன் - நிரதிசயபோக்யனான, உயிர் - ப்ராணனான, சிறுவனே – பாலகனே, அசோதைக்கு - யசோதைப்பிராட்டிக்கு, அடுத்த-

மூ— பெற்றிபக் குலவிளங்களிறே படியனேன்பெரியவம்மானே* கடித்தபோரவுண னுடலிருபிளவாக் கையுகிராண்டவெங்கடலே* யடுத்ததோருருவாயின்றுநீவாராயெங்ஙனந்தேறுவருமரே* ।௩।

உமருகந்துகந்தவுருவநின்னுருவமாகியுன்றனக்கன்பரானார்* அவருகந்தமர்ந்தசெய்கையுன்மாயையறிவொன் றுஞ்சங்கிப்பன்வினையேன்* அமரதுபண்ணியகலிடம்புடைசூழடுபடையவித்தவம்மானே* யமரர்தமமுதே

ஆ— பிராட்டிக்கும் ஸாத்ருஶ்யனுப் ஸ்ரீப்ருதிவ்யாதிஜ்ஞாநஶக்த்யாதிமத்வேந அபி‌ஶ்ரயணீய ஸுலபனான இவன் ஸர்வாங்கஸுந்தரமான கொழுவிதாரித ஸகல ஜாதனாய் அவதாரணம் ஸஹஸ்ரிதமான நிரவதிக ஆஶ்ரித வாத்ஸல்ய ஸௌஹார்த்தாதிகளைவைத்து ஆஶ்ரிதனுனவென்கரியையாயின்று நீவருகிறிலை, வாராதொழிந்தால் உன்னுடைய ஆஶ்ரித வாத்ஸல்ய குணவிஶேஷமுடையனாக ஸாஶ்ரிதஜநங்களெங்ஙனே? யபிக்கும்படியென்கிறார். ।௩।

ஶ—வர்காள், நுதல் - லலாடம், நல்நுதல்என்கிறவிடத்தில் லகாரஸ்ய நகாராதேசமும் நகாரலோபமும். ஶோபநலலாடைகளான ஸகிகாளென்றபடி. இனி - இப்படிபழிசுமந்தபின்பு, நாணித்தானென் - லஜ்ஜித்துத்தானென்ன ப்ரயோஜநம், ஸம்வாதம் ப்ரவ்ருத்தமானபின்பு லஜ்ஜித்து ப்ரயோஜநமில்லையென்றபடி. இப்படிகொள்வனென்றொரு க்ரியாவசநத்தை யத்யாஹரித்துயோஜிப்பது இவ்வத்யாஹாரமில்லாதபக்ஷத்திலே ப்ரயத்நஸ்வாரஸ்யம். ககனாரம் நீலமலரித்யாதி வளையொடுமாமை யெத்தனைகாலங்கூடச்சென்றும் கொள்வன்ஞாலமறியப்பழியித்யாதியென்றிப்படியந்வயம். இப்பக்ஷத்தில் இவ்வாறாயிரப்படிவ்யாக்யானத்தில் பாட்டுக்குத் தாத்பர்யஞ்சொல்லுகிறதத்தனைபோக்கி யிப்பத்துப்பாட்டினவயவ்யாக்யானம் சொல்லுகையிலே தாத்பர்யமில்லையென்று கண்டுகொள்வது. ||௩||

மாடக்கொடிமதிள் - மாடங்களையும் கொடியோடேகூடின மதிளையுமுடைத்தான, மாடங்கள் - க்ருஹங்கள், கொடி - த்வஜம், மதிள் - ப்ராகாரம், கொடியுடையமதிள் கொடிமதிள், கொடிமதிளென்று மத்யமபதலோபிஸமாஸம். மதிள்தென்குளந்தை என்கிறதுவும் ஷஷ்டீதத்புருஷஸமாஸம் மதிள்தென் என்கிறவிடத்திலே ளகார தகாரயோ: ப்ரத்யேகம் டகாராதேசம். தென்குளந்தை - தக்ஷிணதிக்கிலிருக்கிற குளந்தையென்கிற திவ்யதேசத்தினுடைய, வண்குடபால - ஶ்ரீமத்ஸ்ரீமத்திலே, வண் - ஶ்ரீமத்தும், குட என்று பஶ்சிமம், பாலென்று - ஸ்தானம், நின்ற - விஶ்வத்தில் ஸ்திதனானவனை, ஆடல்பறவை - ஆடலையுடைத்தான பறவையாலே, ஆடல் - ஜயம், பறவை - பக்ஷி, ஷஷ்டீதத்புருஷஸமாஸம். ஸர்வேஶ்வரனுக்கு வாஹநமாயிருக்கப்பெற்ற ஸந்தோஷத்தாலே தாண்டவிதனான பெரியதிருவடியாலேயென்றபடி. உயர்த்த - வஹிக்கப்பட்டவனை, வெல்போரென்கிறதை போர்வெலென்று மாறியந்வயிப்பது. யுத்தங்களிலே ஜிஷ்ணுவானவென்றபடி. போர் - யுத்தம், வெல் - ஜயஶீலவசநம். வெல்என்று ஜிஷ்ணு, ஆழி - ஸ்ரீஸுதர்ஶநத்தை, வலவனை - வலத்திலேயுடையவனை, ஆழிவலவனை

மூ— கல்பல்வளையார் முன்பரிசழிந்தேன்* மாடக்கொடிமதிள்தென்குளந்தைவண்குடபானின்றமாயக்கூத்த*
ஆடற்பறவையுயர்த்தவெல்போராழிவலவனையாதரித்தே*
ஆழிவலவனையாதரிப்புமாங்கவனம்மில்வரவுமெல்லாந்* தோழியர்காணம்முடையமேதான்சொல்லுவதோ || ௪ ||

ஆ— இனிபுள்ளவற்றையுமிழவாதே யவனை யாசைப்படத்தவிர்ந்தாலோவென்னில், ஸௌதமிஸிவாஸதுல்ய ப்ராஸாதஶோபிதமாய், த்வஜப்ராஜிதப்ராகாரவேஷ்டிதமாய், தக்ஷிணதிக்கிலுண்டாயிருந்த திருக்குளந்தையில் ஸர்வோத்தரமானமேலைத்திக்கிலே வேதவேத்யனை, விஜிதஸர்வஶத்ருவான ஸர்வேஶ்வரனை, ஸ்வாத்ருதவதூஸம்ரக்ஷணீயனும்படி நின்றருளினவனை யாதரித்துக்கூடச் சென்றேன், சென்று கோல்வளைநெஞ்சத்துடக்கமெல்லாம் பாடற்றொழியவிழந்து வைகல்பல்வளையார்முனே யென்ஸர்வஸ்வமெல்லாமிழந்தேன், இனியென்கொடுக்கேனென்கிறாள். || ௪ ||

(ஆழிவலவனை) அவனையாசைப்பட்டால் பெறவொண்ணாது, துஷ்ப்ராபன், அவனையாசைப்படவேண்டா இ— முள்ளவற்றையுமிழக்கப்புகுகிறாயென்று தோழிமார்சொல்ல முன்பேயெல்லாமிழந்தேன் இனியெத்தையிழக்கப்புகுகிறேனென்றிப்பாட்டிலே யதுக்குத்தரஞ்சொல்லப்புகுகிறாளாகையாலே வாக்யாந்தரமில்லையென்றதாயிற்று. மாடக்கொடிமதிளென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸௌதமிஸீத்யாதியால்) தென்குளந்தையென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தக்ஷிணேத்யாதியால்) வண்குடபாலென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (வாருணேத்யாதியால்) உதாரம் - உத்கர்ஷமும், ஆடற்பறவையுயர்த்தவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (வேதவேத்யேத்யாதியால்) வெல்போராழிவலவனையென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (விஜிதேத்யாதியால்) நின்றமாயக்கூத்தனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்வாத்ருதவதூத்யாதியால்) || ௪ ||

✳ஐந்தாம்பாட்டு.✳

அவனோடுஸம்ஶ்லேஷிக்கச்சென்று அதுபெறுமையாலே என்னுடையஸர்வோபாதிகளையுமிழந்தேனென்று இப்பாட்டிலே அவனுடைய துஷ்ப்ராபத்வஞ்சொல்லியிருக்க விப்பாட்டிலே அவன்நம்மில் வரவுமித்யாதியாலே அவனாதியாக எல்லாருக்கும் துர்லபனென்றுபதேசிக்கை யஸம்கதமன்றோவென்ன வஸதிப்பிக்கிறார் (அவனையித்யாதியால்) இப்படியவனுக்கு துஷ்ப்ராபத்வஞ்சொல்லுகிற ஸகிகளுக்குத்தரஞ்சொல்லுகிறதாகையாலே வ்யதிகரணபஹுவ்ரீஹி. திருவாழியை வலத்திருக்கையிலேயுடையவனைவென்றபடி. மாயக்கூத்தன்-ஆஶ்சர்யசேஷ்டிதம். ஆஶ்ரிதபாரதந்த்ர்யம். ஸ்வாத்ருதபாஶ்யானவனை, "கிம் வித்யாம ஸ்வஹம் ஸம்ஹநந" மென்கிறபடியே ஸ்வாத்ருதவதூஸம்ரக்ஷணீயமான நிலையுடையவனை ஸாதுவையென்றபடி. ஆதரித்து- ஆசைப்பட்டு, கூடச்சென்றேன் - ஸம்ஶ்லேஷிக்கப்போனேன், கோல்வளைநெஞ்சத்துடக்கம்- அலங்காரமான, வலயங்கள் உன்ஸ்ஸமுதலானவெல்லாம், பாஹ்யாப்யந்தரங்களான வலயங்களும் ஆந்தரமானஉன்ஸ்ஸமுதலாக என்னுடைய ஸர்வஸ்வத்தையுமென்றபடி. இதுக்கு இழந்து என்கிறத்தோடே யன்வயம். பாடு-என் பரிஸரத்திலே, அற்று- இல்லாமல், ஒழிய- போம்படி, என்னிடத்திலே ஸம்ஶ்லேஷத்துமில்லாமல் நிஶ்ஶேஷமாகப்போம்படி என்றுவ்யுத்பத்தி. இழந்து போக்கிவிட்டு, வைகல்பல்வளையார்முன் – ஸர்வகாலமும் பஹுவலயவதிகளான ஸ்த்ரீகள்முன்னே, வைகலென்று ஸர்வகாலவாசகம். பரிசுஅழிந்தேன் - ப்ரகாரமிழந்தவளானேன் - பரிசு - ப்ரகாரம், இங்கு லஜ்ஜையாகிற ப்ரகாரத்தைச்சொல்லுகிறது. சிலபோதுகழத்தி சிலபோதுபூணத்தக்க ஸாதாரணமான வலயங்களும், ஒருக்காலுமிழவாத ஸ்த்ரீகள்முன்பே ஒருக்காலும்கழத்தவேண்டாத ஸாதாரணமான லஜ்ஜையையுங்கூட இழந்தவளானேனென்று பாவம். இனியென்கொடுக்கேன் – இனியெத்தைக்கொடுக்கப்போகிறேன்; இனியெத்தை யிழக்கப்போகிறேனென்றபடி. எல்லாம்முன்பே இழந்துபோனபின்பு இனிஇழக்கைக்கு ஒன்றுமில்லையென்கை. || ௫ ||

தொல்லையஞ்சோதி- அநாதிஸித்தஜ்யோதிஸ்ஸை, தொல்லை- அநாதி, அம்- ஸுந்தரம், நித்யஸுந்தரஜ்யோதிர்மய விக்ரஹஶாலியான என்றபடி. ஆதி- ஜகத்காரணபூதனை, நினைக்குங்கால்- சிந்திக்கும்போது, ஸாதரமாய்த்துப் பார்க்கும்போது என்றபடி. இதற்குசுடர்கொளென்கிறத்தோடே அந்வயம். நன்கு- நன்றாக, உணர்வார்க்கும்- அறியத்தக்கவர்களுக்கும் தங்களை பராவஸ்திதங்களாக வறியத்தக்க ஸ

மூ—விங்கரியது தா* னூழிதோறூழியொருவனாக நன்குணர்வார்க்குமுணரலாகாச் சூழலுடையசுடர்கொளா
தித்தொலலையஞ்சோதிநினைக்குங்காலே* ||ரு||

ஆ—வேரொவென்னில், பரஞ்ஜ்யோதிஸ்ஸான ஸர்வேச்வரனை நினைக்கப்புக்கால் ஜ்ஞானவத்தமரான ஸநகாதிமுனிகளுக்கும் ஊழிதோறூழிகூடிலும் ஒருவனாக உணரவொண்ணாத திவ்யசேஷ்டிதங்களையும், தேஜ:ப்ரஸரரூபஸம்வேத்ய கல்யாணகுணத்தையுமுடையானொருவனாகிலு மந்தஸம்வத்ஸரமத்யமாயிருந்த வனை யாசைப்படுகையும் ஆசைப்பட்டநம்போல்வர் பக்கலவன்வருகையும் நாம்துடங்கியோ? இப்படியரியனு மிருக்கசெய்தே ய.சைப்படுவாரும் பெறுவாருமெத்தனைவர், அவனரியன், அவனையாசைப்படவேண்டாவென்று சொல்லுகையெளிதென்னுச் சொல்லுமித்தனையோவென்கிறாள். ||ரு||

இ—யாலே இதுஸம்மதம். கீழ்ப்பாட்டிற்சொன்னது "யோ(ஏ)வக்ஷ்யதாம்கிஞ்சித் ஹ்ருதி ஸம்சய:" என்கிற படியே நமக்கு ப்ரத்யக்ஷங்களினுடையாலே விச்வஸிக்கிறானென்றுசொன்ன வித்தனையல்லது ஸத்யவ தர்சனன்றுசொன்னபடி யல்லாமையாலே விரோதமில்லையென்று கருத்து. தொல்லையஞ்சோதிநினை க்குங்காலென்றதயித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பரஞ்ஜ்யோதிஸ்ஸி த்யாதியால்) நன்குணர்வார்க்குஎன் கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஜ்ஞானவத்தமரி த்யாதியால்) சூழலுடையசுடர்கொளாதியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திவ்ய த்யாதியால்) உணரவொண்ணாதஎன்றது - உணரவொண்ணாதபடியானவெ ன்றபடி. ஒருவனாகிலுமென்கிற வ்யதிரேகத்தாலே அவர்கள்சொன்ன துர்லபத்வமான வனு டைய ப்ராப்யத்வத்தை யிவள்தானுமநுபவிக்கிறாளென்று ஸூசிதமாயிற்று. இத்தால் ஸாதகங்க சொல்லவந்தவள் துர்லபத்வஞ் சொல்லுவானேனென்கிற சங்கையமாயிற்று. ஆழிவலவ னையாதரிப்புமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அந்தஸம்வத்யாதியால்) ஆங்கவனம்மில் வரவு மெல்லாமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆசைப்பட்டவித்யாதியால்) நம்போல்வரென்றது - ஸஜாதீயரென்றபடி. நம்முடையமேதானென்கிறத்தை யுரைக்கிறார் (நாம்துடங்கியோவென்று) இவ்வள வுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இப்படியித்யாதியால்) சொல்லுவதோவிங்கரியதுதான்என்கிறதற்குத் தாத்பர்யமருளிசசெய்கிறார் (அவனரியனித்யாதியால்) ||ரு||

ஈ—ஸநகாதிகளுக்கு மென்றபடி. ஊழியூழிதோறு என்றதயிப்பது. கல்பம்- கல்பந்தோறுமென்றபடி. ஸர்வகாலத் திலுமென்கை. ஒருவனாகை - ஒருபடிப்பட்டவனாக, ஸாவதியனென்று பரிச்சின்னஸ்வபாவனாகஎன்றபடி. உண ரலாகாச்சூழலுடைய- அறியவொண்ணாத வசீகரணோபாயங்களை யுடையவனை, சூழல்- வசீகரணோ பாயம், அவனை பரிச்சேதித்தறியவொட்டாதவையாய் ஆச்ரிதர்க்கு ஆகர்ஷகங்களான திவ்யசேஷ்டிதங்களை யுடையனையென்றபடி. சுடர்கொள் - சுடரைக்கொண்டிருக்குமவன், சுடர் - தேஜஸ்ஸு, இதுஉபலக்ஷ ணம், தேஜ:ப்ரஸரரூபஸம்வேத்ய கல்யாணகுணாச்ரயனாயிருக்குமவனென்றபடி. ஆகிலுமென்றொருபதம் கூட்டிக்கொள்வது, ஆழிவலவனை- திருவாழியை வலத்திருக்கையிலேயுடையவனை, ஆதரிப்பும் - ஆதரிக்கை யும், ஆசைப்படுகையுமென்றபடி. ஆங்கு - அந்த ஆதரணவேளையிலே, அவன்வரவும்போலே ஸௌசீ ல்யத்தையுமுடையவனானவன், நம்மில் - நம்பக்கலிலே, வரவும் - வருகையும், ஆசைப்பட்டவர்களான நம் மையுபேக்ஷித்து வருகையுமென்றபடி. எல்லாம் - அவனையாசைப்படுகையு மவன்வருகையுமாகிற விவையெல் லாம், நம்முடையமேதான் - நம்முதாகவுடையோமோ, தானென்றது வாக்யாலங்காரம், ஸ்வாதீனமாக வு டையோமோஎன்றபடி. இவையெல்லாம்நாமதுடங்கி நடக்கக்கடவனவாக நாம்செய்கிறோமோ. அநாதியாக நட க்கிறவையன்றோவென்கை, தோழியர்காள் - என்னோடே ஸமானசீலைகளாகையாலே யவனுடையஸ்வபாவ ங்களிலே நீங்களுமவகாஹித்திருப்பதிகோளோஎன்று ஸாபிப்ராயஸம்போதநம். சொல்லுவதோ - அவ ன்துர்லபனென்றுசொல்லுகையோ, இங்கரியது - இங்கரியதாமைபாவிக்கிறது, அவன்துர்லபனென் றுசொன்னால் நிவாரணம்பண்ணுவாரில்லாத விங்கேயிப்படிசொல்லுகை யருமையோ, அருமையில்லாதவா றே ஸத்யத்தைச்சொல்லுமித்தனையோவென்று கருத்து. தானென்றது வாக்யாலங்காரம், யத்வா, அவனை யாதரிப்பும் அவன்நம்மில்வரவுமாகிற விவையெல்லாந்தான் நாம்துடங்கியுண்டாமவையோ அவன்துர்லப னென்றுசொல்லுகைதானரியதோ இவையிரண்டுமிப்படியன்றிறே என்றிப்படி தான் ஸம்சயத்துக்கு மறுமா

மூ—தொல்லைஞ்சோதி நினைக்குங்கா லென்சொல்லளவன் றிமையோர்தமக்கும்* எல்லையிலாதன கூழ்ப்புச்செய் யுமத்திறநிற்கவெம்மாமைகொண்டா* னல்லிமலர்த்தண்டுழாயுந்தாரா னார்க்கிடு கோவினிப்பூசல்சொல்லீர்* வல்லிவளவயல்சூழ்குடந்தைமாமலர்க்கண்வளர்கின்றமாலே* ॥ சு ॥

ஆ—(தொல்லைஞ்சோதி) அவனறியனல்லேனோவென்னில், நான்சொல்லுமளவோ வவனுடையவருமை? ப்ரஹ்மாதிதேவர்களுக்குங்கூட வறியவொண்ணாத ஸ்வரூபஸ்வபாவங்களையுடையா னொருவனல்லனோ, அத்திறம்நிற்க என்னைவிஷயீகரித்தருளுகைக்காகத்திருக்குடந்தையிலே புகுந்துவைத்தென்னுடைய ஸர்வஸ்வத்தையு

✳ ஆறும்பாட்டு. ✳

இ—இப்படியவனுக்கு ஸௌஹார்த்தமநாதிஸித்தமென்று சொன்னவிவள் என்சொல்லளவன்றித்யாதியாலே யவனுக்கு தௌர்ஜந்யமுண்டென்றுசொல்லுகை பஸம்மதமன்றோவென்ன வதரிப்பிக்கிறார் (அவனித்யாதியால்) அவனுக்கு ஸௌஹார்த்தமே அநாதிஸித்தமென்றாகிலும் தௌர்ஜந்யமொருக்காலுமில்லையோவென்றபடி. 'யஸ்ய ஸமஸ்த ப்ரஹ்மராஜநாதிவராவைஷாத்தம்' 'நஹ்யஸ்யகேநசித்கச்சித்' என்றுசொல்லிற்றில்லையோ வென்றுகருத்து. இப்படிஶங்கித்த ஸகிகளைக்குறித்து அவனுக்கு தௌர்ஜந்யமுண்டென்றுசொல்லி யிப்படிக விஶிஷ்டதௌர்ஜந்யனானாலும் என்பக்கலிலே ஸௌஹார்த்தத்தைக்காட்டிப் பின்னையும்விளம்பிக்கிறவனை நான்கூப்பிட்டதொழியேனென்று சொல்லுகிறாளாகையாலே ஸம்மதமென்றதாயிற்று. என்சொல்லளவன்றித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நானித்யாதியால்) இமையோரித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ப்ரஹ்மேத்யாதியால்) ஆஶீர்வாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னையித்யாதியால்) எம்மாமைகொண்டானென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னுடையவித்யாதியால்) ॥ சு ॥

மூ—ஸ்பஷ்டமாகவுமாம். ॥ ரு ॥

நினைக்குங்கால் - பராமர்ஶிக்கும்போது, தொல்லைஞ்சோதி - அநாதிஸித்தஜ்யோதிஸ்ஸானது, நித்யமாய்ஸ்வாபாவிகமான ஜ்யோதிர்மயவிக்ரஹமுடையானவனென்றபடி. என்சொல்லளவன்று - என்னுக்தியிலடங்கத்தக்கதன்று, அளவு - அடங்கத்தக்கது, 'நஸந்த்ருஶே திஷ்டதி ரூபமஸ்ய நசக்ஷுஷா பஶ்யதி கஶ்சநைநம் । ஸ்வாபாவிகத்தஸ்ய கதம்யோவக்ஷ்யதி' என்றபடி. இமையோர்தமக்கும் - அநிமிஷர்க்கும், தம்மென்று ஸ்வஶேஷத்வாபாகம். அதிஶயிதஜ்ஞாநரான ப்ரஹ்மாதிகளுக்குமென்றபடி. எல்லையிலாதன - அவதியில்லாதவையான, கூழ்ப்பு - ஸம்ஶயங்கள், செய்யும் - பண்ணுநிற்கும், ஜநிப்பிக்குமென்றபடி. அத்திறம் - அந்தப்ரகாரமானது, அந்த அதிஶயோக்தைமானதென்றபடி. நிற்க - நிற்கச்செய்தே, வல்லிவளவயல்சூழ் - வாஸஸ்தலங்களாலும் அழகியவயல்களாலும் சூழப்பட்டதான, வல்லி - கொடிகள், வளம் - அழகு, குடந்தையிலே, மாமலர்க்கண் - ஸ்ராவ்யமாஶ்ரிகஸத்ருஶங்களான நேத்ரங்கள், மா - ஸ்ராவ்யம், வளர்கின்ற - நித்ரைபண்ணுகின்ற, மால் - ஶ்ரிதவ்யாமோஹஸ்வரூபனானவன், நித்ரைபண்ணுகிற நேத்ரங்களையுடைய, ஶ்ரிதவத்ஸலனென்று பதார்த்தம். இப்படி ஸந்நிஹிதனுப் வாத்ஸல்யனானவனுடைய ஸாவிநய ஸத்ருஶநேத்ரங்களென்ன வளவில்மாலாசக்கரனேனென்றுகருத்து. கூப்பிட்டுக்கேட்கும்படி திருக்குடந்தையிலே ஸந்நிஹிதனென்றுமபிப்ராயம். நித்ரைகண்களுக்குப் போஷணஹேதுவாகையாலே அத்தைக் கண்ணுக்குவளர்த்தியாக வுபசரித்துச்சொல்லுவார்கள். எம்மாமை - என்னுடையகாந்தியை, கொண்டான் அபஹரித்தான், திருக்குடந்தையிலே ஸந்நிஹிதனுபிருக்கிறவித்தாலே தன்னுடைய ஸௌஹார்த்தத்தைக்காட்டி வைத்து ஸாக்ஷாத்ஸம்ஶ்லேஷம்தாராதே விளம்பிக்கையாலே என்காந்தியை அபஹரித்தானென்றபடி. அல்லிமலர்த்தண்டுழாயும்- ஸௌரப்யாதிஸ்வபாவமாய் ஶீதளமான திருத்துழாயையும், அல்லி ஸௌரம் ஸாகவாயிருவஸ்ஸரஸ:. யத்வா அல்லியென்றுமாலையாய் மாலையினுடைய விகஸிதஶீதள ஸாவியையுமென்னவுமாம். யத்வா, அல்லிகந்தமுமாய் தத்வஸாவிகஸித ஶீதளதாஸியையுமென்னவுமாம். தாரான் - தருகிறானில்லை, என்னையிப்படி நோவுபடுத்திவைத்து தான்வந்துஸம்ஶ்லேஷியாவிட்டால் தன்னோடு ஸம்பந்தமுள்ளவற்றையாகிலும் தரலாமிறே, அதுவும்தரிகிறிலனென்று கருத்து. இனி - அவனிப்படி நம்மைப்படுத்தினபின்பு, ஆர்க்குப்பூசலிடுகோசொல்லீர் - இப்படிநம்பக்கலுறவுபண்ணி நம்மைப்படுத்தினவனையொழிய மற்றூர்க்குக்ரந்தநம்பண்ணுவது சொல்லுங்கோள், பூசல் - க்ரந்தநம், இடுகை- பண்ணுகை, இடுகை

மூ—மாலரிகேசவனாரணன்சீமாதவன்கோவிந்தன்வைகுந்தனென்றென்று* ஓலமிடவென்னைப்பண்ணிவிட்டிட்
டொன்றுமுருவுஞ்சுவடுங்காட்டா* னேலமலர்க்குழலன்னைமீர்காளென்னுடைத்தோழியர்காளென்செய்

ஆ— ஸம்ஶ்லேஷித்துத் தன் திருவடிமலர்களில் அல்லிமலர்த்தண்டுழாயுந் தருகிறிலேன், இப்படி ஸந்யாஸஞ்செய்
தவனையொழிய மற்றாரைக்கூப்பிடுவோம் சொல்லீரென்கிறார்.

(மாலரி) இப்படிகூப்பிடச்செய்தேயுந் தன்னைக்காட்டாதிருக்கிறவனை யாசைப்படுவாருண்டோவென் ॥ ௬ ॥
னில், ஆஶ்ரிதவத்ஸலன், ஆஶ்ரிதார்த்திஹரன், ஆஶ்ரிதவிரோதிநிரஸநஸமர்த்தன், ஸர்வஶக்தி, ஸர்வஜ்ஞ
கல்யாணகுணநிதி, ஸ்ரீயஃபதி, பரமஸ்வாமி, ஸ்ரீவைகுண்டநிலயனென்று கூப்பிடும்படி பண்ணிவிட்டொ
ன்றுமுருவுஞ்சுவடுங்காட்டான் ஏலமலர்க்குழலன்னைமீர்காளென்னுடைத்தோழியர்காளென்செய்கேன் ஸ
ஸம்போக்குக்கலாயிருக்கிறதில்லை காலம்பலசென்று முங்களாணையேகண்டல்லதுவிடேன் நீங்களிதரர்க்குவி
ரோதத்தைப்பண்ணி உங்களோடுமுதவில்லையென்கிறார். ॥ எ ॥

✳ ஏழாம்பாட்டு. ✳

இ— நங்கள்வரிவளையாயங்காளென்று தனக்கந்தரங்கைகளாகச்சொல்லப்பட்ட ஸகிகளைக்குறித்து உங்க
ளோடே எங்களிடையில்லையென்றுறவறுக்கை யஸம்கதமன்றோவென்ன ஸமாதிப்பிக்கிறார் (இப்படியிதுரை
டி ஸந்திக்ஷிக்கையாலே யுறவறுக்கிறாளென்றுகருத்து. அவர்களிப்ப
(ஆஶ்ரிதேத்யாதியால்) அரியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார்
ன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆஶ்ரிதவிரோதீத்யாதியால்) கேசவனெ
ளிச்செய்கிறார் (ஸர்வேத்யாதியால்) சீமாதவனென்கிறதற்குத் தாத்பர்யமரு
ன்று) கோவிந்தனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்ரீயஃபதிபெ
குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்ரீத்யாதியால்) ஓலமிடவென்கிறதையுரைக்கிறார் (கூப்பிடும்படியென்று) உ
ங்களோடித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நீங்களித்யாதியால்) ॥ எ ॥

ஸ—யென்றது ஸம்வேஶ்யமாம் ஓஎன்று கிம்ஶப்தார்த்தகம். உறவுண்டானவனைக்குறித்து முறையிடும
த்தனையொழிய வுறவில்லாதாரைக்குறித்து முறையிட்டு ப்ரயோஜநமுண்டோவென்றுகருத்து.

மால்- ஆஶ்ரிதவாத்ஸல்யமே வடிவாயிருக்குமவன், அரி- ஹரி, ஆஶ்ரிதார்த்திஹரன்- கேசவன்- ॥ ௬ ॥
கேஶிஹந்தா, இது உபலக்ஷணம். கேஶிமுதலான ஆஶ்ரிதவிரோதிகளை நிரஸிக்குமவனென்றபடி. நார
ணன்- உபாதாநத்வஸஹித ஸர்வகாரணபூதனாகையாலே ஸர்வஸ்வாமியாயிருக்கிறவன்
ங்களாக்குமவளான லக்ஷ்மிக்கு வல்லபனானவ னென்றபடி. கோவிந்தன்- கோவிந்தன், கோக்களோடே மரு
வும்படியான ஸௌஶீல்யத்தையுடையவ னென்றபடி. வைகுந்தன்- வைகுண்டன், ஸ்ரீவைகுண்டநிலய
னென்றபடி. ஸௌஶீல்யாதிகளைக்கண் டாஶ்ரயித்தார்க்குக்கொடுக்கும்படி கல்யாணமான விபூதியையுடைய
னென்கை. என்றென்று. இப்படி நிரந்தரமாகச் சொல்லி, ஓலமிட- கூப்பிடும்படி, என்னைப்பண்ணி 'ஸர்வ
ஸம்ஸ்வபாவாய" என்ற கணக்கிலேயிப்படி கூப்பிடும்படியாகவே என்னைப்பண்ணி என்றபடி. விட்டு-
தன்பக்கல்நின்றும் என்னைப்பிரித்து, இட்டு- ஒரு த்ருணத்தைப் போடுமாப்போலே போகவிட்டு, ஒன்றும்-
ஸம்ஶ்லேஷத்தும், உருவும்- ரூபத்தையும், மற்ற வடிவையுமென்றபடி. சுவடும்- தானிருந்தவிடத்துக்கு ஒரு
அடையாளமும். சுவடு- அடையாளம், காட்டான் "காஸாஸாவிரஹங்க" என்கிற கணக்கிலே தன் திருமே
னியை யாதல் ராமாயணத்தில் ஸ்ரீபரதாழ்வானுக்கு பாதுகாதிகளைப்போலே தானிருந்த விடத்துக்கு அடை
யாளமாயிருப்பதொன்றை யாதல் காட்டுகிறதில்லை என்றபடி. ஏலமலர்க்குழல்- ஏலம்போலே குளிர்ந்து
வாஸிக்கின்ற வாஸநைகளையுடைத்தான கூந்தலங்களை யுடையவர்களான, குழல்- கூந்தலம், இப்போது
ஸம்ஶ்லேஷிதைகளாயிருக்கிற உங்களை இப்படி யலங்க்ருதைகளான நான்காண்பதெப்போது என்று கருத்தா
லே இவ்விஶேஷணம். அன்னைமீர்காள்- தாய்மார்காள், என்னுடைத்தோழியர்காள்- அன்னைமார்களைப்போ
லன்றிக்கே எனக்கந்தரங்கைகளாயிருந்த ஸகிகாள் என்செய்கேன்- எத்தைச் செய்யக்கடவேன், ஓரடை
யாளமுங்காணாத நானெத்தைச் செய்வேனென்று வ்யஸநாதிஶயத்தாலே சொன்னபடி. காலம்பல சென்றும்-

மூ — காலம்பலசென்றுங்காண்பதாணையுங் களோடெங்களிடையில்லையே* ।எ।
இடையில்லையான்வளர்த்தகிளிகாள்பூவைகள்காள்குயில்காள்மயில்காள்* உடையநம்மாமையுஞ்சங்குநெஞ்சுமொன்றுமொழியவொட்டாதுகொண்டான்* அடையும்வைகுந்தமும்பாற்கடலுமஞ்சனவெற்புமவைநணிய*

ஆ — (இடையில்லை) தன்னை ப்ரதிஷேதிக்கிற வன்னைமாரோடுந்தோழிமாரோடு முறவறச்செய்தேயு மவனைக் காணாதொழிந்தபாதே தான்வளர்த்த தன்னுடைய லீலோபகரணமான கிளிகள், பூவைகள், குயில்கள், மயில்கள், என்கிறவிவற்றோடுள்ள ஸம்பந்தமுமாகாதே யவனைக்காண்கைக்கு ப்ரதிபந்தகமென்று பார்த்தவற்றை நோக்கிச்சொல்லுகிறாள். அவன் நம்முடைய நிறமும் வளையும்நெஞ்சுந்துடக்கமாகவுள்ள ஸர்வஸ்வத்தையு மபஹரித்துக்கொண்டுபோனானாகிலும் வாஸஸ்தாநமான திருநாடும் திருப்பாற்கடலுந்திருமலையுந் தன்னையாசைப்பட்டார்க்குக் காணலாணியவாகில் காட்டாதொழிவானேனென்னில், உங்கள்பக்கலுள்ள ஸம்பந்தம் நிஶ்ஶேஷமாகப்போனாலல்லதவனவை காண்கொடான், ஆதலாலினியுங்களோடு முறவில்லையென்கிறாள். ॥அ॥

✳ எட்டாம்பத்து. ✳

இ — இப்படி ஸஹிகளைத்துறந்தாளேயாகிலு மவர்களைப்போலே தன்னை ப்ரதிஷேதிக்கைக்கு யோக்யதையு மில்லாதபடி திர்யக்குகளாயிருக்கிற ஶுகஶாரிகாதிகளை யிப்பாட்டிலேதுறக்கிறவிது அஸமஞ்ஜஸமன்றோவென்ன பரிஹரிப்பிக்கிறார் (தன்னையித்யாதியால்) ஸம்பந்தமாகாதேயென்றது - ஸம்பந்தமன்றோவென்றபடி. அதீபவாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவனித்யாதியால்) அடையும்வைகுந்தமுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (வாஸஸ்தாநேத்யாதியால்) நணியவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தன்னையாசையித்யாதியால்) காணல்நணியவென்கிறது - காண்கைக்குக்கிட்டினவையென்றபடி. நணியவென்று திருநாடுமுதலான திவ்யதேசங்களுக்கு ஸாந்நித்யத்தைச்சொல்லி யஞ்ஞாரமே யவைகாண்கொண்டானேயென்று அவைத்துக்கு தூரஸ்தவங்கஞ்சொல்லுகை யஸமஞ்ஜஸமன்றோவென்ன பரிஹரிப்பிக்கிறார் (ஆகிலித்யாதியால்) தாத்பர்யவாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உங்களித்யாதியால்) இத்தால் நணியவென்று ஸாந்நித்யஞ்சொன்னது விஷயஸம்பந்தாமிகளுக்கென்று ஸமிக்கையாலே விரோதமில்லையென்று கருத்து. ப்ரபத்திவாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆதலாலித்யாதியால்) இத்தாலித்திருவாய்மொழிக்கு நிஸ்ஸம்ஸாரஸங்கமென்கிற ஸமவக்ரமணம் ப்ரதிவாத்யமென்றதாயிற்று. ॥அ॥

ஸ — பலகாலம் சென்றபின்பாகிலும், காலமெல்லாமதீதமாகிலு மென்றபடி. காண்பது - காணக்கடவது, ஸாவேயிமிதிப்ரயோகம். நானவனை அவஶ்யங்காண்பே னென்றபடி. ஆணை - இதுக்கு ஶபதப்பண்ணுகிறே னென்றபடி. நானிந்தவ்யவஸாயத்தை விடேனென்கை. உங்களோடு - இத்தை ப்ரதிபந்திக்கிற வுங்களோடே, எங்களிடையில்லை - எங்களுக்கும் ஸம்பந்தமில்லை, ஸ்வாதந்த்ர்யவசநம். இடை - ஸம்பந்தம், எனக்கொரு ஸம்பந்தமில்லையென்றபடி. உங்களோடு ஸம்பந்தத்தைவிட்டேனென்கை. ॥எ॥

யான்வளர்த்த - என்னாலேவளர்க்கப்பட்டவையான, ருஷிஹூதன்வளர்த்த மான்போலே நீங்களும்வளர்த்த ஸம்பந்தத்தாலே எனக்கு பாதகங்களாய்விட்டிகோளென்று கருத்து. யான்வளர்க்கிறவென்னாதே யான்வளர்த்தவென்று அதீதகாலமாக நிர்தேசித்தது இப்போதுங்கள்பக்கலெனக்காஸக்தியற்றது தோற்றுகைக்காக, கிளிகாள் - ஶுகங்காள், பூவைகள்காள் - ஶாரிகைகாள், குயில்காள்மயில்காள் - ஸ்பஷ்டம், உடையநம்என்கிறத்தை தம்முடையவென்று மாறியநயிப்பது. நம்முடையமாமையும் - ஸ்வாதந்த்ர்யவசநம் என்னுடைய [illegible]யுமென்றபடி. சங்கும் - வளைகளையும், நெஞ்சும் - மநஸ்ஸையும், ஒன்றுமொழியவொட்டாது - ஒன்றுமென்பக்கல வஶேஷிக்கவொட்டாதே, கொண்டான் - அபஹரித்தான், தான்வந்துஸம்ஶ்லேஷியாதே விஶ்லேஷித்தபஹரித்தானென்றபடி. ஆனாலுமென்று ஒருவாக்யங்கூட்டிக்கொள்ளுக. இப்படிவிரோதிவன்னப்போலே யிருந்தாகிலுமென்றபடி. இதுக்கு நாணியென்கிறத்தோடே யந்வயம். அடையும் - அடையவேண்டுவதான, வாஸஸ்தாநமானவென்றபடி. வைகுந்தமும் - ஸ்ரீவைகுண்டமும், பாற்கடலும் - க்ஷீராப்தியும், அஞ்சனவெற்பும் - அஞ்ஜநாசலமும், ஸ்வர்காவதாரஸ்தலங்களுக்குள்ளே திருமலையும் வாஸஸ்தாநத்தோடொக்கச் சொல்லலாயிருக்கிறதென்று கருத்து. அவை - அந்தத்திவ்யதேசங்கள், ஸ்ரீவைகுண்டமும் க்ஷீராப்தியும் அஞ்ஜநாத்ரியுமாகிற வந்த திவ்யதேசங்களென்று யதாஸங்க்யம். நணிய - கிட்டினவை, அவனைக்

மூ— கடையறப்பாசங்கள்விட்டபின்னையன்றி யவனவைகாண்கொடானே* ॥அ॥
காண்கொடுப்பானல்லனார்க்குந்தன்னைக் கைசெயப்பாலதோர்மாயந்தன்னால்* மாண்குறள்கோலவடிவுகாட்டிமண்ணும்விண்ணுநிறையமலர்ந்த* சேண்சுடர்த்தோள்கள்பலதழைத்த தேவபிராற்கென்னிறைவினொடு*

ஆ—(காண்கொடுப்பானல்லன்) உனக்குத்தன்னைக்காட்டானோவென்னில்; ஸ்வவ்ருத்திநிஷித்தவிஷயஸங்கம் விட்டாலல்லதார்க்குந் தன்னைக்காட்டானென்று அவற்றைநோக்கிச்சொல்லி ஸ்வரூபநாசகமான ஸௌந்தர்யத்தை ப்ரகாசிப்பிக்கைக்காக நீ அவனைபாசைப்பட்டிதற்குமுன்பு உன்னுடையவுபகரணங்களையிழந்தாப்போலே யின்னமுள்ளவற்றையிழவாதே யிருக்கப்பார்க்கிலத்தைவிடு என்றநந்யராயிருப்பார்சொல்ல; அவர்களைநோக்கி ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தியாயிருந்த ஸர்வேச்வரனாலுமிப்படி நிர்வஹிக்கமுடியாதென்னும்படி யாச்சர்யமாய் நிரதிசயஸௌந்தர்யவிசிஷ்டமுமாய் ஸர்வவசீகரணமான தன்னுடைய மாண்குறள் கோலவடி—

* ஒன்பதாம்பாட்டு. *

இ— காண்கொடுப்பானல்லனென்கிறவாக்யம் கீழ்ச்சொன்னவர்த்தத்தைச் சொல்லுகிறதாகையாலே ஸாபேக்ஷமன்றோவென்ன வவதாரிப்பிக்கிறார் (உனக்கித்யாதியால்) நீபத்ருஹாஸித்தெயன்றோ உனக்குக்காட்டானோவென்றுகருத்து. அந்த ஸங்கஸாரிகாதிகளைக்குமித்து என்னுடைய வ்ரீடாதிகளையெல்லாமிழந்தேன் இனியென்கொடுக்கேனென்று நாலாம்பாட்டிற்சொன்ன வர்த்தத்தையே யிப்பாட்டிலுஞ்சொல்லுகை யஸங்கதமன்றோவென்ன வவதாரிப்பிக்கிறார் (ஸ்வரூபநேத்யாதியால்) ப்ரகாசிப்பிக்கைக்காகவென்கிறதற்கு அநந்யராயிருப்பார் சொல்லவென்கிறத்தோடே யந்வயம். அநந்யரென்றது - ஸஜாதீயரென்றபடி. கீழேஸகிகளுக்குச்சொன்னாள், இங்கே அநந்யருக்குச்சொல்லுகிறாளாகையாலே ஸங்கதமென்றதாயிற்று. தன்னால்கைசெயப்பாலது என்றதைபித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வஜ்ஞனித்யாதியால்) மாயமென்றதையுரைக்கிறார் (ஆச்சர்யமென்று) ஓரென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிரதிசயேத்யாதியால்) மாண்குறளென்கிற

ஙு—காணவாசைப்பட்டார்க்கு ஸாக்ஷாத்கரிக்களென்றபடி. ஆகிலவற்றையுனக்கவன் காட்டாதொழிவானேனென்ன ச்சொல்லுகிறாள். கடையற - சேஷமற்றுப்போம்படி, கடை - சேஷம், நிச்சேஷமாகவென்றதாயிற்று அதாவது:— வாஸனையுங்கூட நஷ்டமாம்படியென்கை. பாசங்கள் - ஆஸக்திகள், ஸமவத்ருத்திநிஷித்தவிஷயாஸக்திகளென்றபடி. விட்டபின்னையன்றி - நம்மைவிட்டுப்போனபின்பல்லது, அவன் "வ்யதீதஸர்வஸங்கரஸ்ய கேவலாத்மபஸ்ய வசஸ்த்ரக்ஷ்யாம்பஸ்ய ஸாக்ஷாத்காரதர்சநாய நம:" என்னும்படியான ஸ்வபாவவிசேஷத்தையுடையவன், அவை - அந்தவிக்ரஹங்களை, காண்கொடான் - காணும்படிஸங்கல்பியான், உன்பக்கலெனக்குள்ள ஆஸக்தியாலே அவற்றையெனக்கவன்காட்டுகிறிலன் என்றுகருத்து. உங்கள்பக்கலாஸக்தியைவிட்டேனென்றதாயிற்று. ॥அ॥

ஆர்க்கும் - எத்தனையேனுந்தனக்கபிமதரானார்க்கும், தன்னை - அநந்யப்ரயோஜநருக்கு போக்யனானதன்னை, காண்கொடுப்பானல்லன் - அநுபவிக்கக்கொடுக்கும் ஸ்வபாவனல்லன், அவர்களுக்கு விஷயாந்தரஸங்கமுண்டாயிருக்கிலென்றுகருத்து. தன்னால் - ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தனான தன்னாலும், கைசெய் - கையாலேசெய்கைக்கு, நிர்வஹிக்கைக்கென்றபடி. அப்பாலது - அப்பாற்பட்டதான, நிர்வஹிக்கைக்கு சக்யமல்லாததென்னும்படியானவென்றபடி. ஓர் - அத்விதீயமான, நிஸ்ஸமாப்யதிகமானவென்றபடி. மாயம்-ஆச்சர்யமான, மாண்குறள்கோல- வாமநவேஷமான. மாண் - வாமநகம், குறள் - வாமநன், வாமநப்ரஹ்மசாரிவேஷமானவென்றபடி. வடிவு - ரூபத்தை, காட்டி- மஹாபலியைவஞ்சிக்கைக்காக அவனுக்குக்காட்டி, மண்ணும் - ப்ருதிவ்யாதிலோகமும், விண்ணும்- ஆகாசமும், ஊர்த்வலோகங்களுமென்றபடி. நிறைய- நிறையும்படி, மலர்ந்த - விஸ்த்ருதனான, த்ரிவிக்ரமரூபவேணாவிஷ்டனானவென்றபடி. இதுதேவபிரானுக்குவிசேஷணம். அவிவ்ருத்தியை வர்ஷபதமான மலர்த்தியாலே உபவரித்துதிருமேனியை ஐச்வர்யமிரிபோலே ஸ்ரீ ஸாகாரஸாரஸமென்றுவ்யஞ்ஜிப்பிக்கைக்காக. சேண்சுடர்- மஹாதேஜஸ்ஸையுடையான, சேண்- உன்னதம், நிரதிசயதேஜஸ்ஸானவென்றபடி. பலதோள்கள்-அநேகபாஹுக்கள், தழைத்த-கல்பவ்ருக்ஷசாகைகள்தழைத்தாப்போலே தழைத்திருக்கிறவனை, தேவபிரார்க்கு- தேவோபகாரகனானவனுக்கு, மஹாபலிபக்கல்நின்றும் ராஜ்யத்தைமீட்டுக்கொடுத்து தேவர்களுக்குபகாரகனுக்கு என்றபடி. என்னிறைவினோடு- என்னுடையவாத்ருதிரூபையோடே

மூ— நாண்கொடுத்தேனினியென்கொடுக்கேனென்னுடைநன்னுதனங்கைமீர்காள்* ॥௯॥
என்னுடைநன்னுதனங் கைமீர்காள்யானினிச்செய்வதென்னென்னெஞ் சென்னை* நின்னிடையேனலலே னென்றுநீங்கிநேமியுஞ்ச ங்குமிருகைக்கொண்டு* பன்னெடுஞ்சூழ்சுடர்ஞாயிற்றோடுபான்மதியேந்தியோர்

ஆ— வகாட்டி, ஸ்ரீமஹாலக்ஷ்மியினுடைய ஸௌந்தர்யங்களையு மனுஸரித்து நெய்தல்பூ அலர்ந்தாப்போலே ஸ்வாபாவிகமாகும் நிறையும்படி மலர்ந்ததிருமேனியையும் கற்பகச்சோலைதழைத்தாப்போலே தழைத்த நிரதிசய போக்யமான திருத்தோள்களையு முடையனாயிருந்த தேவபிரார்க்கென்னிறைவினோடு நாண்கொடுத்தேன் இனி யென்கொடுக்கேன் என்னுடைநன்னுதல் நங்கைமீர்காளென்று சொல்லுகிறாள். ॥௯॥

(என்னுடை) ஆகிலுமவனையாசைப்படுகை யீடல்லவென்றவர்கள்சொல்ல; நான் தோழிமாரைவிட்டாப்

இ—விடத்தில் ஸ்வாதாரியமருளிச்செய்கிறார் (ஸௌந்தர்யாதியால்) ஸ்ரீமஹாலக்ஷ்மியினுடைய ஸௌந்தர்ய வசீகரணமிறே. வடிவுடையனென்னாதே வடிவுகாட்டியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்ரீமஹா லக்ஷ்மியாதியால்) நிமிர்ந்தவென்னாதே மலர்ந்தவென்றதால் ஸ்வாபாவிகத்வம்தோற்றுகிறதென்று நினைத்த ருளிச்செய்கிறார் (நெய்தலித்யாதியால்) தழைத்தவென்றதால் சோலைபோடுஸாத்ருஶ்யந் தோற்றுகிறதென்று நி னைத்து உசிதமானசோலையை யருளிச்செய்கிறார் (கற்பகசசோலையித்யாதியால்) செஞ்சுடரென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிரதிசயபோக்யமானவென்று) ॥௯॥

✳ பத்தாம்பாட்டு. ✳

லஜ்ஜையையுங்கூடவிழந்தேனென்றபோதே தன்னெஞ்சவன்திருவடிகளிலே ஸக்தமென்னுமிடம் ஸித்த மாயிருக்க விப்பாட்டிலேயத்தைச்சொல்லுகை யஸங்கதமன்றோவென்ன ஸங்கதிப்பிக்கிறார் (ஆகிலுமித்யா தியால்) சொல்லவென்கிறதற்கு ஸ்ரீமஹாவாக்யத்தில் க்ருபையோடேயன்வயம். இப்படி சொன்னவர்களைக்குறித் தென்னெஞ்செனக்கு ஸ்வாதீனமன்றிக்கே போயிற்றென்றுசொல்லுகிறாளாகையாலே யிதுஸங்கதமென்றதா யிற்று. தன்னெஞ்சுதன்னைவிடுகை யஸம்பாவிதமன்றோவென்ன இது ஸம்பாவிதமென்கைக்கு ஸத்ருஶ மான த்ருஷ்டாந்தத்தை யருளிச்செய்கிறார் (நான்தோழிமாரையித்யாதியால்) இவ்வர்த்தமுங்கீழோடேங்களிடை

ஈ—நிறைவு- ஸம்ருத்தி, ஸாம்பூர்ணமென்றபடி. ஸம்பூர்ணமாகிய ஸ்வபாவமென்கை. நாண்- நாணத்தை, லஜ்ஜையையெ ன்றபடி. கொடுத்தேன் - இழந்தேன் அவனையாசைப்பட்டுப்பெறாமையாலே யிழந்தேனென்றுவ்யாக்யாஸம். நன்னு தல் - நன்னுதலையுடையவர்களான, நுதல் - லலாடம், துக்கமறியாமையாலே காந்தியுக்தமாயிருந்த லலாடங்களையுடையவர்களானவென்றபடி, என்னுடைநங்கைமீர்காள் என்றந்வயிப்பது. என்னுடையஸகி யெனக்கோள், நங்கை - ஸம்பூர்ணை, எனக்குஹிதஞ்சொல்ல ஸமர்த்தைகளாய் விரஹமறியாமையாலே ஸாம்பூர்ணம் ஸௌந்தர்யாதிகுணங்களாலே குறைவற்றவர்களாயிருக்கிற ஸ்த்ரீகாளென்றபடி. இனியென்கொடுக் கேன் - இனியெத்தைக்கொடுக்கப்போகிறேன், எல்லாம்முன்பே யிழந்தபினபெத்தை இழபபதென்றபடி. ॥௯॥

என்னெஞ்சு- எனக்கெப்போதும் ஸ்வாதீனமாயிருந்த வென்னெஞ்சானது, நின்னிடையேனல்லேனென்று- உனக்கவகாஶ முடையதல்லேனென்று, இடை- அவகாஶம், இடை யுடையது இடையது. இஸ்வபாவத் தாலே தன்னைச்சொல்லிக் கொள்ளும்போது இடையேனென்று ரூபமாயிருக்கும். என்பக்கலுனக் கவ காஶமுண்டாம்படி நானுனக்கு காரணமாயிருப்பேனல்லேனென்றென்றபடி. என்னை- தன்னைக்கொண்டு உஜ்ஜீ விக்கவிருக்கிற வென்னை, நீங்கி- விட்டுப்போய், "ஸஞ்ந்யஸ்ய ஸம்ஶய:" என்று போவாரைப்போலே இனிமீட்க் கவொண்ணாதபடி ஸம்பந்தமறுத்துவிட்டுப் போயென்று வ்யாக்யாதம். இதுக்கு அடைந்ததென்கிறதோடே அந்வயம். நேமியும்- சக்ரத்தையும், சங்கும்- ஶங்கத்தையும் இருகைகொண்டு- இரண்டுகைகளிலும் தரி த்துக்கொண்டு, இதுக்கு வருவதெப்பாரென்கிறதோடே அந்வயம். பல்- பஹுக்களான, சுஸம்வ்ருத்தங்க ளானவென்றபடி. நெடும்- தீர்க்கங்களான, திமஹத்வாதிகளான வென்றபடி. சூழ்- சூழ்ந்தவையான, திருமிஷத்துகளிலும் வ்யாப்தங்களான வென்றபடி. சுடர்- தேஜஸ்ஸுகளையுடையவையான, ஞாயிற்றோடு- ஸூர்யனோடே. ஞாயிறு- ஸூர்யன், பான்மதி- பால்போலேயிருக்கிற சந்த்ரனையும், மதி- சந்த்ரன், பால போலே யஹ்லாதகத்வாதி குணங்களை யுடையனான சந்த்ரனையுமென்றபடி. ஏந்தி- தரித்துக்கொ ண்டு, இதுக்குவருவதென்கிறதோடே அந்வயம். ஓர்கோல- அத்விதீயமான ஸௌந்தர்யமான, நீல- இந்த்ரநீல

மூ—கோலநீல* நன்னெடுங்குன்றம்வருவதொப்பா னாண்மலர்ப்பாதமடைந்ததுவே* ॥௰॥
பாதமடைவதன்பாசத்தாலேமற்றவன்பாசங்கள்முற்றவிட்டுக்* கோதில்புகழ்க்கண்ணன்றன்னடிமேல்வண்
குருகூர்ச்சடகோபன்சொன்ன* தீதிலந்தாதியோராயிரத்துள்

ஆ—போலே யென்னெஞ்சென்னை யின்னிடையேனல்லேனென்றுநீங்கி ஸம்வ்ருதாகாரனாய், நீலமான திருமேனியையுடையனாய், ப்ரகாஶிகத்வ ப்ரஸாதக ஸ்வாகார நிரஸநகாரணாலங்க்ருத நிரதிஶயாரோஹணீய ஸரணீய ஜங்கம நீலஶைலவஸ்துப்போலேயிருந்த வவனுடைய நாண்மலர்ப்பாதமடைந்தது, யானினிச்செய்வதென்? என்னுடைநன்னுதல்நங்கைமீர்காளென்கிறாள். ॥௰॥

(பாதமடைவதன்) திருவடிகளைச்சேரவேணுமென்னுமாசையாலே க்ஷுத்ரவிஷயஸங்கத்தை நிஶ்ஶேஷமாகவிட்டு ஸர்வஜ்ஞஸகலவிஷயஸங்க நிவர்த்தகமான கல்யாணகுணங்களையுடையனான கண்ணன்

இ—யில்லையென்று தான்சொன்னப்போலே யின்னிடையேனல்லேனென்று நீங்கியென்று தன்னைக்குறித்துத் தன்னுடை நெஞ்சுசொன்னதாகச் சொல்லுகிறவித்தால் தோற்றுகிறதென்று கருத்து. நீலநன்னெடுமித்யாதி நொசுநீலமிஸிச்ரஶ்ரவணத்தாலே ஸுலக்ஷணமான வஸ்துவத்தைபுரைக்கிறார் (நீலமானவித்யாதியால்) பன்னெடுஞ்சூழ்சுடரென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ப்ரகாஶிகேத்யாதியால்) நாயிற்றோடுபான்மதி யேந்தியென்கிறத்தைபுரைக்கிறார் (ஸ்வாகாரேத்யாதியால்) ஓர்கோலவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிரதிஶயேத்யாதியால்) நீலநன்னெடுங்குன்றம் வருவதொப்பான் என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கி றார் (ஸரணீயேத்யாதியால்) அதில் ஸரணீயஶப்தத்தாலே நன்ஶப்தம்வ்யாவ்ருத்தம். ஜங்கமஶப்தத்தாலே வருவா தென்றதுவ்யாவ்ருத்தம். ॥௰௨॥

✳ நிகமனம். ✳

கோதில்என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வஜ்ஞஸகலவிஷய ஸங்கநிவர்த்தகமான

ஸா—வணமான, நல்- நல்லதான, உத்தானுக்த ஸர்வஸ்வரூப நிரதிஶய ஸௌந்தர்யமான வென்றபடி, நல் நெடுமென்கிறவிடத்திலே லகாரஸ்ய நகாரோவரோ ணகாராதேஶ:. நெடும் உத்துங்கமான, குன்றம்- பர்வதமானது, வருவதொப்பான்- நடந்து வருவதற்கு ஸத்ருஶமானவனுடைய, ஒப்பு- ஸாத்ருஶ்யம், ஒப்புடையவன்- ஒப்பான், நாண்மலர் பாதம்- ஸத்யம், அடைந்தது- வஸ்த்ததிலேவண்டுபடிந்தாப்போலே சேர்ந்துவிட்டது. நன்னுதல்- நல்லநுதலை யுடையவர்களான, லகாரஸ்ய ணகாராதேஶ:. வத்வஸ்த, நுதல்- லலாடம். தைவமறியாமையாலே யொளியழியாத தேஹத்தையுடையவர்களான வென்றபடி. என்னுடை நங் கைமீர்காள்- என்னுடைய ஸகிஜனங்காள், நங்கை- ஸகிஜன், எனக்கு ஹிதஞ்சொல்ல ப்ராப் தைகளாய் விரஹமறியாமையாலே ஸௌந்தர்யவர்த்தாத்ருஷ்டகுணங்களில் குறைவற்றவர்களாயிருக்கிற ஸ்த்ரீகாளென் றபடி. யான்- உங்களைப்போலன்றிக்கேயெல்லாத்தையு மிழந்திருக்கிறநான், இனி- நெஞ்சு என்னைத்துறந் துபோனபின்பு, செய்வது- செய்யத்தக்கது, என்- எது, என்னால்செய்யலாவதொன்றுமில்லை யென்றபடி. நெஞ்சுஸ்வாயீநமன்றிக்கே யென்னைவிட்டுப்போனபின்பு நீங்கள் சொன்னஹிதத்தை யென்னால்கேட்கமுடியா தென்று கருத்து. ॥௧௦॥

பாதமடைவதன் பாசத்தாலே- ஶரணஸ்வாத்ப்ராப்தியிலாஸக்தியாலே, பாசம்- ஆஸக்தி, இதுக்குவிட்டு என் றதோடே அந்வயம். மற்ற- க்ஷுத்ரங்களான, இதர ஸாமாந்ய விஷயங்களான என்றபடி. வன்- த்ருடங்களான, பாசங்கள்- ஆஸக்திகளை, முற்ற- காத்ஸ்நத்தையும், விட்டு, இதுக்குச்சென்ற வென்கிறதோடே அந்வயம். இத்தாலித்திருவாய்மொழிக்கு நிஸ்ஸம்ஸாரஹேதும் ஆகிஞ்சந்யமென்னுமிடத்தை யிவர்தாமே யருளிச்செய்தாராயிற்று. கோதில்- கோதில்லாததான, கோது- அஸாரம், தன்னை யநுபவிப்பாருக்கு இதர விஷயஸங்கம் விட்டுப்போம்படி அத்யந்தாஸாவஹமான வென்றபடி. புகழ் - கல்யாணகுணங்களையுடையவ னான, கண்ணன்தன்னடிமேல் - க்ருஷ்ணனுடைய திருவடிகளின்விஷயமாக, வண் - பரமோதாரனான, குரு கூர்ச்சடகோபன்சொன்ன - ஸத்யம், தீதில் - தீதில்லாததான, தீது - அவத்யம், ஶப்தகுணமொழிய அபார்த்தவ்யாபகமாகிற அவத்யமில்லாததானவென்றபடி. யதா விஷயாநுபவஸம்பாதிவாவத்ய நிவர்த்தகமான வென்றபடி. இது பத்துக்குவிஶேஷணம், அந்தாதி - அந்தாதிப்ரபந்தமான, ஓர் - அத்விதீயமான, ஆயிரத்துள்-

மூ—வரிவையுமோர்பத்திசைசொடும்வல்லார்*ஆதுமோர்தீதிலராகியிங்குமங்குமெல்லாமமைவார்கடாமே* ॥கக॥

ஆ—தன்னடிமேல் வண்குருகூர்ச்சடகோபன்சொன்ன நிரவத்யமான இத்திருவாய்மொழியைவல்லார் நிரவத்ய ஸ்வபாவராய் அங்குமிங்குமெல்லாப்படியாலும் பரிபூர்ணரென்கிறார். ॥கக॥

இ—(வென்று) தீதில்லென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிரவத்யமானஎன்று) ஆதுமோர்தீதிலராகியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிரவத்யஸ்வபாவ) எல்லாமமைவார்களென்கிறதற்குத தாத்பர்யமருளிச்செய்கிறார் (எல்லாப்படியாலும்பரிபூர்ண) ॥கக॥

ப—ஸஹஸ்ரத்துக்குள்ளே, ஓர்இவைபத்தும் என்றனிப்பது. அதிதீபமான இந்தபத்துப்பாட்டையும், இசைசொடும் - காநத்தோடே, அலம்ஸமாக மாநமுண்டாம்படியான ஸ்ருதிதோடேயென்றபடி. வல்லார் - அப்யஸிக்கவல்லவர்கள், ஆதுமோர்தீது - அவித்யாகர்மவாஸநாதிகளிலே ஏதேனுமொருதோஷமும், இலராகி - இல்லாதவர்களாய், ஆதுமென்கிறவிடத்திலே உபாஸம்ஹாரமற்றிருக்கச்செய்தே ப்ரஸங்கம் தலைக்கட்டுகைக்காக யிருக்கையாகிற வைக்ஷ்யமுமவர்களுக்கில்லையென்று தோற்றுகிறது. தாமே - தாங்கள்தானே, இவர்களுக்குப்பலவிஷயவிஸ்ரேணையுமவேக்ஷிக்கவேண்டாவென்று கருத்து. இங்குமங்கும் - உபயலோகத்திலும் பரமலோகத்திலும், எல்லாமமைவார்கள் - எல்லாம்பரிபூர்ணராவார்கள், அமைவு - பரிபூர்த்தி, உபயலோகத்திலே க்ருதக்ருத்யஸமாதாநவாதிகளிலும் பரமலோகத்திலே ப்ரஹ்மாநந்தவைகல்யாதிகளாலும் பரிபூர்ணராவர்களென்றபடி. ॥கக॥

த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி:.

(நங்கள்வரிவளை.)

தார்க்ஷ்யாரூடாஹநத்வாத் ஸ்மிதநயநதயா நீலமேகாக்ருதித்வா
தாஸ்சர்யோதாரசேஷ்டிதத்வாதீயத்தயா யோகிபிர்நிர்ணேயத்வாத் ।
ஸேவ்யவ்யாமோஹபூர்ணபாவாத் ஸ்ருதிமதிவிரஹாத் துர்ஜநாத்ருஸ்யபாவாத்
ஸ்வாம்ஸாநாஞ்ச நாநாம்ஸஹதந உதித ப்ராஹநாயஸ்ஸ்வஸாஸி: ॥கஉ॥

(தார்க்ஷ்யாரூடாஹநத்வாத்) வெங்கட்பறவையின்பாகனெங்கோன் - விரோதிநிரஸநத்திலே உத்யுக்தனான பெரியதிருவடியை வாஹநமாகவுடையவனாகையாலும், (ஸ்மிதநயநதயா) காண்டகுதாமரைக்கண்ணன் - ஸதாதர்ஸநீயமாய் ஸரஸிஜஸத்ருஸமான திருக்கண்மலரையுடையனாகையாலும், (நீலமேகாக்ருதித்வாத்) நீலமலர்நெடுஞ்சோதிசூழ்ந்த நீண்டமுகில்வண்ணன் - வர்ஷுகவலாஹகம்போலேயிருக்கிற வடிவையுடையவனாகையாலும், (ஆஸ்சர்யோதாரசேஷ்டிதத்வாத்) வணங்குடபால்நின்றமாயக்கூத்தன் - அத்யாஸ்சர்யமான சேஷ்டிதங்களையுடையவனாகையாலும், (ஈயத்தயா யோகிபிர்நிர்ணேயத்வாத்) ஒருவனுகன்குணர்வார்க்குமுணரலாகா - எத்தனையேனும் அதிஸயிதஜ்ஞாநரான யோகிகளாலும் ப்ரஹ்மாதிகளாலும் இன்னபடியென்றறியவொண்ணாதபடி யிருக்குமவனாகையாலும், (ஸேவ்யவ்யாமோஹபூர்ணபாவாத்) மலர்க்கண்வளர்கின்றமாலே - ஆஸ்ரிதரிடத்திலே மிகவும் வ்யாமோஹத்தைப்பண்ணுகையாலும், (ஸ்ருதிமதிவிரஹாத்) காலம்பலசென்றுங்காண்பதாணை - ஆஸ்ரிதர்காணுமிடத்தில் ப்ரதிபந்தகரஹிதனாகையாலும், (துர்ஜநாத்ருஸ்யபாவாத்) கடையறப்பாசங்கள்விட்டால் - காண்கொடுப்பானல்லார்க்குந்தன்னை - ஸர்வஸமமாக உபாயவிஷயஸம்பந்தத்தைவிடாதே ஸ்வயத்நத்தாலே காணவுமேக்ஷிக்குமவர்களுக்கு அத்ருஸ்யனாகையாலும் (ஸ்வாம்ஸாநாஞ்சநாநாம்ஸஹதநத:) என்னெஞ்சென்னை நின்னிடையேனல்லேனென்று நீங்கியத்ராதி- உபாயவிஷயஸம்பந்தருடைய மநஸ்ஸு தன்னிடத்திலேசேரும்படி யிருக்குமவனாகையாலும், எம்பெருமான் உபாயவிஷயத்தில் பற்றற்றபேர்களுக்கு அத்யந்தஸுலபனாயிருக்கிறனென்று "நங்கள்வரிவளை" என்கிற ப்ரபந்தத்திலே ஆழ்வார் நிர்ணயித்தருளினரென்கிறார். ॥கஉ॥

ஸ்ரீமதேநிகமாந்தமஹாதேஸிகாயநம:.

எட்டாம்பத்தில் இரண்டாந்திருவாய்மொழி முற்றிற்று.

மூன்றாந்திருவாய்மொழி.

மூ— அங்குமிங்கும்வானவர்தானவர்யாவரு* மெங்குமினையையென்றுன்னையறியகிலாதலற்றி* யங்கஞ்

ஆ— (அங்குமிங்கும்) இப்படிஎம்பெருமானைப்பிரிந்து வ்யஸநப்படுகிற தமக்கொருதுணையின்றியே யிருக்கிறபடியை யருளிச்செய்கிறார். ஸ்வர்க்காதிலோகங்களிலு மிந்தலோகத்திலும் மற்றெங்குமவஸ்திக்கிற தேவாஸுரமநுஷ்யாதி ஸர்வஸத்வங்களும் ஸௌலப்யகுணனென்றுன்னை யுள்ளபடியறியாதே ப்ரஹ்மருத்ரேந்த்ராதிகளும், ஸம்ஸாரிகளும், பரமபதவாஸிகளுமிருந்த உன்னைத்தங்களுக்கு அநுபவ்யமான க்ஷேத்ரஸ்த

இ— இப்படியவனைக்காணவேணுமென்றுள்ள தம்முடைய அபிநிவேசாதிசயமாகத் தாமவனைக்காணப் பெறுமையாலே அந்தவ்யஸநமின்னம் பாதமாகாதிருக்கச்செய்தே யிப்போது ஸந்தோஷமெய்திற்போலே அங்குமிங்கும் வானவர்தானவரித்யாதியாலே யவனாலொழிந்தவிசேஷமாக ஸர்வஸமாச்ரயணீயனென்றும் அவனையாச்ரயித்து நம்ஸம்ஸாரக்லேசங்களை நிவர்த்திப்பித்துக்கொண்டோமென்று மவனைக்கொண்டாடுகை யஸம்பாவிதமென்னவதரிப்பிக்கிறார் (இப்படியித்யாதியால்) தமக்குத்துணையில்லையென்று சொல்லுகையிலே தாத்பர்யமாகையாலே ஸம்பதமென்றதாயிற்று. தாமிப்படி வ்யஸநப்படச்செய்தேயு மவன் வாரா தொழிந்தவாறே ஸமஸ்தஸம்ச்லேஷவிச்லேஷைக ஸாபேக்ஷராயிருப்பார் சிலரோடே பாஷாவநம்பண் ணியாகிலும் தரிப்போமென்றுபார்த்து தயாவிஷ்ணங்கே தமக்குஅநியாதொழிந்தவாறே மிகவுமார்த்தராயத் தைச்சொல்லி விலாவிக்கிறாரென்றுகருத்து. *

முதற்பாட்டு

இனையையென்றுன்னை யறியகிலாதலற்றியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸௌலப்யகுணி த்யாதியால்) ஸௌலப்யகுணனென்றது - நிரதிசயஸௌஹார்த்தனென்றபடி. ஸர்வேச்வரனுடைய ஸர்வ ஸௌஹார்த்தநிரதிசயத்தாலே ஸித்தமர்த்தத்தை யருளிச்செய்கிறார் (பரமபதவ்யென்று) இன்ன ப்ரயோஜநத்துக்கென்று விசேஷியாதே ஸாமாந்யகாரணமென்றிருந்தாலும் தேவாஸுரமநுஷ்யாதி வ்யவஹாரத்தாலே இஷ்டுமிங்கே வைலக்ஷண்யாபாதமாமென்று நினைத்தருளிச்செய்கிறார் (தங்களுக்

அ— அங்கும் - அந்தலோகங்களிலும், ஊர்த்வதேசஸ்தங்களான ஸ்வர்க்காதிகளிலுமென்றபடி. இங்கும் - இந்தபூலோகத்திலும், எங்கும் - ஸர்வலோகங்களிலும், இன்னுமுள்ள பாதாளாதிகளிலுமென்றபடி. வானவர் - தேவதைகளும், தானவர் - அஸுரர்களும், யாவரும் - ஸர்வரும், மநுஷ்யாதிகளாக விண்ணமு ள்ளவெதநரெல்லாருமென்றபடி. இங்கு லோகங்களையெடுத்தது இவர்களெல்லாரும் ஸ்வஸ்வலோகஸ்தாயிகளா ரூபவிசேஷபேதங்களென்று வ்யஞ்ஜிப்பிக்கைக்காகவும் ஒருலோகத்திலும் தமக்குத்துணையில்லையென் று வ்யஞ்ஜிப்பிக்கைக்காகவுமாம். இங்கு அஸுரரையெடுத்தது பரமேச்வரஸௌஹார்த்தமறியாமையா லே, அது ஆநாகாரதேவத்ருஷ்டிகரோடு அல்லாதாரோடு வாசியில்லையென்று வ்யஞ்ஜிப்பிக்கைக்காக. புரா ணத்திற்சொன்னபடியே ஸாத்யபுராணத்திலே ரயிகாரவிசேஷம்பெற்றவர்களான ப்ரஹ்லாதவிபீஷணா திகளைப்போலே அஸுரர்களிலேயும் சிலர் ஸ்வாபிமத விஷயத்தில் ஸர்வேச்வரனையாச்ரயித்தி ருப்பார் ஸம்பாவிதரிறே. உன்னை- ச்ரிய:பதியாய் ஸர்வேச்வரனாய் ஸௌலப்யாதிகளாலும் ஸௌந்தர்யலாவண்யாதிகளாலு மத்யந்தஸௌஹார்த்தனான உன்னை, இனையையென்று- ஸௌலப்யகுணனென்று, நிரதிசயஸௌஹார்த்தனென்று என்ற படி. இனையான்- ஸௌலப்யகுணன். எதிரேயிருக்கிறவனைச் சொல்லும்போது இனையையென்று ரூபமா யிருக்கும். அறியகிலாது- அறியமாட்டாதே, அலற்றி- ஸர்வஜ்ஞத்வ ஸர்வசக்தித்வாதிகளைச்சொல்லிக் கூப்பி ட்டு, ஸௌஹார்த்தவ்யஞ்ஜகங்களான ஸௌந்தர்ய ஸௌகுமார்ய லாவண்யாதிகளைச்சொல்லி யநுபவிக்கவ றியாதே ரக்ஷகத்வவ்யஞ்ஜகங்களான ஸர்வஜ்ஞத்வாதிமாத்ரத்தை யலற்றி என்றபடி. இதுக்கு என்பாரெ ன்கிறத்தோடே அந்வயம். பூமகள்- பூவிற்பெண், பூவில்வாஸிக்கும்வடிவு கொண்டாப்போலே வஸ்வா ஸிநியாயிருக்கிற பெரியபிராட்டியாருமென்றபடி. மண்மகள்- மண்ணில்பெண், பூமியிலபிமானியாய் க்ஷமாவத்வஸம்பந்தியான பூமிப்பிராட்டியுமென்றபடி. ஆய்மகள்- கோபகுமாரியும், ஆயர்- கோவர், நாயகஸௌந்தர்ய ஸௌசீல்யங்களையுடையவளான நீளையுமென்றபடி. அங்கஞ்சேரும்- திருமேனியைச்

மூ— சேரும்பூமகள்மண்மகளாய்மகள்* சங்குசக்கரக்கையவனென்பர்சரணமே* ||௧||
சரணமாகியநான்மறைநூல்களுஞ்சாராதே*

ஆ—த்துக்குபாயமென்பர் ஆதலாலெனக்கவர் துணையல்லரென்கிறார். ||௧||

(சரணமாகிய) இப்படி தேவதாந்தரங்கள் துணையல்லரென்றருளிச்செய்து கைவல்யார்த்திகளுந் தனக்குத்துணையல்லரென்றருளிச்செய்தார். தேவதாந்தரவிஷயமான ப்ரமாணங்களைவிட்டு மோக்ஷோபாயப்ரதிபாதகசாஸ்த்ரத்தை யவலம்பித்த நாமும் ப்ராப்யப்ராபகங்களாய் திவ்யமங்களவிக்ரஹத்தோடுங்கூடின, ஸர்வேச்வரனை ஸர்வாதாரமாக ப்ராப்யமாக வுபாஸித்து ஐச்வர்யபதத்தைப்பண்ணி ஸம்ஸாரநிவ்ருத்திமாத்ரத்தை ப்ராப்யமாகப்பற்றினோ மித்தனையிறே, அவன்திருவடிகளை ப்ராப்யமாகப்பற்றிற்

இ—கித்யாதியால்) பாட்டுக்கு ஸங்கதியருளிச்செய்கிறார் (ஆதலாலித்யாதியால்) ஆதலாலென்றது- இப்படி ப்ரயோஜநாந்தரபரராகையாலே ஸர்வஸ்வாமித்வவிசிஷ்டனைப் பற்றாமைக்கு ஹேதுவல்லாமையாலென்றபடி. ||௧||

✳ இரண்டாம்பாட்டு. ✳

ஸர்வஜ்ஞராயிருக்கிற விவரிப்பாட்டிலே எம்பெருமானையாச்ரயித்து ஜராமரணமோக்ஷமான கைவல்யத்தைப்பெற்றோமென்று சொல்லுகை யஸங்கதமன்றோவென்ன வதனிப்பிக்கிறார் (இப்படியித்யாதியால்) தேவதாந்தரங்களை யநாதரித்தது த்ருஷ்டாந்தமும். தமக்குத் துணையில்லையென்று சொல்லுகிற ப்ரகரணஸங்கதமாகவுமாம். ப்ராப்யப்ராபகஸதருக்குத் துணையல்லராகில் ஜ்ஞாநாநந்தஸ்வரூபநாவலவர் துணையாகலாமேயென்ன வாஸ்தவஸம்பந்தாநிரூபணாதிகாரல்லாமையாலே தேவதாந்தரங்களைப்போலே யவர்களுமெனக்குத் துணையல்லரென்கிறாரென்றுகருத்து. ப்ரயோஜநத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தேவதேத்யாதியால்) அதீயவாதத்திலஸங்கதிவிஸாரத்தை யருளிச்செய்கிறார் (மோக்ஷேத்யாதியால்) மோக்ஷஸப்தோக்தமாய் கைவல்யமாம். நாமுமென்றவிடத்தில் உம்மையும் அவன்திருவடிகளை ப்ராப்யமாகப்பற்றாமையாலே கீழ்ச்சொன்னதேவதாந்தரங்களோடே இக்கைவல்யார்த்திகளை ஸமுச்சயிக்கிறது. யதாயோக்யஞ்சொல்லுகிற உத்தராபாதத்தில ஸங்கதிவிஸாரத்தை யருளிச்செய்கிறார் (ப்ராப்யேத்யாதியால்) ஆழியைச்சொன்னது உபலக்ஷணமென்றுநினைத்தருளிச்செய்கிறார் (ஸர்வேத்யாதியால்) ஈசர்க்காளாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வேத்யாதியால்) கரணப்பல்படையித்யாதியான விசேஷணத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஐச்வர்யேத்யாதியால்) அதீயவாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸம்ஸாரேத்யாதியால்) இங்கு ஸம்ஸாரமும் ஜராமரணாதிரூபம். இதுக்கு ஸங்கதியருளிச்செய்கிறார் (அவன்திருவடிகளையித்யாதியால்)

—சேரும்படி யிருக்கிறவனை, ஸர்வாவஸ்தைகளிலே யகப்பட்டுப்பிரியமாட்டாமல் தன் திருமேனியோடே நித்யஸம்ச்லேஷைகளாம்படி யிருக்கிறவனை என்றபடி. "ஒண்டொடியாள் திருமகளும்நீயு" மென்கிற கணக்கிலே உபயவிஷய வைதக்ஷ்யவஹமான வித்திவ்யதம்பதிகளுடைய சேர்த்தியைக்கண்டால் "வடிவாய் நின்வலமார்பினில் வாழ்கின்றமங்கையும் பல்லாண்டு" என்று மங்களாசாஸனம்பண்ணி யநுபவிக்க வறியகிலர். இவர்கள் தங்களுடைய க்ஷுத்ரப்ரயோஜந ஸாதனத்துக்கு ஸாதனமாக நினைக்கிறார்கள். இவர்களை த்தனை ஸாம்யவீநரோ என்றுகருத்து. சங்கு சக்கரக்கையவன்- ஸர்வ பூஷணபாணியானவன், கையுந் திருவாழியுமான வழகைக்கண்டால் பரவசராய் "வடிவார் சோதிவலத்துறையுஞ்சுடராழியும்பல்லாண்டு" என்று மங்களாசாஸனம் பண்ணியநுபவிக்க வறியகிலர். தங்களுடைய க்ஷுத்ரதேவதாவிரோதிகளை நிரஸிக்கைக்குஉபகரணமுடையவனென்று ஸமாச்ரயிக்கிறார்கள். இதென்ன ஔதார்யமென்றுகருத்து. சரணமென்பர்- உபாயமென்று நம்புவார்கள். அவனை நிரதிசயபோக்யபாவமென் றநுபவியாதே ஸாதனமாகவும் ஸாத்யமாகவும் ஸாதநமென்றபுத்திபண்ணுவாரென்றபடி. ஆகையாலெனக் கவர்கள் துணையல்லரென்று கருத்து. ||௧||

'சரணமாகிய - உபாயமான, தேவதாந்தர ஜ்ஞாநஸாதநமானவென்றபடி. நான்மறை நூல்களும்- சொல்லுகின்ற ஸாஸ்த்ரங்களையும், மறை - வேதம், நூல் - ஸாஸ்த்ரம், தத்வேதகங்களான ருக்வேதாதிகளையுமென்றபடி. சாராதே - ஆச்ரயியாதே, இதுக்கு ஆராய்மாய்த்தோமென்கிற விரண்டிடத்திலுமன்வயம். நான்மறை நூல்களுமென்கிறவிடத்தி லவ்யயத்தை சாராதேயென்கிறவிடத்திலே கூட்டிப்பது

மூ— மரணந்தோற்றம்வான்பிணிமூப்பென்றிவைமாய்த்தோம்* கரணப்பல்படைபற்றறவோடுங்கனலாழி*
யரணத்திண்படையேந்தியவீசற்காளாயே* ||௩||
ஆளுமாளார்ஆழியுஞ்சங்குஞ்சுமப்பார்

ஆ—றிலோமிறே. ஆதலால் நீங்களுமெனக்குத துணையல்லீரென்கிறார். தம்மோடவர்களுக்குண்டான வைஷ்ணவத்வ ப்ரயுக்த ஸாதர்ம்யத்தாலே தெய்வங்காள் என்று ஸம்போதித்தாலே வ்யபதேஶிக்கிறார். ||௩||
(ஆளுமாளார்) தன்தனிமையினுடைய அநுஸந்தாநத்தாலே அவன்தனிமையை நினைத்து அவன்தனிமைக்கு

இ—மாய்த்தீரென்னவேண்டியிருக்க மாய்த்தோமென்று தம்மையுமவர்களைக் கூட்டிச்சொல்லுவானேனென்ன வருளிச்செய்கிறார் (தம்மோடி த்யாதியால்) பாட்டிலே ஸம்போதநமில்லையாகிலும் மாய்த்தோமென்கிற உத்தமபுருஷனாலே ஸம்போதநவ்யபதேஶ மஸாதாரணமென்றுகருத்து. வைஷ்ணவத்வ ப்ரயுக்த ஸாதர்ம்யத்தாலே தாமுமவர்களோடொன்பட்டுநின்று தம்மைக்கூட்டி வ்யபதேஶிக்கிறாரென்றபடி. ||௩||

* மூன்றாம்பாட்டு. *

தமக்குத்துணையில்லையென்று விலக்ஷிக்கிறவிவர் அத்தைவிட்டு இப்பாட்டிலே அவன்வஸகாயனாய் ஸஞ்சரிக்கிறானென்றநுஸந்திக்கை ப்ரஸங்கமன்றோவென்ன ஸங்கதிப்பிக்கிறார் (தன்தனிமையி த்யாதியால்).

ஈ—சாராதேயும் - ஆஶ்ரயியாதிருந்தும், இதுக்கு மாய்த்தோமென்கிறத்தோடே அந்வயம். காத்ருகர்தவ்ய ஸாதநங்களை அநுஷ்டியாதேயிருந்தும் ஜராமரணாதிகளைப் போக்கினோமித்தனையொழிய அவனை ஸாத்யமாகப் பற்றிலோமென்றிப்படி வைஷ்ணவத்வ ப்ரயுக்தமு மவர்கள்தமக்குத்துணையாகைக்கு ஸாதகமன்றென்றிவ்வ ஸ்வபாவத்தாலே ஸூசிதமாம், கரணப்பல்படை - இந்த்ரியஸமூஹமானது, படை - ஸேனை, பல்படை - பஹுஸேனை, இப்பஸ்வபமிங்கே ஸமூஹவாசம், பற்றற - ஸம்பந்தமில்லாமல், பற்று - ஸம்பந்தம், அறவென்றுகிரியாவிஶேஷணம், ஶப்தாதிவிஷயஸம்பந்தமில்லாமல் என்றபடி. ஓடுங்கனல் - ஓடும்படிஜ்வலியாநின்ற, கனலுகை - ஜ்வலிக்கை, ஆஶ்ரிதருடையகரணக்ராமம் நிவ்ருத்தவிஷயஸம்பந்தமாய் நடக்கும்படி ஜ்வலியாநின்றவென்று பரமார்த்தம். இத்தாலிவர்களவனை யாஶ்ரயிப்பது இந்த்ரியஜயார்த்தமென்று ஸூசிதம். ஆழி - சக்ரமாகிற, இதுக்குப்படையோடேயந்வயம். அரணம் - ஆஶ்ரிதர்க்குஅரணான, க்ஷேமகரமானவென்றபடி. அரண்—ரக்ஷாவாசகமான ஸம்ரக்ஷணஸாதநம், இதுக்குஅரணமென்று ஸகாராந்தமாயும் ப்ரயோகமுண்டு. அதா, அரண்அத்திண்படையென்று விக்ரஹம், அஎன்றுப்ரஸித்திவாசம், அரணுப்ரஸித்தமானஎன்றபடி. திண்- த்ருடமான, ஶத்ருநிரஸநஸமர்த்தமான என்றபடி. படை - ஆயுதத்தை, ஏந்திய - தரித்தவரான, ஈசர்க்கு- ஸர்வேஶ்வரனுக்கு, ப்ரஜாஸம்போதநம். ஆளாய் - தாஸபூதராய், "ஜராமரணமோக்ஷாய மாமாஶ்ரித்ய யதந்தி யே" என்கிறகட்டளையாலே அவனையுபாஸித்துஎன்றபடி. மரணம் - ஸ்தூலஶரீரவியோகம், ஸூக்ஷ்மஶரீரவியோகமாவது ப்ரணஸம்பந்தவியோகிக்கையாலே கைவல்யத்திலே ஸூக்ஷ்மஶரீராநுவ்ருத்தியுண்டென்று ஸூசிதம் தோற்றம் - ப்ராதுர்பாவம், ஜநநமென்றபடி. வான்பிணி - மஹாவ்யாதி, வான் - மஹத், பிணி - வ்யாதி, நிவர்த்தயிதுமஶக்யங்களான வ்யாதிகளென்றபடி. மூப்பு - ஜரை, என்றிவை - என்கிறவிதுகளை, மாய்த்தோம் - நஶிப்பித்தோம், வைஷ்ணவத்வ ப்ரயுக்தத்தாலே வந்த உறவாலேயவர்கள்செய்ததைத்தாம் செய்ததாகவத்யவஸித்து மாய்த்தோமென்று உத்தமபுருஷனாலே நிர்தேஶிக்கிறார். ஜராமரணாதிநாஶம் விஶ்ராந்தமாகையாலே ஸம்பந்தநிர்தேஶம், இவ்வளவே உத்தேஶ்யமாகப்பற்றினோமித்தனையொழிய அவனை ஸாத்யமாகப்பற்றிலோமாகையாலே நீங்களுமெனக்குத துணையன்றென்றதாயிற்று. ||

ஆளுமாளார் - ஆளையுமாளுகிறாரில்லை, ஆள் - ஆளப்படுமவன், தாஸனென்றபடி. தாஸராயிருக்கிறவனையும் ஏவிக்கொள்ளுகிறாரில்லையென்றபடி. இளையபெருமாள் "ஸஹஸர்வம் கரிஷ்யதி" என்று கிங்கரஸந்நிதராயிருக்கச்செய்தேயும், ஶ்ரீவநிரஸநார்த்தமாகவாதல் ராக்ஷஸநிரஸநார்த்தமாகவாதல் எழுந்தருளும்போது அவரைஏவித் துணையாக்கிக்கொள்ளுகிறாரில்லையென்கை. ஶயாவிகளாய் நிவ்ருத்தரான ராக்ஷஸர்க்கு வாஸஸ்தாநமான தண்டகாரண்யத்திலே இப்படி தனியேயெழுந்தருளுவதே, ஐயோ! அப்போதைக்குநான் துணையாகவுதவப்பெற்றிலேனே, அவனுடைய வித்தனிமையையறிந்த நானினிஎங்ஙனே யாறியிருப்பதென்றுகருத்து. ஆழியும்சங்கும் - ஸ்ரீஸுதர்ஶநத்தையும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும், சுமப்பார் - சுமக்கிறவர்

மூ — தாம்* வாளும்வில்லுங்கொண்டுபின்செல்வார்மற்றில்லை* தாளுந்தோளுங்கைகளையாரத்தொழக் காணேன்*

ஆ — தவப்பெற்றிலேனென்று சொல்லிக்கொண்டு தம்முடைய தனிமையைச்சொல்லுகிறார். ஸ்ரீவநவாஸ ஸமயமாகவாதல் வாஸுதேவக்ருஷ்ணாவதார ஸமயமாகவாத லெழுந்தருளும்போது துணையின்றியே தன்னுடைய ஶங்கசக்ராதி திவ்யாயுதங்களைத் தானே சுமந்துகொண்டு போகாநிற்கும், வாளும்வில்லுங்கொண்டு பின் செல்வார்மற்றில்லை, தானெழுந்தருளும்போதவனுடைய திவ்யாயுதங்களைச்சுமந்துகொண்டு அவன்திருவடி

இ — தனிமை - ஏகாகித்வம், இப்படி நான் ஏகாகியானேனென்று விலபித்தவிவர் ஶ்ரீஶேஷத்தல் தனக்குத் தனிமையில்லாமையாலே இறையவனென்னை யிப்படி ஸம்ரக்ஷிக்கிறதென்று விசாரித்துப்பார்த்தவிடத்தில் இஸ் ஸமயயிலே தனிமையுள்ளதாகத்தோற்றி யிப்படி வ்யஸநமாக அவனுடைய தனிமையைக்கண்டு மிகவும் உத்வேகிதராய் அவன்தனிமைக்கு நானுதவப்பெற்றிலேனென்று விலபித்து இப்படி இம்ஸேவத்தாலும் தமக்குள்ள தனிமையைச்சொல்லி விலபிக்கிறாராகையாலே ஸங்கதமென்றபடி. இத்தாலித்திருவாய்மொழியிலே ஸவிஶேஷகாகித்வமென்கிற ஸம்பந்தம் த்ருடீக்ருதமென்றதாயிற்று. இந்தஸ்வபாவம் ஆஶ்ரிதஸ்வ ரம். இளையபெருமாள்முதலானார் உளராயிருக்க ஆளுமாளாரென்னக்கூடுமோவென்ன அதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ஸ்ரீவைகுண்டாதிபால்) எழுந்தருளும்போதுஎன்கிறதற்குத் துணையின்றியேயென்கிற விவ் வளவிலேயன்வயம். மேலேயன்வயமில்லை. ராமாவதாரத்திலே ஶங்கசக்ராதிகளில்லையிறே. ஸ்ரீவநவாஸஸமய மெழுந்தருளும்போது துணையின்றியேயிற்கும். க்ருஷ்ணாவதாராதிஸமயங்களிலே ஶங்கசக்ராதிகளைத் தானேசுமந்துகொண்டுபோகாநிற்குமென்று வாக்யார்த்தமுபபாத்யம். யதா, துணையின்றியேயென்கிறதற்கு போகாநிற்குமென்கிறத்தோடே அன்வயம். தானேசுமந்துகொண்டு என்கிறத்தோடே அன்வயமில்லை. ததா ஸ்ரீவநவாஸாதிஸமயயிலே துணையின்றியேயும் க்ருஷ்ணாவதாராதிஸமயங்களிலே ஶங்கசக்ராதிகளைத் தானே சுமந்தும் போகாநிற்குமென்றதாயிற்று. அபவா, வாஸுதேவஸமயத்தில் விம்பவிநிர்கணத்ருதாவதாரத்திலே "த்ரிஸம்ஸவிஸாஜஸாமம் ஸ்ருஜவணம்கிரீடிநம் | ஸ்ரீவத்ஸாங்கம் த்ருதஸுதர்ஶநம் பதாராமவதாஹமஜம் | உதரத்ஶுடாஶம் வாதமஸவயநாயனம் | கநராஜம் தேவதிகம் ஸமுத்தஸ்ஸஜ்ஞகணம் | அவயாஹ்ய ஸுமுஸாஹ்யா ஶங்கசக்ராயுதம்பக" என்றுசொல்லுகையாலே ஒருதவ்விஶேஷத்திலே ராமனுக்கும் சதுர்ப்புஜத்வமுண்டென்றுகருததாலே யிப்பாட்டிலே யருளிச்செய்ததாகவுமாம். சுமப்பார்தாம் பின்செல் வார்மற்றில்லை யெனகிறவிடத்திலே வ்யநிக்கிறவர்த்தத்தை யருளிச்செய்கிறார் (தானெழுந்தருளும்போதிசாரி பால்) அதாவது:— ராமஜாதிவாஸந்தன்றிக்கே ".ஶத்ருநாஶமஹாதிந" மென்னும்படி மஹாவீரமெனாஹார மாய் நடந்தெழுந்தருளும்போது என்கை. நடுவனென்று ஸாரதேஶநசொல்லாதே ஞாலத்தேநடுவனென் றுசொன்னதால் காஹாரஶ்ரூஹத விரஹிணீஸாத்ருஶ்யம்தோற்றுகிறதென்று நினைத்தருளிச்செய்கிறார்

ஈ — தாம் "ஸ்ரஶராமொகம்நெரம்ஸ்வாநி" என்னும்படி சக்ஷுகோசரரானதாமே "திவ்யாஸ்த்ரவஸ்திதவதா ஸஹஜ" மென்கிறபடியே ஆபரணமான திவ்யாயுதங்கள் மலையெடுத்தாப்போலே சுமையாய்த்தோற்றுகிறது அவனுடைய ஸௌகுமார்யத்தையே யநுஸந்திக்கிறவிவருக்கு எப்போதும் கைகழலாதேனயானன்றோ, அத்தைமற்றொருவர் தொடக்கூடுமோவென்ன, இவற்றையாகிலும் ஒருவர்சுமக்கலாகாதோ வென்கிறார்மேல. வாளும் - கட்கத்தையும், வில்லும் - ஶார்ங்கத்தையும். கொண்டு - சுமந்துக்கொண்டு, பின்செல்வார் - "த்ருத ஸ்ஸ்யநஶ்யாணிஸ்வகஞ்சனஜமாஸ" என்கிறகணக்கிலே பின்னேபோவார், மற்றில்லை - வேறொ ருவருமில்லை, தாமேஇவற்றையும் சுமந்துக்கொண்டுபோகாநிற்பரென்றபடி. தாளும் - திருவடிகளையும், தோ ளும் - புஜங்களையும், இதுக்குக்காணேனென்கிறத்தோடே அன்வயம், கைகளையார - என்னுடையகைகள் த்ரு ப்திகளாம்படி, கைகளையென்கிறவிடத்திலே ஏகாரமத்யமாய் வாக்யாலங்காரமாயிருக்கிறது. ஆருகை- த்ரு ப்தமாகை, அவனைப்பிரிந்துவிடாய்த்திருக்கிற வென்கைகள் விடாயெல்லாந்தீரும்படியென்கை. தொழ - வெ ளிக்கைக்கு, காணேன் - என்கண்ணாலே காணப்பெறுகிறிலேன், அந்த வாளையும்வில்லையும் நான்சுமந்து கொண்டு ".ஶத்ருநாஶமஹாதிநம்" என்னும்படி அதிரமணீய ஸ்ருங்காரமான திருவடிகளையும் "ஆஜாநுபாஹுஸம்ஶ்ருதா" என்னும்படி ஆஶ்ரிதர்க்கவலம்பங்களாய் ஸவிஸ்மயஸ்வபாவங்களாய் நடை,

மூ—நாளுநாளுநாடுவனடியேன்ஞாலத்தே* ॥௩॥

ஞாலம்போனகம்பற்றி யோர்முற்றாவுருவாகி* யாலம்பேரிலை யன்னவசஞ்செய்யுமம்மானே* காலம்போவ

ஆ— கழலையும் திருத்தோள்களையும் என்னுடைய கைகளினுடையவிடாய்தீரும்படி தொழக்காணப்பெறுகிறிலேன், ‘‘காங்க்ஷாம்யேஷ்வியஜநெவிஷ்ணுஸ்வாமிநெவகந்ராவிஜஸ்ரவஸீதா’’ என்றபிராட்டியைப்போலே அவனைக் காணவேணுமென்றாசைப்பட்டு நாளும்நாளுமிந்த ஶோகமாகிறகாட்டிலே தனியேகிடந்து கூப்பிடாநின்றேனென்கிறார், ॥௩॥

(ஞாலம்) ஓர்முற்றாவுருவாய் அந்தப்பிள்ளைத்தனத்தாலே ஸர்வலோகங்களையுமமுதுசெய்து பெரியவெள்ளத்திலே சிறியதோராலிலையிலே யஶோதைப்பிராட்டியைப்போலே அவனைக்காணவேணுமென்றாசைப்பட்டிருப்பாளொரு தாயாருமன்றியே தனியே கண்வளர்ந்தருளுகிற ஶைஶவத்தில் துணையாயிருக்கப்பெறுமை

இ—(காங்க்ஷாமிதீத்யாதி) என்றபிராட்டியைப்போலேயென்றது- சொல்லப்பட்டபிராட்டியைப்போலேயென்றபடி.॥

✳நாலாம்பாட்டு.✳

ஞாலம்போனகம்பற்றியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அந்தப்பிள்ளையித்யாதியால்) பிள்ளைத்தனம்- ஶிஶுத்வம், ஶிஶுவானதுதனக்கு ஸாத்யாஸாத்யங்களை நிரூபிக்கவறியாதே தன்னெதிரேகிடந்ததெல்லாவற்றையும் விழுங்கிவைக்குமிறே! வ்யதிரேகத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பெரியவெள்ளத்திலேயித்யாதி பெறுமையாலுமென்னுமளவாலே) அதில் யஶோதையித்யாதி கடாக்ஷவிஷயம், இத்

மா—யிலேவீசுகிற திருத்தோள்களையும் ஸாக்ஷாத்காரித்துப் ஸேவித்துக்கொண்டு பின்செல்லவேணுமென்று நினைத்தால் அவற்றைக்காணப்பெறுகிறிலேனென்றுகருத்து. அடியேன் - ஶேஷத்வமேஸ்வரூபமானநான், நாளும் நாளும் - தினம்தினமும், ஞாலத்தே - ஸ்ருஷ்டியிலே, இந்த ஸம்ஸாரகாந்தாரத்திலேயென்றபடி. நாடுவன் - தேடாநிற்பன். ॥௩॥

ஓர்- அத்விதீயமான, முற்றா- முற்றாததான, பாலாவஸ்த்தமான என்றபடி. உருவாய்- ரூபத்தையுடையவனாய், இவ்வளவென்று நிர்ணயிக்கவொண்ணாதபடி அதிஸூக்ஷ்மத்வத்தையுடைத்தான விக்ரஹத்தையுடையவனாயென்றபடி. ப்ரளயகாலத்திலே அகடிதகடநாஸாமர்த்யத்தாலே அகிலஜகத்தை யுதரத்திலேவைத்துக்கொண்டு நீ கிடந்தமையை நினைத்தால் நானெங்ஙனே பொறுத்திருக்கும்படி யென்று கருத்து. அவனுடைய அகடிதகடநா ஸாமர்த்யம்போதிவருக்குத் தோற்றுகிறதில்லை, அந்த ஶிஶுத்வ ஸௌகுமார்யமேயாயிற்று இவர் நெஞ்சிலேயுரைப்பது, அத்தாலே இப்படியஞ்சுகிறார். ஞாலம்போனகம்பற்றி- ஸ்ருஷ்டியை போஜநமாக ஸ்வீகரித்து, போனகம்- போஜநம், கீழ்ச்சொன்னவிவ்வளவேயோவெனக்கு ஸம்பந்தம், என்னையும் ஸாத்யமாதென்னும்படி. அதிஶைஶவத்தை யுடையவனான நீ அந்த ஶைஶவத்தாலேயிது ஸாத்யமாதென்றறியாதே ஸ்ருஷ்டிப்பரப்பையெல்லாமெடுத்து விழுங்கிவைத்தாய், உனக்கென்ன தீங்குவருகிறதோவென்று மிகவுமஞ்சாநின்றேனென்றுகருத்து. இத்தனையுமானாலுமொரு தொட்டிலிலேதான் கிடக்கப் பற்றாதோவென்கிறார் மேல், ஆலம்பேரிலை- ஆலமரத்தினுடைய பேர்ஶாகமானவிலையிலே, இலையென்று பேர்மாத்ரமாயிருக்கிறதத்தனையல்லது ஸாக்ஷாத் இலை யன்றென்றபடி. இலை என்று சொல்லப்போராதபடி அத்யல்பமான வடபத்ரத்திலே என்கை. ‘‘வடவடஸ்ய ஶிஶோஶ்ஶயநே ஶயாநம் பாலம்முகுந்தம் ஶிரஸா நமாமி’’ என்னக்கடவதிறே! ஒருதொட்டில்தானில்லையாயிற்று, இவ்வாலிலையு மித்தனை சிறியதாகவேணுமோ என்வயிறெரிகைக்கு என்றுகருத்து. அன்னவசம் செய்யும்- உதாஸீநஸ்தையிருக்குமவனான, அன்னவசஞ்செய்கையாவது:— ஸாத்விகமான ஸுகம்வஶமாம்படி படுக்கையிலே இடமும் வலமுமாக மாறிமாறிப் புரளுகை. ஶைஶவத்தாலே அதிவாத்ஸல்யமுடையனாய் யஶோதைப்பிராட்டி யிட்ட தொட்டிலிலே செய்யும் சேஷ்டையெல்லாமிதிலே செய்யுமவனானவென்றபடி. கீழ்ப்ரளயார்ணவமாய் அதின்மேல் ஒரு தொட்டிலுமின்றியே ஆலிலையுமித்தனை சிறியதானால் அகிலஜகத்காரணபூதனான நீ அதில்கிடந்த விடத்திலேயாகிலும் கிடக்கலாகாதோ! இங்ஙனே துருதுருகையாகப்படவேணுமோபிரானே, ஐயோ! இந்த ப்ரளயத்துக்கு நானென்னசெய்வேனென்று மோஹமயாகுலராய் விஷாதிக்கிறார். அம்மானே- எனக்குஸ்வாமியாயிருக்கிறவனே, நான் ஸர்வப்ரகாரத்தாலும் கிம்கரிக்க

மூ—ஓர்கூரிருளூழியொத்துளதாலுன்* கோலங்காரெழில்காணலுற்றாழுங்கொடியேற்கே* ॥௪॥
கொடியார்மாடக்கோளூரகத்தும்புளிங்குடிபு* மடியாதின்னேநீதுயின்மேவிமகிழ்ந்ததுதான்* அடியாரல்லற்
விர்த்தவசைவோவன்றேலிப்* படிதானீண்டுதாவியவசைவோபணியாயே* ॥௫॥

ஆ—யாலும் உன்வடிவழகைக்காண வாசைப்பட்டுப்பெருமையாலும் அஸஹ்யமான து:க்கார்ணவத்திலே நிமக்நனாய்க்கிடக்கிற வெனக்கொருக்ஷணமானது கல்பஸஹஸ்ரமான ராத்ரியாமமாய்ச்செல்லுகிறதென்கிறார். ॥௪॥

(கொடியார்) அந்தவிழவுதீரவேணுமென்று ஆஸ்ரிதர்க்கு ஆஸ்ரயணம்பண்ணுகைக்குக் கொடிகட்டிக் கொண்டிருக்கிற திருக்கோளூரிலுந் திருப்புளிங்குடியிலும் போய்ப்புக்கவிடத்திலே தம்மைத்திருக்கண்ணாலேபார்த்தருளுதல், ஒருவார்த்தையருளிச்செய்தல், ஒருதிவ்யசேஷ்டிதத்தைப்பண்ணுதல் செய்தருளாதே யொருபடியே கண்வளர்க்கண்டவாறே நீயொருபடியே கண்வளர்ந்தருளுகிறது ஆஸ்ரிதவிரோதிநிரஸநஜநித

இ—தாலவனுக்குக் கீழ்ப்பாட்டிற்சொன்ன தனிமையைக்காட்டில் அஸஹ்யமானதனிமையைநினைத்து விஷண்ணராகிறாரென்று ஸங்கதிஸித்திசெய்தாயிற்று. கோலங்காரெழில்காணலுற்றுஎன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்வடிவித்யாதியால்) ஆழும்கொடியேற்கென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அஸஹ்யமான வித்யாதியால்) த்ருதீயபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஒருக்ஷணமித்யாதியால்) ராத்ரியாமமா யென்றது- திவாவின்றியே கேவலராத்ரிரூபமான யாமமாயென்றபடி. ॥௪॥

✳ஐந்தாம்பாட்டு.✳

அவனுடையதனிமையைநினைத்து விஷண்ணராகிற விப்ரகாரத்திலே அநந்யப்ரயோஜநஸாத்யமான திருக்கோளூர்முதலான திவ்யதேசங்களிலே கண்வளர்ந்தருளுகிறபடியை யநுஸந்திக்கை யஸம்பந்தமன்றோவென்னவவதரிப்பிக்கிறார் (அந்தவிழவுதீரவித்யாதியால்) இங்குஇழவானது தாமவனுக்குத் துணையாயிராமையாலும் அவனழகைக்காணப்பெறுமையாலுமுண்டான தம்முடையது:க்கம், தீரவேணுமென்றுஎன்கிறதற்கு புக்கவிடத்திலே யென்கிறத்தோடே யந்வயம். த்விதீயபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நீயொருபடியே

ஈ—வேண்டும்படி ஸஞ்சரியாயிருக்கிற உனக்கித்தனிமையிலே துணையாயிருக்கப் பெற்றிலேனென்றுகருத்து. காரெழில்- நீலகாந்தியையுடைத்தான, எழில்- காந்தி, நின்கோலம்- உன்னுடைய வழகிய விக்ரஹத்தை, காணல்- காண்கையை, உற்று- ஸங்கல்பித்து, ஆசைப்பட்டு என்றபடி. ஆழும்- ஆழாநிற்கிற, து:க்க ஸாகரத்திலே மக்நனாகாநிற்கிறவென்றபடி. கொடியேற்கு- மஹாபாபியானவெனக்கு, அதீதமான ஸுகங்களை நினைத்திப்போது வீதனுபிந்த ஸ்பத்துக்கொரு பரிஹாரமும் காணாதே இது நித்யமாக அநுபவிக்கும்படியான மஹாபாபத்தைப் பண்ணின வெனக்கு என்றபடி. காலம்போவது- ஒருக்ஷணம்போகிறது, ஒருக்ஷணம் போய் த்விதீயக்ஷணம் வருகிற ஸந்தியென்றபடி. ஓர்- அத்விதீயமான, கூரிருளூழி- மஹாந்தகார அயமான கல்பத்துக்கு, ஊழி- கல்பம், ஒத்து- ஸத்ருசமாய், உளது- இராநிற்கிறது. ॥௪॥

ஈ— அத்தாளிணைகள்- அந்த வரணபாரமுமானது, அ என்று அழகியதாகவுமாம், இணைகளென்று வாஞ்சாபாரஸ்பரமாவநம் தலைமேல்- என்தலைமேலே, ஸ்வஜீவாதுயவத்தாலே தலையிலிராநின்றதென்று ஸமிக்கும், 'நின்செம்மாபாதபற்புத்தலைச்சேர்த்'தென்றும், "பாதபங்கயமே தலைக்கணியா"யென்றும், நான் ப்ரார்த்தித்தபடியே தன்னுடையவழகிய பாதபங்களாலே என்தலையை அலங்கரித்தருளினானென்று கருத்து. தாமரைக்கண்- அத்தால்வந்தவுகப்புத்தன்னதாகையாலே விகஸிதஸாரஸிஜ விக்ஷவிலோசநனான, என்னம்மான்- அக்கண்ணழகாலேயென்னை வசீகரித்தெனக்கு ஸ்வாமியானவன், என்னெஞ்சத்து- என்நெஞ்சிலே, எப்பொழுதும்- ஸர்வகாலமும், நிலைபேரான்- ஸ்திதியை யொழியான், என்னெஞ்சில்தான் நின்றநிலையையொருக்காலும் விடுகிறானில்லையென்றபடி. அநேகம்பெண்களுக்காக ஸஹஸ்ரமநேகம் வடிவுகொண்டாப்போலே என்னுடைய ஜ்ஞாநப்ரவ்ருத்திகளான வநேகாவயவங்களுக்காகத்தானுமநேகம் வடிவுகொண்டானென்று கருத்து. எம்பெருமான்- என்னெஞ்சிலிருக்கப்பெற்றபெருமையாலே ஸர்வாதிகனான, இது மருப்பொசித்தானுக்கு விசேஷணம். மலைமாடத்து- பர்வதம்போலே உத்துங்கமான கோயில், மாடம்- ப்ராஸாதம், இங்கு கோயில விவக்ஷிதம். அரவணைமேல- ஸ்ரீசேஷசயநத்தின்மேலே, அரவு- ஸர்ப்பம், வாட்டாற்றான்- திருவாட்டாற்றிலேயிருக்கிறவனான, உத்துங்கமான கோயிலில் சேஷசயநத்தின்மேலே, திருவாட்டாற்றிலிருக்கிறவனென்பது- திருவாட்டாற்றில கோயிலிலே திருவனந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிறவனானவென்றபடி. அவ்வூரிறகாட்டிலும் கோயிலழகும் விஞ்சியிருக்கிறதென்று வ்யஞ்ஜிப்பிக்கைக்காக மலைமாடத்து ஐத்யாதியாலே ஊருக்குமுன்னே கோயிலையும் திருவனந்தாழ்வானையும் நிர்தேசித்தது, மதமிக்க- உந்மத்தப்ரவ்ருத்தமாயிருக்கிற, கொலையானை- ஸம்ஹாரோத்யுக்தமான கஜத்தினுடைய, கொலை- ஸம்ஹாரம், யானை- கஜம், பாகவாயிர்வசஸ்ஸு. கம்ஸப்ரேரிதத்தினுடையவென்றபடி. மருப்பு- தந்தங்களை, ஒசித்தான்- முறித்தவனுடைய, குவலயாபீடத்தை ஸம்ஹரித்தாப்போலே என்னுடைய ப்ரதிபந்தகங்களையெல்லாம் நசிப்பித்தவனுடையவென்று கருத்து. குரைகழல்கள், ரஜ்ஜீராத்யாபரணங்களாலே த்வநிக்கிறதிருவடிகளை, குரையென்று த்வநிக்குமதுக்குப்பேர், ஆபரணத்வநிகள் தமக்குப்போது செவிப்படுகையாலே யருளிச்செய்தபடி. குறுகினம்- கிட்டப்பெற்றோம், 'தடந்தாமரைகட்கே கூவிக்கொள்ளுங்காலமின்னங்குறுகாதோ' என்று ப்ரார்த்தித்தபடியே பெற்றோமென்றுகருத்து. [௬]

குரைகழல்கள்- சிறுசதங்கைகளாலும் கடகநூபுராதி ஆபூஷணங்களாலும் த்வநிப்பிக்கிறவன் திருவடிகளை, குறுகினம்- கிட்டிவிட்டோம், ப்ரத்யக்ஷமாகத்தை ஸவிஷ்யஸாமீப்யத்தாலே ஸம்பாவித்துச்சொல்லுகிறேனல்லேன், ஸத்யமானவர்த்தத்தையே சொல்லுகிறேனென்று கருத்து. இது கீழ்ப்பாட்டிற்சொன்னத்தையே யிப்பாட்டிலநுவதித்ததற்கு ப்ரயோஜநம், நங்கோவிந்தன்- நம்முடைய சௌலப்யனானவன், ஆஸ்ரிதர்க்கு ஸுலபமாக ப்ரவஸிப்பனான க்ருஷ்ணனென்றபடி. குடிகொண்டான்- தனக்கு ஸகல ஸாம்ராஜ்யமாக ஸ்வீகரித்தருளினான், என்னெஞ்சைஎ த்விசேஷ்ம். குடியென்று ஸகலபோகமாக வஸிக்கும் ஸ்தாநத்துக்குப்பேர். தானுமாத்மன்றிக்கே தன்னுடைய ஜீவிதபரிஜந பரிச்சதாதிகளுடை

மூ— திரைகுழுவுகடல்புடைசூழ்தென்னாட்டுத்திலதமன்ன* வரைகுழுவுமணிமாடவாட்டாற்றான்மலரடிமேல்*
விரைகுழுவுநறுந்துளபமெய்ந்நின்றுகமழுமே* ௭
மெய்ந்நின்றுகமழ்துளபவிரையேறுதிருமுடியன்* கைந்நின்றசக்கரத்தன்கருதுமிடம்பொருதுபுனல்*

ஆ—(குரைகழல்கள்) இப்படி நெஞ்சே நாம் குரைகழல்கள் குறுகினம் நங்கோவிந்தன் ஸ்வப்ரகாஶமாக வந்தென்னுள்ளே புகுந்தருளினான், இதுக்கடையாளமென்னென்னில்? வாட்டாற்றான் திருவடிகள் திருத்துழாய் என்னுடம்பெல்லாம் கமழ்கிறபடி பாராயென்கிறார். ௭

(மெய்ந்நின்று) திருத்துழாய்த்தடக்கமாக வபயலக்ஷணவிக்ரஹங்களையுடையவனுக்ஸ்வஸ்தானவியாயிஸ்வரூபவ

✳ ஏழாம்பாட்டு. ✳

இ— குடிகொண்டானென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்வப்ரகாஶமித்யாதியால்) அவனே ஸ்வப்ரகாஶனாகவந்து தம்நெஞ்சிலே புகுந்திருக்கச்செய்தே ஸ்வாரஸ்யஸ்பர்ஶ தாஸ்யவிஶேஷணம் தமக்கொருவாஸ்யமல்லாமையாலென்றுந் துளவமித்யாதியாலே யத்தை யொருபாஸமாகச்சொல்லுகை யஸங்கதமன்றோவென்ன வவதரிப்பிக்கிறார் (இதுக்கடையாளமென்னென்னிலென்று) தாளிணையென்தலைமேலேயித்யாதியாலே சொன்னவிவையெல்லாம் மானஸிகமாவதாவிஶேஷமாத்ரமன்றோ அவனும்முடையவுடம்பிலே ஸந்நிஹிதனானென்னக்கூடுமோவென்று ஶங்காத்ரயத்துக்கு அபிப்ராயம், இத்தால் கீழ்ச்சொன்ன பாவங்களையெல்லாம் ஸ்வப்நஸித்தானந்தப்ரமேந ப்ரீகரித்துக்கொண்டநுபவிக்கிறாரிப்பாட்டிலென்று ஸங்கதிஸூசிதமாயிற்று. இங்கு மானஸமாவமாத்ரமன்றிக்கே பாவநாப்ரஸஞ்ஞனவனுடைய திவ்யமங்கலவிக்ரஹ மாழ்வார்திருமேனியிலேவந்து ஸந்நிஹிதமாயிருக்குமென்றும் இப்படி ஸந்நிஹிதமானாலும் அது வக்ஷ்யமாணாதிஶாவமன்றிக்கே யொமப்ரத்யக்ஷவிஷயமாயே யிருக்குமென்றும் திருவுள்ளம். ஆனாலும் பரிமளாதிகதிவ்யவிஹாமாத்ரம் பாஹ்யப்ரத்யக்ஷவிஷயமாகக் குறையில்லையிறே. ஶேஷம் ஸ்பஷ்டம். ௭

✳ எட்டாம்பாட்டு. ✳

ப்ரஶ்னோத்தரத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருத்துழாயித்யாதியால்) கருதுமிடம்பொருது கைநின்றசக்கரத்தனென்று கமயித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்வஹஸ்தித்யாதியால்) புனலித்யாதிக்குத்

ஶ— ந்யாயாதிகளோடே வந்து என்னெஞ்சிலே நிலைநின்றருளினானென்றபடி. திரைகுழுவு- தரங்கபங்க்திகளையுடைத்தான, திரை- தரங்கம், குழுவு- பங்க்தி, திரைகுழுவு கடலென்று ஶாகவாயிவகஸ்ஸோஸ:, ஶுக்லாஸ்யாத ஸமுத்ரஹஷ்டராவதம்போலே பஹுதரங்கமாலியான வென்றபடி. கடல்- ஸமுத்ரத்தாலே, புடை- பார்ஶ்வங்களிலே, சூழ்- பரிவ்ருதமான, இது வாட்டாத்துக்கு விஶேஷணம். தென்னாட்டுத்திலதமன்ன- தக்ஷிணதேஶத்துக்கு திலகம்போலேயிருக்கிற, அன்ன என்று உபமாவாசகம். வரைகுழுவுமணிமாட- கநககிரிபங்க்திபோலிருக்கிற மணிபவநங்களையுடைத்தான, வாட்டாற்றான்- திருவாட்டாற்றிலே யெழுந்தருளியிருக்கிற ஸர்வேஶ்வரனுடைய, மலரடிமேல்- பத்மஸத்ருஶங்களான திருவடிகள்மேலே, விரைகுழுவுநறுந்துளபம்- பரிமளம் ஸமுஹீபூதமாய் பரிமளிக்கிற திருத்துழாயானது, விரையென்று பரிமளம், சரணகமலஸம்ஸர்க்கத்தாலே யதிஶயிதபரிமளமாய்க்கொண்டு பரிமளிக்கிற திருத்துழாயானதென்றபடி. மெய்- என்ஶரீரத்திலே, மெய்யென்று ஶரீரம், நின்றுகமழும்- ஸ்திரமாகநின்று பரிமளியாநின்றது, ஆதலால் அவன் ஶரீரத்திலே ஸந்நிஹிதனென்றுமிடத்தில் ஸம்ஶயமில்லையென்றுகருத்து. ௭

மெய்- திருமேனியிலே, நின்றுகமழ்- ஸ்திரமாய்நின்று பரிமளியாநிற்கிற, துளபவிரை- தாஸீ பரிமளமானது, ஏறுதிருமுடியன்- ஏறுகிற்கிற திருமுடியையுடையவனான, ஸம்ஸர்க்கத்தாலே திருத்துழாய்க்குங்கூட பரிமளாதிஶயித்துவருகிற திருவபிஷேகத்தை யுடையவனானவென்று பாவம். கருதுமிடம்- தான்நினைக்கிறவிடத்திலே, பொருது- யுத்தம்பண்ணி, தான்நினைத்து ப்ரேரிதவிடத்திலே போய் ஶத்ருக்களை த்வஸ்தாக்கியென்றபடி. கைநின்ற- 'ஸ்தரணீம்வாநராவிஶத' என்னுமாப்போலே மீண்டு திருக்கையிலேவந்துநின்றதான, ஸ்வஸங்கல்பாநுவியாயியானவென்று தாத்பர்யம், சக்கரத்தன்- சக்ரத்தையுடையவனான, புனல்- ஜலமென்ன, மைநின்றவரை- நெருப்பும் ஸ்திரமாய்நின்ற பர்வதமென்ன,

மூ— மைநின்றவரைபோலுந்திருவுருவவாட்டாற்றாற்* கென்னன்றிசெய்தேனாவென்னெஞ்சிற்றிகழ்வதுவே*॥
திகழ்கின்றதிருமார்பிற் றிருமங்கைதன்னோடும்* திகழ்கின்றதிருமாலார்சேர்விடந்தண்வாட்டாறு* புகழ்கின்ற

ஆ— ஸ்ரீவத்ஸவக்ஷஸ் திவ்யரூபயோவை தனைப் நிரவதிகஸௌந்தர்யவிசிஷ்டனாயிருந்த வாட்டாற்றார்க்கு நானென்ன வநாதிகாலம் அநுவ்ருத்திபண்ணினேனாகக்கொண்டு தானென்னுள்ளேபுகுந்து திகழ்கிறதென்கிறார். ॥அ॥

(திகழ்கின்ற) தனக்கு திவ்யமஹிஷீ ஸகலலோகேஶ்வரியான பெரியபிராட்டி, சேர்விடந்திருவாட்டாறு, தன்திருவடிகளில் செங்கமலபொற்கோலத்திருவுமே புகழாகவுடையனாயிருந்த பெரியதிருவடி தனக்கு திவ்யவாஹநமும் ஆஶ்ரிதவிரோதிநிரஸநவகரணமும், இங்ஙனேயிருந்துவைத் தென்னுடைய நிகஷைத்

இ— தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிரவதிகேத்யாதியால்) பூர்வபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நானென்னவித்யாதியால்) பண்ணினேனாகக்கொண்டு என்றது- பண்ணினேனாக ஆஶ்ரயித்துஎன்றபடி. நான்பண்ணினதாகவோர் அநாதிகாலாநுவ்ருத்தியையுங் காணேனென்றபடி. இத்தால் கீழ்த்தம்முடைய ஸம்ருத்திகளைச் சொல்லியிருந்தவ ரிப்பாட்டிலே யவற்றுக்கடியான ஹேதுவென்பக்கல் காணேனென்றுகொண்டு அவற்றினுடைய நிரதிஶயஸ்வாபாவ்யதையை யநுபவிக்கிறாரென்று ஸங்கதியும்ஸூசிதை. ॥அ॥

✳ ஒன்பதாம்பாட்டு. ✳

ப்ரதமபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தனக்கித்யாதியால்) புகழ்கின்றபுள்ளூர்தி என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தன்திருவடிகளித்யாதியால்) போரரக்கர்குலங்கெடுத்தானென்கிறதற்குப் புள்ளூர்திஎன்கிறத்தோடு ஸாஹசர்யத்தால் ஸித்திக்கிறவர்த்தத்தை யருளிச்செய்கிறார் (ஆஶ்ரிதவிரோதீத்யாதியால்) இகழ்வின்றியென்கிறதற்கு இப்பாதத்வயத்தோடு ஸாஹசர்யத்தால் ஸித்தவர்த்தத்தை யருளிச்செய்கிறார் (இங்ஙனேயிருந்துவைத்தித்யாதியால்) இத்தால் கீழ்ப்பாட்டிலே என்பக்கல் காரணமுண்டாகவின்றியே யிருக்கச்செய்தே யெனக்கு மஹாஸம்ருத்தியையுண்டாக்கினானென்று ஸூசிதனவ ரிப்பாட்டிலே தனக்கு நிரதிஶயகல்யாணங்களான வஸித்தங்களிருக்கச்செய்தே யதிஹேயனானவென்

ப— ஸ்ரீரமேஶ்வரியான வஸ்தமென்றபடி. போலும்- ஸத்ருஶமாகாநின்றுள்ள. நீலாம்புதமணிவர்ணமென்ன, ஐந்த்ரநீலமணிவர்ணமென்ன, இவைகளுக்கு ஸத்ருஶமாகாநின்றுள்ள என்று வடிவம், திருவுருவு- திவ்யரூபத்தையுடையவனான, வாட்டாற்றார்க்கு- திருவாட்டாற்றிலேயிருக்கிற வெம்பெருமானுக்கு, என்னன்றிசெய்தேனா- என்னநன்மைசெய்தேனாக, என்னவாநுகூல்யாவரணம் பண்ணினேனாக, பெரியவுடையாரைப்போலே ப்ராணவ்யயமாக வடிமைசெய்தேனாகவோ சிறுத்திருவடியைப்போலே 'த்ருஷ்டா ஸீதா' வென்று வந்தேனாகவோ என்றுகருத்து. என்னெஞ்சிற்றிகழ்வது- என்னுடைய நெஞ்சிலேதான் வந்துவிளங்குகிறது, திகழ்கை- விளங்குகை, இப்படி என்னெஞ்சிலேதான் வந்துவிளங்குகைக்கடியாகவாக நான்தனக்குப்பண்ணின வாநுகூல்யாவரணம் ஒன்றுங்காணேனென்றபடி. ॥அ॥

திகழ்கின்ற- ஸாமாவிகஸௌந்தர்யத்தாலே விளங்காநின்றுள்ள, திருமார்பில்- வக்ஷஸ்ஸ்தலத்தில், திருமங்கைதன்னோடும்- ஶ்ரீயென்கிற யுவதியோடேயுங்கூட, மங்கை- யுவதி, தன்னென்றுஸாயிக்கம், திகழ்கின்ற- விளங்காநிற்கிறவனான, திருமங்கைதன்னோடுமென்கிறவிடத்தில் உபமாநத்தால் 'சகிரேவாவசாஹமனே நாவி ஶ்ரேயஸே நகாமுகாஸதே' என்கிறகணக்கிலே ஸஹஸௌந்தர்யலக்ஷணீயனாயிருக்கிறவன் லக்ஷ்மீஸாஹித்யத்தாலும் விளங்காநிற்கிறானென்றுகருத்து. திருமாலார்- லக்ஷ்மீவிஷயத்தில் வ்யாமோஹனான ஸர்வேஶ்வரன், மாலென்றுவ்யாமோஹன், சேர்விடம்- சேர்ந்திருக்கிறஸ்தலம், நித்யவாஸம்பண்ணுகிற ஸ்தலமென்றபடி. தண்வாட்டாறு- ஶீதளமான திருவாட்டாறு, சுதிரஜணீயமான திருவாட்டாறென்றபடி. சேர்விடமாவது தண்வாட்டாறுஎன்று காரகக்ரியாஸமாக விங்கு வாக்யஸமாஸமாகிறது, லக்ஷ்மீஸாஹித்யஸம்பந்நனானவனுக்கு நித்யவாஸம்பண்ணும்படி விமானயோக்யமாயிருக்கிறது திருவாட்டாறென்கையாலே லக்ஷ்மீவதியத்தோடு ஸமாநவாஸஸ்தானமாயிருக்கிறது அவனுக்குத் திருவாட்டாற்றிலிருப்புமென்று கருத்து. இப்படி காரகக்ரியாஸமாஸமாக ஸ்வாஸ்வாதகமான விப்வாஸவைபவ ஶஹிஷ்ணுத்வமாயிப்படி தனக்கு கல்யாணகுணவிஸித்தங்களிருக்கச்செய்தே ஹேயனானவென்னெஞ்சிலே ரஸிகாநின்றானென் றுந்தாத்பர்யத்தோடு ஸூசிக்கிறது, புகழ்கின்ற- கீர்த்திகளெல்லாம் தன்னிடத்திலே நின்றிருக்கிறவனான 'ஶ்ரீவஸுவாவாஹந'

மூ—புள்ளூர்திப் போரரக்கர் குலங்கெடுத்தான்* இகழ்வின்றி யென்னெஞ்சத் தெப்பொழுதும் பிரியானே* ॥௯॥
பிரியாதாட்செய்யென்று பிறப்பறுத் தாளறக்கொண்டான்* அரியாகி யிரணியனை யாகங்கீண்டானன்று*

ஆ—த்தைப் பார்த்தென்னை யிகழாதே ஒருக்ஷணமும் என்னைப் பிரியில தரிக்கமாட்டாத ஸ்வபாவத்தையுடையனும் க்கொண்டென்னெஞ்சுக்குள்ளே புகுந்தருளினான், ஒருவனுடைய பாக்யத்தை யிருக்கும்படியே யிது வென்கிறார். ॥௯॥

(பிரியாது) இனியொருக்காலமும் தன்னைப் பிரியாதே ஸர்வசேஷவ்ருத்தியையும் பண்ணென்றுகொண்டென்னை யநந்யார்ஹசேஷமாகக் கொண்டானின்று, அரியாகி யிரணியனை யாகங்கீண்டானன்று, பெரியார் தங்களை யாச்ரயித்தவர்களுடைய சிறுமையையும் கொடுக்கப்படுகிறபொருளின சீர்மையையும் பாராதே

இ—பக்கல் இத்தனை பரவசனாகின்றானென்று விஸ்மிதராகிறாரென்று ஸமதியும் ஸங்கதியே. இகழாதே என்றது - உபேக்ஷியாதே யென்றபடி. என்னெஞ்சத்தித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஒருக்ஷணமித்யாதியால்) ॥௯॥

❋ பத்தாம்பாட்டு ❋

ஆளறக்கொண்டானென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னையநந்யார்ஹசேஷ இத்யாதியால்) த்ருதீயபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பெரியாரித்யாதியால்) இத்தால் கீழ்ப்பாட்டிலே தனக்குப் பெரியபிராட்டியார் முதலான நிரதிசயகல்யாணகுணவிசிஷ்டர்களிருக்கச்செய்தே சக்திஹீனமானவென்னெஞ்சிலே பரவசனாகின்றானென்றுகொண்டு ஸௌசீல்யத்தைப்பேசி யநுஸந்தித்தவிப்பாட்டிலே 'ஸஹாத்தா ஸம்ப்ரதாய... நராவஸீதத்யதிபோதசா' என்று விரகாரமாக கூறித்தமாயிருந்த ஸஹா

ஸு—தி இத்யாதிகளிற்படியே லோகஸ்வேசாதிகளுக்கெல்லா மிருப்பிடமானவென்றபடி. புள்ளூர்தியை, ஸ்ரீவைநதேயனையென்றபடி. ஊர்தி ஊர்ப்பண்ணுமவனை, நடத்துமவனையென்றபடி. அவனை யிவ்வாஹநமாகவுடையவனான என்கை, போரரக்கர் - யுத்தோத்யுக்தரான ராக்ஷஸர்களுடைய, போர் - ப்ரதாநம், ப்ரகாசாயித்வலக்ஷணம் குலம் ஸமூஹத்தை, கெடுத்தான் - நசிப்பித்தவன், அந்த ஹ்ராஸ ஸாமர்த்யத்தைக் கொண்டு ஸ்வஸ்தமாக்கினவனென்றபடி. இகழ்வின்றி - உபேக்ஷையில்லாமல், இகழ்வு - உபேக்ஷை, என்னுடைய நிகர்ஷத்தைப்பார்த்து உபேக்ஷியாதானென்றபடி. எப்பொழுதும் - ஸர்வகாலமும், என்னெஞ்சத்து - என் ஹ்ருதயத்திலே, பிரியான் - விச்லேஷிக்கிறானில்லை. ॥௯॥

பிரியாது - இனியொருகாலமுமென்னைப்பிரியாமல், ஆட்செய்யென்று - எனக்கு சேஷவ்ருத்தி பண்ணென்றருளிச்செய்து, எனக்கே ஆட்செய்யென்றருளிச்செய்ய வேணுமென்று எம்மாவீட்டிலே நான் ப்ரார்த்தித்தபடியே செய்தருளினானென்று கருத்து. பிறப்பு - ஜந்மத்தை, ஸம்ஸாரத்தை யென்றபடி. அறுத்து - சேதித்து, என்பக்கல் ஸம்பந்தமில்லாதபடி பண்ணியென்றபடி. அற ஆளக்கொண்டான் - மிகவுமடிமைகொண்டான், அநந்யார்ஹசேஷமாக்கிக்கொண்டானென்றபடி. எனை அதிசேஷ:. "தனக்கேயாக வெனைக் கொள்ளு"மென்று எம்மாவீட்டில் நாம் ப்ரார்த்தித்தபடி தலைக்கட்டினானென்று கருத்து. அரியாகி - ஹரியாய், நரஸிம்ஹரூபனாயென்றபடி. இரணியனை - ஹிரண்யனை, ஆகங்கீண்டான் - தேஹத்தைப்பிளந்தான், ஆகம் - தேஹம், கீண்டானென்றது நகங்களாலே பிளந்தானென்றபடி. அன்று - அவதாரகாலத்திலே, அன்றென்றிங்கு சொல்லுகையாலே ஆளறக்கொண்டானென்கிறவிடத்திலே இன்றென்றொருபதம் அத்யாஹார்யம், இன்றைக்கு என்னை அநந்யார்ஹசேஷமாக்கிக்கொண்டருளினான், அன்றைக்கு ஹிரண்யனைப்பிளந்தருளினான் இப்படி ஸர்வகாலத்திலும் எனக்குபகாரங்களை யுண்டாக்கினானென்று வாக்யதாத்பர்யம், இன்றைக்கென்னை சேஷமாகக்கொண்டருளினான் அன்றைக்கு ஹிரண்யனை ஸம்ஹரித்தருளினானென்கிற இவ்வநுவ்ருத்தியாலே ஹிரண்யஸம்ஹாரமும் தமக்காகச்செய்தருளினதென்று நினைத்தபடி தோற்றுகிறது, இவர் ஸாமாந்யஸம்பந்தியை ஸ்வஸம்பந்தியாயிருக்குமவராகையாலே ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்காகச்செய்ததே தமக்குச்செய்ததாகவிருக்கக் குறையில்லையிறே, இப்படி உபகாரகனாய், ஆதலால் வாட்டாற்றான்காட்டினானென்று உத்தரவாக்யத்தோடே யந்வயிக்கிறது.

மூ-பெரியார்க்காட்பட்டக்கால்பெறுதபயன்பெறுமாறு*வரிவாள்வாயரவணைமேலவாட்டாற்றான்காட்டினனே*
காட்டித்தன்கனைகழல்கள் கடுநரகம்புகலொழித்த* வாட்டாற்றெம்பெருமானைவளங்குருகூர்ச்சடகோபன்*
பாட்டாயதமிழ்மாலை யாயிரத்துளிப்பத்தும்* கேட்டாரார்வானவர்கள் செவிக்கினியசெஞ்சொல்லே*॥ ௧௧॥
ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ—பவர்களுக்கினியில்லையென்றுஞ் சிறியபேறுகளைக் கொடுப்பனென்னுமிடம் வரிவாள்வாயரவணைமேல்
வாட்டாற்றானென்பக்கலிலே காட்டியருளினனென்கிறார். ॥ ௰ ॥
(காட்டி) அபர்வருமமரர்களித்திருவாய்மொழியைக்கேட்டா லென்படுவாரோவென்கிறார். ॥ ௧௧ ॥
திருக்குருகைப்பிரான்பிள்ளான்திருவடிகளேசரணம்.

இ—ஸ்ரீதாக்களுடைய ஸ்வபாவஸேவாதிசயஸம்ஸ்லேஷாஹத்தாலே யெனக்கிப்போது ப்ரத்யக்ஷிதமாயிற்றென்று ஸ்ரீ
தராசாரென்று ஸமதியும் ஸந்நிவிதையாயிற்று. விரக்ஷேதரனுக்ஷமாயிருந்த ஸந்நிதாநம் ப்ரத்யக்ஷ
ஷிகளாலே ஆநந்தவாரநிதமாகுகை ஸ்வாவஸாநமாயிற்று. ॥ ௰ ॥

✳ நிகமனம். ✳

கலியவாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அபர்வருமித்யாதியால்) ॥ ௧௧ ॥

ஸ—பெரியார்க்கு- ஸ்ரீதாக்களுக்கு, ஆட்பட்டக்கால்- ஶேஷமாநிதரானால், பெறுதபயன்பெறுமாறு- ஊர்
ஜ்ஞாநமானஸுகத்தைப்பெறும்ப்ரகாரத்தை, ஸ்ரீதாக்களுக்கு அடிமைப்பட்டால் ஊர்ஜ்ஞாநமான ஸுகத்தை
யெல்லாம் பெறுவாரென்று ஶாஸ்த்ரங்களில் சொல்லுகிற வகைத்தையென்றபடி. இதற்குக் காட்டினனென்கி
றத்தோடே யந்வயம். வரிவாள்வாயரவணைமேல்- வரியையும் வாளையுமுடைத்தான நாமஸய நத்தின்மேலே,
வரி- ரேகை, வாள்- காந்தி, வரிவாள்வாயென்று அம்அஸாவமாய் இதுக்கு ஆரவுரைத்தோடே ஸா
கவாய்விவக்ஷேதரமாயிருக்கிறது, ஸர்வஜ்ஞத்வநாமமாகத் திருவுடலிலே ரமணீயரேகாஜ்வங்களை
யும் ஜ்யோதிஸ்ஸ்வாவிதாநக்ஷநீய ஸந்நிவேஸத்தையு முகங்களையுமுடைத்தான திருவனந்தாழ்வா
னாகிற ஶயநத்தின்மேலேயென்றபடி. வாட்டாற்றான்- திருவாட்டாற்றிலேயிருக்கிறவன், அரவணைமேலே
வாட்டாற்றிலேயிருக்கிறவனாவது- திருவாட்டாற்றிலே அரவணைமேலே கண்வளர்ந்தருளுகிறவனென்றபடி. கா
ட்டினன்- என்பக்கலிலே ப்ரத்யக்ஷமாக்கியருளினான், ॥ ௰ ॥

தன்கனைகழல்கள்- தன்னுடைய கனைக்கிறகழல்களை, கனைக்கை- த்வநிக்கை, கழல்- திருவடி, நூ
புராதிஸந்நிஷ்டமஶிஞ்ஜிகமாஞ்ஜிதமான தன் திருவடிகளை யென்றபடி. காட்டி- எனக்கு ஸாக்ஷாத்கரிப்பித்த
ருளி, கடுநரகம்- கடுநரகத்தை, விவேகிகளுக்கு ஸாதகமஹாவ்யாஜநமஸ்ஸ்வஸமமான ஸம்ஸாரமா
கிற நரகத்தையென்றபடி. புகல்- ப்ரவேஶிக்கையை, ஒழித்த- உபரதமாக்கினவனை, எனக்கு ஸம்ஸா
ரநிரயப்ரவேஶத்தை நிவர்த்திப்பித்தவனை யென்றபடி. வாட்டாற்றம்பெருமானை- திருவாட்டாற்றிலே
யெழுந்தருளியிருக்கிற ஸ்வாமியைக்குறித்து, இதுக்குப் பாட்டாயவென்கிறத்தோடே யந்வயம். வளங்குருகூர்-
அழகிய திருநகரியையுடையவரான, வளம்- அழகியது; திருநகரிக்கு நிவர்த்தகரானவென்றபடி.
சடகோபன்பாட்டாய- ஆழ்வாருடையபாட்டுக்களான, அவருடைய பகவத்விஷயஸ்ரீதிவரிஸமாய்க்கொ
ண்டு மாநஸாக்ஷமாயாநுபவங்களாய் 'வாசொஹமெயவுடியமம்' என்னும்படி யிருக்குமவையானவென்ற
படி. தமிழ்மாலை- த்ராவிடஸந்நிஸம்நாமஸந்தர்பமான, ஆயிரத்துள்- ஸஹஸ்ரத்துக்குள்ளே, செவிக்கினிய-
கர்ணாம்ருதங்களான, இனியது- ஸ்வாதுவானது, செஞ்சொல்- செவ்வியசொல்லான, ஸரணத்ருபமும் ஸா
காரவமாய்ச்சொன்னவையானவையாலே ஶுத்தவாக்யஸந்நிக்ஷிகளான என்றபடி. ஸாவதாரப்ரவாஹமான
என்கை, இப்பத்தும்- இந்தப்பத்துப்பாட்டுக்களையும், வானவர்கள்- நித்யஸூரிகள், கேட்டாரார்- கேட்டு
த்ருப்தராகார், இத்தையவர்கள் கேட்கத்தொடங்கின் னின்னஞ்சொல்லின்னஞ்சொல்லென்னே யிருப்பாரத்தனை-
யொழிய ஒருக்காலும் த்ருப்தராகாரென்றபடி. ॥ ௧௧ ॥

ஜ்ஞாநவைராக்யநிதயே ஶ்ரீமதே ஶடகோபாய நம: (?) ஶ்ரீவைஷ்ணவராமாநுஜதேஶிகாயநம:.

ஸ்ரீ:

த்ருதிமோவதிஷ்த்ராதபத்ரநாவளீ:

(அருள்பெறுவார்.)

சக்ரீ கேஶவ கீர்த்திரவதி ததா ஸ்ரீஶ நாராயணஶ்ச

ஸேநாநீஸ் ஸாரதீநாம் ஸுரபித துளஸீ ஸேவநீய ப்ரஸூநஶ் ।

கஞ்ஜாக்ஷோ கோவிந்த தஸாயஶ: ஸ்ரீவத்ஸாங்கஶாலீ

ஸ்ரீஶோ நத்யேஷு ஸம்ஶ்ரய விதரணே தீவ்ர நாராயணோஸ்தி ॥௧௦௯॥

(சக்ரீ) ஆழியானருள் தருவான் - திருவாழியைத் திருக்கையிலேயுடையனாகையாலும், (கேஶவ கீர்த்திரவதி) கேசவனெம்பெருமானை - விரோதிநிரஸநஶீலனாகையாலும், சப்தஸாம்யத்தாலே ஸாதிகஸம்ஸ்ருஷ்டம், (ததா ஸ்ரீஶ நாராயணஶ்ச) நண்ணினம் நாராயணனை - கீழ்ச்சொன்ன ஸாதிகத்துக்கு விவரணம், ஸ்ரீமானாய் ஸர்வாதாரனாய் ஸர்வநியந்தாவுமாகையாலும், (ஸேநாநீஸ் ஸாரதீநாம்) பாரதத்துப் பாண்டவர்க்காய்ப் படைதொட்டான் - பாரதயுத்தத்திலே ஆயுதமெடேனென்று ப்ரதிஜ்ஞை பண்ணினவன் ஆஶ்ரிதரான பாண்டவர்களிடத்தில் ஸ்நேஹத்தாலே ப்ரதிஜ்ஞையையழித்து ஆயுதமெடுக்கையாலும், (ஸுரபித துளஸீ ஸேவநீய ப்ரஸூநஶ்) தேனேறுமலர்த்துளவந்திகழ்பாதன் - ஸௌகந்த்யமுடையதான திருத்துழாய்மலராலே விளங்காநிற்கிற திருவடிகளையுடையவனாகையாலும், (கஞ்ஜாக்ஷ) தாமரைக்கண்ணனெம்மான் - ஸரஸிஜஸத்ருஶங்களான திருக்கண்மலரையுடையனாகையாலும், (கோவிந்த:) கோவிந்தன் குடிகொண்டான் - ஆஶ்ரிதவத்ஸலனாகையாலும், (ஸாயஶ:) துளப்விரையேறு திருமுடியன் - ஸுரபிததுளஸீதாமாலங்க்ருத திவ்யகிரீடத்தாலே ஸம்ஶ்ரிதமான வைலக்ஷண்யத்தையுடையனாகையாலும் (ஸ்ரீவத்ஸாங்கஶாலீ) திகழ்கின்றதிருமார்பில் திருமங்கைதன்னோடும் - பெரியபிராட்டியாரைத் திருமார்பிலேயுடையனாகையாலும், சப்தஸாம்யத்தாலே 'வரிவாள்வாயரவணைமேல்' என்று மேலிற்பாட்டிற்சொல்லுகிற ஶேஷஶாயித்வம் ஸம்க்ருஹிக்கப்படுகிறது, இப்படிகளாலே திருவாட்டாற்றெம்பெருமான் ஆஶ்ரிதர்க்கு ஸமாஶ்ரயணத்திலே மிகவும் த்வரையையுடையனாயிருக்கிறானென்று "அருள்பெறுவார்" என்கிற தஶகத்திலே ஆழ்வாராலே யறுதியிடப்பட்டதென்கிறார். ॥௧௦௯॥

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பத்தாம்பத்தில் ஆறாந்திருவாய்மொழி முற்றிற்று.

ஏழாந்திருவாய்மொழி.

ஆ— (செஞ்சொற்கவிகாள்) தான்சொன்னபடிசெய்யக்கடவனாகச் சமைந்துகொண்டு தம்முடைய திருவுள்

ஏழாந்திருவாய்மொழி.

இ— இப்படி ஸர்வேஶ்வரன் தமக்குத்திருநாட்டைத்தந்தருளுகையிலே ஶ்வரிதஹ்ருதயனாய்த் தமக்கு வாரிதந்தானாய்த் தம்முடைய வாஞ்சாவ்ருத்தீக்ஷணப்ராபிக்ரானென் றவனுடைய ஹைவிதாரணதீவ்ரஸ்தவநத்தை யநுஸந்தித்தவாழ்வார் தமக்கு விரகாங்க்ஷிதமாயிருந்த மோக்ஷஸாம்ராஜ்யத்தை யாத்ராக்ஷணத்திலே கைகொண்டவிரோதிநிரஸநத்திலே புறப்படுகை யாவிதமாயிருக்க வதுசெய்யாதே செஞ்சொற்கவிகாளித்யாதியாலே கவிகளைக்குறித்துச் சிலவாவஶ்யம்பண்ணுகை யஸம்தமன்றோவென்ன வவதரிப்பிக்கிறார் (தான்சொன்னபடியேபித்ராதியால்) சமைந்துகொண்டுஎன்றது - உரிவஶ்ஹ்ருதயனாய்க்கொண்டென்றபடி. தம்மோடுகலந்தகலவியாலேயென்றது - இவர்திருமுடியிலே தன்திருவடிகளைவைத்துத் திருவுள்ளத்திலே வாஞ்சையாகப்புகுந்திருந்து 'விரைகுழுவநறுந்துளபம்மெய்நின்றுகமழு' மென்னும்படி இவருடைய ஶரீரத்தோடு அந்த:கரணத்தோடு மற்றுமுள்ளவவயவங்களோடு வாசியற வத்யந்தாபிநிவிஷ்டனாய்க்கலந்த விலக்ஷணஸம்ஶ்லேஷத்தாலேயென்றபடி. ஸர்வேஶ்வரன்தனக்குச் விரகாங்க்ஷிதமான ஶரீரவைலக்ஷண்யத்தைத்

மூ—செஞ்சொற்கவிகாளுயிர்காத்தாட்செய்மின்

ஆ—ளத்திலே புகுந்தருளினவெம்பெருமான் தம்மோடுகலந்தகலவியாலே தமக்குப்பிறந்த நிரவதிகப்ரீத்யதி ஶயத்தாலே எம்பெருமானைக் கவிபாடுகிறவரைக்குறித்து நீங்களவனுக்கடிமைசெய்யுமிடத்தி லுங்களுயிரைக் காத்துக்கொண்டு அடிமைசெய்யுங்கோள், அவன் தனக்கடிமைசெய்வாரை யஸாத்ம்யமாம்படியதிமாத்ரஸம்ஶ்லே

இ—தருகையிலே ஸர்வேஶ்வரனைத் தனக்கு ஸஹ்யனுமாயிருந்தானேயாகிலு மிவ்வதிமாத்ரஸம்ஶ்லேஷஜநித நிரவதிகப்ரீதியாலே யிப்போது சிலவற்றைப்பேசியல்லது தரிக்கமாட்டாதவரா யிவ்வதிமாத்ரஸம்ஶ்லேஷ ப்ரகாரத்தை யெம்பெருமானுக்குக் கவிகளாயிருப்பாரைக்குறித்துப் பேசத்துடங்குகிறாரென்றுகருத்து. ஆறு இவ்வதிமாத்ரஸம்ஶ்லேஷாதிஶயத்தை வானேறவழிதந்தவித்ருத்தியாக மூன்றுபாட்டாலே கீழ்த்திருவாய்மொழியிலே பேசி யநுபவித்தாரேயென்னில்? அதிறநாட்டிலிதற்கு விஶேஷமுண்டு, எங்ஙனேயென்னில்? 'தாளிணையென் தலைமேலே' யென்றும், 'நிலைபேரானென்னெஞ்சத்தெப்பொழுதும்' என்றும், 'நறுந்துளவம்மெய்ந்நின்றுகமழு' மென்று, மவனுடைய திருமேனி தம்முடைய திருமுடியிலும் திருவுள்ளத்திலும் திருவுடம்பிலும் ஸம்ஶ்லிஷ்டமாயிருக்கப்பெற்றபடியை ஸாமாந்யமாகப்பேசி யநுபவித்தார்கீழ், இத்திருவாய்மொழியிலே 'என்னெஞ்சுமுயிருமவையுண்டு' என்றும் 'என்னை முற்றுமுயிருண்டென் மாயவாக்கையிதனுள்புகுந்து' என்றும் 'நன்கென்னுடலங்கைவிடா' னென்னுமிப்புடைகளிலே தம்முடைய வாத்மாவையும் நெஞ்சையும் திருமேனியையுமவன் ஜநநாதிஸம்பந்திரஹிதமான ஸம்யக்ஸம்ஶ்லேஷத்தைப்பெற்றாப்போலே ஸுகிஶ்வவனைப் மாஜஸம்ஶ்லிஷ்டனைக்கொண்டு யநுபவியாநின்றுமென்றிங்ஙனே யவனுடைய ஸாமக்ர்யைப்பேசி ப்ரீதராகிறாரென்றுகருத்து. இவரைத் திருநாட்டிலேகொண்டுபோகையிலே ஸர்வேஶ்வரனான வாஸுதேவனு க்கினிவர்பக்க லதிவ்யாமோஹத்தாலே யிவருடைய திருமேனியிலு மத்யந்தவ்யாமோஹம் பிறந்த வ்யாமோஹாதிஶயத்தாலே இவரையித்திருமேனியோடேகூடத் திருநாட்டிலே கொண்டுபோகையிலே மிகவு மபிநிவிஷ்டனாயிருக்கிறபடியை யறியிலிவரிசையாரென்று பார்த்திவரைக்கொண்டு திருவாய்மொழிபாடுவிப்பாரைப்போலே புகுந்திவர்திருமேனியிலே யத்யந்தாபிநிவிஷ்டனாய் அவன்படுகிறக்லேஶங்களைக்கண்டு இதென்னவாஶ்சர்யமென்றத்தை யவஶராய்ப்பேசி யநுபவிக்கிறாரென்று திருவுள்ளம், இத்தாலித்திருவாய்மொழிக்கு ஸஜாதீயாந்தரங்கப்ரீதிப்ரகாரமென்கிற ஸமஸ்தகல்யாணம் ப்ரதிவாத்யமென்றதாயிற்று. ப்ரீதிப்ரகர்ஷத்தாலே என்கிறதற்கும் குறித்து என்கிறதற்கும் உபவாக்யானத்தில் க்ரியையோடேயந்வயம்.

முதற்பாட்டு.

உயிர்காத்தாட்செய்மின் என்கிறவிடத்தில உயிர்காத்துஎன்கிற வம்ஶம்விஶேஷமென்றுகாட்டுகிறார் (நீங்கள் விதிதமாயால) மாமாயனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவன்தனக்கிதமாயால்) செய்வாரை யென்கிறதற்கு வாயிக்குமென்கிறத்தோடேயந்வயம், அவனுடைய வாஶ்ரிதவ்யாமோஹாதிஶய ஶோமாணத்

ஈ—செஞ்சொல்- செவ்வையான ஸூக்திகளையுடையவர்களான, ப்ரயோஜநாந்தராபிஸந்தியாகிற கள்ளமின்றிக்கே ஸுநந்த ப்ரயோஜநங்களான ஸமவிஷயஸூக்திகளை யுடையவர்களான என்றபடி. கவிகாள்?- எம்பெருமானுக்குக் கவிபாடுகிறவர்காள்? "மாயவனையல்லது வாழ்த்தா"தென்று ஸுநந்த்ப்ரயோஜநக விஶாரதிகரான முதலாழ்வார்களுளளிட்டாரை நினைத்தருளிச்செய்கிறபடி. உயிர்காத்து- உங்களாத்மாவைக் காத்துக்கொண்டு, ஆட்செய்மின்- கைங்கர்யம்பண்ணுங்கோள், இங்கு கைங்கர்யம்பண்ணுகையாவது- கவிபாடுகையைச்சொன்னபடி. உங்களாத்மஸ்வரூபம் மாறுபாடுடையதாய்ப்போகாதே ரக்ஷித்துக் கொண்டடிமைசெய்யுங்கோளென்றபடி அவனடிமைகொள்ளுவானைப்போலேவந்து ஸ்வரூபத்தையழித்துவிடும், அதாவது:— ஶேஷியைப்போலேவந்து தான் ஶேஷபூதனாய்நின்றுங்களைத்தனக்கு ஶேஷிகளாக்கி ஶேஷத்வைகரூபமாகிறவுங்களுடைய ஸ்வரூபத்தையிங்ஙனேயழித்துவிடும், அப்படியழிந்துபோகாதே யுங்களைரக்ஷித்துக்கொண்டு கவிபாடுங்கோளென்கை. அதாவது:—அவன் தன்னுடைய ஶீலாதிகுணங்களிலே யிழிவாரையாய்த்திங்ஙனே படுத்துவது, நீங்களிதிலேயிழியாதே அவனுடைய பரத்வத்தையே யனுஸந்தித்துப் போருங்கோளென்றபடி. யத்ர- உயிர்காத்தாட்செய்மின்- தன் ஶீலாதிகுணங்களை யநுஸந்திப்பார்பக்கலிலே யவனதிமாத்ர ஸம்ஶ்லேஷத்தைப்பண்ணித்தன்னுடைய ஶீலாதிகுணங்களையும் ஸத்ருஶமாக ப்ரகாஶிப்

மூ—திருமாலிருஞ்சோலை* வஞ்சக்கள்வன்மாமாயன் மாயக்கவியாய்வந்தென்* நெஞ்சுமுயிருமுள்கலந்து
நின்றாரறியாவண்ணமென்* நெஞ்சுமுயிருமவையுண்டு தானேயாகிநிறைந்தானே*. ௧௱

ஆ—ஷத்தைப்பண்ணி, பாதிக்குமே, அவர்களுடைய விநாசமாக வடிமைசெய்வித்துக்கொள்ளும் ஸ்வபாவனல்லனோவென்னில்? அவன் பாதிக்கும் ஸ்வபாவனாயிருந்துவைத்தே பாதிபாதானைப்போலேயிருக்கும் ஸ்வபாவனாகக்கொடுகோள், எங்ஙனேயென்னில்? என்னையுபகரணமாகக்கொண்டு கவிசொல்லுகையென்னும் வ்யாஜத்தினாலே, என்னுள்ளேவந்துபுகுந்து கலந்து "இன்னபடிசெய்தருளினான்" என்றயர்வறுமமரர்க்குமறியு நிலமல்லாததொருபடி யென்னெஞ்சையுமுயிரையுந் தன்னுள்ளேயடக்கித்தானேயாம்படி ஸ்வீகரித்து, பரிபூர்ணனானானென்கிறார். ௧௬

இ—கைச்சொல்லவந்த ப்ரகரணத்திலே வஞ்சக்கள்வனென்றவனை உங்களுக்குச்சொல்லுகை ப்ராப்தமன்றோவென்ன வதுக்குத் தாத்பர்யஞ்சொல்லுகைக்காக அவதாரிப்பிக்கிறார் (அவர்களுடையவிநாசாதியால்). ஆஸ்ரிதவிநாசமாகவுத்தேசிக்கை ப்ரஸங்கமன்றோவென்று ஸங்காபரிஹாரம், வஞ்சக்கள்வனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவன்பாதிக்குமித்யாதியால்) கவிகளாயிருப்பார்க்கு உசிதஞ்சொல்ல அபேக்ஷித்து. மாயக்கவியாயித்யாதியாலே தன்பக்கல் அவன் ஸம்ஸ்லேஷித்தபடியைப்பேசி ப்ரகாஸிக்கை ப்ராப்தமன்றோவென்ன, அவதாரிப்பிக்கிறார் (எங்ஙனேயென்னிலென்று) இப்படியவன் பாதிக்குமென்னுமிடம் எங்கேகண்டதென்னிலென்றபடி. மாயக்கவியாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னையுபகரணமித்யாதியால்) கலந்துஎன்கிறதற்கு அடக்கியென்கிறதோடே ப்ரபம், நின்றாரறியாவண்ணமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இன்னபடியித்யாதியால்) மாளஎன்றது- நிஸ்ஸேஷமாகவென்றபடி

ஈடு—பித்தருளி "நினைதொறுஞ்சொல்லுந்தோறும் நெஞ்சிடிந்துகும்" வல்வினையேனையீர்கின்ற குணங்களையுடையர் என்னும்படிசெய்து நீராயுருக்கியாத்மாவை யழியும்படிசெய்துவிடும். நீங்களந்த ஸ்ரீகுணத்தில் அகப்படாதே பரஸ்வாதந்த்ர்யத்தையேபாடி, ப்ரகாஸியுங்கோளென்றபடி, இப்படி நீர்சொல்லுகைக்கு ஹேதுவென்னென்ன? அந்தஹேதுவைச்சொல்லுகிறார்மேல். திருமாலிருஞ்சோலைவஞ்சக்கள்வன்- திருமாலிருஞ்சோலையென்கிற திருமலையிலிருக்கிற, வஞ்சக்கள்வனை- வஞ்சித்துக்கள்வஞ்செய்யுமவனை வென்றபடி. பாதியாதே அநுகூலரும்பண்ணுவானைப்போலேவந்து பாதிக்கும்ஸ்வபாவனை என்கை, மாமாயன்- ஆஸ்ரயிதன், ஞானாநந்தாதிகள்பக்கல் தான்-ஸேஷமாக நிற்கும் தன்ஸௌஸீல்யாதிகுணங்களையாவிஷ்கரித்துக்கொண்டு அவர்களுக்கு பவ்யமாம்படி பதிவ்ரதாஸம்ஸ்லேஷத்தைப் பண்ணுமவனை வாஸ்சர்யசேஷ்டிதனென்றபடி. மாயக்கவியாய்வந்து- ஆஸ்சர்யமான கவியாய்வந்து, உம்மையுபகரணமாக்கிக்கொண்டு நான்சிலகவிகள்பாட நினையாநின்றேனென்றிப்படி யொருவ்யாஜத்தையிட்டுக்கொண்டு என்பக்கலிலேவந்தென்றபடி. தண்ணீர்வேணுமென்றொரு வ்யாஜத்தையிட்டுக்கொண்டு தருணியிருந்தவிடத்திலே தருணன்வந்து புகுமாப்போலே, வந்துபுகுந்தானென்றுகருத்து. என்னெஞ்சுமுயிருமுள் என்கிறத்தை என்னெஞ்சுள்ளும் என்னுயிருள்ளுமென்றநுயிப்பது, என்தேஹத்தினுள்ளேயு மென்னாத்மாவினுள்ளேயுமென்றபடி. நெஞ்சைச்சொன்னது தேஹத்துக்குமுபலக்ஷணம், கலந்து- ஸம்ஸ்லிஷ்டனாய். நீரத்தில்கலந்த க்ஷீரம்போலே-ஸம்ஸ்லிஷ்டனாயென்றபடி. விஸ்ராந்தரவ்யாவ்ருத்தமன்றிக்கே. தன்வ்யாமோஹாதிஸயத்தாலே விஶ்லேஷமும்ஸ ஹித்தாலு மென்தேஹத்திலு மென்னாத்மாவிலு மஸம்ஸ்லிஷ்டநீரக்ஷீரங்கள்போலே அத்யந்தஸம்ஸ்லிஷ்டனாயென்கை, அவை- அந்தவென்னுடைய தேஹதேஹாத்மாதிகளை, உண்டு- பூஜித்து, தனக்கு நிரதிஸயபோக்யமாக அநுபவித்து என்றபடி, நின்றாரறியாவண்ணம்- தன்பரிஸரத்திலே நின்ற பெரியபிராட்டியார் திருவனந்தாழ்வானுள்ளிட்டாருமறியாதபடி. தன்னோடு ஸம்ஸ்லேஷ ஸம்ஸ்லேஷரஸங்களையும் நித்யமாக அநுபவித்துக்கொண்டு நிற்கிறவர்களு மென்பக்கல் தான்பண்ணுகிற ஸம்ஸ்லேஷ ப்ரகாரத்தை இதென்னபடிசெய்தானென்றறியமாட்டாதே விஸ்மிதராய்நிற்கும்படியாக என்றபடி. என்னெஞ்சுமுயிருந்தானேயாகி- க்ஷீரத்திலே கலந்த நீரத்தை வேறுகாணவொண்ணாமையாலே க்ஷீரமேயாயிருக்குமாப்போலே தன்பக்கலப்படிகலந்தவென் தேஹாத்மாக்களை வேறுகாணவொண்ணாதபடி இவையெல்லாந்தானேயாய், நிறைந்தான்- பரிபூர்ணனானான், என்னோடிப்படிகரைகடந்த ஸம்ஸ்லேஷத்தைப்பெத்தவாஸ்வாதவான்களை

மூ— தானேயாகி நிறைந்தெல்லாவுலகு முயிருந் தானேயாய்* தானேயானென்பானாகித் தன்னைத்தானே துதித்தெனக்குத்* தேனேபாலே கன்னலேயமுதே திருமாலிருஞ்சோலைக்* கோனேயாகி நின்றொழிந்தானென்னை முற்று முயிருண்டே* ||௨||

ஆ—(தானேயாகி) இப்படியென்னுயிரை முற்றுமுண்டு தானேயாகி ஸர்வேஶ்வரனாயிருந்தாலே ஸர்வஶரீரனுமாயென்னுயிரை மாஶ்ரயித்தும் த்ருப்தனாகாதே நான்சொல்லுஞ்சொற்களைக்கொண் டநுபவிக்கைக்காக வென்னைக்கொண்டு திருவாய்மொழி பாடுவித்து இப்படியேயென்னோடுள்ள ஸம்ஶ்லேஷந்தனக்கினிதாகைக்காக வெனக்குத்தன்னையே நிரவதிகபோக்யமாக்கியருளினான், திருமாலிருஞ்சோலைமலை நாயனாய் நின்ற நிலையவனுக்கு ஸபலமாயிற்றென்றுகொண்டு ஹர்ஷப்ரகர்ஷத்தாலே சொல்லுகிறார். ||௨||

(என்னைமுற்றும்) என்னையாஶ்ரித்தருளுகிறானிந்த தேஹமான ஶரீரத்தினுள்ளேபுகுந்து

இ—அதாவது:— என்னுடைய தேஹேந்த்ரியப்ராணாதிகளிலே ஓரவயவமும் விடாதென்றபடி. ||௧||

✳இரண்டாம்பாட்டு.✳

என்னைமுற்றுமுயிருண்டென்கிறதை அடியிலே பரக்கிறார் (இப்படியித்யாதியால்) எல்லாவுலகுமித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இதனாலேயித்யாதியால்) அதீதபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னுயிரையித்யாதியால்) எனக்குத்தேனேயித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இப்படியென்னோடுள்ளவித்யாதியால்) ஒருத்தலைஸ்நேஹமாய்விட்டால் தனக்கு ரஸாவஹமாகாதொழியுமென்று பார்த்து அதற்காகவெனக்கும் தன்பக்கலிலே நிரவதிகஸ்நேஹமுண்டாம்படி தன்னையெனக்கு நிரவதிகபோக்யமாக்கினானென்றபடி. திருமாலிருஞ்சோலையித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருமாலிருஞ்சோலைமலைநாயனாயித்யாதியால்) நாயன்- நாதன், ஹர்ஷப்ரகர்ஷத்தாலேயென்றது- ஹர்ஷாதிஶயத்தாலேயென்றபடி. இத்தால் கீழ்ப்பாட்டிலே தம்மோடுகலந்தகலவியைப்பேசி அநுபவித்தவரிப்பாட்டிலே தம்மோடு கலந்தவநந்தரம் தம்மைக்கொண்டு கவிபாடுவித்து க்ருதக்ருத்யனாயிராநின்றானென்று ப்ரீதராகிறாரென்று ஸங்கதியுஞ்சொல்லிற்றாயிற்று. ||௨||

✳மூன்றாம்பாட்டு.✳

என்மாயவாக்கையித்னுட்புக்கு (புகுந்து) என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னையாஶ்ரித்தருளுகி

ஶ—றானென்றபடி. ஆதலால் உயிராகத்தாட்செய்மினென்று ஶ்லோகமேபரக்கிறது. ||௩||

என்னை- தனக்கு நிரதிஶயபோக்யனானவென்னை, உயிர்- ஆத்மாவை, அகசேஷரஸம், என்னாத்மாவையென்றபடி. யதா- "ஆத்மாநீஸ்வாத்தேவபோக" மென்கிறபடியே தனக்குப்ராயிருக்கிறவென்னையென்றவிகக்ஷம். முற்றும்- நிஶ்ஶேஷமாக, விஸ்வான பாஶாத்தவுக்கு அணுவானவிவர் ஸ்வரூபமும் போக்யதாதிஶயத்தாலே அவரிவேஷமாய்க்கொண்டு, தன் ஸ்வரூபத்திற்காட்டில் பெருப்புத்தோற்றுகிறதென்று கருத்தாலே முற்றுமென்கிறபடி. உண்டு- அநுபவித்து, தானேயாகி- ஸம்ஶ்லேஷம் அதிஶயமாயிருக்கச்செய்தேயும் தானேயிதற்கு போக்தாவாய் ஸம்ஶ்லேஷம்தனக்கே ஸஃபமென்றிருக்குமவனென்றபடி. நிறைந்து- அத்தாலே ஸர்வபூர்ணனாய், ஸர்வவ்யாபகனாய் என்றபடி. எல்லாவுலகும்- ஸகலலோகங்களும், உயிரும்- தத்ஸ்தித ப்ராணிகளும், தானேயாய்- ஸர்வஶரீரகனாய் என்றபடி. என்னையநுபவிக்கப்பெறுகையாலேயிப்போது ஸர்வேஶ்வரனானவனென்றபடி. யானென்பான்- நானென்றுசொல்லப்படுகிறவன், தானேயாகி- தான்தானேயாய், அஹம்பதவாச்யவஸ்துவும் தானேயாம்படி ஶரீரகனென்றபடி. தன்னை- உபயவிபூதிவிஶிஷ்டனான தன்னை, தானேதுதித்து- ஶரீரகனான தானே துதித்து, வேதநர்செய்கிறவ்யாபாரத்திலும் ப்ரயோஜகர்த்ருத்வம் இவனேயிறே. எனக்கு- தன்னாலே விஷயீகரிக்கப்பட்டவெனக்கு, தேனே- தேனாகவே, இதற்கு ஆகியென்கிறதோடே அந்வயம். ஸவபாரணத்தால் தேன்போலேயிருக்கையன்றிக்கே தேன்தானேயாய் என்றபடி. பாலே- பாலாகவே, கன்னலே- இக்ஷுரஸமாகவே, அமுதே- அம்ருதமாகவே, ஆகி என்றநுஷங்கித்ததைப்பது. திருமாலிருஞ்சோலைக்கோனேயாகி- திருமாலிருஞ்சோலையென்கிற திருமலைக்கு நாயனேயாகி, நின்றொழிந்தான்- நிலைநின்றுவிட்டான், என்னோடு ஸம்ஶ்லேஷிக்கைக்காகத் திருமாலிருஞ்சோலைக்கு நாயனாய்நின்றநிலை ஸஃபமாய் க்ருதக்ருத்யனானென்றபடி. ||௨||

மூ—என்னைமுற்றுமுயிருண்டென்மாயவாக்கையிதனுட்புக்கு[புகுந்து]* என்னைமுற்றுந்தானேயாய்நின்றமாய
வம்மான்சேர்* தென்னன்திருமாலிருஞ்சோலைத்திசைகைகூப்பிச்சேர்ந்தயான்* இன்னம்போவேனேகொ
லோவென்கொலம்மான்திருவருளே* ॥௩॥

ஆ—என்னை ஸாஜித்து என்னைமுற்றவுந்தானேயானான், இப்பேறுபெறுகைக்கு ஹேதுவென்னவென்னில்? அவன்சேர்தென்னன் திருமாலிருஞ்சோலைத்திசை கைகூப்பப்பெற்றேன், என்னுடனிப்படியே கலந்துபரிமாறியும் பின்னையுங்கலந்து பரிமாறுதானு யடிதொட்டுங்கலந்து பரிமாறுகையிலே பாரித்தநாளாநின்றான், இன்னமிதற்குமேலொருஸம்ஶ்லேஷமுண்டோ திருவுள்ளமென்தானென்கிறார். ॥௩॥

இ—(ஜநிக்ருதியால்) ஆக்கையினுள்ளேயென்கிறது- ப்ரக்ருதிபரிணாமமான ஶரீரத்துக்குள்ளேயென்றபடி. என்னைமுற்றுமுயிருண்டென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னை ஸாஜித்துஎன்று) கீழ்மேலுள்ள பாட்டுகளில்போலே யிப்பாட்டிலும் திருமாலிருஞ்சோலையிலே நின்றருளுகிறானவனென்றிவ்வளவும் சொல்லாதே திசைகைகூப்பினத்தைச் சொல்லுவானேனென்ன வதரிப்பிக்கிறார் (இப்பேறித்யாதியால) சேர்ந்தயானென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னுடனிப்படியித்யாதியால்) இன்னம்போவேனேகொலோ வென்கொல்லென்கிறவிடத்தில் அபிப்ராயமருளிச்செய்கிறார் (பின்னையுமித்யாதியால) அடிதொட்டுமென்றது- அடிதொடங்கியென்றபடி. இத்தால்கீழ்ப்பாட்டிலே தம்மைக்கொண்டு கவிபாடுவித்துக்கொண்டு க்ருதக்ருத்யனானென்று ப்ரீதனானவரிப்பாட்டிலே பின்னையு முத்தரோத்தரஸம்ஶ்லேஷத்திலே வ்யாமோஹிக்கிறானென்று ப்ரீதராகிறாரென்று ஸங்கதியும்ஸூசிதமாகை. தாத்பர்யவாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இன்னமிதற்குமேலுமித்யாதியால்) ॥௩॥

ஈ— என்- என்னுடையதான, எனக்கு அஜ்ஞாநாதிகளையுண்டாக்குகைக்கு ஹேதுவான வென்றபடி. மாய- ஆஶ்சர்யமான, ப்ரக்ருதிபரிணாமரூபமான என்றபடி. ஆக்கையிதனுள்- இந்த ஶரீரத்துக்குள்ளே, ஆக்கை- ஶரீரம், ப்ரத்யக்ஷவிஷயமாய் ஹேயமான ஶரீரத்துக்குள்ளே என்றபடி. புகுந்து- விடாய்த்தவன் அம்ருதஸரஸ்ஸைக்கண்டால் ப்ரவேஶிக்குமாப்போலே ப்ரவேஶித்து. என்னை- தனக்குஶேஷபூதனானவென்னை, உயிர்- ஆத்மாவை, என்னுடைய ஆத்மாவையென்றபடி. 'ஜ்ஞாநீத்வாத்மைவமே மதம்'மென்கிறபடியே தனக்குயிரானவென்னை யென்றுமாகவுமாம். முற்றும்- நிஶ்ஶேஷமாக, உண்டு- அநுபவித்து, என்னை- ஸதஶரீரவிஶிஷ்டனானவென்னையும், முற்றவும்- ஸ்வஸ்வரூபத்தையும், யென்னதென்றபிமானிக்கப்படுகிற தேஹாதிகளையும், குறித்து என்றொருவசனமத்யாஹார்யம். தானேயாய்- தானே அபிமானியாய், இவ்விரண்டையும் தான் மாயமாக ஸம்ஶ்லேஷிக்கையாலே தன்னில்காட்டில் ப்ருதக்காகக்காணவொண்ணாமையா லிவையிரண்டும் தானேயாமென்றபடி. நின்ற- இத்தாலே விடாய்கெட்டு ஸ்வஸ்தனான, மாயவம்மான்- இப்படியாஶ்சர்யசேஷ்டிதனான ஸர்வேஶ்வரன், சேர்- தனக்கு வாஸஸ்தாநமாகவந்து சேர்ந்திருக்கிற, தென்னன்- தக்ஷிணதேஶத்துக்குநல்லதான, தக்ஷிணதேஶாலங்காரபூதமான என்றபடி. நல் என்கிறவிடத்தில் லகாரலோபஸஹிதமாக னகாரப்ரயோகம். யத்வா—தென்னனென்று தக்ஷிணதேஶத்து ராஜாவைச்சொன்னபடி. தென்னன் திருமாலிருஞ்சோலை- தக்ஷிணதேஶராஜாவினுடைய திருமாலிருஞ்சோலையினுடைய, அவனாலே பரிபாலி[பாலி]தமான திருமாலிருஞ்சோலையினுடைய என்றபடி. திசை- திக்கைக்குறித்து, கைகூப்பி- அஞ்ஜலிபண்ணி, சேர்ந்தயான்- அவனையிப்படிக்கிட்டப்பெற்றநான், இன்னம்போவேனேகொலோ- இதற்கு மேலும்போவேனோ? நானிவ்வளவில் பர்யவஸியாதே இதற்குமேலுஞ்சில ஸம்ஶ்லேஷத்தைப்பெறவ்யாமோஹிக்கிறவன்தானேயோ இதற்குமேலுமொரு ஸம்ஶ்லேஷப்ரகாரமுண்டோ என்று கருத்து. அவதாரணத்தால் என்னை யெம்பெருமானிதுக்குமேலும் சில ஸம்ஶ்லேஷத்தைப்பெறவ்யாமோஹிக்கிறவனாயே நிர்மித்தானே என்றபடி. இதுக்குமேலில்லாதபடியான ஸம்ஶ்லேஷத்தைப்பெற்று நான் பரிபூர்ணனாயிருக்க இவனிதற்காகவிங்ஙனே உத்தரோத்தராபிநிவேஶிக்கிறானென்கிறார்மேல். அம்மான்திருவருள்- நிரவதிகஸௌஹார்தயுக்தனானவனுடைய க்ருபையானது, அவனுடையவபிநிவேஶமானதென்றபடி. என்கொல்- என்னவாயிருக்கிறது, இனியெதற்காக இவ்வபிநிவேஶமென்றபடி. ॥௩॥

மூ—என்கொலம்மான்றிருவருள்களுலகு முயிருந்தானேயாய்* நன்கென்னுடலங்கைவிடான் ஞாலத்தூடே நடந்துழக்கித்* தென்கொள்திசைக்குத்திலதமாய்நின்ற திருமாலிருஞ்சோலை* நங்கள்குன்றங்கைவிடான் நண்ணுவசுரர்நலியவே* ௪

ஆ—(என்கொல்) என்னுடைய ப்ரக்ருதியினுள்ளேபுகுந்திவ்வாத்மாவை ஸ்வீகரித்தருளுகையுமன்றியே ஸவாஸநமாக ஸர்வேச்வரனுமிருந்தான், என்னுடைய ப்ரக்ருதிதன்னையுங்கூட தனக்குபோக்யமாகக்கொண்டொருக்ஷணம் கைவிடுகிறிலன், இப்படியென்னோடுள்ள ஸம்ச்லேஷம்பெறுகைக்கீடான தேசமேதோவென்று தேடிக்கொண்டு திருமலையிலேவந்துபுகுந்துதான் கருதினபடியே யங்கேஸம்ச்லேஷித்து ஸ்ரீதனை யிந்த ஸம்ருத்தியெல்லாம் விளைவித்தது திருமலையிறேயென்றுகொண்டு திருமலையையு மென்னுயிருமுடலும்போலே தனக்கு போக்யமாகக்கொண்டு கைவிடுகிறிலன், என்னுயிரையுமுடலையுந் திருமலையையுமநுபவித்தது ஸ்ரீதனானென்று ப்ரதிகூலரிந்தஸம்ருத்தியைக்கண்டு பொறுக்கமாட்டாதே தறைப்படும்படி ஸ்ரீதனானென்கிறார். ॥ ௪ ॥

* நாலாம்பாட்டு. *

இ—உலகுமுயிருந்தானேயாய் நன்கென்னுடலங்கைவிடானென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னுடையவித்யாதியால்) அன்றியேயென்கிறதற்கு விடுகிறிலனென்கிறத்தோடே யந்வயம், இத்தாலகீழ்ப்பாட்டிலே போக்யமான தம்முடையசரீரத்திலே புகுந்தானென்று ஸ்ரீதரானவரிப்பாட்டிலே யப்படியதிலேபுகுந்த தாத்ரமன்றிக்கே யதைத்தனக்கு போக்யமாகப்பத்திபொருக்ஷணமும் விடமாட்டுகிறிலனென்றும் வாத்ஸல்யத்துக்கு நிதாநமாயிற்றென்கிற ஸ்ரீதியாலே திருமாலிருஞ்சோலைமலையையும் விடமாட்டுகிறிலனென்றும் சொல்லியநுபவிக்கிறாரென்று ஸங்கதியும்ஸூசிதமாயிற்று. ஞாலத்தூடேநடந்துழக்கி என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இப்படிஎன்னோடுள்ளவித்யாதியால்) நங்கள்குன்றமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தான்கருதினபடியேயித்யாதியால்) கைவிடானென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இந்த ஸம்ருத்தியெல்லாமித்யாதியால்) வாக்யத்ரயத்துக்கும் ஸமுதித தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னுயிரையுமித்யாதியால்) நண்ணுவசுரர்நலிய என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ப்ரதிகூலரித்யாதியால்) ॥ ௪ ॥

ப—உலகும்- லோகங்களும், உயிரும்- அந்தலோகங்களிலேயிருக்கிற ப்ராணிகளும், தானேயாய்- தத்ஸ்வாமிஸம்பந்தங்களுக்குத்தானே ப்ரயோஜநவிஷயனும்படி தத்ஸ்வப்ரகாரகனென்றபடி. ஸ்வயாரணத்தாலவனுக்கு ப்ராயாந்யம்விவக்ஷிதம், ஸர்வேச்வரனு யிருந்துவைத்துஎன்றபடி. நன்கு- நன்மையான, ஏரம போக்யமானவென்றபடி. என்னுடலம்- என்சரீரத்தை, கைவிடான்- விடமாட்டுகிறிலன், ஞாலத்தூடே- ஸமஸ்தஜகத்திலே, நடந்து- ஸஞ்சரித்து, உழக்கி- எங்குமொக்கமிதித்துப்பார்த்து, உழக்குகை- எங்குமொக்கமிதித்துப்பார்க்கை, ஆழ்வாரோடு ஸம்ஸ்லேஷம்பண்ணுகைக்கீடான தேசமேதோவென்று தேடிப்பார்த்துஎன்று பாவம், இதுக்கு நங்கள்குன்றங் கைவிடானென்கிறத்தோடே யந்வயம். த்ரிவிக்ரமனாய் ஸமஸ்தலோகத்தைத் தம்மைப்பெறுகைக்கீடான தேசமேதோவென்று ஸர்வத்ரமிதித்துப்பார்த்தபடியாகவினைத்தருளிச்செய்தபடி. தென்கொள்- தெற்காகக்கொள்ளப்படுகிறதான, திசைக்கு- திக்குக்கு, தெற்கென்று ப்ரஸித்தமானதிக்குக்குஎன்று பாவம், திலதமாய்நின்ற- திலகமாய்நின்றதான, நிரதிசயாலங்காரமென்றபடி. திருமாலிருஞ்சோலை- திருமாலிருஞ்சோலையாகிற, நங்கள்குன்றம்- நம்முடைய பர்வதத்தை, அவன்கருதினபடியே அவனுக்குநம்மோடு ஸம்ச்லேஷத்தையுண்டாக்கினதான திருமலையையென்றபடி. நண்ணுவசுரர்- நண்ணாதவர்களான அஸுரர்கள், நண்ணுகை- கிட்டுகை, தன்பக்கல்வாராதவரான ப்ரதிகூலஜநங்களென்றபடி. நலிய- நசிக்கும்படி, நலிகை- நசிக்கை, இவனுடைய ஸம்ருத்திகளைக் (கண்டு) கேட்டுப் பொறுக்கமாட்டாதே தங்கள் ப்ரபாவத்தாலே நசிக்கும்படியென்கை, கைவிடான்- ஒருக்ஷணமும் விடமாட்டுகிறானில்லை, ஆழ்வார்திருமேனிதனக்கு ப்ராவண்யமடைகையாலே விடமாட்டுகிறிலன், திருமாலிருஞ்சோலைதுக்கு ப்ராவண்யமடைகையாலே விடமாட்டுகிறிலன் என்றதாயிற்று, அம்மான்திருவருள்- ஸ்வாமியினுடைய க்ருபையானது, அவனுடையஸௌசீல்யமானதென்றபடி, என்கொல்?. என்னாயிருக்கிறது, என்னவாச்சர்யமாயிருக்கிறது வென்றபடி. ॥ ௪ ॥

மூ.—நண்ணாவசுரர்நலிவெய்த நல்லவமரர்பொலிவெய்த* எண்ணாதன [னக]ளெண்ணும்நன்முனிவரின்பந் தலைச்சிறப்பப்* பண்ணார்பாடலின்கவிகள்யானாய்த் தன்னைத்தான்பாடித* தென்னாவென்னுமென்னம்மான்

ஆ.—(நண்ணாவசுரர்) ப்ரதிகூலர் தறைப்படும்படியாகவுந் தனக்குநல்லரானவமரர்கள் ஸம்ருத்தராம்படியாகவும் ஸ்ரீவைகுண்டமாயும் ஸம்ஸாரமாயுமிருந்த நிரவதிகஸம்ருத்திக ளெம்பெருமானுக்குளவாயிருக்கச்செய்தே, யிவையொழியவேயதின்மேலே ஸத்வஸ்தராயிருந்த வெம்பெருமான்றன்னுபயோகம் வர்ஷிக்கவொண்ணாதே வாங்மநஸாகோசரமான வைபவஸம்ருத்திக ளெம்பெருமானுக்குளவாகவேணுமென்று. அபேக்ஷிப்பாதிற்கும் நன்முனிவர் நம்முடைய அபேக்ஷாப்ரவர்த்தியான நிரவதிகஸம்ருத்திகளெம்பெருமானுக்கு விளையப்பெற்றோ மினிநமக்கொருகுறையில்லையென்றுகொண்டு நிரவதிகநிர்வ்ருதியை யுடையராம்படியாகவும் பண்ணார்பாடலான வின்கவிகளை யென்னையிட்டுப்பாடுவித்து இக்கவிகளாகிற ஸம்ரு

✳ ஐந்தாம்பாட்டு. ✳

இ.—ஸம்ருத்தராம்படியாகவுமென்கிறதற்கு உடையராம்படியாகவு மென்கிறத்தோடே யன்வயம். எண்ணாதனகளெண்ணுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்ரீவைகுண்டத்யாதியால்) இருக்கச்செய்தேயென்கிறதற்கு அபேக்ஷிப்பாதிற்குமென்கிறத்தோடே யன்வயம். இவையொழியவென்றது- நிரதிசயகல்யாணசேஷ்டிதங்களே இவற்றிற்காட்டிலு மத்யந்தவிலக்ஷணங்களாக வென்றபடி. இதின்மேலேயென்கிறதற்கு உளவாகவேணுமென்கிறத்தோடே யன்வயம், நன்முனிவரென்கிறதற்கு உடையராம்படியாகவு மென்கிறத்தோடே யன்வயம், இன்பந்தலைச்சிறப்பவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நம்முடையஅபேக்ஷாப்ரவ்ருத்த்யாதியால்) யானாய்த்தன்னைத்தான்பாடியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னையிட்டுப்பாடுவித்துஎன்று) தென்னாவென்னுமென்கிறவிடத்தில் ஸமுதிதார்த்தத்தையருளிச்செய்கிறார் (இக்கவிகளாகிறவித்யாதியால்) பரிகின்றது

வ்யா.—நண்ணாவசுரர்- நண்ணாதவர்களான ஸம்ஸாரிகள், பரமபுருஷபராங்முகராயிருக்கிற ஸம்ஸாரப்ரக்ருதிகள், நலிவு- நாசத்தை, எய்த- அடையும்படியாக, பகவத்பக்தர்களுக்குண்டான திருவாய்மொழியாகிறவிந்த நிரவதிகஸம்ருத்தியைக்கண்டு பொறுக்கமாட்டாதே, நசித்துப்போம்படியாக என்கை. இதற்குப் பாடியென்கிறத்தோடே யன்வயம். நல்லவமரர்- பகவதநுகூலரான தேவப்ரக்ருதிகள், பொலிவு- ஸம்ருத்தியை, ஜ்ஞானவைராக்யபகவத்ப்ரேமாதி ஸகலகல்யாணஸம்ருத்திகளை யென்றபடி. எய்த- அடையும்படியாகவும், இதற்கும் பாடியென்கிறத்தோடே யன்வயம். 'பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம்' என்கிறபடி ஸாதுக்களுடைய ஸம்ருத்தியும் துஷ்க்ருதிகளுடைய நாசமும் என்று ஸத்தாத்பர்யமாயிற்று. எண்ணாதனகள்- கீழைக்கொருவரு மெண்ணாதவைகளை, ஸத்வஸ்தருடைய ஸங்கல்பத்தாலும் ஸம்பாதிக்கவொண்ணாமைபாலே பொருவாலும் அநுஸந்திக்கப்படாதவைகளை யென்றபடி. அதாவது:— ஸ்வாபாவிகாநவதிகாதிசயாஸங்க்யேய கல்யாணகுணகண விசிஷ்டனான பரமபுருஷனுக்கு ஏதாவத்ப்ரதிபந்நமான கல்யாணகுணவிசிஷ்டஸம்ருத்திகளையென்றபடி. எண்ணும், ப்ரீத்யதிசயத்தாலே நித்யம் அபேக்ஷியாநிற்குமவர்களான, நன்முனிவர்- நல்லமுநிகள், சநகஸநந்தநாதிகளாய் பகவத்குணாநுஸந்தாநபரராயிருக்கிற திவ்யயோகிகளென்றபடி. இன்பந்தலைச்சிறப்ப- ஆநந்தமதிஶயமாயிருக்கப்பெறும்படியாக, இன்பம்- ஆநந்தம், தலைச்சிறக்கை- அதிஶயமாகை, எம்பெருமானுக்குத்தாங்கள் அபேக்ஷித்த ஸம்ருத்திகளெல்லாம் பரிபூர்ணமாகப்பெற்றோமென்று நிர்ப்பரராம்படியென்கை, இதற்கும் பாடியென்கிறத்தோடே யன்வயம். ஸ்ரீராமாயணம்போலே ப்ரபந்தமுண்டானதே எம்பெருமானுக்கு ஸர்வாதிஶயமான நிரதிசயகல்யாணகுணகண ஸமாவிஷ்டத்வஸம்ருத்திகளிற்காட்டிலு மதிசயிதமஹாஸம்ருத்தியென்று திவ்யயோகிகளாநந்தநிர்ப்பரராகிறார்களென்றுகருத்து. பண்ணார்பாடல்- கீதிபரிபூர்ணமாயுள்ளன, பண்- கீதி, ஆர- பூர்ணம், ப்ரீதிபரீவாஹமாய் ஜநிக்கையாலே ஜநிக்கச்செய்தே கீதிவிஶிஷ்டமாய் ஜநித்தவையானவென்றபடி. இன்கவிகள்- இனியகவிகளை, இன்- மதுரம், 'மதுரம் மதுரம்' என்கிறபடியே கீதமாத்ரத்திலன்றிக்கே கேவலம்வசநத்திலும் மதுரங்களான கவிதைகளையென்றபடி. யானாய்- மத்த்வாரகனாய், தன்னைத் தான்பாடி- ஸ்வயமாய்ஸ்வவிஷயனை தன்னைக்குறித்துத்தானே ஸ்தோத்ரவாய்ஙின்றுபாடி. திருமாலிருஞ்சோலை,

மூ—திருமாலிருஞ்சோலையானே* ॥ரு॥

திருமாலிருஞ்சோலையானேயாகிச்செழுமூவுலகுந்தன்* ஒருமாவயிற்றினுள்ளேவைத்தூழியூழிதலையளிக்குந* திருமாலென்னையாளுமாற் சிவனும்பிரமனுங்காணாது* அருமாலெய்தியடிபரவ வருளையீந்தவம்மானே*॥

ஆ— ச்சத்தைப் பருகிக்களித்தஸ்ரீகவாநம்பண்ணின வண்டுகள்போலே தென்னாதெனாவென்று திருமலையிலே நின்றுபாடியருளாநின்றானென்கிறார். ॥ரு॥

(திருமாலிருஞ்சோலையானே) மற்றுமெல்லாந் தன்சிறுவயிற்றிலேவைத்து யுகந்தோறும் ரக்ஷித்தருளும்ஸ்வாமியைப் ப்ரியபர்வதியாய் ப்ரஹ்மருத்ராதிகளால் அநவாதாஷி தவாணபாதுவைப் தத்ஸம்ஸ்லேஷமுற்றவை ஸமாச்ரயணம் பிறந்த திருமாலிருஞ்சோலையானனைக்குப்பித்தன பென்னையறிகிறிலனென்கிறார். ॥ரு॥

இ—வாநமபண்ணியென்றபடி. களித்துஎன்கிறதற்குப பாடியருளாநின்றானென்கிறத்தோடே யமயம், தாரீய வாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அஸ்ரீகவாநதிதாதிபால) இத்தாலகீழ்ப்பாட்டிலே தமமுடைய திருவுடம்பை விடமாட்டாதிருக்கிறாரென்று ஸ்ரீகரானவரிப்பாட்டிலே தம்முடைய ஸாஸகவிதாவா ராவரதத்திலே உதத்வசிதவடிவேதிவஷிகளுங்கொண்டு பாடியருளினானென்று ஹஷ்விஸயவாரவ மராகிறாரென்று ஸங்கதியுஞ்சொல்லிற்றாயிற்று. ॥ரு॥

✳ ஆறும்பாட்டு ✳

ஒருமாவயிற்றிலென்கிறத்தையுரைக்கிறார் (சிறுவயிறறிலென்று) ஊழியூழிதலையளிக்குமென்கிறத்தையுரைக்கிறார் (யுகந்தோறுமித்யாதியால்) காணாதருமாலித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அநவரதேத்யாதியால்) அருளையீந்தவம்மானென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தத்ஸம்ஸ்லேஷேத்யாதியால்) திருமாலிருஞ்சோலையான் மாலாகியென்னையாளுமென்றநயித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருமாலிருஞ்சோலையித்யாதியால்), நான்தனக்கு அநந்யனென்றறியமாட்டுகிறிலனென்றபடி. இத்தால்கீழ்ப்பாட்டிலே தம்முடைய ஸாஸஸாதீவியாஸத்தாலே உக்தனைப்பாடத்துடங்கினானென்று ஸ்ரீகரானவரிப்பாட்டிலே தன்பக்கலுண்டானயிட்டானென்று மிகவும்ஸ்ரீகராகிறாரென்று ஸங்கதிசொல்லிற்றாயிற்று, ॥ரு॥

ப—லையான்- திருமாலிருஞ்சோலையென்கிற திருமலையிலே நின்றவனைக்கொண்டு, என்னம்மான்- என்னுடைய ஸ்வாமியானவன், தென்னாவென்னும்- தென்னாவென்றுஞ்சொல்லாநிற்கும், இந்த ஸாஸகவிதாஸ்ரீகவாநத்தைத் அநதமமேஷிபூஸமுள்ளடங்காமையாலே தென்னாதெனாவென்று பாடத்துடங்காநிற்குமென்றபடி. ॥ரு॥

செழு அழகியதான, விவித்ரஸஞ்சிவேஸமானவென்றபடி. மூவுலகும்- மூன்றுலோகத்தையும், தன்- ஸ்வஷிதவடிநாஸஸம்கல்பனை தன்னுடைய, ஒருமாவயிற்றினுள்ளே- ஒருசிறுமான ஜடரத்துக்குள்ளே, அத்புதமான ஜடரத்துக்குள்ளேயென்றபடி. மா என்று அத்புதமானத்துக்குப்பேர், வைத்து- ப்ரளயாவஸ்தையிலே ஸாரக்ஷிதமாயிருக்கும்படி வைத்துக்கொண்டு, வடதளஸாயியான தன்வயிற்றிலேவைத்து என்றுதாத்பர்யம், ஊழியூழி- கல்பந்தோறும், தலை- தலையாக, உத்க்ருஷ்டமாகவென்றபடி. வரிவனமாகஎன்கை, அளிக்கும்- ரக்ஷிக்குமவனை, திருமால்- ஸ்ரீயினிடத்திலே வ்யாமோஹனை, இந்த ஸவரக்ஷணயஜ்ஞதீக்ஷையில் ஸஹயோகவாரிணி விஸிஷ்டனைவென்றபடி. பிரமனும்- ப்ரஹ்மாவும், சிவனும்- ருத்ரனும், காணாது- காணாதே, தன்னைக்காணமாட்டாமலென்றபடி. அருமால்- அருமையான வ்யாமோஹத்தை, உத்க்ருஷ்டமானவ்யாமோஹத்தையென்றபடி ஒருவருக்குங்கிடையாத நிரதிசயபக்தியையென்கை, எய்தி- அடைந்து, நிரதிசயபக்தியுக்தராயென்றபடி. அடி- தன்திருவடிகளை, பரவ- ஸ்தோத்திக்க, ஸ்தோத்திக்கவாறேயென்றபடி பரவுதல்- ஸ்தோத்திதல, அருளையீந்த- க்ருபையைக்கொடுத்தவனை, ஈதல்- கொடுத்தல, அவர்கள்பக்கல் க்ருபைசெய்தருளினவனையென்றபடி. அவர்களபேக்ஷிதங்களைச் செய்தருளினவனை யென்கை, அம்மான்- ஸர்வஸ்வாமியை, திருமாலிருஞ்சோலையான்- அந்ததிருமலைக்கு நாயகனை ஸர்வேஸ்வரன்; இவ்விடத்தில் ஏகாரத்தைக்கூட்டிக்கொண்டு மாலேயாகியென்றநயிப்பது, எனபக்கல் வ்யாமோஹனேயாய் ஸவயாரணத்தால் என்பக்கலிவன் பித்தேறினானென்னுமிடத்தில் ஸம்ஸயமில்லையென்று கருத்து. என்னை- அத்யந்தநிக்ருஷ்டனைவென்னை, ஆளும்- அடிமைகொள்ளாநின்றான், ஆளுமென்கிறவிடத்தில் கேஷாஸாவ்யஸமைத்தாபாடமென்பர். ॥ரு॥

மூ— அருளாழீயென்னம்மானேயென்னும் முக்கணம்மானும்* தெருள்கொள்பிரமனம்மானுந்தேவர்கோனுந் தேவரும்* இருள்கள்கடியும்முனிவருமேத்துமம்மான்றிருமலை* மருள்கள்கடியும்மணிமலைதிருமாலிருஞ் சோலைமலையே* ௮॥

திருமாலிருஞ்சோலைமலையே திருப்பாற்கடலே யென்றலையே* திருமால்வைகுந்தமே தண்டிருவேங்கடமே

ஆ— (அருளாழி) இஸ்ஸூரியெல்லாந் திருமலையையாச்ரயித்தேறே வந்ததென்றுகொண்டு திருமலையையநுஸந்திக்கிறார். ௮॥

(திருமாலிருஞ்சோலைமலையே) விளைந்தஸம்ருத்திதானேதென்னிலென்கிறார், திருமாலிருஞ்சோலைமலை- திருப்பாற்கடல- திருநாடு- திருமலைத்தொடக்கமாகத் தானெழுந்தருளியிருக்குந் திருநகரிகளெல்லாவற்றிலுமுள்ள

✱ஏழாம்பாட்டு.✱

இ— தம்மோடவன் ஸம்ச்லேஷித்தப்ரகாரங்களைச் சொல்லி யநுபவியாநின்றவ ரிப்பாட்டிலே திருமாலிருஞ்சோலையை யேத்துகை பரமப்ரயோஜநமென்றே யென்ன வருளிச்செய்கிறார் (இஸ்ஸூரியெல்லாமித்யாதியால்) ௭॥

✱எட்டாம்பாட்டு.✱

அவன் தம்முடைய திருமேனியில்பண்ணும் வ்யாமோஹாதிசயப்ரகாரங்களை யநுபவிக்கவந்தவ ரிப்பாட்டிலே ஜ்ஞாநாதிகதிவ்யதேசங்களில் அவனுடைய வ்யாமோஹாதிசயத்தை யநுஸந்திக்கை பரமப்ரயோஜநமென்றே யென்ன விதுக்குத் தாத்பர்யஞ்சொல்லுகைக்காக வவதரிப்பிக்கிறார் (விளைந்தவித்யாதியால) இப்படி நீர் திருமலையைக்கொண்டாடுகைக்கு அதனால்விளைந்த ஸம்ருத்திதானேதென்னிலென்றபடி. இது-என்று வக்ஷ்யமாணத்தை நிர்த்தேசித்தபடி, ஜ்ஞாநாதிகதிவ்யதேசங்களில் அவனுடைய வ்யாமோஹாதிசயத்தைச்சொன்னது த்ருஷ்டாந்தார்த்தமென்றுகாட்டுகிறார் (திருமாலிருஞ்சோலையித்யாதியால) பாட்டிலே ஜ்ஞாநாதிகளைக்

ப— என்னம்மானே- என்னுடையநாயகனே, அருளாழீ- க்ருபையைத்தந்தருளும், ஈகை- தருகை, என் பக்கலிலே க்ருபைபண்ணியருளுமென்றபடி. என்னும்முக்கணம்மானும்- இப்படிச்சொல்லி யாச்ரயிக்குமவனான த்ரிநேத்ரஸாக்ஷியும், இப்படி ஸர்வேச்வரனையாச்ரயித்து தத்ப்ரஸாதத்தாலே ஜகத்ஸம்ஹர்த்தாவான த்ரிநேத்ரனுமென்றபடி. தெருள்கொள்- ஜ்ஞாநத்தைக்கொண்டிருக்கிற, ருத்ராதிகளுக்கும் ஜ்ஞாநப்ரதனாம் படி ஜ்ஞாநாதிகனானவென்றபடி. ஒருகல்பத்திலேகலங்கி ஸர்வேச்வரனோடே எதிராடும் த்ரிநேத்ரனைப் போலன்றிக்கே "யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ச்ச ப்ரஹிணோதி" என்கிறபடியே ஸர்வேச்வரனாலே லப்தஜ்ஞாநனாயிருப்பானென்கை. பிரமனம்மானும்- ப்ரஹ்மாவாகிற ஜகத்ஸ்ரஷ்டாவும், தேவர்கோனும்- தேவேந்த்ரனும், தேவரும்- த்ரயஸ்த்ரிம்சத்கோடிஸங்க்யரான தேவர்களும், இருளகள்- அஜ்ஞாநங்களை, ஸ்வரூபஸ்வபாவ ஸாக்ஷாத்காரவிஷயஜ்ஞாநாபாவ, அந்யதாஜ்ஞாநம், விபரீதஜ்ஞாந, மிவையாகிற அஜ்ஞாநங்களை யென்றபடி. கடியும்முனிவரும்- பகவத்ஸமாராதநாதிகளாலே நிரஸிக்குமவரான ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரேஷ்டர்களான திவ்யஸூரிகளும், கடிகை- நிரஸிக்கை, ஏத்துமம்மான்திருமலை- ஸ்துதிக்கும்படியிருக்கிற ஸ்வாமியுடைய திருமலையான, அவனுக்கு ப்ராப்யபூமியானவென்றபடி. மருள்கள்- ஸந்தேஹங்களை, ஸம்ஸாரஹேதுக்களாய் தேஹாத்மாபிமாநாதிகளான விபரீதங்களையென்றபடி. கடியும்மணிமலை- நிரஸிக்குமதாய் நிரதிசயபோக்யமானமலை, திருமாலிருஞ்சோலைமலையே- திருமாலிருஞ்சோலைமலையென்கிற திவ்யஸ்தலமே, தத்ஸம்பந்தத்தால் ஸம்ஸாரிகளான மற்றுள்ளவஸ்துக்களொன்றுக்கு மிவ்வதிசயமில்லையென்றபடி.॥

திருமாலிருஞ்சோலைமலையே- திருமாலிருஞ்சோலையென்கிற திருமலையைத்தானே, திருப்பாற்கடலே- க்ஷீராப்தியைத்தானே, என்தலையே- என்னுடையசிரஸ்ஸைத்தானே, ஒருமாநொடியும்- ஒருக்ஷணமும் மாத்ரை யாகத்தில விம்சதிஸஹஸ்ரபாகஸம்க்யைப்பேர், நொடி- க்ஷணம், க்ஷணத்திலொரு விம்சதி ஸஹஸ்ரபாகமுமென்றபடி. பிரியான்- விச்லேஷிக்கிறானில்லை, இங்குத்தைதூரஸ்தாநங்களால ஜோபஸம்ஸாரஸம்பந்தரான திவ்யஸூரிகளுடைய திருமாளிகைகளிற்போலே தத்தத்தேசங்களிலே ஸந்நிதிபண்ணின வஸிஷ்டாகின்றானென்றுதோற்றும்படி பரிகரித்து ஆதரித்துப்பண்ணி தத்தத்ஸ்ர ஸ்தாநம்பண்ணுகிறானென்றபடி. இப்படி மேலுங்கண்டுகொள்வது, திருமால்வைகுந்தமே- ஸ்ரீதேவியினுடைய வைகுண்டத்தைத்தானே, "ஸ்ரியா ஸார்த்தம் ஜகத்பதி:" என்கிறபடியே பெரியபிராட்டியாரும்தானுமாக நித்யமாயெழுந்தருளியிருக்கிற ஸ்ரீவைகுண்டத்தைத்தானே யென்றபடி. தண்டிருவேங்கடமே- ஸீதளமான

மூ—பெண்ணுடலே* பருமாமாயத்தெனதுயிரே மனமே வாக்கே கருமமே* ஒருமாநொடியும்பிரியானென்னூழி முதல்வனொருவனே* ॥அ॥

ஊழிமுதல்வனொருவனேயென்னுமொருவனுலகெல்லாம்* ஊழ்தோறுந்தன்னுள்ளே படைத்துக்காத்துக்

ஆ— ஸம்ஶ்லேஷத்தினால் ஸ்ரீ தனுமாப்போலே யென்னுடையவவயவங்களிலே போரப்ரவணத்தோடுள்ள ஸம்ஶ்லேஷத்தாலே ஸ்ரீதனைப் என்னை யொருக்ஷணம்பிரிவில் பரிக்கமாட்டுகிறிலன், ஒருவனுடைய ஸந்நிதிவைஶம்நக்கும்படியே யிதுவென்கிறார். ॥அ॥

(ஊழிமுதல்வன்) நமக்கிந்தஸம்ருத்தியெல்லாந் திருமலையாலேவந்த ஸம்ருத்திகிடாய்நெஞ்சே? யினித்திருமலையைக் கைவிடாதேகிடாயென்று நெஞ்சைக்குறித்துச்சொல்லி யிவ்வாத்மாவினுடைய நிகர்ஷம்

இ— கண்ணாவண த்ருஷ்டாந்தமாக நிர்தேஶித்தத்தாலே தார்ஷ்டாந்திகத்துக்கு தந்நாகாரிகம்தோற்றி பத்தாலே வாத்ஸல்யநாவந்திந்த்ராதிகளிற்போலே த்ருஷ்டாந்தாபேக்ஷயாகிஞ்சித்வைஷம்யம் தோற்றுமென்றுபார்த்து அப்படி வைஷம்யம்தோற்றாமே பத்ருத்வஸாம்யம் தோற்றுகைக்காக "ஶரீரஸம்ஶ்லேஷஸாமீப்ய ஸம்பந்தாத்யோர்ஹிதா। லோகவாஸோபமேஶீ ஸ்ரீதரஸ்ய ஸந்நவநீ" என்கிற தாத்பர்ய த்ராலங்காரயோக்யதையாலே த்ருஷ்டாந்ததார்ஷ்டாந்திகங்களை ஸாம்யமாக நிர்தேஶித்திருக்கிறதென்று கருத்து. இப்ப்ரகரணத்திலே திவ்யதேஶங்களிரண்டையும் தம்மவயவங்களிலொன்றையும் நிர்தேஶிக்கையாலே பலபல நகரங்களிலுண்டாம் ஸ்ரீதிவ்யவேபோதொன்றிலே யுண்டாகிறதாக விவக்ஷிதமென்று நினைத்தருளிச்செய்கிறார் (என்னுடையவித்யாதியால்) ஒருமாநொடியும் பிரியானென்கிறவிடத்தி லர்த்தாந்தரவிஶேஷிக்கிறவர்த்தத்தை யருளிச்செய்கிறார் (ஸம்ஶ்லேஷத்தினாலேஸ்ரீதனையென்று) தாத்பர்யத்துக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (என்னையித்யாதியால்) ॥அ॥

✳ ஒன்பதாம்பாட்டு. ✳

என்னம்மான்தண்டிருமாலிருஞ்சோலையென்கிற ஸந்நிவ்யாஹாரத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நமக்கித்யாதியால்) உடலுமுயிருமங்கொட்டென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவ்வாத்மாவினுடையவித்யாதியால்) இத்தால்கீழ்ப்பாட்டுக்களிலே யவனுக்குத்தம்முடைய திருவுடம்பிலுள்ள வ்யாமோஹத்தை ப்ரஸம்ஸித்தவ ரிவன் நம்முடையவிஷயத்திலே இத்தனைவ்யாமோஹம் பிறக்கையாலே நம்மைஇவ்விஷயத்தோடே

ஶ—ஸ்ரீவேங்கடகிரியைத்தானே, ஸம்ஸாரவர்த்தகமான ஸ்ரீவேங்கடகிரியைத்தானே யென்றபடி, எனது- மதீயமான, உடலே- ஶரீரத்தைத்தானே, ஒருமாநொடியும்பிரியானென்று ப்ரத்யக்ஷநிர்தேஶிப்பது அரு- அருமையான, "மமமாயாதுரத்யயா" என்கிறபடியே துரத்யயமானதென்றபடி, மா- மஹத்தான், அநந்தாபாரவிஸ்தாரமான, மாயத்து- ப்ரக்ருதியில், எனதுயிரே- மதீயாத்மாவையே, திரோதானவஸ்துவ்யவஹாரவிஶேஷமாய்க்கொண்டநாதியாக ப்ரக்ருதியிலேகிடந்து அஹங்காரமமகாரதூஷிதமாயிருந்த வென்னுத்வஸ்தவத்தைத்தானே என்றபடி. மனமே- என்மனஸ்ஸைத்தானே, வாக்கே- என்வாக்கைத்தானே கருமமே- என்க்ரியையைத்தானே, ஒருமாநொடியும்பிரியான்- திவ்யமங்களவிக்ரஹவிஶிஷ்டவேஷணவென்கிரியைகளுக்கு நிரந்தரம் விஷயமாயிராநின்றானென்றபடி. என்னூழிமுதல்வன்- என்னுடையவனான ஸத்திற்கு காரணபூதனானவன், ஊழி- கல்பம், இது ஸர்வபதார்த்தோபலக்ஷணம், என்னைப்பெறுகைக்காக கல்பாதிஷ்வாத்மாதி ஸகலபதார்த்தங்களையும் ஸ்ருஷ்டித்தவனான ஸர்வேஶ்வரனென்று ஸ்பஷ்டம், ஒருவன், லோகவிலக்ஷணன், அத்யாஶ்சர்யமான வாத்ஸல்யஸம்ஶ்லேஷாதிநிவேஶத்தையுடையவனென்றபடி. ॥அ॥

ஊழிமுதல்வனொருவனேயென்றும்- காலோபலக்ஷிதஸகலபதார்த்தங்களுக்கும் காரணபூதனொருவனேயென்று "ஏகமேவாத்விதீயம்" இத்யாதிஶ்ருதிகளாலே சொல்லப்படுமவனான, ஒருவன்- விஶ்வவிலக்ஷணனான, காரணாவஸ்தையில் விசித்துக்களுடைய ஸத்தைதன்னையிடமாம்படி யிருக்குமிவனிப்போது ஸத்தையென்னையிடமாம்படி யிராநின்றானென்று கருத்து. உலகெல்லாம்- லோகங்களெல்லாவற்றையும், ஊழ்தோறும்- கல்பங்கள்தோறும், தன்னுள்ளே- ஸ்வஸங்கல்பைகதேஶத்துக்குள்ளே, படைத்துக்காத்துக்கெடுத்

ரு—கெடுத்துழலும்* ஆழிவண்ணனென்னம்மான் தண்டிருமாலிருஞ்சோலை* வாழிமனமே கைவிடேலுடலு
முயிருமங்கவொட்டே* ॥௯॥

மங்கவொட்டுன்மாமாயைத் திருமாலிருஞ்சோலைமேய [வ]* நங்கள்கோனேயானே நீயாகி யென்னையளித்
தானே* பொங்கைம்புலனும் பொறியைந்துங் கருமேந்திரியமைம்பூதம்* இங்கிவ்வுயிரேய்

ஆ—பாரதே யித்தோடேகலந்தருளினாயேயாகிலு மென்னுடைய ஹேயமானவிந்த ப்ரக்ருதியிலஸம்ப்லேஷத்
தை விட்டருளவேணுமென்றெம்பெருமானை ப்ரார்த்திக்கிறார். ॥௰॥

(மங்கவொட்டு) தாமிப்படி ப்ரார்த்திக்கச்செய்தேயும் தம்முடைய ப்ரக்ருதியிலுள்ள ஸ்நேஹத்தினாலேயெம்
பெருமான் தம்முடைய சொல்லை யாதரியாதிருக்க வவனுக்கிதினுடைய ஹேயதையை ப்ரகாசிப்பித்தருந்த

இ— திருநாட்டிலே கொண்டுபோகப் பார்த்தருளுகிறானென்றவனுடைய ஔதார்யத்தையறிந்து இவ
ளிப்படி இதேஹத்திலே ஸம்ப்லேஷிக்கில் நமக்கிந்த ஹேயஸம்பந்தம் ஒருக்காலும நிவர்த்தியாதொழியு
மென்று பார்த்ததற்காகவவனை நீயிந்தஸம்ப்லேஷத்தை விட்டருளவேணுமென்று ப்ரார்த்திக்கிறாரென்று
ஸங்கதியும் ஸூசிதை. ॥௰॥

பத்தாம்பாட்டு.

